190387

சிந்தாமணி

NOV. DEC. 1929

சித்திரமணி

4-5

ஏப்ரல், மே, 1929

7L
4IS௯2,N24
N29.6.4-5
190387

தை. மாதப் பிறப்பு.

தமிழ்நாட்டில் கலியாண மாத ஆரம்பம்.

பெண்மக்கட்குகந்த பரிசு.

முந்துங்கள் ! தமிழபிமானிகளே ! முந்துங்கள் !!

உங்கள் அருமைப் பெண்மக்களுக்கு அளிக்கும் சீர்வரிசைகளில் தமிழ்ப் பெண்மணிக் கணிகலனாய் விளங்கும் "சிந்தாமணி" மலர்களைக் கொடுக்கத் தவறாதீர்கள். சொற்பப் பிரதிகளே கைவசமுள.

உயர்ந்த வியாசங்கள். சிறந்த கதைகள்.

சிந்தாமணி மலர்கள்.

மலர் 2. 1925 ஆகஸ்டு௴ முதல் 1926 ஜுலை௴ வரை.
மலர் 3. 1926 ஆகஸ்டு௴ முதல் 1927 ஜுலை௴ வரை.
மலர் 4. 1927 ஆகஸ்டு௴ முதல் 1928 ஜுலை௴ வரை.
மலர் 5. 1928 ஆகஸ்டு௴ முதல் 1929 ஜுலை௴ வரை.
மலர் 6. 1929 ஆகஸ்டு௴ முதல் ஆரம்பம்.

வருஷசந்தா உள்நாடு ரூ. 5. வெளிநாடு ரூ $7\frac{1}{2}$.

ஒவ்வொரு மலருக்கும் விலை 5 ரூபாய்
நான்கு மலர்களுக்கும் விலை 16 ரூபாய்
பைண்ட் செய்த மலர்களுக்குத் தபாற்கூலி வேறு.

முற்பணமனுப்புவோருக்குத் தபாற்கூலி இனாம்.

'சிந்தாமணி' பிரசுராலயம், சலிவன்ஸ் கார்டன் ரோட், மயிலாப்பூர், சென்னை.

பொருளடக்கம்.

	பக்கம்.
ஸுபோத ராம சரிதம்—அர்த்தத்துடன் (சகோதரி வி. பாலம்மாள்)	... 242
பெண்மக்களின் தேசப்பயிற்சி (பத்திராதிபர்)	... 243
ஒற்றுமை (ஸ்ரீமதி கு. கமலாம்பிகை அம்மாள்)	... 245
'சிந்தாமணி' எனுஞ் செல்வக்குழவி (வல்லிபுரம் கமலேச்வரியம்மாள்)	... 248
உலகம் பலவிதம் (ஸ்ரீமான் N. சுப்பிரமணியன், B.A.)	... 249
"எனது பதரி நாராயண யாத்திரை" (ஸ்ரீமான் M. R. ஆச்சார்)	... 272
பாரத ஜோதி (ஸ்ரீமான் பி. ஆர். ராஜசூடாமணி)	... 281
நம் நாட்டில் விவாக ரத்துச் சட்டம் அவசியமா? (ஸ்ரீமதி லக்ஷ்மி அம்மாள்)	... 295
சகோதர வாஞ்சை (ஸ்ரீமான் ரவீந்திரபாரதி)	... 300
உடல் முழுவதும் ரத்தம் பரவுவது ஏன்? (ஸ்ரீமான் வி. நடராஜன், B.A., L.T.)	... 310
ஆசாம் தேசத்து வீரமணி—ஜயமதி (ஸ்ரீமான் எஸ் ஆர். வெங்கடரமணன், B.A., B.L.)	... 316
விகடசீலன் (ஸ்ரீமான் M. C. கிருஷ்ணசாமி)	... 319
காவிரிப்பூம்பட்டினக் கன்னிகை (திரு. கா. சி. சிவசங்கர முதலியார்)	... 343
கீர்த்தனை (ஸ்ரீமதி பி. மங்களாபாய்)	... 346
பொழுது போக்கு (ஸ்ரீமான் S. சதாசிவன்)	... 348

மானேஜர் அறிவிப்பு.

காலதாமதமின்றி பத்திரிகை வெளியாக வேண்டியதன் பொருட்டு இரட்டை இதழ்களாகிய இதைக் குறைந்த பக்கங்களில் வெளியிட வேண்டியதாயிற்று. வி. பி. முறையில்லாத வெளிநாட்டு சந்தாதார்களும், வி. பி. யைத் திருப்பிவிடும் உள்நாட்டு சந்தா தார்களும் தங்கள் சந்தா பாக்கிகளை தயவு செய்து உடனே அனுப்பி "சிந்தாமணி" இனி காலா காலத்தில் வெளிவர உதவி புரிவார்களாக.

CHINTHAMANI

A HIGH CLASS TAMIL MONTHLY.

(Devoted mainly to the cause of Indian Women)

EDITOR — SISTER V. BALAMMAL.

Vol. VI.] November-December 1929. [No. 4-5.

OFFICE OF THE REGISTRAR
No.
11 FEB 1930
MADRAS

श्री शारदायै नमः ।



[illegible] नमः

7L
Y15m2,N24
N29.6.4-5
190387

சிந்தாமணி

ஸுபோத ராம சரிதம்.

COMPOSED AND ANNOTATED BY
SISTER V. BALAMMAL
DAUGHTER OF
Late Dr. A. R. VAIDYANATHA SASTRIAR, M.A., M.B. & C.M.

(All Rights reserved by the Authoress)

सुबोधरामचरिते

॥ युद्धकाण्डः ॥

अधिरुह्याञ्जनापुत्रं सौमित्रिर्बलसंयुतः ।
विभीषणेनानुयातो जगामेन्द्रजितं प्रति ॥ २५ ॥

बलसंयुतः சைனியங்களுடன் கூடினவரும் विभीषणेन விபீஷணனால் अनुयातः பின் தொடரப் பெற்றவரும் ஆகிய सौमित्रिः லக்ஷ்மணர் अंजनापुत्रं ஆஞ்சனேயர் மீது अधिरुह्य ஏறிக் கொண்டு इन्द्रजितं-प्रति இந்திரஜித்தைக் குறித்து जगाम சென்றார் ॥ २५ ॥

त्रिरात्रं तेन युद्ध्वाऽथ हत्वा तस्याखिलं बलम् ।
ऐन्द्रास्त्रेण प्रचिच्छेद कन्धरां तस्य लक्ष्मणः ॥ २६ ॥

लक्ष्मणः லக்ஷ்மணர் तेन அந்த இந்திரஜித்துடன் त्रिरात्रं மூன்று இரவுகள் युद्ध्वा யுத்தம் செய்து तस्य அவனுடைய अखिलं சமஸ்தமான बलं சைனியங்களையும் हत्वा கொன்று अथ பிறகு तस्य இந்திரஜித்தினுடைய कन्धरां தலையை ऐन्द्रास्त्रेण இந்திரனுடைய பாணத்தினால் प्रचिच्छेद வெட்டி வீழ்த்தினார் ॥ २६ ॥

सौमित्रिणा हते तस्मिन्मेघनादे रणाङ्गणे ।
ववृषुः पुष्पनिचयं वासवप्रमुखाः सुराः ॥ २७ ॥

रणांगणे யுத்த களத்தில் सौमित्रिणा லக்ஷ்மணரால் तस्मिन् அந்த मेघनादे மேகநாதன் हते (सति) வீழ்த்தப்பட்டதும் वासवप्रमुखाः இந்திரன் முதலிய सुराः தேவர்கள் पुष्पनिचयं புஷ்ப மழையை ववृषुः பொழிந்தார்கள் ॥ २७ ॥

तुष्टुवुश्च महाभागं लक्ष्मणं सिद्धचारणाः ।
तुतुषुर्मुनिसङ्घाश्च जगुर्गन्धर्वकिन्नराः ॥ २८ ॥

महाभागं உத்தமாகிய लक्ष्मणं லக்ஷ்மணரை सिद्धचारणाः சித்தர்கள் சாரணர்கள் तुष्टुवुः துதித்தார்கள் मुनिसंघाः ரிஷிகள் तुतुषुः சந்தோஷித்தார்கள் गंधर्वकिन्नराः च கந்தர்வகின்னரர்கள் जगुः புகழ்ந்து பாடினார்கள் ॥ २८ ॥

(To be continued)

ஸ்ரீராமஜயம்.



பெண்மணிகளின் முன்னேற்றத்திற்கென வெளிவருவது.
ஆரம்பம் ரத்தாக்ஷி ஆவணி 1924 ஆகஸ்டு.

பத்திராதிபர் சகோதரி வி. பாலம்மாள்.

மலர் 6.] சுக்கில—கார்த்திகை-மார்கழி. [இதழ் 4-5.

பெண்மக்களின் தேகப்பயிற்சி.

(பத்திராதிபர்.)

சென்ற இதழில் பெண்மக்களின் சுகாதார வாழ்க்கையைப் பற்றிக் கூறப்பட்டது. சுகாதாரத்திற்கு இயற்கை, செயற்கை இருவழிகளிலும் சௌகரியங்கள் முக்கியமானவைகளாயிருப்பதுடன் தேகப் பயிற்சி என்பது எல்லாவற்றிலும் முதன்மை பெற்றுள்ளது. தேகப் பயிற்சி என்பது இளமைமுதல் விளையாட்டுகளின் மூலமாக மக்களுக்கு ஏற்படுவதாகும். வயது செல்லச் செல்ல ஆண், பெண் இருபாலார்களின் தேகப் பயிற்சியும் வெவ்வேறு வழிகளில் மாறி விடுகின்றது. பெண்கள் (பெண் மக்களாக வாழும்) வாழ்க்கையில் தேகப் பயிற்சியானது அவர்களின் தினசரியிலேயே அடங்கியுள்ளது. பெண்கள் அதிகாலையில் துயிலெழுந்து தங்கள் தேகத்தையும் வீட்டையும் சுத்தம் செய்து வைத்தல் முதற்கடமையாம். தண்ணீர் எடுத்தல் துணி, துவைத்தல், சமைத்தல் முதலியவைகளில் பெண்கள் தேகக் கூறுக்கு ஏற்றதான தேகப் பயிற்சி அமைந்திருக்கின்றது. தான் பெற்ற குழவிக்குத் தன் பாலை யூட்டுதலும் தேகப்பயிற்சியே யாகும். பெண்களின் தேகப் பயிற்சியானது இவ்வழியில் கையாளப்படுவதினால் அவர்கள் சுகாதாரத்துடன் இருப்பதுடனில்லாது மற்றவர்களின் சுகாதாரத்தையும் பேணி நடக்கும் பாக்கியவதிகளெனப்படுகிறார்கள். மக்கள், கணவன் இவர்களுடைய உண்டியைத் தமது பார்வையில் தயாரித்து அல்லது தயாரிக்கச்

190387

செய்து அவர்களின் சுகாதாரத்தையும் குன்றுது வளர்த்து வருகின்றார்கள். இவ்வாறு பெண்களின் புனிதவாழ்க்கையில் உலக சுகாதாரமே அடங்கியிருக்க, நாகரிகம் மிக்க தற்காலத்தில் எங்கு பார்த்தாலும் மண்டையிடி, பலவீனம், இதயநோய், அகாலப்பிரசவம், அகாலமரணம் என்ற சொல் பெண்களிடம் பரவிவருகின்றது. இதற்காக நமது நாகரிக வைத்தியபண்டிதர்களும் பெண்களுக்கு சரீர வியாயாமம் முதலிய ஏற்படவேண்டுமென்றும் அதற்கு ஜப்பானியப் பெண்களைப் போல் சரீர சாதனைகள் செய்ய வேண்டுமென்றும் பறைசாற்றுகின்றனர். பாட்மிண்டன் முதலியவை பெண்களுக்கேற்ற பயிற்சியென்று ஆங்காங்கு கைகொள்ளப்பட்டு வருகின்றன. பருவ வயதுப் பெண்கள் கால் மெஷினில் தையல் தைப்பது, காலால் சுருதி போட்டு ஹார்மோனியம் வாசிப்பது போன்றவைகளே கருப்பப்பைக்குக் கெடுதியை விளைவிக்குமானல் குடுகுடுவென்று அங்குமிங்கும் ஓடித்திரிந்து விளையாடுவதெங்ஙனம்? ஜப்பானியப் பெண் ஒருத்தி கணவனுடன் வாழும் காலத்தில் வீட்டிற்குரிய சகல காரியங்களையும் தன் கையாலும் தனது பார்வையிலும் நடத்தக் கூடிய திறமை பெற்றிருப்பதுடன் கணவன் செய்யும் தொழில்களிலும் உதவிபுரியக் கூடிய ஆற்றலைப் பெற்றிருக்கிறாள். முன்னோர்களின் நடைமுறைகளிலுள்ள விசேஷங்களைக் கண்டறியக் கூடிய கல்வியைக் கற்றுள்ள பெண்கள் தவிர்த்து மற்றப்படி நம் நாட்டில் பெண்கள் குடும்பவேலைகளை ஒழித்துச் சோம்பேரிகளாக உட்கார்ந்தவிடம் விட்டசையாது உண்டு உறங்குவதையே நோக்கமாகக்கொள்வார்களானல், ஜப்பானியப் பெண் போல அந்த சாதனைகளை மட்டும் செய்வதனுல் யாது பயன் விளையப் போகிறது? பொருள் தேடல் ஆடவன் பொறுப்பு. மற்றப்படி அதை வைத்துக் குடும்பத்தை நிர்வகித்தல் பெண்களின் பொறுப்பாக இருக்கும் பொழுது தேகப் பயிற்சிக்காகத் தேடி அலைதலேன்?

இந்தியாவில் பிணியும் வறுமையும் பிடித்தாட்டுகிறதென்று தேசத் தலைவர்கள் ஏக்கமுறுகிறார்கள். இந்தியப் பெண்கள் முன்போல் குடும்ப நிர்வாகத்தில் ஈடுபடுவார்களாயின் பிணி, வறுமை இரண்டும் மறுகணத்திலேயே மாயமாய் மறைந்தோடிவிடத் தடையென்ன? பெண்கள் இயற்கை வாழ்வைத் தள்ளி விட்டு இதனுலேற்படும் சுகாதாரவாழ்வையும் தேகத்திடனையும் பொலிவையுமிழந்து டானிக் மருந்துகளை தேகத்திடத்திற்கும் உயர்ந்த ஆடையாபரணங்களைத் தேகப் பொலிவிற்கும் ஆதாரமாகக் கருதிக் காலங்கழிப்பதென்றால் இந்தியாவில் பிணியும் வறுமையும் நாளுக்கு நாள் அதிகரிக்கு மன்றிக் குறையவழி ஏது? தேசம் உயர்வுறுவதற்குப் பெண்களும் தியாகம் செய்ய வேண்டுமென்று கூறப்படுகிறது. ஒன்றிரண்டு தவிர்த்து மற்ற அனைவர்களுக்கும் இது முடியாத காரியம். ஆனல் இந்தியப் பெண்கள் குடும்ப நிர்வாகத்தில் (முற்காலம் போல்) தியாகம் செய்வார்களாயின் ஆடம்பரம், அசௌக்கியம் இரண்டும் நம் நாட்டை விட்டு ஓடிவிடுமென்பதில் தடையில்லை. பெண்கள் குடும்பக் காரியங்களால் தங்கள் தேகப்பலத்தையும் விருத்தி செய்து கொண்டு ஆண்மக்களின் சுகாதாரத்தையும் கவனிக்காது போனல் ஆடவர்களுக்குத் தோள்வலி எங்கிருந்துண்டாகும்? இந்தியத் தாயின் ஏழ்மையும் தாழ்மையும் எவ்வாறு தீரப்போகின்றது?

7/15 2, 024
p29.6.4-5

ஒற்றுமை.

(ஸ்ரீமதி கு. கமலாம்பிகை அம்மாள்.)

"எத்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம்."

ஒரு நாட்டின் நிலைமை அந்நாட்டாரின் ஒற்றுமைக்குத் தக்கதாயிருக்கும்.

பண்டைக்காலத்தில் இந்திய நாட்டிலே அறிவு விளக்கம் பரந்திருந்ததனுல் யாண்டும் அன்பும் அமைதியும் ஒழுங்கும் நிலவின. மக்கள் யாவரும் சமரச உணர்வுடனும் நடுவு நிலைமையுடனும் தங்கள் கடமைகளை ஆற்றி வந்தனர். அதனுல் அக்காலத்தில் ஒற்றுமை என்னும் பயிர் தழைத்துச் செழித்தோங்கி யிருந்தது. எல்லோரும் ஒற்றுமையாக வாழ்ந்ததனுல் உழவுத் தொழில், கைத்தொழில், நெய்தற்றொழில், வாணிபம் முதலான யாவும் சிறப்பாக நடைபெற்றன. பல வளங்களும் பொலிந்து விளங்கின. அத்தகைய நாடு இன்று எந்நிலையுற்றிருக்கிறது? அன்பர்களே! உற்று நோக்குங்கள்! எல்லாவற்றிற்கும் பிற நாடுகளை எதிர்பார்க்கிறது; வறுமையால் வாடுகிறது; நோயால் நலிகிறது; கலகங்கட்கு உறைவிடமாயிருக்கிறது. சாதிச் சண்டை ஒருபுறமும் சமயப்பிணக்கு ஒருபுறமும் வகுப்புப்போர் மறுபுறமுமாகப் பற்பல வேற்றுமைகளுக்கு உறைவிடமாயிருக்கின்றது. இந்த வேற்றுமை உணர்வுகளின் பயனுக மக்களிடத்து ஒருவர்மீது ஒருவர்க்கு உண்மையான அன்பும் நம்பிக்கையும் இல்லை. அதனுல் அவர்கள் தமக்கு வேண்டியவற்றிற்கு உறுதியுடன் பாடுபட வல்லமையற்றவர்களா யிருக்கின்றனர். கூட்டுத்தொழில் முதலானவற்றையும் நடாத்த மாட்டாதவர்களாய் இருக்கின்றனர். ஒற்றுமை, சமரசம் என்பன பேச்சளவில் அன்றிச் செயலளவில் காண்பதற் கரிதாயிருக்கின்றன.

இனி நமது நாடு நன்னிலை அடையவேண்டுமாயின் நாம் எல்லோரும் ஒற்றுமையாக வாழ வேண்டும். அழுக்காறு, அவா, வெகுளி முதலான தீய குணங்கட்கு இரையாகாது அன்பு, அடக்கம், பொறுமை, பரநலம் முதலான நற்குணங்களைக் கடைப்பிடித்தொழுகல் வேண்டும். சகோதர உணர்வுடனும் நடுவுநிலைமையுடனும் நமது கடமைகளைத் திறம்பட ஆற்றி வருவோமாயின் ஒற்றுமை தானே வரும். இப்பொழுது நாமெல்லோரும் ஒற்றுமையாக வாழ வேண்டியதே நாம் தாய் நாட்டிற்குச் செய்ய வேண்டிய முதற் கடமையாகும்.

ஒற்றுமையாக வாழ்தலே மக்கள் இயல்பு. உண்மைநெறி வளர்க்கும் உத்தமர்கள் எல்லோரும் ஒற்றுமையாக வாழும்படியே அறிவுறுத்துகின்றனர். நாகரிகம் பரவிய இடங்களிலெல்லாம் ஒற்றுமை யென்னும் அருங்குணம் பரவியிருப்பதைக் காணலாம். ஒற்றுமையின்மை பரவுவதை ஒரு கொடியநோய் பரவுவதற்கு ஒப்பிடலாம். ஒரு நோய் பரவி மக்களை எவ்வாறு கெடுக்கின்றதோ அவ்வாறே ஒற்றுமையின்மை பரவுமாயின் நாட்டைக் கெடுத்து விடும். ஒற்றுமையே முன்னேற்றத்திற்கு அடிப்படையென்றும் ஒற்றுமையின்மையே பிற்போக்கிற்கு அடிப்படை யென்றுங் கூறலாம். ஒற்றுமையாக வாழ்வோரே நாகரிக உலகில் முதல் இடம் பெறுவர். அவர்களே எல்லோராலும் மதிக்கப்படுவர்; புகழப்படுவார். ஒற்றுமையின்றி வாழ்வோரை ஒருவரும் மதிக்கமாட்டார். நாகரிக மற்றவரென இகழ்ந்தொதுக்குவர். ஒற்றுமையென்பது ஒரு கூட்டத்தாருக்கோ ஒரு நாட்டாருக்கோ மாத்திரம் வேண்டுவதன்று. அது

நிறம், குலம், மொழி, நாடு முதலானவற்றை யெல்லாம் கடந்து உலகிலுள்ள மக்கள் எல்லோருக்குமே வேண்டற்பாலது

ஒற்றுமையின் வலிமை.

ஒற்றுமையின்றி எக்கருமமும் சிறப்புற நடைபெற மாட்டாது. ஒரு படைத்தலைவனுயினும் தனித்து நின்று யாது செய்வான். தன் படையுடன் ஒற்றுமையாய் நின்று போர் புரிந்தாலன்றோ வெற்றி பெறுவான்? இகழ்ந்தொதுக்கப்படும் துய்புகள் பல சேர்ந்து கயிருகியவுடன் ஒரு மதம் பொருந்திய யானையையுங் கட்டத்தக்க வல்லமை பெறுகின்றனவன்றோ! சிறு துளிகள் பல சேர்ந்து பெருவெள்ளமானவுடன் எவ்வளவு பலமுள்ள பொருள்களையும் புரட்டி உருட்டி வாரிச் செல்லத்தக்கதாயிருக்கின்றது! அங்ஙனமே மிகத் தாழ்ந்த நிலையில் இருக்கும் ஒரு கூட்டத்தாரும் ஒற்றுமையாக வாழ்வாராயின் தம்மின் உயர்நிலையிலிருப்பவரையும் வெல்லத் தக்கவராவார் என்று கூறவும் வேண்டுமோ? ஒரு சிறு பகுதியினராகிய பர்தோலி (Bardoli) மக்களே ஒற்றுமையாக நின்றபொழுது பலகோடி மக்களை அடக்கி ஆண்டுவரும் அதிகார சக்கிரம் என்னிலையுற்றதென்பது அன்பர்கள் அறிந்ததே. இன்னும் ஒற்றுமையின் வலிமையைப்பற்றி எடுத்துக் காட்டல் மிகை பொதுவாக ஒற்றுமையால் ஆகாத காரியம் ஒன்றுமில்லை யென்று கூறலாம். ஆதலால் நாமெல்லோரும் ஒற்றுமையாக வாழ்வோமாயின் எவ்வளவோ அரிய பெரிய காரியங்களைச் செய்பத்தக்கவராவோம்; பெருவலிமையுடன் நிற்போம்; பேருறுதியுடன் பிறர் மதிக்க வாழ்வோம். அங்ஙனமின்றி ஒருவரோடொருவர் சண்டை இட்டுக்கொண்டிருப்போமாயின் பிறர் நகைக்கத் தக்க இழிந்த நிலையடைவோமன்றோ!

நமது நாடு உயர்நிலையிலிருந்த காலத்தில் மிகத் தாழ்ந்திருந்த நாடுகள் இன்று தமது ஒற்றுமையாலும் குன்று ஊக்கத்தாலும் விடாமுயற்சியாலும் நாம் வியப்படையத் தக்க உயர்நிலையடைந்திருக்கின்றன. நாம் நமது ஒற்றுமையின்மையாலும் ஊக்கமின்மையாலுமே இப்போது இருக்கும் வருந்தத்தக்க நிலைமைக்கு வந்திருக்கிறோம் மேல் நாடுகளில் நாம் நினைத்தற்கரிய கருமங்களை யெல்லாம் ஒற்றுமையினாலே செய்து முடிக்கின்றனர். அவர்கள் பல தொழிற்சாலைகளையும் வாணிபத்தையும் ஒற்றுமையுடன் நடாத்திப் பொருளாதார நிலையில் பெரிதும் முன்னேற்ற மடைந்திருக்கின்றனர். அவர்கள் பொது நலத்தொண்டில் மிகுந்த ஒற்றுமையுடையவர்களாயிருக்கின்றனர். அதனால் அவர்கள் பலபொது அற நிலையங்களை நடாத்திச் சிறப்புடன் வாழ்கின்றனர்.

ஒரு நாட்டார் ஒற்றுமையாக வாழ்வதற்குக் கழகங்களும் செய்தித்தாள்களும் உதவிபுரிவனவாகும். அவர்கள் அவற்றின் மூலம் தாமறிந்தவற்றைப் பிறர்க்கறிவுறுத்தலாலும் அறியாதவற்றைப் பிறரிடமிருந்து அறிதலாலும் அவர்களிடை அன்பும் ஒற்றுமையும் உண்டாகின்றன. சகோதர உணர்வும் பரந்த நோக்கமும் ஒற்றுமைப்படுத்தும் உயர்ந்த தன்மையுடையன. அவை எல்லோரும் நல்வழிப்பட வேண்டும் என்னும் சிறந்த உணர்வைக் கொடுக்கும். பரந்த நோக்கமுடையோர் பிறர்க்குதவி புரிவதையே தமக்கு இன்பமாகக் கொள்வர். தமது செயல்கள் பிறர்க்கு நன்மை பயப்பதையும் அதனால் அவர்கள் இன்புறுதலையுங் கண்டு மேன்மேலும் இன்பமடைவர்

இன்பமான வாழ்க்கையை ஒற்றுமையின்மையாலும் பொறுமையாலும் ஒரு போதுங் காணமுடியாது. ஒரு குடும்பத்தாரே ஒற்றுமையுடன் வாழும்பொழுது அங்கிருக்கும் ஒழுங்கையும் அமைதியையும் இன்பத்தையும் பாருங்கள். அங்ஙனமின்றி அங்கு கலகமும் போரும் நிகழ்ந்து கொண்டிருக்குமாயின் காண்பவர்களுக்கே எத்தகைய துன்பத்தைக் கொடுக்கும்! காண்பவர்க்கே துன்பம் விளைக்க

உலகம் பலவிதம்.

(ஒரு சிறு நாடகம்.)

(ஸ்ரீமான் N. சுப்பிரமணியம், B.A.)

அங்கம் I. காட்சி I.

பள்ளிக்கூடம்-ஹாஸ்டல்.

பகல்.

(சீதாபாய், கனகவல்லி, மிஸஸ் ஜோன்ஸ், மோகனம் நால்வரும் சீட்டு (ஆக்ஷன் பிரிட்ஜ்) ஆடிக்கொண்டிருக்கின்றனர்.)

மோகனம் :—இது தான் சீதாபாயோடு ஆடுவது பெரிய நியூஸன்ஸ். அவள் முறைப்படி ஆடமாட்டாள். தனக்குத் தோன்றியவாறு ஆடுவாள். பார்ட்னரை மிஸ்லீட் பண்ணிவிடத்தான் தெரியும்.

சீதா. :—மோகனம்! நீ யெப்பொழுதும் என்னிடம் சண்டைக்கு வருவாய். என்னமோ, பரீட்சைகளெல்லாம் முடிந்தன; நாளைக்கோ அவரவர்கள் ஊருக்குப் போய் விடுவோம். இன்று ஒரு நாளாவது சண்டையில்லாமல் ஆடக்கூடாதா?

மிஸஸ் ஜோன்ஸ் :—மோகனம்! நீ எவ்விதம் ஆடினாலும் எங்களுக்கு game (ஆட்டம்) இல்லாமல் போய்விடுமா? எங்கே பார்ப்போம். Come, we shall play it over.

மோகனம் :—ஏன், பேசமாட்டீர்களா! I am having an idiot for my partner. அவள் ஸ்பேட்ஸ் ஏஸ் வையாமல் ஆடியிருந்தால் தெரியும். உங்களுக்கு மூன்று down வந்திருக்கும்.

கனக. :—மோகனம்! போனது போகட்டும். (சீட்டுகளைக் கையில் அடுக்கி) யார் கலைக்க வேண்டும்? சீதாபாய் தான். உம், Please shuffle.

சீதா :—No, I am an idiot. இனிமேல் மோகனத்தோடு சீட்டாடுகிறதில்லை. அவளுக்கு எல்லாரும் idiot தான். அந்த வார்த்தை அவளுக்கு mannerism ஆய் விட்டது. மோகனம்! என்னை idiot என்றதற்கு நான் உன்னை மன்னிக்கக் கூடும். ஆனால் நாளைக்கு உன் புருஷனையும் idiot என்று கூப்பிடாதே. அவரிடமாவது நிதானமாய் நடந்து கொள். I don't want to remain here (என்று எழுந்திருந்து தன் அறைக்குள் போகிறாள்.)

மோக. :—போறமடி சீட்டு. நமக்கும் நாளை Express-ல் ஊருக்குப் போகுமுன் ஜோலியிருக்கிறது.

கனக. :—உங்களோடு சீட்டாடுவதை விட— What shall I prefer?

மோக. :—Follow Sita.

கனக. :—Yes, I had better do that (எழுந்திருந்து போகிறாள்.)

மிஸஸ் ஜோ. :—மோகனம், நீ நாளை எங்கே போகிறாய்? உன் தகப்பனார் வீட்டுக்கா? அல்லது உன் புருஷர் வீட்டுக்கா? உன்னை உன் கணவன் நேராக அவரிருப்பிடம் வரும்படி கடிதம் எழுதியிருப்பதாகச் சொன்னாயே.

மோக. :—(சோகத்துடன்) இவ்வளவு நாள் சுகமாக hostel life. இனிமேல் என் புருஷரிடமிருந்து வாழ்வது சிறை வாசம். எனக்கு என்னவோ அவ்வாழ்க்கையை எதிர்பார்க்க நடுக்கமாயிருக்கிறது.

மிஸஸ் ஜோ. :—என் அப்படி நினைக்கிறாய்? Is it so dreadful?

மோக. :—ஜோன்ஸ்! உனக்குத் தெரியாது. அவர் தற்காலத்து மனிதரல்ல, கர்நாடகம். அவருடைய லெட்டரை உனக்குக் காட்டுகிறேன். அந்த மாதிரியெல்லாம் எழுதுவது எனக்கு அருவருப்பாயிருக்கிறது. அவருக்குச் சாப்பாட்டுக்குக் கஷ்டமாயிருக்கிறதாம். நான் நேராக அவ்விடத்திற்கு வந்து விட வேண்டுமாம். I don't know what he means. Does he expect me to cook his daily meal? அவர் ஏதாவது புஸ்தகம் எழுதினால் என்னால் கூடிய உதவியைச் செய்வேன். முனிசிபல் இலெக்ஷனுக்கு ஒரு candidate ஆய் நின்றால் அவருக்காக உழைப்பேன். அவருக்குச் சமையல் செய்து போட நான் அவருடைய அடிமையா? I am now convinced that my marriage has been a great mistake.

மிஸஸ் ஜோ. :—மோகனம்! வாஸ்தவம். உங்களுடைய வழக்கங்கள் பல ஒப்பத்தக்கதல்ல. உங்கள் ஆசாரங்களில் ஸ்திரீகளுக்கு ஒரு யோக்கியதா ஸ்தானம் கிடையாது. அதில் one cannot exaggerate the evils of early marriages. என், உனக்கு இதுவரையிலும் கலியாணமாகாமலிருந்தால் நீ இப்பொழுது உன் மனதுக்கிசைந்த ஒரு பர்த்தாவைத் தேடிக் கொள்ளலாமல்லவா? உன் பால்ய விவாகத்தால் உன் வாழ் நாள் முழுவதுமே சந்தோஷ மில்லாமல் போய் விடக் கூடும். உங்கள் மதம், குலம், இதர வழக்கங்கள் தாம் இந்த unhappiness லிருந்து தம்மை விடுவித்துக் கொள்ள (divorce) விவாக பந்த விலக்குக்கு இடந்தரா. மோகனம்! I pity you. But take courage, my dear, all is not lost; try to bring him round.

மோக. :—Oh, that is impossible. அவர் படித்திருந்தும், பழைய கொள்கைகளையுடையவர். Liberal views கிடையாது. அவர் தம்முடைய பசுவினிடமும் மாடுகளிடமும் காட்டும் respect கூட என்னிடம் காட்டமாட்டார். எனக்கு அவருடனிருக்கப் பிடிக்கவே பிடிக்காது. அது நிச்சயம். நான் என்ன செய்யப் போகிறேனோ?

மிஸஸ் ஜோ.:—அப்படி நினையாதே, and don't be led by impulses. எல்லாம் காலம் போகச் சரியாய் விடும். Have faith upon Time.

மோ. :—Well, time may not make me see him, but time will make me open other parents' eyes from making such alliances. I will proclaim the freedom of women by any means.

மிஸஸ் ஜோ. :—(சிரித்துக் கொண்டு) That is well said, though I doubt if it will be well performed.

மோக. :—ஜோன்ஸ்! அதோ திரும்பிப்பார்.

(ஜோன்ஸ் பார்க்கிறாள் — புன்னகையோடு எழுந்திருந்து)

மிஸஸ் ஜோ :—Excuse me, dear. I will have a chat with him in my room.

மோக :—Well go! I envy you. Paul Venugopal is as good as you. He is hooking you nicely.

(ஜோன்ஸ் வெளியில் வந்து Paul Venugopalan க்குக் கை கொடுத்துத் தன் அறைக்கு அழைத்துக் கொண்டு போகிறாள்).

(தனக்குள்) ஜோன்ஸுக்கு நல்ல படித்தவனை வேணுகோபாலன் கிடைத்து விட்டான். இருவரும் ஒருவரை யொருவர் நேசிக்கின்றனர். அவர்களுடைய marriage தான் ஒரு

ppy marriage ஆகும். என் தலைவிதி மாத்ரம் இவ்விதம் இருக்கவேண்டுமா! பெற்றோர் தப்பிதம் செய்ததற்காக மக்கள் கஷ்டப்பட வேண்டும் போலிருக்கிறது. நல்ல society, ல religion—இருக்கட்டும் பார்ப்போம். ஜான்ஸ் சொன்னது உண்மை. All is not st. சிவஸ்வாமியை என் வழிதிருப்ப முயறு பார்ப்பேன். என்னை என் அந்தஸ்துக்குத் தகுந்தபடி நடத்தும்படி அவரை வற்புறுத்துவேன். தைரியத்தைக் கைவிடக் கூடாது. வேண்டிய சாமான்களை வாங்க வேண்டும். ஓ! எவ்வளவு ஜோலியிருக்கிறது! லெட்டர் பேப்பர், ரிப்பன், சோப்புகள், பின், pan fans முதலானதுகளை வாங்கிக் கொண்டு wrist watch-க்கு ஒரு second nd-ம் போட்டுக் கொண்டு வருகிறேன்.

(வெளிப்படையாய்) Boy!

நகப்பன் :—அம்மணி!

ாக. :—ஒரு Taxi இவ்விடம் கொண்டு வரும்படி phone பண்ணிவிட்டுவா.

ந. :—அப்படியே. (போகிறான்.)

(காட்சி முடிகிறது.)

காட்சி 2.

ஆலையூர்.

பகல்.

(மீனாட்சி, திரிபுரம் முதலானவர்கள் சுப்பு அம்மாள் வீட்டுக் கூடத்தில் உட்கார்ந்து சோழி யாட வாரம்பிக்கும் சமயம்.)

புரம்:—ஏண்டி! எம்பிட்டு நாழியாறது. காந்தத்தைக் காணோமே. அவள் இதோ வந்துடறேன்னு சொல்லுவள். உடனே எங்கேயாவது பேச்சுக் கிடைச்சால் உக்காந்துடுவள். நாம் ஆடலாம்.

ாட்சி :—இரு. இன்னும் கொஞ்சம் பொறுப்போம். வெய்யில் இப்பொழுது தான் முத்தத்திலே ஏறியிருக்கு. மணி 1 தான் ஆகிறது. நாலு மூலைக்கும் நாலு பேர் உக்காந்தால் $3\frac{1}{2}$, 4 மணி வரை ஆடலாம். அப்பறம் அவாவா ஆத்து வேலைகளைப் பாத்துட்டு ராத்திரிச் சமையலுக்கு அடுப்பு மூட்டலாம். கட்டம் ஒரு ஆட்டம் ஆடினாலும் போறும், போது போயிடும். வந்துடுவள், அப்பவே வரேன்னாள். ஒரு வேளை குழந்தையழும். இதோ வந்துட்டாளே! காந்தம்! பாத்தியோ, இவாளெல்லாம் கட்டம் ஆட ஆரம்பிக்கலாம், காந்தத்துக்காக தாமசிக்க வேண்டாம் இன்னு சொன்னார்கள். நான் தான் நிறுத்தி வச்சேன், வா! உக்காரு.

சுப்பு :—அதேது அப்போதே வரேன்னுட்டு இத்தனை நாழி?

காந். :—உனக்கென்ன! நீ மலட்டுப் பிணம். குழந்தையா குட்டியா, சோத்தைப் போட்டு புருஷனை வெளியிலே அனுப்பிச்சாச்சுன்னு வேறே வேலை கிடையாது. எனக்கு அப்படியா. குஞ்சும் குளுவானும் எத்தனையடி, அரசப்பிரதட்சணத்திற்கு போடலாம். அதிலையும் எனக்கு 45 வயசுக்கு மேலே பொறந்திருக்கே ஒன்னு. அது வலை வித்திடும் போலே இருக்கு. சதா அசை போட்டுக் கொண்டிருக்கு. இங்கே பொறப்பட சமயத்தில் அழ ஆரம்பிச்சுடுத்து. அழ ஆரம்பிச்சாலோ லேசில் ஓயாது. அதைக் கொஞ்சம் எடுத்து விட்டுத் தூங்கப் பண்ணிட்டு வந்தேன்.

திரிபுரம் :—(சிரித்துக் கொண்டு) வாவழியிலே கொஞ்சம் வம்பு கிடைத்திருக்கும். அதையும் கொஞ்சம் அளந்துட்டு, வேறே ஒன்னும் அளக்க அகப்படாததால் இங்கே வந்துட்டான்.

காந். :—அடியே! நான் வம்பளப்பவள் தான். நான் ஊர் சமாச்சாரம் ஏதாவது சொன்னால்,

அதைக் கேக்காத்துக்குக் காது குடிக்கிறது. அதை இன்னொரு இடத்தில் கண், மூக்கு எல்லாம் வச்சு அளக்கவும் தெரிகிறது. இப்போ என்னைக் கேலி பண்ணச் சொல்லறதாக்கும்! அப்படியா! சரி. நான் இன்னிக்கிக் கேட்டது ஒன்னும் சொல்லமாட்டேன். நான் வம்பளப்பவளாச்சே!

மீனாட்சி:—காந்தம், கோச்சுக்காதே. நான் உன்னை ஒன்னும் சொல்லல்லே. இன்னிக்கி என்ன விசேஷம்? யாராத்து சமாச்சாரம்?

சுப்பு.:—போதாறதடீ, ஒரு ஆட்டம் ஆட ஆரம்பிப்போம். பேசிக் கிண்டே ஆடுவோமே.

திரிபுரம்:—ஆட்டம் கிடக்கட்டும். காந்தம் ஒரு மூட்டை வச்சுச்கிண்டிருக்கா. அதை அவுக்கட்டும்.

காந்.:—நான் அதை உனக்கு அவுக்கமாட்டேன்.

மீனாட்சி:—காந்தம், யாராத்து சமாச்சாரம் சொல்லேன்.

காந்.:—சிவஸ்வாமி!

திரிபு.:—சிவஸ்வாமியா? எங்கே, என்ன விசேஷம்?

காந்.:—அடியம்மா! என்ன ஆத்திரமடி, நீ இன்னமே என்னிடம் ஒரு தவுஷ்டீகமான வார்த்தையும் சொல்லப்படாது. அப்படியானல் தான் சொல்லுவேன்.

திரிபு.:—அடியே, நான் உன்னை ஒன்னும் சொல்லல்லே. சிவஸ்வாமியாத்து விபாமென்ன? அது லேசில் வெளி வாமாட்டேனென்கிறது. ரகசியமாகவே யிருக்கு.

காந்.:—ரகசியங்கள் என்னிடம் தான் வெளிவரும். சிவஸ்வாமி பாவம் மானி, எதுக்கு இப்படி ஒரு பெண்ணைப் பிடித்துக் கலியாணம் பண்ணிக் கிண்டோம் இன்னு வருத்தப்படாான்.

சுப்பு:—உண்மை. சிவஸ்வாமி மகாமானி. இங்கே இருக்கிற இடம் தெரியாது. எல்லாம் இந்த ஆத்துக்கு வாழுதேவிகளால் தான் குடும்பம் சந்தியில் விழுந்து விடுகிறது. மோகனம்! அவள் பேர் மோகனந்தானே ரொம்ப பெருமைக்காரி போலே யிருக்கு. அவள் நடக்கிற நடையும், அவள் தளுக்கும் மினுக்கும் யாருக்குப் பிடிக்கும்!

காந்.:—அது மாத்திரமா? அவள் பெரிய பள்ளிக்கூடத்தில் படித்தாளாம். எப்போ வெளியில் போனாலும் மோட்டாரில் போவாளாம். எல்லாப் புருஷாளோடும் பயமில்லாமல் துணிந்து பேசறாள். அவளுக்கு நித்தியம் நாலஞ்சு காயிதம் வரது. கோண எழுத்து பாஷையோ நன்னு பேசறாள். ஏது சிவஸ்வாமி பாடு ரொம்பக் கஷ்டந்தான். அதுவும் போருத்துக்கு இன்னிக்கி காலம்பற எங்காத்துக்கு வந்து எங்காத்துப் புருஷாளோடு வெக்கமில்லாமல் பேசினாள். இவர் பாவம் ஒடுங்கிவிட்டார்.

திரி.:—உன் புருஷாளிடம் என்ன சொன்னாள்?

காந்.:—அது தான். அவாத்துக் கொல்லைப்புறம் தோட்டத்தில் எங்களுககுக் கொஞ்சம் பங்கிருக்கிறது. அதை அவளுக்குக் கிரயம் பண்ணிவிட வேண்டுமாம். அந்த இடத்தில் ஒரு குடிசை கட்டித் தோட்டக்காரனுக்குக் குடுக்க வேண்டுமாம். புதிசாய் ஒரு நாய் வைத்துக் கொண்டிருக்கிறான். அதுதான் தோட்டத்துக்கும் காவலாம். இன்னும் பூச்செடிகள் அவாத்தில் கணக்கு வழக்கில்லாமல் வந்து இறங்கறது. இப்போ என்ன! சிவஸ்வாமி பங்களா மூந்தியிருந்த மாதிரியா இருக்கு! எங்கே பார்த்தாலும் விளக்குகளும் அலங்காரமும் என்ன தடபுடல்!

திரி.:—சிவஸ்வாமி இதையெல்லாம் பார்த்துக் கொண்டு தானிருக்கானு?

கார்.:—அவனென்ன செய்வான் பாபம். அவனால் கூடிய மட்டும் கண்டிக்கிறான். இன்று காலையில் நான் அவன் வீட்டுத் தோட்டத்துக்கு 2 மாங்காய் கேட்கப் போனேன். அப்போ அவாளிரண்டுபேரும் பங்களாவின் பின் புறத்தில் ரொம்பக் கோபமாகப் பேசிக்கிண்டிருந்தார்கள். மறைந்து நின்று கேட்டுப் பாத்தேன். எனக்கு எங்கம்மாவாவது புருஷனாவது இந்தப் பாஷை எழவு இங்கிலீஷ் சொல்லித் தந்திருந்தா, எனக்கு எதாவது தெரியும். அதுகள் இரண்டும் ரொம்பக் கோபமாய் இங்கிலீஷில் பேசிக்கிண்டிருந்தது. மத்தியில் சிவஸ்வாமி "எனக்கு உன் காரியங்கள் கொஞ்சமும் பிடிக்கவில்லை" என்று சொன்னான். அதுக்கு அவள் "உனக்கு வாழ்க்கைப்பட்டேனே நான்" என்று உரக்க பதில் சொன்னாள். அரை மணி நாழியான அப்பறம் தான் வார்த்தை யடங்கித்து. நானும் வந்துட்டேன்.

சுப்பு:—இவ்வளவு காலம் சிவஸ்வாமி ஒரு துன்பமுமில்லாமலிருந்தான். அந்த சுகத்துக்கு இப்போ அநுபவிக்கிறான். எல்லாம் இந்த இங்கிலீஷ் படிப்பினால் தான். இன்னென்று பாத்தியளோ. அவள் வெளியில் புறப்பட்டால் பாதங்களுக்கு வெல்வெட்டுப் பாதசோடு, கையில் குடை, இடதுகையில் ஒரு தோல் பணப்பை தொங்கப் புறப்படுகிறாள். அது போகட்டும். மூக்குக் கண்ணாடி எதுக்குடீ போட்டுக்கறாள்?

திரிபு:—கையில் சின்னதா சங்கிலிக் கெடியாரம் கட்டிக் கிண்டுருக்காடீ

கார்.:—அது மாத்திரமா, அவள் புடவை கட்டிக் கொள்ளுகிறமாதிரியும் ரவிக்கை போட்டுக்கறதும்—அப்பா அனுசாரப் பிடை. மஞ்சள் பூசிக் கொள்ளுகிறதில்லை. எண்ணைக்குப் பதிலாய் தைலம் தான். அது போடுகிற வாசனை மூக்கை யறுக்கிறது. சோப்புக்கள் பலவிதம். கவிழ்ந்து விழறத்துக்குத்தான் இந்தப் பிலுக்கு.

மீனு.:—இது கடைசிவரையில் என்னமாய் முடியப் போறதோ பார்ப்போம். நமக்கோ காந்தமிருக்காள். அவள் அடிக்கடி நடக்கிறதை யெல்லாம் சொல்லுவள். அவளை மாத்திரம் ஒருத்தரும் விரோதப் படுத்திக் கொள்ளாதேயுங்கோ. உம், ஒரு ஆட்டம் ஆடலாம். முதல் நான் ஆடறேன்.

(கட்டம் ஆடுகிறார்கள். திரை விழுகிறது.)

(காட்சி முடிகிறது.)

அங்கம் 2. காட்சி 1.

பகல். கூடம்.

(மங்களம், கிருஷ்ணசாமி.)

கிருஷ்ண:—(தனி மொழி) ஞானிகளும் கவிகளும் கூட இல்லற வாழ்க்கை சிறந்ததெனக் கூறியுள்ளார். அவ்விதமான இல்லற வாழ்க்கை தம்பதிகளின் இருமனமும் ஒத்த வாழ்க்கை யன்றோ? மங்களத்தை எனக்குப் பாணிக்கிரகணம் பண்ணினது ஒரு பெரிய தப்பு. அவளோ என்னுடைய மனப்பாங்கு மன எழுச்சி முதலியவற்றைக் கொஞ்சமும் உணர்ந்தாளில்லை. எனக்கும் அவளுக்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கிறது. என்னுடைய நோக்கங்களை அங்கீகரித்து அவைகளின் மேன்மையைக் கண்டு கொள்ள அவளுக்குச் சக்தியில்லை. இவளுடன் என்ன life! என்ன love! என்ன partnership! எனக்கு என்னைப்போல் படித்த ஒரு பெண்ணைக் கலியாணம் செய்திருந்தால் நான் அவளுடன் எவ்வளவு உல்லாசமாகப் பலவேறு விஷயங்களிலும் சம்பாஷிக்க முடியும்! மங்களத்துக்கோ சமையல் தொழிலையும் சகும்

தலா நாடகத்தையும் தவிர வேறு ஒன்றும் தெரியவில்லை. (மங்களம் ஒரு புஸ்தகத்தை எடுத்து வந்து கையில் கொடுக்கிறாள்) (வெளிப்படையாய்) ஐயோ! உன்னைவைத்து மாரடிக்க வேண்டி யிருக்கிறதே! Shelley ஐ எடுத்துக் கொண்டுவரச் சொன்னால் என் டைரியைக் கொண்டு வருகிறாயே!

மங்க :—சிகப்பு அட்டைப் புஸ்தக மென்றீர்கள். எடுத்துக் கொண்டு வந்தேன்—இதோ தாங்கள் வேண்டிய புஸ்தகத்தையே எடுத்துக் கொண்டு வருகிறேன். (போகிறாள்.)

கிருஷ்ண :—இந்தா! Shelley யும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம். (டைரியைக் கீழே எறிகிறான்.) உன் மடத்தனம் எனக்குப்பொறுக்க முடியவில்லை. உங்க அப்பனுக்கு ஐவேஜி இல்லாமல் போய்விட்டதா? உன்னை இரண்டு அட்சரம் படிக்க வைத்திருக்கக் கூடாதா?

மங்க :—நானென்ன செய்வேன்! எனக்கு ஏதோ கொஞ்சம் ஸம்ஸ்கிருதமும் தமிழும் கற்பித்துக் கொடுத்தாரே ஒழிய இங்கிலீஷ் சொல்லித் தரவில்லையே.

கிருஷ்ண :—உன் Sanskrit ஐயும் சாகுந்தலாவையும் நீயேவைத்துக் கொளுத்து. உன் அருணகிரி நாதர் திருப்புகழும் வெறும் புகழும் எனக்கெதற்கு?

மங்க :—என்னை மன்னித்து விடுங்கள். நான் எவ்வளவு படித்தாலும் தங்கள் வித்வத்துக்குச் சமானமாகுமா? பட்டினி யிருக்கிறீர்களே, கொஞ்சம் பால் போளியும் காப்பியும் கொண்டுவருகிறேன்.

கிருஷ்ண :—உன்னைக் கட்டியழும் எனக்குப் பால் போளிதான் குறைச்சல்—(மௌனம்) நான் உனக்கு இங்கிலீஷ் சொல்லித் தருகிறேன் என்றால் என்னை மதியாமல் போய் விடுகிறாய். பால் போளி செய்வதிலுள்ள கவனத்தில் கொஞ்சமேனும் என்னுடனிருந்து நான் கற்பிப்பதைக் கற்றுக் கொள்ளேன்.

மங்க :—எனக்கு இனிமேல் எதற்கு இங்கிலீஷ் படிப்பு? நான் படித்து உத்தியோகம் செய்யப் போகிறேனா? மேலும் இனி இங்கிலீஷ் எளிதில் வருமா?

கிருஷ்ண :—ஆமாம்! எனக்குப் பதில் பேசத்தான் தெரியும். உன்னால் இங்கிலீஷ் கற்றுக் கொள்ள முடியாது. ஏன், நான் உன்னை இங்கிலீஷ் படித்து University degree வாங்கவேண்டு மென்று சொல்லவில்லை. தற்கால நாகரிகத்திற் கொப்ப கொஞ்சம் படித்து, என் சிநேகிதர்களை உபசரிக்க, கொஞ்சமாவது சம்பாஷிக்க முதலிய இவைகள் முடியாதா? உன்னைப்போல் நாட்டுப் புறத்துக் கழுதைகள் மிகவும் சாதாரணமான சில இங்கிலீஷ் வார்த்தைகளை நன்றாய் உச்சரிக்கிறார்கள். உனக்கு Thermometer என்ற வார்த்தையைக் கூடச் சரியாய் உச்சரிக்கத் தெரியவில்லை. வெளிக்காவது கொஞ்சம் படித்தவளாகக் காட்டிக்கொள்ள சூட்சமம் கிடையாது. நீ உன் photo வில் உட்கார்ந்திருக்கிறதைத்தான் பார். ஆகா! என்ன style!............... Paul வேணுகோபாலன் தனக்கு ஒரு படித்த பெண் வேண்டுமென்று வேறு மதத்தைத் தழுவி ஒரு B.A. படித்த மங்கையை மணந்து கொண்டான். அவன் எவ்வளவு சந்தோஷத்தோடிருக்கிறான்! அவர்களுடைய மன நிம்மதியில் அணுவளவும் எனக்குக் கிடையாது. ஸ்ரீனிவாசனும் நானும் Honours course பூராகவும் ஒன்றாய் வாசித்தோம். அவனுக்குப் படித்த பெண் கிடைத்தது. அவர்கள் எப்போதும் Shakespeare ஐயும் Milton ஐயும்பற்றிப்பேசிக்கொண்டு சந்தோஷ சாகரத்தில் மூழ்கி யிருக்கிறார்கள். அவன் அவளை

மூர்த்தாஸன் சினிமாவுக்கு அழைத்து வந்திருந்தான். அவள் படித்தவளாதலால் கதையை தானே யூகித்து, அதன் குற்றங்குறைகளை ஸ்ரீனிவாசனோடு discuss பண்ணினாள். உன்னைக்கூட்டிக் கொண்டுபோனாலோ உனக்கு நான் கதையைத் தமிழில் மொழி பெயர்த்துச் சொல்ல வேண்டி இருக்கிறது. உன் அசம்பாவிதமான கேள்விகளையும் பொறுக்க வேண்டியிருக்கிறது. அப்படிப் பொறுத்தும் கடைசியில் 'விடிய விடியக் கதை கேட்டு சீதைக்கு இராமன் யார்' என்ற வியாபாரத்தில் முடிகிறது.

மங்க :—எனக்கு சினிமாவிலெல்லாம் ஆசையில்லை. மேலும் அதுவும் தங்களுக்குத் தொந்திரவு. அதுதான் நான் வரமாட்டேனென்கிறேன். வீட்டு வேலையைப் பார்ப்பதை விட எனக்கு சினிமா, டிராமா முதலானவைகள் எதற்கு?

கிருஷ்ண :—அது மாத்திரமா? பிச்சுக்குப் போனால் ஒரு மோட்டார்காரைக் கண்டால் பயப்படுகிறாய். என் சிநேகிதர்கள் யாராவது பார்த்துவிட்டால் என்னை ஏளனம் செய்கிறார்கள். என் சிநேகிதர்களின் மனைவிகள் அனைவரும் படித்தவர்கள். அவர்களிடம் நீ நன்றாய்ப் பேச யோக்கியதை யற்றவளாயிருக்கிறாய். அதுபோகட்டும். சென்ற வெள்ளிக்கிழமை James துரை இவ்விடம் வந்திருந்த பொழுது உன்னை நான் அவருக்கு அறிமுகப்படுத்த அவர் சந்தோஷத்தினால் உன்னைக் கைகுலுக்க முயன்றபோது நீயேன் வெருண்டு உள்ளே ஓடினாய்? அவர் யார்? நான் படித்த காலேஜின் பிரின்சிபாலல்லவோ? அவர் என்னை என்ன நினைத்துச் சென்றார் தெரியுமா? அவரிடம் படித்த பிள்ளைகளில் நான் ஒருவன் தான் படிப்பில்லாத ஒரு பெண்ணை மணந்தவன். ஸ்ரீனிவாசன் மனைவி James துரையை மிகவும் உபசரித்து, அவருடன் நெடுநேரம் சம்பாஷித்து அவளுடைய புருஷனைக் கனப்படுத்தினாள்—நீ அவரை ஒரு பைசாசம் என்று நினைத்து ஓடி விட்டாய்—சீ! எனக்குப் பிடிக்கவில்லை.

மங்க:—ஐயோ! நானென்ன செய்வேன்? இனிமேல் தாங்கள் சொற்படி தவறாமல் நடக்கிறேன். ஆனால் எனக்கு இனிச் சொல்லிக் கொடுத்து வருமா? குருடனை ராஜ விழி விழியென்றால் எப்படி முடியும்?

கிருஷ்ண :—ஏன் முடியாது? நான் சொல்லுகிறபடி கேட்பாயா?

மங்க :—அப்படியே கேட்கிறேன்

கிருஷ்ண :—உட்காரு! பார்த்தாயா, விடு அந்த வழக்கத்தை. உன்னையேன் எனக்கு சமானமாக நினைக்க மாட்டேனென்கிறாய்? நீ எனக்கு அடிமையா—இல்லை. ஆகையால் என் நாற்காலியில் உட்காராமல் கீழே உட்காருகிறாய்? வா! என் பக்கத்தில் இந்த நாற்காலியில் உட்கார். இங்கிலீஷில் சிறந்த நாடகக்கவியான Shakespeare என்றவர் நாடகங்களில் ஒன்றை வாசித்துத் தமிழில் மொழிபெயர்த்துச் சொல்லுகிறேன். உன் பால் போளியைப் பற்றி நினையாதே! காளிதாசனுக்கும் லீவு கொடுத்து விடு. Shakespeare ஐ எடுத்துக் கொண்டுவா, தெரியுமா?

மங். :—தெரியும், இதோ (எழுந்திருக்கிறாள். எதிரில் சுந்தரவேணி வருகிறாள்.)

சுந். :—மங்களம்! மங்களம்!

கிரு. :—(மெல்லிய குரலில்) சமயம் பார்த்து வந்து விட்டது. இனம் இனத்தோடு. அதுவும் ஒரு காட்டுப் புறத்துக் கழுதை.

மங். :—சுந்தரா! வா (அடுத்த அறைக்குப் போகிறார்கள்.)

சுந். :—இவ்வளவு நாழியாய் விட்டது. எல்லாருக்கும் டிபன் கொடுத்து, சிறு வேலைகளைச்

செய்து விட்டு உடனே வந்து விட்டேன். "மிருச்சகடிகா" நிறுத்தின இடத்திலிருந்து வாசிப்போமா?

மங். :—அப்படியே! பொறு. அவர்களிடம் உத்தரவு பெற்றுக் கொண்டு வருகிறேன்.

(கிருஷ்ணஸ்வாமி அறைக்கு வருகிறான்.)

கிரு. :—(வரும்போதே) போ, போ! என் உத்திரவும் வேண்டுமா? நீ "மிருச்ச கடிகா" வாசித்தாலென்ன, அல்லது தலையிடித்து இரத்தத்தைப் பெறுக விட்டுக் கொண்டாலென்ன?

மங். :—தங்கள் மனவருத்தங் கொள்ளவேண்டாம். சுந்தரவேணியைக் கொஞ்ச நாழியில் அனுப்பி விட்டு வந்து விடுகிறேன். ஏன்! அவளை இப்பொழுதே யனுப்பி விட்டு வருகிறேன். (போகுமுன்)

கிரு. :—இந்தா! வேண்டாம். நீ அவளுடன் எந்த இழவை வேண்டுமானாலும் படி.

மங். :—அவளை யனுப்பிய பிற்பாடு, எவ்விதத்திலும் இன்றிரவு கட்டாயமாய் இங்கிலீஷ் நாடகம் வாசிக்கலாம்.

கிரு. :—சரி அப்படியே செய்வோம். போ. (போகிறாள்.)

(தனக்குள்) இது வரையிலும் நான் ஆசைப்படும் விஷயங்களைக் கருதாத இவள், இன்று Shakespeare இன் நாடகத்தில் திருப்திப்படப் போகிறாளா? இருந்தாலும் பார்ப்போம். அது சரிப்படவில்லை யென்றால் காங்கிரஸ் இயக்கத்தில், கொள்கைகளைப்பற்றி அறிவுறுத்துகிறேன். (மௌனம்) சுதேசமித்திரன் பேப்பர் அவளுக்காகத்தான் வரவழைக்கிறேன். ஆனால் அவள் அதைப் படிக்கிறதாகத் தெரியவில்லை. அதிலும் அவள் நோக்கம் செல்லவில்லை யென்றால், மேல் நாட்டு நாகரிகத்தைப் பற்றியோ, Birth Control, இல்லாவிடில் Motor industry யோ, எதை பற்றி வேண்டுமானாலும் பேசுகிறேன். அவள் ஊக்கத்துடன் கேட்டுக் கொண்டிருந்தால் போறும். நான் என் அகக்கண்ணில் வரைந்திருக்கும் மனைவியாக இவளைத் திருத்த முடியுமா முடியாதா வென்பதை இன்றிரவு கட்டாயமாய்ப் பார்த்து விடுகிறேன் அவ்விதம் அவளைத் திருத்த முடியாவிட்டால் என் செய்வது—(மௌனம்) well, I am fed up.—I will give up everything. Shakespeare புஸ்தகத்தைத் திருப்பிச் சாய்ந்த வண்ணமாய் படிக்கிறான். (திரை விழுகிறது.)

(காட்சி முடிகிறது.)

காட்சி 2.

ஆலையூர்—முன்னிரவு.

சிவஸ்வாமி :—(தனிமொழி) எத்தனை நாள் எவ்வளவு தொந்திரவுகளைப் பொறுப்பது! அவள் படித்த படிப்பில் ஸ்ரீர்க்குணங்களையுட் கொண்டாளே ஒழிய அதன் சிறந்த நோக்கங்கள் ஒன்றையும் ஆராய்ந்தாளில்லை. நம்முடைய ஜாதி யாசாரங்களை யனுசரிக்க மாட்டேனென்கிறாள். பக்குவ நிலைமை யடைந்த ஸ்திரீயாயிருந்தும் அவள் மனப்பாங்கு குழந்தைத் தன்மையினின்றும் மாறவில்லை. அவள் விருப்பத்திற்கு ஒப்ப எவ்வளவோ நடந்தாய் விட்டது. இனியும் அப்படியேயிருக்க விடலாமா? என் தகப்பனாருக்குத் தெரிந்தால் அவர் என்னை என்ன கிழிப்பார்! இவளுக்கு இவள் பெயரை அச்சிட்ட Visiting Cards, Letter blocks முதலியவை எதற்கு? யாரைப் பார்க்கப் போகிறாள், யாருக்கு அடிக்கடி லெட்டர் எழுதப் போகிறாள்? Higginbothams லிருந்து 100 ரூபாய்க்கு V. P. Parcel! இப்புஸ்தகங்களை வாசித்து என்ன செய்யப் போகிறாள்? வரட்டும்! இனிப் பொறுக்கலாகாது. எதாவது ஒரு வழி தேடவேண்டுவதவசியம்.

பெண்மணிகளுக்கு சுதந்தரம்
கிட்டிவிட்டது
இது வரையும் இடும்புடையச் சமையல் வீட்டில் கண் கலங்கி இருந்தவர்கள் இனிமேல் சமையலைச் சுலபமாய்ச் செய்துகொள்ள

ருக்மணி குக்கர்

சமையல் அடுக்கு இருக்கிறது. எத்தனை பேர்களுக்கு வேண்டுமானாலும் இலகுவில், சுருக்க செலவில், நல்ல ருசியோடு கூடியதாய் சமையல் செய்து கொள்ளலாம்.
1, 2, 4, 6, 8 பேர்களுக்குரிய ஐந்து அளவுகள் முறையே ரூ. 13, 18, 22, 27, 33 ல் உண்டு ரையில் கூலி வேறு. விபர புத்தகம் இனாம்
எஜண்டுகள் தேவை
ருக்மணி குக்கர் கம்பெனி, இராயப்புரம் (13) சென்னைபட்டணம்.

சிறுவயதில் கிழத்தனமும் பலஹீனமும் இவைகளை
எங்கள் உயர்ந்தரஸாயனமாகிய
ச்யவனப்ராசாவ லேஹ்யம் நிவர்த்திசெய்யும்

புதிய நெல்லிக்கனிகளைக் கொண்டும் பல மூலிகைகளைக் கொண்டும் செய்யப்பட்டது. கபத்தை சுகமாக வெளிப்படுத்தும்.

(1) க்ஷயம், இரைப்பு, சுவாஸம் முதலியவைகளில் விசேஷமாக உபயோகிக்கப்படுகிறது.

(2) இது பசியை அதிகப்படுத்தி இயற்கையாயுள்ள மலச்சிக்கலையும் போக்குவதால் காட்லிவர் ஆயில் என்னும் மீன் எண்ணெயைவிட சிறந்ததாகும்.

(3) மனமகிழ்ச்சியைத் தரக்கூடிய ருசியுள்ளது.

(4) நீடித்து உபயோகித்து வந்தால் கஷ்டத்தைக் கொடுக்கக்கூடிய இருமல்களில் சுகமாக கபத்தை வெளிப்படுத்தும்.

(5) சரீரபுஷ்டியை யுண்டாக்குவதில் சிறந்தது. அதிக ஸம்போகத்தினாலாவது வலியின்மையினாலாவது உண்டாகும் கோளாறுகளையும் சரீரத்திலுண்டாகும் மற்ற கோளாறுகளையும் போக்கும்.

1 பவுன் ரூபா 8. 4 அவுன்ஸ் ரூபா 1.

ஆந்திர ஆயுர்வேத பார்மஸி லிமிடெட்,
43, ஹாரிஸ் ரோட், மவுண்ட் ரோட், மதராஸ்.

10-ம் பதிப்பு ஆங்கில ஆசான்

(எமதுலேடி டிரேட் மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.

60-நாளையில் இங்கிலீஸ் கற்றுக்கொள்ளக்கூடிய விதமாய் அப்யாசபாடங்களாகவகுத்து முன்பதிப்புகளை விட அதிகபக்கங்கள் சேர்த்துப் பெரிய எழுத்துக்களில் அச்சிட்டிருக்கிறது. இதுவரையில் 53,100 புத்தகங்கள் செலவாயிருப்பதாலேயே இதன் மேன்மை விளங்கும். இப்பத்தாம் பதிப்பு ஆங்கில ஆசான் புத்தகங்களை விட வேறு எந்தபுத்தகங்களிலிருந்தும் அவ்வளவு சீக்கிரத்தில் இங்கிலீஸ் கற்றுக்கொள்ள முடியாதென்பது பலரும் அறிந்த விஷயம். இதில் 1-அணு முதல் 3000 ரூ வரையில் சம்பளம் வாடகைக் கணக்கும் அச்சிட்டிருக்கிறது. 800-பக்கங்களுக்கு மேல்கொண்ட அழகியசீமைகலிகோ பைண்டு செய்தது. ரூ. 2.

அமிர்தகுணபோதினி

இது ஒருநூதன செந்தமிழ் மாதப்பத்திரிகை.

எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு இதன் பத்திராசிரியர்

இதுபோன்ற நவீன மாதாந்தர ஸஞ்சிகை இதுவரை தமிழில் வெளிவந்ததில்லை, இது அபூர்வமும் சிறந்ததுமான வழியில் ஆங்கில மாத ஸஞ்சிகைகளையொப்ப உயர்தரமாய் நடத்தப்படுகின்றது. எல்லாம் கருத்து, எல்லாம் அநுபவம், எல்லாம் புத்தி போதனைகளே. யாவும் சிந்தைக்கினிய செவிக்கினிய அலங்கார வசன மழை. 64-பக்கங்கள்கொண்ட பெரிய பத்திரிகை இது ஒன்றேதான். இந்த ஸஞ்சிகைக்கு நிகராக வேறெந்த ஸஞ்சிகையும் கிடையாது. 31,000 சந்தாதாரர்கள் உள்ளது. வருட சந்தா ரூ. 1. வெளிநாடுகளுக்கு ரூ. 1-4-0 மாதிரி காபி இனாம்.

தி. இராஜகோபால் முதலியார், புரொப்ரைட்டர்,
அமிர்த குணபோதினி ஆபீஸ்,
நெ. 302, தங்கசாலை தெரு, சென்னை.

தேகாரோக்கியத்துடனும் சுக சம்பத்துடனும் தீர்காயுளோடும் வாழவிருப்பினல் எங்கள்

150 பக்கங்கள் கொண்ட

ஆரோக்கிய கிரந்தத்தை

வாசியுங்கள்,

கேட்போருக்கு இனமாகவும் தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

26, பிராட்வே. மதராஸ்.

(குமாஸ்தா வெங்கிடகிருஷ்ணன் பிரவேசம்.)

வெங்கிட கிருஷ்ணு? மோகனம்—என் நாமதம்? வருகிறாளா?

வெங். :—தாங்களழைப்பதாக அழைத்தேன். ஆனல் அவர்கள் பதில் "நான் அவர் அழைத்தால் உடனே வாவேண்டுமென்று கலியாண காலத்தில், ஒரு உடன் படிக்கையும் செய்யவில்லை. எதாவது பேசவேண்டுமானல் இன்னும் 5 நிமிஷம் கழித்து இவ்விடம் வந்து பேச அநுமதி தருகிறேன். 5 நிமிஷம் கழித்து வரட்டும்" என்பது தான்.

சிவ. :—சரி நான், 5 நிமிஷம் கழித்துப் போய்ப் பார்க்கிறேன். நான் கொஞ்ச நாள் வெளியில் போக நேர்ந்தாலும் நேரிடும். வீட்டுச் செலவுக்கும், உன்சம்பளத்துக்கும் இதோ 200 ரூபாய்க்கு Cheque தருகிறேன்.

வெங். :—என்னை மன்னிக்க வேண்டும்! தாங்கள் மனச் சஞ்சல மடைந் திருக்கிறதாகத் தெரிகிறது. நான் மிகவும் அநுதாபப் படுகிறேன். என்னுல் எதாவது செய்ய முடியுமா?

சிவ. :—நீ யென்ன செய்யமுடியும்? என் சஞ்சலம் உனக்குத் தெரியாததா. மோகனம் வந்தது முதல் எனக்கு அவ்வளவு குதுகலம் இல்லை.—உம், நாமென்ன செய்யமுடியும்? ஈசுவரன் செயல்.

வெங். :—வாஸ்தவம். ஆனல், தாங்கள் இவ்விடம் விட்டகலுவதில் என்ன பிரயோசனம். அம்மாளிடம் கொஞ்சம் வற்புறுத்திச் சொல்லலாகாதா?

சிவ. :—அவளிடம் என்ன சொல்லுவது. அவளென்ன படியாதவளா? அவளுக்காகத் தான் தெரியவேண்டும். ஆகட்டும், நான் இன்று ஒரு வேளை இவ்விடம் விட்டுப் போக நேர்ந்தால் நீ வீட்டைப் பார்த்துக் கொள். யாராவது என்னைக் கேட்டால் தகப்பனர் வீடு சென்றிருப்பதாகச் சொல், மோகனத்துக்கும் சரியாக நடந்து கொள்.

வெங். :—அப்படியே!

சிவ. :—5 நிமிஷம் ஆய் விட்டது நான் போய் மோகனத்தைப் பார்க்கிறேன்.

(போகிறன்.)

மோக :—(தனக்குள்) அவர் கூப்பிட்ட போது நான் தயாராயிருக்க வேண்டுமோ? ஏன்! அவர் தான் இங்கே வந்து பேசக் கூடாதோ! எதைப் பற்றிப் பேசப் போகிறார்? மோட்டார்கார் விஷயமாய்த் தானிருக்கவேண்டும். இல்லாவிட்டால் நேற்றுத் தனியாய் National Theatreக்குப் போனதைப் பற்றிப் பேசவோ! எதுவாயிருந்தாலென்ன? பார்ப்போம் (வெளியில் பார்த்து) (வெளிப்படையாய்) வாலாம் உள்ளே.

(சிவஸ்வாமி உட்சென்று ஒரு நாற்காலியில் உட்காருகிறார். மோகனமும் உட்கார்ந்து கொண்டு.)

என்ன விஷயம்?

சிவ. :—விஷயம் அற்பமானதல்ல. நம்மிருவருக்கும் மனஸ்தாபம் வேண்டிய அளவு இருக்கிறது. இவ்விதம் நாம் உலகத்துக்கு ஸ்திரீ புருஷர்களாகவும், நமக்குள் விரோதிகளாகவும் எவ்வளவு காலம் இருக்கிறது! இதற்கு என்ன முடிவு? எப்பொழுது ஓர் முடிவு என்று அறியவே வந்தேன்.

மோக :—தாங்கள் என் மேல் கொண்டுவந்திருக்கிற குற்றங்களை ஒவ்வொன்றுகவோ, அல்லது மொத்தமாகவோ வாசிக்கலாம். அவைகளுக்கு என்னல் கூடிய மட்டிலும் தகுந்த முகாந்தரம் சொல்லுகிறேன்.

சிவ.:—நீ, இவ்வூரிலுள்ள பெண் பாலர்கள் போல் இல்லாமல் உன் நடையுடை பாவனைகளில் காரணமின்றி வேறு பட்டிருப்பதில் எனக்குச் சம்மதமில்லை. நானும் படித்தவன் தான். உன்னுடைய மேலான நோக்கங்களை நான் நன்றாய் ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால் உனக்கு உன் படிப்பில் சிறந்த நோக்கங்கள் ஒன்றும் பிடிபடவில்லையே யென்று தான் வருத்தமுறுகிறேன்.

மோக.:—இது ஒரு பழைய குற்றம். அதற்குத் தகுந்த பதில் முன்னமே அளிக்கப்பட்டிருக்கிறது.

சிவ.:—உனக்கு அது சரியான பதிலாகத் தோன்றலாம். நான் அதை அவ்விதம் ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை.

மோக.:—I don't care.

சிவ.:—Don't be Childish; Unfortunately, our relations force us to care for each other. உன்னுடைய 100 Visiting cards, Motor car, சினிமா போக்குவரத்து, Novel Depot, இவைகளிலெல்லாம், எனக்கும் பொறுப்பிருக்கிறது. நான் உன்னுடைய சௌகரியங்களிலும், உன்னுடைய காரியங்களிலும் தலையிடுவதில்லையென்பதை நீ யறிந்தவள். ஆயினும் ஒரு வரம்பின்றிச் சென்றால், am I not obliged to help you. நீ தயவு செய்து, நம் ஜாதியாசாரங்களுக்குத் தகுந்தவாறு நடக்க முயலக் கூடாதா?

மோக.:—I am a woman of age and you cannot dictate to me a mode of life. என்னைப்பற்றித் தமக்குக் கவலை வேண்டாம். What I owe you is the empty name of a wife. அந்தக் கடமை எனக்கு இல்லாதிருக்கும் விஷயத்தில், என் வாழ்நாள் சந்தோஷமாயிருக்கக் கூடும்.

சிவ.:—மோகனம்! Don't speak of that; for that matter, mine has been a greater tragedy. குடித்தனப் பாங்குக்கு இசைந்த ஸ்திரீ ஒருத்தியை நான் விரும்பினேன். ஆடம்பர மற்றதும், காதலும், நிம்மதியுமுள்ள ஒரு home நான் விரும்பினேன். அதற்குப் பதிலாக விசேஷ ஆடம்பரமும் கொந்தளிப்பும் எனக்குக் கிடைத்தன. (மௌனம்)—சரி! நீ ஒரே பிடிவாதமாய்த்தானிருக்கிறாய். ஒரு வழியுமில்லையா. What would you have me do?

மோக.:—I would simply like to get rid of you. ஆனால் தாங்கள் புகழும் நம் குல ஆசாரங்கள் என்னால் தற்சமயம் அசைக்கக் கூடாதபடி அவ்வளவு வேரூன்றியிருப்பதால் நான் அவைகளுக்குக் கட்டுப் பட்டு நடக்கவேண்டியதாயிருக்கிறது. I will wait for better times. இப்பொழுது அப்பாழும் வழக்கங்கள் என்னை எவ்வளவு தங்களுக்கு கட்டுப்படுத்தக் கூடுமோ, அவ்வளவே தான் கட்டுப்படுத்த இடந்தருவேன். உலகத்துக்கு மாத்திரமே நான் தங்கள் மனைவி. நமக்குள் சிநேகிதர்கள் தான். ஆகையால் என்னை அடிக்கடி தொந்தரவு செய்ய வேண்டாம். நான் தங்களை பயமுறுத்துகிறேனென்று நினைக்கவேண்டாம். என்னை என்னிஷ்டம் போலிருக்க விடுங்கள்.

சிவ.:—So, you are relentless?

மோக.—I am not; you are.

சிவ.:—(மௌனம்) Positively, I am; சரி மோகனம், உன்னிஷ்டம். I am very sensitive to a family quarrel. நான் போய்வருகிறேன். Kindly excuse me.

(போகிறான்)

சிவ. :—நீ, இவ்வூரிலுள்ள பெண் பாலர்கள் போல் இல்லாமல் உன் நடையுடை பாவனைகளில் காரணமின்றி வேறு பட்டிருப்பதில் எனக்குச் சம்மதமில்லை. நானும் படித்தவன் தான். உன்னுடைய மேலான நோக்கங்களை நான் நன்றாய் ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால் உனக்கு உன் படிப்பில் சிறந்த நோக்கங்கள் ஒன்றும் பிடிபடவில்லையே யென்று தான் வருத்தமுறுகிறேன்.

மோக. :—இது ஒரு பழைய குற்றம். அதற்குத் தகுந்த பதில் முன்னமே அளிக்கப் பட்டிருக்கிறது.

சிவ. :—உனக்கு அது சரியான பதிலாகத் தோன்றலாம். நான் அதை அவ்விதம் ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை.

மோக. :—I don't care.

சிவ. :—Don't be Childish; Unfortunately, our relations force us to care for each other. உன்னுடைய 100 Visiting cards, Motor car, சினிமா போக்குவரத்து, Novel Depot, இவைகளிலெல்லாம், எனக்கும் பொறுப்பிருக்கிறது. நான் உன்னுடைய சௌகரியங்களிலும், உன்னுடைய காரியங்களிலும் தலையிடுவதில்லை யென்பதை நீ யறிந்தவள். ஆயினும் ஒரு வரம்பின்றிச் சென்றால், am I not obliged to help you. நீ தயவு செய்து, நம் ஜாதியாசாரங்களுக்குத் தகுந்தவாறு நடக்க முயலக் கூடாதா?

மோக. :—I am a woman of age and you cannot dictate to me a mode of life. என்னைப்பற்றித் தமக்குக் கவலை வேண்டாம். What I owe you is the empty name of a wife. அந்தக் கடமை எனக்கு இல்லாதிருக்கும் விஷயத்தில், என் வாழ்நாள் சந்தோஷமாயிருக்கக் கூடும்.

சிவ. :—மோகனம்! Don't speak of that; for that matter, mine has been a greater tragedy. குடித்தனப் பாங்குக்கு இசைந்த ஸ்திரீ ஒருத்தியை நான் விரும்பினேன். ஆடம்பர மற்றதும், காதலும், நிம்மதியுமுள்ள ஒரு home நான் விரும்பினேன். அதற்குப் பதிலாக விசேஷ ஆடம்பரமும் கொந்தளிப்பும் எனக்குக் கிடைத்தன. (மௌனம்)—சரி! நீ ஒரே பிடிவாதமாய்த்தானிருக்கிறாய். ஒரு வழியுமில்லையா. What would you have me do?

மோக. :—I would simply like to get rid of you. ஆனால் தாங்கள் புகழும் நம் குல ஆசாரங்கள் என்னால் தற்சமயம் அசைக்கக் கூடாதபடி அவ்வளவு வேரூன்றியிருப்பதால் நான் அவைகளுக்குக் கட்டுப் பட்டு நடக்கவேண்டியதாயிருக்கிறது. I will wait for better times. இப்பொழுது அப்பழும் வழக்கங்கள் என்னை எவ்வளவு தங்களுக்கு கட்டுப்படுத்தக் கூடுமோ, அவ்வளவே தான் கட்டுப்படுத்த இடந்தருவேன். உலகத்துக்கு மாத்திரமே நான் தங்கள் மனைவி. நமக்குள் சிநேகிதர்கள் தான். ஆகையால் என்னை அடிக்கடி தொந்தரவு செய்ய வேண்டாம். நான் தங்களை பயமுறுத்துகிறேனென்று நினைக்கவேண்டாம். என்னை என்னிஷ்டம் போலிருக்க விடுங்கள்.

சிவ. :—So, you are relentless?

மோக. :—I am not; you are.

சிவ. :—(மௌனம்) Positively, I am; சரி மோகனம், உன்னிஷ்டம். I am very sensitive to a family quarrel. நான் போய்வருகிறேன். Kindly excuse me. (போகிறான்)

மோக. :—(தனக்குள்) நல்ல வேளை தைரியமாகப் பேசிவிட்டேன். இனிமேல் அடிக்கடி தொந்தரவு செய்ய மாட்டார்—பூ! மணி 8 ஆய் விட்டது. இன்று இம்பீரியல் ஹாலில் Douglas Fair banks சினிமா பார்க்க வேண்டியதவசியம். சாப்பிட்டு விட்டுச் சீக்கிரம் புறப்படவேண்டும்.

(கீழேயிறங்குகிறாள்.)

(காட்சி முடிகிறது.)

அங்கம். 3. காட்சி. (1)
சத்திரத்துத் திண்ணை.
இரவு. 11-மணி. சிவஸ்வாமி.

சிவ. :—(தனக்குள்) இவ்வளவு நாழிகை அங்குமிங்கும் அலைந்தாய் விட்டது. கொஞ்ச நாள் அவளை விட்டுப் பிரிந்திருந்து பார்க்கிறேன். இவளுக்குப் புத்தி, தானாக வரவேண்டுமே ஒழிய சொல்லிக் கொடுத்து வராது. அந்நாளில் அவள் மனம் சென்றவாறு நடக்கட்டும். அப்பொழுது தான் அதற்கு இயற்கையாக, ஓர் முடிவு காலம் வரும். அதற்கப்புறம் வந்து பார்ப்பேன். அவ்விதம் நான் நினைக்கிறபடி, அவள் பின்னும் திருந்தாவிடில் என் விதிப்படி நடக்கிறது. இரவு மணி பதினொன்றிருக்கும். இச்சத்திரத்துத் திண்ணையில் படுத்துறங்கி இரவைக் கழித்துக் காலையில் எங்கேயாவது செல்வேன். (ஒரு ஓரத்தில் இருளான இடத்தில் அங்க வஸ்திரத்தை விரித்துப் படுத்துக் கொள்கிறான்.)

(தனக்குள்) அதோ யாரோ, ஒருவன் இவ்விடம் நோக்கி வருகிறான். கள்வனோ? குடிகாரனோ? யாராயிருந்தால் எனக்கென்ன? என்னிடம் என்ன இருக்கிறது? (கண்களை மூடிக் கொள்கிறான்.)

கிரு. :—(சிவஸ்வாமி படுத்திருக்கும் திண்ணைக்குப் பக்கத்தில் அவனை பார்க்காமல் உட்கார்ந்து) (தனிமொழி) இன்றோடு எனக்கு இந்த குடும்பவாழ்க்கை விட்டது; கல்வியறிவில்லாத மனைவியால் என்ன பிரயோசனம்?

(வெளிப்படையாய்) யாரைச் சொல்ல என்ன குற்றம்! என் தகப்பனார் குலத்துக்கு ஆசைப் பட்டு என்னை இந்த நாட்டுப் புறத்துப் பெண்ணுக்கு மணம் முடித்து வைத்தார். அவர்களுக்கு தற்கால நாகரிகம் தெரிந்தாலல்லவோ! பழம் பைத்தியங்கள்.

சிவ. :—(எழுந்திருந்து) ஐயா தாங்கள் யார்?

கிரு. :—(திடுக்கிட்டுத் திரும்பி பார்த்து) யார்? நீர் யார் ஐயா? நான் நிரபராதி

சிவ. :—ஐயா! பயப்படவேண்டாம். நான் கள்வனுமல்ல. போலீஸ் காரனுமல்ல. தாம் தம்முடைய மனவருத்தத்தை வெளி விட்டுப் பிரலாபித்த பொழுது தாமும் என்னைப் போல் துயரமுற்றிருக்கிறதாகத் தெரிந்தது. அதனால் என்னை யறியாமல் தம்பால் ஒரு அநுதாபம் ஏற்பட்டது. நம்முடைய துயரத்தை ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டால் பாதித்துயரம் நீங்கும். அதனுடைய பாரம் குறையுமாதலால், தயவு செய்து தெரிவியுங்கள். நாம் இருவரும் ஒருவர்க்கொருவர் நட்புக் கொள்ள இடமாகும்.

கிரு. :—என்ன, சொல்லச் சொல்லுகிறீர்கள். எனக்கு அதிக பால்யத்தில் என் பெற்றோர் ஒரு கலியாணத்தை முடித்தனர். அப்பெண் இப்பொழுது என் மனதுக்கு இசைந்தவளாக இல்லை. இன்று இரவு மிகவும் உறுதியாய் என் வழிதிரும்பச் சம்மதித்தாள். ஆனால் அவளால் முடியவில்லை.

சிவ. :—தாங்கள் அப்பெண்ணிடத்தில் காணும் குற்றமென்ன?

கிரு. :—அவளுக்குக் கொஞ்சமும் இங்கிலீஷ் படிப்புகிடையாது. சமையல் தொழிலையும்

பட்சணம் பண்ணுகிறதையும் தவிர வேறு ஒன்றும் தெரியாது. என்னுடன் பலவகை விஷயத்தைப் பற்றி, சம்பாஷிக்க அறிவில்லாதவள். இன்றிரவு நான், Shakespeare எழுதிய நாடகத்தில் ஒரு சீன் படித்து, அவளுக்கு அர்த்தம் சொல்லிக்கொண்டிருக்கும் பொழுது, அதைக் கவனியாமல் உறங்கிவிட்டாள். என்னிடம் இன்று சாயந்திரம் கட்டாயமாய் Shakespeare வாசிக்கலாமென்று சொன்னாள். இன்னும் எவ்வளவோ செய்கைகளில், அவள் என் மனதுக்குத் தகுந்தவாறு நடக்கமாட்டேனென்கிறாள். முன்புறம் கொசுவம் வைத்து புடவைக் கட்டிக்கச் சொன்னால் மாட்டேன் என்கிறாள். நல்ல சில்கில் தற்கால நாகரிகத்துக்குச் சரிபானபடி தைத்த ரவிக்கைகளை தூர எறிந்து விட்டுக் கொரநாட்டுத் துண்டு ரவிக்கைகளைத் தான் தரித்துக் கொள்ளுகிறாள். தலையில் ஒரு ஓரமாய் வகுடு எடுத்துக் கொள்ளச் சொன்னால் மத்தியில் தான் எடுத்துக் கொள்கிறாள். வாழை நாரினால் தான் தலை பின்னிக் கொள்கிறாள். ரிப்பன்கள் கிடையாது.

சிவ. :—(தனக்குள்) ஏது. இது ஒரு Comedy of Errors ஆயிருக்கிறதே? எனக்கும் இவருக்கும் எவ்வளவு பேதமிருக்கிறது.

கிரு. :—அது மாத்திரமா, wrist watch ஐக் கையில் கட்டினால் தேள் கொட்டி விட்ட மாதிரி நினைக்கிறாள். குடை செருப்பு முதலியவற்றை உபயோகிப்பது கிடையாது. Shakespeare ஐயும் Shelley ஐயும் பற்றிப் பேசினால் கால தூதர்களைப் பற்றிப் பேசுவது போல் பயப்படுகிறாள்.

சிவ. :—(தனக்குள்) இவன் சொல்வதைப் பார்த்தால் இவனுடைய பத்தினி மிகவும், நற்குண நற் செய்கைகளையுடைய மங்கையாயிருக்க வேண்டும் (வெளிப்படையாய்) ஆம். உண்மை! ஸ்திரி, தன் பர்த்தாவின், அபீஷ்டங்களைத் தானே உணர்ந்து அவைகளுக் கிணையாக நடக்கவேண்டுவதே உத்தமம். ஆகையால்—

கிரு. :—அப்படியர்த்தமல்ல. அவளை நான் எனக்கு அடிமையாக இருக்கவேண்டுமென்று சொல்லவில்லை. Rather, What I resent in her humility.

சிவ :—ஓகோ! அப்படியா. (தனக்குள்) He resents her humility! ஆஹா! தெய்வமே! மோஹனமும், இவ்வித நற்குணமுடைய ஸ்திரீயாயிருக்க கூடாதா! (வெளிப்படையாய்) எக்காரணத்தினாலோ தங்களுக்கு அவள் சரியாக நடந்து கொள்ள முடியவில்லை. ஆகையால் அவளை விட்டகன்றீர்கள் போலும்! இருக்கட்டும்! தங்களுக்கு ஆகாரமாய் விட்டது என்று தெரிகிறது. நான் ஒரு ஆகாரமும் உட்கொள்ளாமலே படுத்து விட்டேன். நானும் தங்களைப் போல் மனைவி பாக்கியம் பெறாத ஒருவன். தாம் எப்படித் தம் மனைவியை வெறுத்து, வெளியேறினீரோ, அவ்விதம் நானும் வெளியேறியிருக்கிறேன். நம் நிலைமையில் வித்தியாசம் என்னவென்றால், தாங்கள் தங்களுடைய பத்தினியைத் தவிக்கவிட்டுத் தாங்களாகவே வந்தீர். நானோ என்பத்தினியால் துரத்தப்பட்டேன். நம்மிருவருடைய நோக்கங்களும், மனப்பாங்கும், முற்றிலும் வேறுபட்டிருக்கின்றன—ஆயினும்—

கிரு. :—தங்களுடைய வரலாற்றையும் தெரிவிக்கக் கூடாதா?

சிவ. :—கட்டாயமாய்! தாங்கள் என் வரலாற்றையும் கேட்கவேண்டும். இதோ இந்த கிணற்றில் கொஞ்சம் ஜலம் பருகிவிட்டு வருகிறேன். பின் என் வரலாற்றையும் ஆதி

யோடந்தமாய் தெரிவிக்கிறேன். நாம் இருவரும் ஒரேவிதமான துன்பத்தால், பீடிக்கப் பட்டிருப்பதால் நம் மிருவர், யுக்தி, சூழ்ச்சி, முதலியவற்றால், இத்துன்பத்தை விலக்க, வழிதேடுவோம். எனக்கு இல்லறவாழ்க்கையை விட மனதில்லை. நானும் அன்பும் அமைதியும் நிறைந்த, அகத்தின் வேட்கையால் வருந்துகிறேன். என் ஆசை அதிகரிக்க அதிகரிக்க, அக்கற்பனாலசமும் தூரச் சென்று கொண்டேயிருக்கிறது.

கிரு. :—எனக்கும் அவ்வேட்கை அதிகம்—கல்வி அறிவுள்ள ஓர் துணைவி. An intellectual Companion that is my ideal.

சிவ. :—(தனக்குள்) ஒகோ! இங்கிலீஷ் படித்திருந்தால் தான் ஒரு மனைவி, intellectual Companion ஆவாளோ? (வெளிப்படையாய்) இதோ ஜலம் குடித்து விட்டு வருவோம். பின் என் சரித்திரத்தை வாசிக்கிறேன். அது முடிந்ததும் கொஞ்சம் படுத்துறங்குவோம். விடிந்ததும் வேண்டியதை ஆலோசித்து ஒரு முடிவுக்கு வருவோம்.

(போகிறார்கள்)

சிவ. :—(போகும் பொழுதே) தாங்கள் நாமதேயம் என்ன?

கிரு. :—கிருஷ்ணஸ்வாமி! your name please.

சிவ. :—சிவஸ்வாமி.

அங்கம் 2. காட்சி 1.

பகல். காந்தம்.

காந். :—(தனக்குள்) 2. 3. நாளாக சிவஸ்வாமியைக் காணவில்லை. வேறு யாரோ ஒருவன். சட்டையும், பூட்சும் தரித்து மூக்குக்கண்ணாடியும் கெடியாரமும் அலங்காரமாய் வந்திருக்கிறான். வெங்கிட கிருஷ்ணனை கேட்டால் தெரியும். (வெங்கிட கிருஷ்ணன் வருகிறான்) (வெளிப்படையாய்.) வெங்கிட கிருஷ்ணா. வா! கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது. உன் யஜமானாத்து விஷயமென்ன? தலை கீழாய் நடக்கிறதே. என்ன விஷயம்? சிவஸ்வாமி எங்கே? வந்திருப்பவன் யார்? உன்னை என் அடிக்கடி அவாத்தில் காணோம்.

வெங் :—அது ஒரு பெரிய பாரதம்.

காந். :—உள்ளேவா! உட்காரு. யாரடி உள்ளே! கோமளம்! வெங்கிட்டு வந்திருக்கான் பாரு. அவனுக்கு ரண்டு வடுமாங்காயும் சால் ஜலமும் கொண்டுவா. வெங்கிட்டு! நீ, அவாத்தை விட்டு நீங்கிட்டையா? வந்திருப்பவன் அவனை விட ஒரு தடபுடல் ஆசாமிபோலிருக்கே!

வெங் :—(மாங்காயை மென்று கொண்டும், ஜலத்தைப் பருகி கொண்டும்) அன்னியனில்லை. வந்திருப்பவர் கிருஷ்ணஸ்வாமியென்ற அவாளுடைய அத்தானாம். உயர்ந்த பரீட்சை பாஸ் பண்ணினவராம்.

காந். :—இம்பிட்டு நாளுமில்லாத அத்தான் இப்பொழுது எங்கிருந்து வந்தான்?

வெங். :—எனக்கு அது தெரியாது. அவர் இந்த ஊரில் வியாபாரி விஸ்வநாதய்யரிடம் ஏதோ வேலையாய் வந்தவர்; தம் அம்மன்காரை பார்த்துச் செல்லலாமென்று வந்தாராம், வந்ததும் சிவஸ்வாமியில்லாததால் அவர் வரும்வரைத் தங்கிப் போகலாமென்று தீர்மானித்திருக்கிறார். ஆனால் இன்னொன்று. (மௌனம்) அதை உன்னிடம் சொல்லக் கூடாது. சொன்னால் ஊரெல்லாம் பரவி விடும்.

காந். :—வெங்கிட்டு! இதோ என் சுப்ரமண்யன் மேல் ஆணை. நான் ஒருவரிடமும் சொல்லவில்லை.

வெங்.:—உனக்கு ஆணை ஏது, சத்தியமேது. பாதகமில்லை, நான் சொல்லப் போவதில் வித்தியாசமொன்று மில்லை. அதாவது அவர்கள் இருவரும் ஒருவர்க்கொருவர் நடந்து கொள்கிறதை பார்த்தால், உலகம் சந்தேகம் கொள்ளும். அவளிடம் ரொம்பவும் சிரித்து விளையாடி பேசுகிருன். மத்தியானம் இருவரும் சீட்டாடுகிறார்கள். இருவரும் ஒருவர்க் கொருவர் விளையாட்டாகப் பேசிக் கொள்ளுகிருர்கள். ஆனால் என் மட்டிலும் நான் அவளைப் பற்றி வித்தியாசமாய் நினைக்கமாட்டேன். அவள் உயர்தரக்கல்வி கற்றதால் அநேக புருஷர்களிடம் பேசி, வழக்கமிருக்கும். எல்லாம் பழக்கம் தானே காரணம்.

கார்.:—ஆமாம் பழக்கம். இவள் என்ன வெள்ளைக்காரச்சியோ? ராஜாமகளோ? எவ்வளவோ பேர்கள் படியாத படிப்பு இவள் என்ன படித்து விட்டாள். என்ன இருந்தாலும், தடிபோல் வயது இருபது இருக்கும். இன்னொரு புருஷனிடம் சீட்டு விளையாடலாமோ? நன்றாருக்கு! இதுகளை நம்பவே கூடாது. கோமளத்தைப் பாரு. 5 வயது ஆண் பிள்ளை உள்ளே வந்தாலும், அவள் சடேலென்று அடுக்குளைக்குப் போய்விடுவாள்.

வெங்.:—நீ சொல்வது சரிதான். ஆனாலும் அவ்விதம் ஆராயாமல் ஒரு குற்றமும் அவளைப்பற்றிச் சொல்லலாகாது. அவளுடைய செய்கைகள் உன் மனதுக்கு சரியாகத்தோன்றும் வழக்கங்களின்றும் மாறுபட்டிருப்பதால், நீ அவைகளை குற்றம் என்று நினைக்கிறாய். முதலில் உனககு கட்டுப் படுத்தும் பழக்க வழக்கங்கள், சரியானதா. அவை நற்பயனை அளிக்கக் கூடியதா என்பதேத் தெரியாது. ஆகையால் ஒவ்வொருவருடைய வெளிச் செய்கைகள் பலவேறு வகையிலும் மாறுபட்டிருக்கலாம். முக்கியமாய் கவனிக்கவேண்டியது, அவரவருடைய உள்ளம் பரிசுத்தமாயிருக்கிறதா இல்லையா என்பது. மோகனத்தின் நடையுடை பாவனைகள் சகவாசத்தினால் வந்ததாயிருக்கலாம். அவள் மனது சுத்தமாயிருக்கலாம். நான் ஒருவர், குற்றம் செய்வதை கண்ணாரக் கண்டாலோ, அல்லது தகுந்த காரணங்கள் இருந்தாலோ தவிர அவரைக் குற்றவாளி என்று கருதமாட்டேன்.

கார்.:—போடா, போ! குற்றம் செய்கிறவள் உன் கண்ணுக்கு முன்னால் வந்து செய்வாளா. உனக்கென்ன தெரியும். தலையிலடித்து கையில் கொடுத்தாலும் வாங்கிப்பாய். அதிருக்கட்டும், நீ அவாத்திலில்லயா இப்பொழுது?

வெங்.:—இல்லே, எனக்கும் அவளுக்கும். முந்தியே பிடிக்காது. ரண்டு, மூன்று, நாளுக்கு முன் மோட்டார்கார் விஷயங்களைபற்றி என்னிடம் கேட்டாள். அவள் எத்தனையோ விதமான கார்கள் பெயரெல்லாம் சொன்னாள். நான் அதற்கு அந்த விஷயத்தில் அறுபோகக் குறைவு என்று சொன்னேன். உடனே என்னை வேலையின்றும் நீக்கி மோட்டார்கார் ஓட்டவும், வரவுசெலவு கணக்குப் பதியவும் கூடியவனான ஒருவன் தேவையென்று News பேப்பரில் வெளியிட்டுக் கொள்ளப்போவதாகச் சொன்னாள். நானும் மிகவும் சந்தோஷத்தோடு விலகிக் கொண்டேன். கிழவின் அருமை வெயிலில் போனால் தான் தெரியும். சிவஸ்வாமியின் அருமை என்ன? இவள் கொடுமை என்ன?

கார்.:—வெங்கிட்டு! நீ, ஏன், வருத்தபடராய்? உனக்கென்னடா, உங்கப்பா உனக்கு

ஒன்றும் வைக்கலையா? நீ ஒரு பிள்ளை. உனக்கு ஒரு 5 வேலி நிலம் இருக்கு. உண்டியல் கடை விஸ்வத்துங்கிட்டெ 10,000 ரூபாய் ரொக்கம் வச்சருக்கிறார். உனக்கு இந்த கர்வம்பிடித்தவளிடம் வேலை செய்து தான் சாப்பிடணமா. போரும் போ?

வெங்.:—அதற்காக இல்லே. சிவஸ்வாமியினுடைய மேன்மையான குணத்துக்கு, இம்மாதிரியான ஒரு ஸ்திரியா மனைவியாக சித்திக்கவேண்டு மென்று தான் வருத்தப்பட்டேன்.

கார்.:—சிவஸ்வாமி எங்கேபோயிருக்கிறான்.

வெங்.:—(தனக்குள்) இவளிடத்தில் உண்மையைத் தெரிவிக்கவேண்டாம். (வெளிப்படையாய்) அவர் தகப்பனார் அவருக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார், தகப்பனார் வீடுதான் சென்றிருக்க வேண்டும். விஷயம் அவசரமாயிருந்திருக்கும். ஆனதினால் தான் உடனே புறப்பட்டுப் போயிருக்கிறார். எனக்கு நாழியாகிறது. கடைக்குப் புறப்பட்டேன். நீ வழியில் கண்டு பிடித்துக் கொண்டு விட்டாய், போய் வருகிறேன்.

கார்.:—போயிட்டுவா. மறந்துடாதே. என்னென்ன, நடக்கிறது என்பதைச் சொல்லு.

வெங்.:—ஆகா, எனக்குத் தெரிந்தால் சொல்லுகிறேன். (போகிறான்)

கார்.:—கோமளம்! செத்தெ விசிறியெடுத்து எனக்கு விசிறு. (கோமளம் விசிறியெடுத்து வருகிறாள்.) இப்படி உட்கார்ந்து விசுறு. உலகம் தலைகீழாய் நடக்கிறது. அடுக்குளைக்காரிக்கு இங்கிலீஷ் படிப்பு வந்தால் குடும்பம் அலங்கோலந்தான். நல்ல வேளையாய் உங்க அப்பா உனக்கு இந்தப்படிப்புச் சொல்லி வைக்கவில்லை. இதெல்லாம் எங்காத்து ராமுவுக்குப்பிடியாது. நீ எவ்வளவோ புண்ணியத்தைப் பண்ணியாக்கும் அவனுக்கு வாழ்க்கைப் பட்டாய். இல்லாட்ட உங்க அப்பா உனக்குச் செய்த சீருக்கும், உன் மஞ்சக்காணிக்கும், என் ராமுவைப் போல் மாப்பிள்ளை கிடைக்குமா? நான் மாட்டுப்பெண்ணை நடத்துகிறதைப் பற்றி உலகமே என்னைப் புகழ்கிறது.

திரை விழுகிறது.

காட்சி முடிகிறது.

காட்சி (2)

இரவு:—(கிருஷ்ணசாமியும், கேசவனும்)

கிரு.:—ஏனப்பா! மோகனம் என்ன தெரிவித்தாள். கொஞ்சநாழிகை கழித்து வாச் சொல்லக் காரண மென்ன?

கேச.:—நான் தாங்கள் வருவதாகத் தெரிவித்தேன். அதற்கு அம்மணி ஏதோ வேலையாக யிருப்பதால் 15 நிமிஷம் சென்று வரும்படி சொல்லச் சொன்னார்கள். அவர்கள் மேசை நிறைய கடிதங்கள் அநேகம் வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

கிரு.:—(தனக்குள்) ஏது, பெரிய ஆடம்பரமாயிருக்கிறது. சிவஸ்வாமியையும் இவ்விதம் தான் இவள் நடத்தியிருக்கவேண்டும். (வெளிப்படையாய்) நல்லது நீபோ! (கேசவன் போகிறான்.) (தனக்குள்) இது என்ன என் நட்புக்கு ஒரு ஸ்திரீயும் இயைந்தவளாகத் தெரியவில்லையே. நான் எனக்கு ஒரு intellectual friend ஐ எதிர்பார்த்தேன். அவளோ படித்த ஸ்திரீகள் போல் தானிருக்கிறாளா? இல்லவே இல்லை. அவளுடைய இங்கிலீஷ் படிப்பு அவளுக்கு நற்பயனளிக்கவில்லை. அப்படிப்பினால், அவளுடைய கொள்கைகள் மாறுபட்டுவிட்டன. அதனால் ஸ்திரீ சுவதந்திரத்தைப் பற்றித் தப்பிதமான அபிப்பிராயங்களை ஏற்றுக்

கொண்டாள். அன்றி அதன் உட்கருத்தை அறியவில்லை. அவள் பேச்சு நடத்தைகள் முதலியவற்றில் ஒரு விதமான, அநாவசியமான கம்பீரம் இருக்கிறது. ஏன் இவ்வளவு affectation—ஆகா, எல்லா ஸ்திரீகளும் நமக்கு இங்கிலீஷ் படிப்பு வந்தால் இவ்விதம்தானிருப்பார்களோ! சீ! என்ன, இங்கிலீஷ் படிப்பு ஒரு ஸ்திரீயை நோக்கி "பெண்ணே! உனக்கு ஸ்திரீ ஸ்வதந்தர உணர்ச்சி எழுந்திருப்பின், அவ்வுணர்ச்சியை வெளிக்காட்ட, சினிமாவுக்காவது, டிராமாவுக்காவது தனியாயோ, அல்லது உன்னுடைய எதாவது ஒரு புருஷ ஸ்நேகிதரோடோ போக வேண்டும்" என்று கூறுகிறதா! எனக்கு என்னவோ அவளிடம் முதல் நாள் சம்பாஷித்த அவ்வளவு குதூஹலம் இப்பொழுது இல்லை. மங்களம் எனக்கு இசைந்த மனைவியல்லவென்பது உண்மை. ஆனால் மங்களமும் இங்கிலீஷ் படித்திருந்து மோகனத்தைப்போலிருந்தால், அப்பொழுதும் அவள் எனக்குச் சரியான துணைவியல்லவென்று தான் நினைப்பேன். நான் நினைத்தபடி மோகனம் ஒரு Intellectual companion அல்ல. அவள் கொஞ்சமாவது modest, ஆகவும் மரியாதையாயுமிருந்தால் அவள் சம்பாஷணையில் திருப்தியடைந்திருப்பேன். உறவினன் என்று சிவஸ்வாமி எழுதிக் கொடுத்த லிகித மூலமாய் என்னை யறிமுகப் படுத்திக் கொண்டேன். கொஞ்சமாவது, தன் புருஷனைப்பற்றி என்னிடம் கேட்கவில்லை. என்னிடமும் என்னைப்பற்றி ஒருவிதமான கேள்வியும் கேட்கவில்லை. நெடுங்காலம் பழகினவன் மாதிரி நடந்து கொள்ளுகிறாள்—

[மோ]க. :—எழுந்திருங்கள்! என் அறைக்குப் போகலாம். ஒரு Clerk வேணுமென்று advertise பண்ணியிருந்தேனல்லவோ! அநேக அப்ளிகேஷன்ஸ் வந்திருந்தன. அவைகளைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அதனால் தான் தாங்கள் தாமதிக்க நேர்ந்தது.

கிரு. :—(எழுந்திருந்து) பாவாயில்லை. போவோம். (தனக்குள்) இதென்ன ஆடம்பரம்!

மோக. —ஏன் இன்று ஒரு மாதிரியாயிருக்கிறீர்கள். ஸ்திரீகளுக்குச் செய்ய வேண்டிய உபசாரங்களை மறந்தீர்கள்.

கிரு. :—இல்லை, இல்லை நான் ஒரு விஷயத்தைப் பற்றி ஆழ்ந்த சிந்தனையிலிருந்தேன்.

(மோகனம் அறையில் இருவரும் இரு நாற்காலியில் உட்காருகிறார்கள். மேஜையின் மேலிருந்த ஒரு புஸ்தகத்தை எடுத்து.)

ஏன், இந்த trash எல்லாம் வாசிக்கின்றாய்.

மோக. :—Hobson's Magazine அவ்வளவு கேவலமானதா? அதில், நவீனம், காதல் முதலிய சிறு கதைகள் பல இருக்கின்றன.

கிரு. :—அது இருக்கட்டும். எனக்கு அவைகள் பிடிக்காது. உன்னிடம் Golden Treasury இருக்கிறதா? அதை எடு.

மோக. :—என்னிடம் Poetical works ஒன்றும் கிடையாது. Messrs. Higginbotham's லிருந்து up-to-date நாவல்கள் வாங்கிவைத்திருக்கிறேன். ஏன் இந்தச் சிறு கதை மிகவும் gripping ஆக இருக்கிறது. இதை வாசிக்கிறேன்கேளும் (கொஞ்சநேரம் படித்து) பார்த்தாயா? மிஸ் எல்ஸிஸ் ஏமாந்து போகப் போகிறாள்! என்ன இது? உமக்குப் பித்தமா?

கிரு. :—பித்தமில்லை. அதில் என் மனது நாடவில்லை. நாம் வேறு எதையாவது பற்றிப் பேசுவோம்.

சிக்கனந்தேடும் பெண்மணிகளுக்கு

சிறப்புவாய்ந்த

டாஸ் லோ

டைமன்ட்

வைர நகைகள்



கண்ணாடி கற்களை வாங்கி
மோசம் போகவேண்டாம்

உயர்ந்த விலைபெறும் உண்மை வைரங்களைப்போல் ஜொலிப்பு, பிரகாசம், காந்தி, அழகு, மேன்மை எல்லாம் நிறைந்ததும் விலையோ மிகக்குறைவு. கியாரட் ரூ. 3 முதல் ரூபா 8 வரை நகைகள் கேட்லாக் இனம் அனுப்பபடும்.

பி. கோபால்ஸ்வாமி நாயுடு அன் சன்,

டாஸ்லோ வைர வியாபாரம்,

பறங்கிமலை போஸ்ட், (சென்னைபட்டணம்.)

காயசித்தி மகரத்வஜம் ரிஜிஸ்டர்டு

(உயர்ந்த பலவிருத்தி மருந்து.)

தவசிரேஷ்டராயுள்ள மஹா ரிஷிகள் நோயணுகாமல் தங்கள் தேகத்தைக் காப்பாற்றிக்கொள்ள உட்கொண்ட காயசித்தி மூலிகையையும் சிறிதும் கலப்பில்லாத மகரத்துவஜத்துடன் கூட்டிச்செய்த சிறந்த ஔஷதம் இது. இம்மூலிகை ரிஷிகளால் புகழப்பட்டது. இது போகசக்தி யில்லாதவர்க்கும், பலஹீனருக்கும் உரித்தானது. அவர்களுக்கு மிகுந்த பயன் தரவல்லது. இது நரம்புத்தளர்ச்சி, இரத்தக் குறைவு, ஞாபகக் குறைவு, இரக்த அசுத்தம், நெஞ்சிடிப்பு பசியின்மை, பித்தம் தலைச்சுற்றல், சீதபேதி, ஆரம்ப குஷ்டம், மேகநீர், ஸ்திரீ சம்பந்த வியாதிகள் இவைகளைத் தீர்க்கக்கூடியது. சொப்பனஸ்கலிதம், இந்திரிய ஒழுக்கு, ஆண்மலட்டு ரோகம், நபும்ஸகத்வம், இவற்றை நீக்கி மூளையின் நரம்புகளுக்கு வலுவைக்கொடுத்துப் பூரண தாதுபுஷ்டியைக் கொடுக்கக்கூடியது. சரீர ஆரோக்யமும் மனதிடமும் உண்டாக்க வல்லது வாலிபரை வீரராயும், விருத்தரை வாலிபராயும் செய்து எல்லாருக்கும் தேக வலிமையையும், மனவன்மையையும் கொடுக்கவல்லது. எந்த சீதோஷ்ண ஸ்திதியிலும், ஆண், பெண், பாலர் யாவரும் யாதொரு தடையுமின்றிச் சாப்பிடக்கூடியது. பத்தியமில்லாதது.

20 நாட்களுக்கு 40 மாத்திரை ரூபா 10

பிஷக் ரத்ன பண்டிட் டாக்டர் இ. எஸ். கோபன்,

நாடிப் பரீக்ஷை நிபுணர், பிரதம வைத்தியர் அண்டு டைரக்டர்.

பண்டிட் இ. ஸ்ரீனிவாஸாச்சாரி, வைத்தியர், அண்டு மானேஜிங் டைரக்டர்.

எல்லா இடங்களிலும் எங்கள் மருந்தை விற்பதற்குத் தகுந்த ஏஜெண்டுகள் தேவை.

விபரத்துக்கு எழுதவும்.

தமிழ் நாடு ஆயுள்வேத வைத்தியசாலை, லிமிடெட்,

44, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, தபால் பெட்டி நெ. 278, மதராஸ்.

கியாட்லாக்குக்கு எழுதினால் இனமாக அனுப்பப்படும்.

ஆனந்த விகடன்

(12,000 சந்தாதாரர்களுடையது)

64 பக்கம் விஷயங்களுடன் மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை. ஆனந்த விகடனில் ஒரு பக்கத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கலாமென்று சொல்லுகிறார் ஒரு சந்தாதாரர். நீங்கள் ஒரு வருஷத்திற்கு 768-பக்கங்களுக்கு ஒரு ரூபாய் கொடுக்கக்கூடாதா? தபால் கூலியுள்பட இந்தியா, பர்மா, சிலோனுக்கு வருடசந்தா ரூ. 1 0 0

அயல் நாடுகளுக்கு முன் பணம் ரூ. 1 4 0

மாதிரி காப்பி இனாம்.

ஆனந்த விகடன் ஆபீஸ், மதராஸ்.

எங்கள் விசேஷ குறைந்த விலை விற்பனை



22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல் கைக்கெடியாரங்கள்.

இதிற் கண்டபடி எந்த ஷேப் வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம்போல் இருக்கும். ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனாமாய்ச் சேர்த்து அனுப்பப்படும். 5 வருஷம் உத்தரவாதம்.

ரூ. 4 15 0 வி. பி. வேறு.

ஜினன் வாட்சு கம்பெனி,
மிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.

முந்துங்கள்!

ரூ. 2—12—0 தான்

ரூ. 2—12—0 தான்

130 சாமான்கள் அடங்கிய ஜெர்ம பெட்டி



சாமான்களின் விபரம்

14 காரட் ரோல்டு கோல்டு அழகிய நிப்புள்ள பவுண்டன் பேனா, ரோல்டு கோல்டு இமிடேஷன் வைர மோதிரங்கள் 2, மேற்படி சரட் பொத்தான்கள் செட் 12, மேற்படி கல்லிழைத்த புரூச் 1, ஜப்பான் நூதன பொம்மைகள் 6, நேர்த்தியான கத்தி 1, காமினேஷன் நூதன சாவிவளையமும் செயின் 1, உயர்ந்த பென்சல்கள் 12, பென்சல் இளிப்புடன் கூடிய கவர் 1, நேர்த்தியான முகக்கண்ணாடி 1, அழகிய தந்த சீப்பு 1, பலரகபென் ஹோல்டர்கள் 6, உயர்ந்த நிப்புகள் 12, மணிபர்ஸ் 1, ஜெர்மன் இங்கிபுட்டி 1, இங்கிமாத்திரைகள் 12, சென்ட்புட்டி, தேசிய டிரான்ஸ்பர் படங்கள் 35, அழகிய பலரகசேப்டி பின்கள் 25, ஆக 130 சாமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி 1-க்கு விலை ரூ. 2—12—0

ஜினன் வாட்சு கம்பெனி, மிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.

ரூ. 2-15-0 பௌண்டன் பேனா ரூ. 2-15-0



நீங்கள் கனவிலும் நினைக்கமுடியாத குறைந்த விலை!

இங்கிலாந்தில் செய்து மாட்சிமை தங்கிய 5-ம் ஜார்ஜ் சக்கரவர்த்தியால் புகழ் பெற்றுப் பிரக்யாதி யடைந்த ரிஜஸ்டர்டு W. B. பௌண்டன் பேனா தங்க ப்ளேட் நிப்பு போட்டது. இதை வாங்குபவர்களுக்கு எக்காலமும் ஓடக்கூடிய மூன்று வருஷம் உத்தரவாதமுள்ள லீவர் பாக்கெட் வாட்சு இனாமாய் அனுப்பப்படும். W. B. பவுண்டன் பேனாவும் கடியாரமும் விலை ரூ. 2 15 0

THE KRISHNA AGENCY, *119, G. P. O. Madras.*

மோக.:—நான் வேறு ஒன்றையும் பற்றிப் பேசத் தயாரில்லை. நான் இக்கதையைப் படிக்கப் போகிறேன். நீரோ ஒரு poet ஆக இருக்கிறீர்.

கிரு.:—நான் நேற்று முதல் உன்னிடம் ஒரு விஷயத்தைத் தெரிவிக்கத் தீர்மானித்தேன்.

மோக.:—(தனக்குள்) இப்பொழுது தான் அவர் என் சிநேகிதத்தில் மதிப்பு கொண்டார் போலிருக்கிறது. (வெளிப்படையாய்) என்ன விஷயம்? இங்கிருந்து பேசுவதைவிட நம் தோட்டத்தில் பளிங்குக் கல்லுக்குப் போவோமே. சந்திரவெளிச்சமும் வீசுகிறது. ஒரு ஆட்டம் சீட்டும் ஆடிவிட்டு வரலாம்.

கிரு.:—அங்கு போக வேண்டாம். இவ்விடத்திலேயே பேசுவோம். நான் நாளை இவ்விடம் விட்டுப் புறப்பட உத்தேசித்திருக்கிறேன்?

மோக.:—இதென்ன அவசரம்? தாம் இவ்விடம் சிலநாள் தங்கிப் போவதாக எண்ணியல்லவோ Tennis racquets வரவழைத்தேன். மேலும் இன்னும் சிவஸ்வாமி வரவில்லை. ஏன் என்னுடைய company பிடிக்கவில்லையா?

கிரு.:—உண்மை வேறு. சிவஸ்வாமி வரமாட்டார். எங்கள் தீர்மானம் உனக்கு தெரியாது. அதைத் தெரிவிக்க உத்தேசித்திருக்கிறேன்.

மோக.:—அதென்ன விஷயம்? புதிதாக இருக்கிறதே! தெரிவிக்கலாமே.

கிரு.:—முதலில் என் வரலாறுவது. எனக்கும் சிவஸ்வாமிக்கும் முதலில் ஒரு பந்துத்வமும் கிடையாது. ஆயினும் இருவருடைய நிலைமையும் ஒன்று போலிருந்ததால் நாங்கள் ஒருவருக்கொருவர் நட்புக்கொண்டோம். சிவஸ்வாமி தன் மனதுக்கிசைந்த நாயகியை காண முடியாமல் வெளியேறின அன்றிரவே நானும் என் மனைவியிடம் வெறுப்புக் கொண்டு வெளியேறினேன்.

மோக.:—ஒகோ! உமக்கு விவாகம் ஆய்விட்டதா? உமக்கு உம் மனைவியிடம் விருப்பமில்லாமைக்குக் காரணம் என்ன?

கிரு.:—என் பத்தினி இங்கிலீஷ் படிப்பில்லாத கர்நாடக மங்கையாயிருக்கிறாள். Advandced ideas இல்லாதவள். எனக்கு ஒரு அடிமை போல் நடக்கிறாள். இங்கிலீஷ் கற்பிக்க முயன்றேன். ஆனால் அவள் காளிதாசனையும், பவபூதியையும் படிப்பதில் தன் கவனம் முழுவதும் செலுத்துகிறாளே ஒழிய நான் செய்யும் பிரயத்தனங்கள் பயன்படவில்லை. அதனால் நான் அவளை விட்டகன்றேன். அன்றிரவு நானும் சிவஸ்வாமியும் ஒரு சத்திரத்துத் திண்ணையில் சந்தித்தோம். இருவரும் ஒரே விதமான துன்பத்தால் பிடிக்கப் பட்டிருப்பதை உணர்ந்தோம். ஆராய்ந்தறிந்து ஒருவித முடிவுக்கு வந்தோம். இருவருடைய ஸ்தானங்களையும் கொஞ்சநாள் மாற்றிக் கொண்டிருந்தால் மன அமைதி ஏற்படும் என்று எங்களை நாங்களே மாற்றிக் கொண்டோம். I wanted an intellectual companion. அவர் என் மனைவியை எனக்கு இசைந்த ஒரு துணைவியாகத் திருப்ப முடியுமென்று ஒப்புக் கொண்டார். நானும் அவருக்கு அவ்வாறு உதவிசெய்ய ஒப்புக்கொண்டேன்; பின்னும் உன்னுடைய சிநேகம் நான் விரும்பக் கூடியதென்று நினைத்துத் தங்கினேன்.

மோக.:—அப்படியானால் ஏன் இவ்வளவு அவசரம்?

இரு. :—உண்மை! நான் வரைந்திருந்த intellectual companion நீயல்ல வென்று கண்டேன்.

மோக. :—காரணம்?

இரு. :—காரணம் ஒன்றும் எனக்குப் புலப்படவில்லை. என் சம்பாஷணைக்கு விரும்பக் கூடிய ஸ்திரீ நீயல்ல வென்று மாத்திரமே தெரிகிறது. ஒரு வேளை அம்மாது உலகத்திலேயே யிருக்கமாட்டாள் போலிருக்கிறது. அம்மாது என் கற்பனைசக்தியினால் எழுந்தவள் என்றே நினைக்கிறேன்.

மோக. :—(கௌரவத்துடன்) இருக்கலாம், தம்மைப் போலவே நானும் நினைக்கிறேன். சிவஸ்வாமியிடம் நான் அதிருப்தியடையக் காரணமிருக்கிறது. ஆனால் தாம் இப்பொழுது பேசுவதைப் பார்த்தால் புருஷர்கள் எல்லோருமே, ஸ்திரீகளைக் கேவலமாய்த் தான் நடத்துவார்களென்று நினைக்கிறேன்.

இரு. :—நீ சொல்லுவது தவறு. சிவஸ்வாமி அப்படிப் பட்டவரல்ல. நான் உன்னையும் அவரையும் பார்த்தவளவில், அவரிடம் குறை கூற நியாயமில்லை.

மோக. :—தாங்கள் வந்த காரியம்?

இரு. :—மோகனம்! மன்னிக்கவேண்டும். என்னையறியாமல் ஏதோ உளறி விட்டேன். நான் சிவஸ்வாமியின் குணநிசயத்தை அவருடன் சம்பாஷித்த சில நிமிஷங்களில் அறிந்தேன். அவர் பொறுமை, ஆண்மை விவேகம் முதலியவற்றை என்னால் அதிகமாகப் புகழமுடியாது.

மோக. :—இதென்ன; அவர் மனைவியான நான் கண்டறியாத சிறந்த குணங்களைத் தாம் எவ்விதம் சிவஸ்வாமியிடம் கண்டீர்கள். (ஏளனத்துடன்) ஏது, அவருக்குத் தம்மிடம் அவ்வளவு அன்பு. தன் இருதயத்தைப் பிளந்து தம்மிடம் காட்டினாரோ?

இரு. :—தவறு, தவறு, அவரை நிராகரிக்கும் ஸ்திரீ ஒரு அறிவிலி,........அவர்.—

மோக. :—நான் நிராகரிக்கிறேன். ஞாபகமிருக்கட்டும்!—நானும் ஓர் அறிவிலியோ?

இரு. :—நான் உன்னிடம் சொல்லவில்லை—நீ ஓர் சிறந்தமேதாவி. அப்படியிருந்தும், அன்பும் ஆதாவும் பெருகும் அவர் உள்ளத்தை யுணரவில்லையே என்றுதான் மனவருத்த முறுகிறேன்.

மோக. :—இருக்கட்டும்! அத்திவ்விய தரிசனத்தைத் தாமே பெற்றவர். இப்பொழுது அவர் எங்கிருக்கிறார்? தங்கள் வீட்டிலல்லவோ?

இரு. :—ஆம்.

மோக. :—அங்கென்ன செய்து கொண்டிருக்கிறார்? தங்கள் மனைவிக்கு இங்கிலீஷ் படிப்புச் சொல்லிக் கொடுத்துக் கொண்டு, தங்களுக்கு இயைந்து நடக்கவேண்டிய வழிகளைப் போதனை பண்ணிக் கொண்டிருக்கிறாரா? அல்லது அவள் காதலை நாடிக் கொண்டிருக்கிறாரோ?

இரு. :—(சந்தேகத்துடன்) சீ! அவர் மித்ரத்துரோகம் செய்யக் கூடியவரா? மாட்டார். His heart is golden.

மோக. :—தாங்கள் சற்று முன் சொன்னதை அதற்குள் மறந்து விட்டீர்கள். As in other things, his heart may be golden in love—And he might have learnt to love your wife.

இரு. :—(கலவரத்துடன்) நான் அவரை விகற்பமாக நினைக்கமாட்டேன். (மௌனம்) மோகனம்! எனக்கு உத்திரவு கொடு. நான் இப்பொழுதே போகிறேன்.

மோக. :—(தனக்குள்) இவர் சொல்லுவதைப் பார்த்தால் நான் சிவஸ்வாமியின் மனதை நன்றாயறிய வில்லை போலும். நான் அவருக்கு அபாரதம் செய்து விட்டேனோ. Why am I troubled with a vague sense of guiltiness. Can I mend matters before it is too late? (வெளிப்படையாய்) கிருஷ்ணஸ்வாமி! வாஸ்தவம், புறப்படும். நானும் தம்முடன் வந்து சிவஸ்வாமியின் நிலைமையை யறிகிறேன்.

இரு. :—ஆம் அப்படியே செய்வோம்—புறப்படுவோம் (இரண்டடி எடுத்துவைக்கிறார்கள்) (ஆத்திரத்துடன்) மோகனம்! ஒரு கேள்வி! சிவஸ்வாமியும் மங்களமும் ஒருவரையொருவர் காதலித் திருந்தால், Will you give me your love by way of reparation? I ask you earnestly.

மோக. :—தைரியத்தைக் கைவிடாதேயுங்கள். அவ்விதமெல்லாம் நடக்காதிருக்கும்படி கடவுளைப் பிரார்த்திப்போம். போவோம். (போகிறார்கள்)

(காட்சி முடிகிறது.)

காட்சி (3)

இரவு—சுந்தரவேணி, மங்களம்.

மங். :—சுந்தரா! வா! எங்கே வந்தாய்?

சுந். :—இதென்னடி! மணி பத்து ஆயும் உன் அறையில் விளக்கெறிகிறதே. நீ பின்னும் அழ ஆரம்பித்து விட்டாயென்றெண்ணி வந்தேன். மூன்றிரவாக நீ தூக்கமில்லாமல் அழுது கொண்டிருந்தால், உன் தேக நிலைமை என்னவாகும்? அப்படி, என்ன வந்து விட்டது. உன் பர்த்தா வென்ன பால் மணமறாத குழந்தையா? வரமாட்டாரா? அவருடைய அத்தான் இவ்விடமிருக்கிறார். அவர் உனக்கு வேண்டிய தேறுதல் சொல்லியும், நீ யேன் இவ்விதம் சதா கிருஷ்ணத்தியானம் செய்துகொண்டிருக்கிறாய்? கண்ணைத் துடைத்துக் கொள்.

மங். :—சுந்தரா! அவர் எங்கே போனாலும். சொல்லி விட்டு போவாரடி! அதிலும் அவர் அன்றிரவே எனக்குத் தெரியாமல் சென்றது, எனக்கு பயமாயிருக்கிறது.

சுந். :—யாரோ கதவைத் தட்டுகிற சப்தம் கேட்கிறது, போய்ப் பார். (சுந்தரா போகிறாள்.) (தனக்குள்) ஜகதீசா! என் பர்த்தாவை என்னிடம் கொண்டு சேர்க்கக் கூடாதா! (சுந்தரவேணி மோகனத்தைக் கையை பிடித்து அழைத்து வருகிறாள்.)

சுந். :—மங்களம்! இவர் பூனையூர் ஜமீன்தார் மகள். ருத்தரம்மாளென்ற நாமதேயமுடையவர். இச்சீமாட்டியார் ஏதோ வழி தப்பி இவ்வூரடைந்தாராம்.

மோக. :—அம்மணி நான் இன்றிரவு தங்கிப் போக ஒரு இடமும், கிடைக்காமல் கடைசியில் இங்கு வந்தேன். தொந்திரவாயிருந்தால் மன்னிக்கவும். போய் விடுகிறேன்.

மங். :—தாம் இவ்விடம் வந்ததினால், என் துக்கத்தையும் மறந்து சந்தோஷமடைந்தேன். தாங்கள் வந்தது நான் என் தேவியை நினைத்து ஸ்தோத்தரித்ததற்கு என் துயரம் நீக்கும் அத்தேவியே பிரசன்னமானது போலிருக்கிறது. உட்காருங்கள். ஆகாரம் கொண்டுவருகிறேன். (எழுந்திருக்கிறாள்)

சுந். :—மங்களம்! இன்று தெய்வாதீனத்தால் இவர் வந்தார். அம்மணி! மங்களம் மூன்று நாள் இரவு பகலாக உணவு உறக்கம் இன்றி சோகக் கடலில் மூழ்கி இருக்கிறாள். தங்கள் வரவால் இன்றாவது, அவளைத் தூங்கச் சொல்லுங்கள். மூன்றிரவும் நான்

துணையிருந்து பார்த்தேன், என்னால் முடியவில்லை.

மோக. :—எனக்கு ஆகாரம் ஒன்றும் வேண்டாம். தயவு செய்து மன்னிக்கவும். கொஞ்சம் ஜலம் கொடுத்தால் போதும். அதுவும் பின் எடுத்துக் கொண்டுவரலாம். தங்களுக்கு அவ்வளவு பெரிய விபத்து என்ன?

சுந். :—அவளுடைய புருஷன் அவளிடம் சொல்லிக் கொள்ளாமல் சென்ற செவ்வாய்க் கிழமை இரவு எங்கேயோ போய் விட்டார். இன்னும் வரவில்லை.

மோக. :—செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, நான்கு நாளாயிருக்கிறது. எங்காவது வேலையாய்ச் சென்றிருப்பார். வருவார் அம்மணி!

மங். :—ஐயோ, என்னிடம் சொல்லாமலும் போனார். மேலும் என்னிடத்தில் அதிருப்தியோடு போனாரென்றே நினைக்கிறேன்.

சுந். :—மங்களம்! எனக்கு நாழியாகிறது. நீங்களிருவரும், இன்றிரவைக் கழியுங்கள். மங்களம் உனக்கு தேவியருள் புரிவாள். பயப்படாதே. (போகிறாள்)

மோக. :—ஏன்! தங்களிடம் அதிருப்திப் படக்காரணம் என்ன?

மங். :—நான் இங்கிலீஷ் படித்தவளில்லை. அவர் செவ்வாய்க்கிழமை முன்னிரவில் ஒரு இங்கிலீஷ் நாடகக்கவி யெழுதிய நாடகம் ஒன்றை வாசித்து அர்த்தம் சொல்லிக் கொண்டிருந்தார். அதையெல்லாம் பின்பு சொல்லுகிறேன். தாங்களுக்கு முதலில் கொஞ்சம் ஆகாரமும், தீர்த்தமும் கொண்டு வருகிறேன்.

மோக. :—ஆனால் இந்த நான்கு நாளும் அவரைப்பற்றி ஒரு விஷயமும் தெரியவில்லையா?

மங். :—அவருடைய அத்தான் ஒருவர், மறுநாள் இவ்விடம் வந்தார். அவர் என் பர்த்தா ஏதோ வேலையாய் வெளியூருக்கு போயிருப்பதாயும், கூடிய சீக்கிரம் வந்து விடுவதாயும், அதுவரையிலும் அவர் இவ்விடத்தில் தங்குவாரென்றும், என் பர்த்தா எழுதின கடிதம் ஒன்று கொண்டுவந்தார்.

மோக. :—அக்கடிதம் தங்கள் பர்த்தா எழுதிய கடிதந்தானா? வேறுயாராவது கபடமாய் அவரில்லாத சமயம் இவ்விடம் தங்கவந்த சூழ்ச்சியோ?

மங். :—லெட்டரில் சந்தேகமில்லை. அது அவர் கையெழுத்துத்தான். (என்று தன் மார்பில் வைத்திருந்த கடிதத்தை யெடுத்துக் காண்பிக்கிறாள்.) இது என் பர்த்தா எழுத்துத்தான். மேலும் அவர் அத்தான் கபடஸ்தனாகத் தோன்றவில்லை. அவரும் என் சோகத்தைக் கண்டு மிகவும் அனுதாபப் படுகிறார்.

மோக. :—அவ்விதமிருக்கையில் தாங்கள் ஏன் பயப்படவேண்டும்!

மங். :—ஆனால் அவர் அன்றிரவு வெளியேறும் பொழுது என்னை வெறுத்தே சென்றார். எங்காவது வெகுதூரம் செல்லும் பொருட்டே எனக்கு சமாதானமாக ஒரு கடிதம் கொடுத்துவிட்டுப் போயிருக்கிறார். ஐயோ நானென்ன செய்வேன்?

மோக. :—இங்கிருக்கும் அவர் அத்தான் என்ன சொல்லுகிறார்.

மங். :—அவரும் என்னிடம் அடிக்கடி பேசுவதில்லை. நானும் சுந்தரவேணியும் காளிதாசன் வாசித்துக் கொண்டிருந்தாலும், ஏதாவது கீர்த்தனங்கள் பாடிக்கொண்டிருந்தாலும், அறையின் வெளியில் உட்கார்ந்து கேட்பார். பின் நானும் சுந்தரவேணியும், என் பர்த்தாவைப் பற்றிக் கேட்போம். அதற்கு அவர் கட்டாயம் நாளை வந்து விடுவார் என்று நினைக்கிறேன் என்று சொல்லிப் போவார். மேலும் அவர் எப்பொழுதும் என்னவோ சிந்தித்துக் கொண்டிருக்கிறார். அதைப் பார்க்க எனக்கு என் பதியைப் பற்றி இன்னம் பயம் அதிகரிக்கிறது. ஆகாரம் கொண்டு வருகிறேன். (போகிறாள்)

மோக :—(கீழேயிருந்த ஒரு புஸ்தகத்தை எடுத்து அது சம்ஸ்கிருதமாயிருக்கக் கண்டு அதைத் திருப்பிப் பார்த்து கீழே வைத்து (தனக்குள்) இவளும் படித்தவள். சம்ஸ்கிருதத்தில் நல்ல வித்வத்து இருக்க வேண்டும். இது என்ன? இவளைப் பார்த்த அளவில், எனக்கு ஒரு விதமான வெட்கம் ஏற்படுகிறதே! அவள் நெற்றியிலிருக்கும் குங்குமப் பொட்டு அவள் முகத்துக்கு ஒரு தேஜசைக் கொடுக்கிறதே. அவள் என்னை உபசரித்தமாதிரியைப் பார்த்தால் நான் படித்திருந்தும், ஒருவரையும் இவ்வளவு அன்போடு உபசரித்ததாக ஞாபகமில்லை. அவளுடைய பதிபக்தியைக் காணுமிடத்து என் வெட்கம் பல்லாயிர மடங்கு அதிகரிக்கிறதே. நான் பார்க்க வந்தகாட்சி வேறு. இங்கிருக்கும் காட்சி முற்றிலும் மாறுபட்டிருப்பதோடு, எனக்கும் ஒரு வித வெட்கத்தை உண்டுபண்ணுகிறது. சிவஸ்வாமியின் குணத்தைப் பற்றிப் புகழ்கிறான். இவளுடைய நற்குணங்களையும் பதிபக்தியையும் கண்டு அவர் வியப்புற்றிருக்கிறார் போலும். இவளுக்குக் கெடுதல் செய்ய நினைப்பவர்களும் இவளைப் பார்த்தவளவில் தங்கள் தீத்தொழிலை மறந்து விடுவார்கள். பின் சிவஸ்வாமி இங்கிருப்பானேன்—

(மங்களம் வருகிறாள்.)

மங். :—அம்மணி இதை உட்கொள்ளுங்கள். இந்தத் தீர்த்தத்தைப் பானம் செய்யுங்கள். நானும் இப்படித் தரையில் படுத்துக் கொள்ளுகிறேன்.

மோக. :—படுத்துக் கொள்ளலாம். தங்களைப் பார்த்த வளவில் தங்களை எனக்கு சகோதரியாக நினைத்தேன். தயவுசெய்து தங்கள் வரலாற்றைத் தெரிவியுங்கள். நானும் அத்துயரத்தைப் பகிர்ந்துகொள்கிறேன்.

மங். :—தங்களையும் நான் என் தமக்கைபோலவே பாவிக்கிறேன். தங்களுக்கு ஒரு படுக்கையைத் தட்டிப் போடுகிறேன். அலுப்புத்தீரப் படுத்துக் கொள்ளுங்கள். அப்புறம் நாம் பேசுவோம்

மோக. :—நாமிருவரும் ஒரே படுக்கையில் படுத்து கொள்ளுவோம்!

மங். :—அப்படியே பேசுவோம். (விளக்கைக் கொஞ்சம் இறக்கிவிட்டுப் படுத்துப் பேசவாரம்பிக்கிறார்கள்.)

(திரை விழுகிறது.)

(மற்றோர் அறை)

சிவஸ்வாமி :—(தனக்குள்) என்ன மதியீனம். இந்த மடமாதை வெறுத்த மனிதனும் உலகத்திலிருப்பானோ? கிருஷ்ணஸ்வாமி இவளை வெறுத்து வெளியேறினது எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. அவள் அன்புக்கும் காதலுக்கும் பாத்தியப்பட்டவன் எவ்வளவோ புண்ணியம் பண்ணினவனாயிருக்க வேண்டும். இவளை பார்த்தபொழுதே இவளிடம் ஒரு சகோதரத்துவத்தைக் கொண்டேன். இவளது பதிவ்விரதம் மிகவும் வியக்கத்தக்கது. கிருஷ்ணஸ்வாமியும் மோகனையும் எவ்விதம் இருக்கின்றனரோ. அவனை அங்கனுப்பினதில் ஒருபெரிய தப்பிதம் செய்துவிட்டேன். அவனுக்கு [illegible]

ஊட்டி இவ்விருவரையும் சேர்த்து வைக்க வேண்டிய தவசியம். இதுவரையிலும் கூட தாமதித்திருக்கக் கூடாது. நான் என் கடமையினின்றும் சற்று விலகினதற்காக எம்பெருமான் என்னை மன்னிக்க வேண்டும்.

"பால் நினைந் தூட்டும் சாலப்பரிந்து
நீபாவி யேனு டைய
ஊனினை உருக்கி உள்ளளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம் புறந்திரிந்த
செல்வமே! சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந்தருளுவதினி[யே!"]

இன்றிரவே புறப்பட்டுக் கிருஷ்ணஸ்வாமியைத் தேடிக்கொணர்ந்து மங்களத்தின் ஆற்றலைத் தீர்ப்பேன்! அவளிடம் வாக்குறுதி செய்து செல்வேன்.

(அறையிலிருந்து வெளியில் புறப்பட்டுப் போகிறான்—வெளியில் மறைந்திருந்த கிருஷ்ணஸ்வாமி சந்தடி செய்யாமல் சிவஸ்வாமியைத் தொடர்ந்து போகிறான்)

கிரு.:—(தனக்குள்) இவன் ஏன் இரவில் மங்களத்தினறை நோக்கிச் செல்கிறான் பார்ப்போம். இவன் போவதைப் பார்த்தால், ஏதோ ஒரு மன உறுதியுடன் போகிறதாகத் தெரிகிறது. மங்களத்தினறையில் மோகனம் இருப்பாள். அதையறிந்து செல்கிறானோ இல்லையோ! பார்ப்போம்—அனைத்தையும் கண்டு பார்க்கிறேன்.

சிவஸ்.:—(மங்களத்தினறையின் வெளியில் நின்று கொண்டு.) மங்களம்!

(கிருஷ்ணஸ்வாமி மறைந்து கொள்கிறான்.)

மங்.:—யார்!

சிவ.:—நான் தான் சிவஸ்வாமி.

மங்.:—கதவைத்திறந்து! தாங்களா? ஏன் அபூர்வமாய் இரவில் வரக்காரணம்? என் பர்த்தா வந்துவிட்டாரா?

(மோகனம் அறைக்குள் மறைந்து கொள்கிறாள்.)

சிவ.:—நான் பற்பல விதமாய் சிந்தித்துப் பார்த்து இன்றிரவு இவ்விடம் விட்டகலத் தீர்மானித்தேன். அதனால் சொல்லிக் கொண்டு போகலாமென்று வந்தேன்.

மங்.:—சுவாமி! என் பர்த்தா எப்பொழுது வருவார்! தாங்கள் பேதையான எனக்கு இறங்கி அவர்களிருக்கும் இடம் சென்று அவரை என்னிடம் அனுப்பமாட்டீர்களா?

சிவ.:—மங்களம்! பயப்படாதே! இம்மூன்று நாளாய், நீ உன் பர்த்தாவின் பிரிவாற்றாமையால் நைந்துருகுவதைப் பார்த்து மனம் தாளாமல் அவரை எவ்விதத்திலும் கண்டுபிடித்து இங்கனுப்புவதென்று நான் கங்கணங் கட்டிக் கொண்டேன். அதற்காக இவ்விரவே செல்லுவேன். உன்னிடம் தைரிய வார்த்தை சொல்லிப் போகலாமென்றே வந்தேன். நீ அஞ்சவேண்டாம். நீ மிகவும் சிறந்த கற்புடையமாது. உன் கணவன் உன் குணாதிசயங்களைக் கண்டு களிக்காமல் கண்ணிருந்தும் குருடனாயிருக்கிறான் என்று தான் வருத்தப்படுகிறேன். நீங்கள் ஒருவரையொருவர் உங்கள் காதல் கண்களால் நோக்கவில்லை போலும். கூடிய சீக்கிரம் நீ வழிபடும் தேவி உனக்கு அருள்புரிவாள். நான் சென்று வருகிறேன்.

மங்.:—(வெளியில் வந்து) சுவாமி! தாம் எனக்கு வாக்குக் கொடுத்தவாறு என் பர்த்தாவை எங்கிலும் தேடி அழைத்து வரும்படி பிரார்த்திக்கிறேன். தங்களையே என்

தெய்வமாக மதிப்பேன். அவரை இங்கழைத்து வந்து விடுங்கள். பின் நான் அவர் மனதுக்கியைந்தவாறு ஒவ்வொன்றிலும் நடந்து கொள்ளுகிறேன். அவர் சென்றிருக்குமிடம் தங்களுக்குத் தெரியுமென்று என் மனதில் தோன்றுகிறது. நான்படித்த புராண இதிகாசங்களில் சொல்லியபடி கற்புடைய மாதர்க்குத் தம் பதியைப் பிரிந்திருப்பது முடியாத காரியம் என்று முற்றிலும் உணர்கிறேன். தாம் தயை கூர்ந்து (கண்களில் நீர் ததும்ப) என்னைக் காப்பாற்ற வேண்டும்.

சிவ.:—மங்களம்! கவலை வேண்டாம். எவ்விதத்திலும் கிருஷ்ணசாமியை அழைத்துக் கொண்டு வருகிறேன். தைரியமாயிரு. சென்று வருகிறேன்.

மங்.:—(கண்களைத் துடைத்துக் கொண்டு) அப்படியே (தன் அறைக்குள் போகிறாள்)

(சிவஸ்வாமி திரும்பி இரண்டடி எடுத்து வைக்கிறான்.)

கிரு.:—நண்பரே! தாம் என்னைத் தேடிப் போக வேண்டாம். நானே வந்து விட்டேன். என்னை மன்னிக்க வேண்டும்.

சிவ:—(திடுக்கிட்டு) கிருஷ்ணஸ்வாமி!

மங்.:—(பரபரப்புடன்) யார்? என்பர்த்தாவா?

(வெளியில் வருகிறாள். பின்னால் மோகனமும் வருகிறாள்.)

கிரு.:—மங்களம்! (கைகளைப் பிடித்துக் கொண்டு) நீ என்னை மன்னித்து விட்டாய், அதையறிந்தேன். உன் காதலையும் எனக்கு அர்ப்பணம் செய்வாயா?

மங்.:—(வெட்கத்துடன் ரகசியமாய்) இனியென்னைப் பிரியாமலிருந்தால்!

மோக.:—(சிவஸ்வாமியின் பாதங்களில் நமஸ்கரித்து) என்னை ஒன்று மறியாத பேதையாக நினைத்து நான் தங்களுக்கிழைத்த பல அபசாரங்களுக்கு என்னை மன்னித்து ஆதரிக்கவேண்டும்.

சிவ:—இதென்ன அதிசயம்! மோகனமா? இங்கெப்பொழுது வந்தீர்கள்? எழுந்திரு. உன்னை மன்னிக்க நீ யென்ன குற்றம் செய்தாய். மானிடரான, நாமெல்லாரும் குற்றம் செய்யாமலிருக்க முடியாது. கடவுள் கருணையங்கடல், நம்முடைய அற்ப குற்றங்களை அவர் மன்னிப்பார்.

(மோகனத்தைத் தூக்கி அவள் கண்களைத் துடைத்து—மங்களம்—கிருஷ்ணசாமியைப் பார்த்து.)

கிருஷ்ணஸ்சாமி! நீ மங்களத்தை நாயகியாக அடைந்தது பெரும் பேறு. அவள் ஓர் மாணிக்கம். அவள் இன்று நம்மெல்லோருக்கும் சிறந்த ஓர் பாடங் கற்பித்தாள். மழுங்கிக் கிடந்த நமதறிவை விளக்கிக் காட்டினாள். நம்மூவரும் அவளுக்கு நமது நன்றியை எந்நாளும் செலுத்தக் கடவோம்.

மோக.:—(மங்களத்தைத் தழுவி) மங்களம்! இன்று நீ என் கண்களைத் திறந்தாய். உனக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்.

மங்.:—அக்கா! தாம் யார்! என் அத்தானின் மனைவியா? தாங்கள் ஏன் இவ்விதம் இவ்விடம் வந்தீர்கள். என் அத்தானின் குணங்களுக்குத் தாங்கள் ஓர் உன்னத பூஷணம்.

கிரு.:—சிவஸ்வாமி! இன்றிரவு நடந்த விசேஷ சம்பவத்தால், நாமிருவரும் சகோதரர்களாய் விட்டோம்.

மோக.:—நானும் மங்களமும் ஒரு மணி நேரத்திற்கு முன்னதாகவே சகோதரிகளாய் விட்டோம்.

கிரு.:—மெத்த சந்தோஷம். நாமெல்லோரும் பெரிய கூடத்திற்குப் போய் ஸ்ரீ சான்

வதி தேவியை ஸ்தோத்திரம் செய்து வருவோம். மோகனம்! நீயும் உன் பர்த்தாவும் என் இல்லத்தில் சில நாள் தங்கியிருந்து பின்னரே செல்ல வேண்டும்.

மோக.:—நான் மங்களத்தோடு சில தினங்கள் இருக்க அநுமதி தரவேண்டும். அவளிடம் நான் சம்ஸ்கிருதம் கற்றுக் கொள்ளப் போகிறேன்.

சிவ.:—அப்படியே! கிருஷ்ணஸ்வாமி! உன் விருப்பத்தின்படியே நடப்போம். இவ்விடம் நாமெல்லோரும் கொஞ்ச நாள் தங்குவோம். என்னுடைய கிரகமும் மங்களத்தின் வரவால் பெருமையடைய வேண்டும்.

(கூடத்துக்குச் சென்று எல்லோரும் தேவியை ஸ்தோத்திரிக்கிறார்கள்.)

மங்களம்.

"எனது பதரி நாராயண யாத்திரை"

(ஸ்ரீமான் M. R. ஆச்சார்.)

(31-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆறாவது அத்தியாயம்.

ஸ்ரீ பதரிகாச்சிரமம்.

இந்த க்ஷேத்திரம், ஸ்ரீவைகுண்டத்தையொத்ததென்று புராணங்களில் கூறியுள. இதனுடைய ஒரு பக்கத்து மலைத்தொடருக்கு நர பர்வதம் என்றும், மற்றொரு பக்கத்து மலைத்தொடருக்கு நாராயண பர்வதம் என்றும் பெயர். நரன் என்றால், ஸ்ரீ அர்ஜுனன். நாராயணன் என்றால், ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா. நர, நாராயணன் என்றால், ஸ்ரீ கிருஷ்ணார்ஜுனர்கள் என்று பொருள். நரன் என்ற அர்ஜுனன் தவம் பண்ணிக் கொண்டிருந்த பர்வதமாகையால் அது நர பர்வதமென்றும், நாராயணன் என்ற ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா நிஷ்டையிலிருந்த படியால், மற்றொன்று நாராயண பர்வதமென்றும், பெயருடன் வழங்கிவருகின்றன. இதனால் தான் இந்த பதரி க்ஷேத்திரத்திற்கு நர நாராயண ஆச்சிரமம் என்னும் பெயர் வழங்கி வருகிறது. பதரி என்பது இலந்தை விருட்சத்திற்குப் பெயர். இலந்தை விருட்சங்களையே ஆச்சிரமமாகக் கொண்ட ஸ்தலத்திற்கு, பதரிகாச்சிரமம் என்ற பெயர் இடப்பட்டது. இந்த க்ஷேத்திரத்தில், இப்பொழுது இலந்தை விருட்சங்களே கிடையாது. இந்த பதரிகாச்சிரமத்திற்கு நாதனாயிருக்கும் பெருமாளுக்கு பதரிநாத் என்ற பெயர் இடப்பட்டிருக்கிறது. இந்த க்ஷேத்திரம் அளகநந்தா, நதிக்கரையிலிருக்கிறது. அளகநந்தாவுக்கு மற்றொரு பெயர், சீதளகங்கை, யாகும். பதரி க்ஷேத்திரத்திலோடும் சீதள, கங்கையில், 800-வருஷங்களுக்கு முந்தி, உடுபிக்கடுத்த பாஜக க்ஷேத்திரத்தில் ஜனித்த ஸ்ரீமத்வாச்சாரியார், பதரி நாராயணனை தரிசித்து விட்டு, அருணோதய காலத்தில், இந்த சீதள கங்கையில், ஸ்னானஞ் செய்திருக்கிறதாக, ஸ்ரீமத்வ விஜயம் என்னும் கிரந்தத்தில் கூறியிருக்கிறது. பதரி நாராயண க்ஷேத்திரத்தில், நர நாராயண பர்வதங்களுக்கிடையில் கட்டப்பட்டிருக்கும், கோவில், நிரம்ப அழகாய் இருக்கிறது. கோவிலைச் சுற்றிலும் அளகநந்தா நதி ஓடுகிறது. கோவிலுக்கடுத்த பர்வதத்தில், "உஷ்ண கங்கை" என்ற பெயருடன் சிறிய வாய்க்கால் ஒன்று உற்பத்தியாகி, பர்வதத்தின் அடிப்பாகத்திலும் கோவிலின் அடிப்பாகத்திலும் வந்து கோவிலுக்கருகிலோடும், அளகநந்தா என்ற சீதள கங்கை

யில் கலந்து விடுகிறது. இந்த உஷ்ண கங்கை பல சிறு கால்வாய்களாக வருகிறது. அவ்வித வாய்க்கால்களின் ஒரு பிரிவை கோவிலுக்கருகில் கட்டப்பட்டிருக்கும் ஒரு சதுரமான கல்தொட்டி அல்லது சரோவரத்தில் வந்து விழும்படியாகச் செய்திருக்கிறார்கள். அச்சரோவரத்தில் ஒரே காலத்தில் பத்துப் பதினைந்து பேர்கள் இறங்கி ஸ்னானம் செய்யலாம். இதில் வந்து விழும்பொழுது ஜலம் கொதித்துக் கொண்டிருக்கிறது. தொட்டால் விரல் சுட்டுப்போம். இவ்வளவு சூடான ஜலம் விசாலமானதும் இடுப்பளவு ஆழமுமுள்ள கல்தொட்டியில் விழுந்து, வெளியே போய் விடுவதினால் ஜலத்தின் உஷ்ணம் கொஞ்சம் தணிந்திருக்கும். உஷ்ண ஜலம் கற்தொட்டியில் விழுவதை முதல் முதலில் நான் பார்த்த பொழுது, கோவிலுக்குள் அண்டாக்களில் ஜலத்தைக் காய்ச்சி, வாய்க்காலின் வழியாக ஓடும்படி கொட்டுகிறார்கள் என்று எண்ணினேன். விசாரிக்கையில் எத்தனையோ நூற்றாண்டுகளாக இவ்வித உஷ்ண ஜலம் ஓடிக் கொண்டிருக்கிறது என்பதைப் பிரத்தியட்சத்தில் கண்டு கொண்டேன். ஜலம் கொதித்துக் கொண்டிருப்பதற்குக் காரணம் யாதென்று கேட்க, உஷ்ண கங்கை உற்பத்தியாகும் பர்வதம் கந்தக பர்வதம் என்று பதில் சொன்னதைக் கேட்டு ஆச்சரியமடைந்தேன்.

கோவிலில் ஸ்ரீ பதரி நாராயணர் சிலா விக்கிரகமும் நர நாராயணர்களின் சிலா விக்கிரகங்களும் வித்தேசன் (குபேரன்), கணேசர், உத்தவர், நாரதர் ஆகிய தேவர்களுடைய சிலா விக்கிரகங்களும் எழுந்தருளியிருக்கின்றன. இந்த க்ஷேத்திரம் பதரி க்ஷேத்திரமாகையால் ஸ்ரீ பதரி நாராயணர் விக்கிரகம் பூஜிக்கப்பட்டு வருகிறது. பக்கத்தில் நர நாராயணர் பர்வதங்களிருப்பதினால் நர நாராயணர்களுடைய விக்கிரகங்களும் பூஜிக்கப்பட்டு வருகின்றன. துவாரகையில் எழுந்தருளியிருந்த ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா தாம் பூமியில் ஜனித்துச் செய்யவேண்டிய காரியங்கள் அனைத்தும் முடிந்தபிறகு ஸ்ரீ வைகுண்டத்திற்கு ஏகும் சமயத்தில் அவருடைய பரம பக்தரான உத்தவர் என்பவர் ஸ்ரீகிருஷ்ணனை நோக்கி 'எனக்கு என்ன கதி?' யென்று கேட்க, அதற்கு ஸ்ரீ கிருஷ்ணன் அவருக்கு பக்திமார்க்கத்தை விஸ்தாரமாக உபதேசித்து விட்டு, அவரை நோக்கி "ஹே! உத்தவா! நான் உனக்கு உபதேசித்த இந்த பக்திமார்க்கத்தை மறக்காதே. நீ நேராக இங்கிருந்து பதரிகாச்சிரமத்திற்குப் போய் அவ்விடத்தில் ஓடும் அளகநந்தாவில் ஸ்னானம் செய். உன்னுடைய பாபங்கள் பறந்துபோம். பதரியிலிருக்கும் என்னை எப்பொழுதும் தியானஞ் செய்து கொண்டிரு" என்று உபதேசித்திருக்கிறார். இந்த உபதேசத்தை ஸ்ரீமத்பாகவதம் ஏகாதச ஸ்கந்தம் 29-வது அத்தியாயத்திற் காண்க. அவர் அப்படியே பதரிக்கு வந்து தவம் செய்து கொண்டிருந்தார். அதனால் ஸ்ரீ உத்தவருடைய விக்கிரகம் இக்கோவிலில் பூஜிக்கப்பட்டு வருகிறது. வித்தேசன் அல்லது குபேரனுடைய விக்கிரகம் எதற்காக இக்கோவிலில் வைக்கப்பட்டு, பூஜிக்கப்பட்டு வருகிறது என்ற விஷயம் தெரியவில்லை. பலகாலந் தொட்டு ஸ்ரீ பதரி நாராயண மூர்த்தியை நேராக ஸ்ரீ நாரதரே பூஜை செய்து வந்தார். அதன் பின்னர் பௌத்தர்கள் பதரிக்கு வந்து ஸ்ரீ பதரி நாராயண விக்கிரகத்தைப் பெயர்த்து அளகநந்தாவில் எறிந்து விட்டார்கள். அதனால் அது பூஜையில்லாமல் பல காலம் அளகநந்தா நதியிலேயே கிடந்திருந்தது. ஆதி ஸ்ரீ சங்கர பகவத் பாதாசாரியார் கி.பி. 800-வது வருஷத்தில் காலடியில் பிறந்து சகல கலைகளையும் கற்று பிரம்ம சூத்திரம், கீதை முதலியவைகளுக்கு பாஷ்யம்

எழுத எண்ணங்கொண்டு ஸ்ரீ பதரி நாராயணருடைய அனுக்கிரகத்தைப் பெறுவதற்காக ஸ்ரீ பதரிகாச்சிரம யாத்திரை செய்யப் புறப்பட்டு, ஸ்ரீ காசியில் சிறிது காலம் தங்கி விட்டுப் பின்னர் பதரிக்கு வருகையில் வழியில் ஓர் மடத்தை ஸ்தாபித்தார். அதற்கு ஜோதிர் மடம் என்று பெயர். அந்த மடத்தில் தங்கியிருக்கையில் ஒரு நாள் அடியிற் கண்ட சொப்பனங்கண்டார்.

“நான் நெடுங்காலமாக பதரியிலோடும் அளகநந்தாவில் எறியப்பட்டுக் கிடக்கிறேன். நீர் வந்து என்னை யெடுத்து மறுபடியும் கோவிலில் ஸ்தாபனஞ் செய்யும்” என்று பதரி நாராயணரே சொப்பனத்தில் வந்து சொன்னார். மறு நாள் காலையில் ஸ்ரீ சங்காராசாரியார் எழுந்து பதரிக்குப் புறப்பட்டுப் போய் அளகநந்தாவில் தேடி அந்த விக்கிரகத்தைக் கண்டெடுத்து அதை கோவிலில் பிரதிஷ்டை செய்தார். அதன்பிறகு சுவாமி பூஜைக்குத் திருவனந்தபுரத்திலிருந்து நம்பூத்ரிப் பிராம்மணர் ஒருவரை வரவழைத்து பூஜை செய்யும் முறையை அவருக்குச் சொல்லிக் கொடுத்தார். ஆதியில் நாரதர் பூஜை செய்து வந்தார். மத்தியில் பல காலம் பூஜையில்லாமலிருந்தது. சென்ற 1200-வருஷ காலங்களாக நம்பூத்ரிப் பிராம்மணர்களால் பூஜை செய்யப்பட்டு வருகிறது. நாரதர் ஆதியில் பூஜை செய்து வந்ததினால் ஸ்ரீ நாரதருடைய விக்கிரகம் பதரி நாத் கோவிலில் வைத்து பூஜிக்கப்பட்டு வருகிறது. கோவிலின் வெளிப் பிராகாரத்தில் ஸ்ரீ மகாலட்சுமி கோவில் கொண்டெழுந்தருளியிருக்கிறாள். கோவிலுக்கடுத்தாற் போல் ரவால் என்ற பட்டப் பெயருடன் விளங்கி வரும் பூசாரியின் ஜாகை இருக்கிறது. அந்த ஜாகை ஓர் சிறந்த கட்டிடம். அதற்குப் பின்புறத்தில் விஸ்தாரமான கட்டிடம் இருக்கிறது. அதுவும் ரவாலுக்குச் சொந்தமானது. அந்தக் கட்டிடத்தில் யாத்திரிகர்களை இறங்கும்படிச் செய்கிறார். இப்பொழுது, கோவில் பூஜை செய்து வரும் ரவாலின் பெயர் வாசுதேவ நம்பூத்ரி. இவருக்கு வயது சுமார் 40 இருக்கலாம். இவர் ரவால் பதவியை வகித்து நான்கு வருஷகாலமாகிறது. ஒரு ரவால் ஆயுள் பரியந்தம் பூஜை செய்து கொண்டிருப்பார். அவர் ஆயுள் காலம் முடிவான பிறகு திருவனந்த புரத்திலிருந்து மற்றொரு நம்பூத்ரிப் பிராம்மணர் ரவாலாக அனுப்பப்படுவார். ஆதி ஸ்ரீ சங்கர பகவத் பாதாசாரியரால் வரவழைக்கப்பட்டவர் முதல் ரவால். இன்றைக்கு பூஜை செய்து வருகிறவர் 65-வது ரவால் ஆவார். கோவில் நிர்வாக காரியங்கள் முழுவதும் கார்வாலைச் சேர்ந்த தேஹ்ரி மகாராஜாவின் மேற் பார்வையிலிருந்து வருகிறது. ஆனால் ரவால் தான் கோவிலுக்கு தர்மகர்த்தா ஆவார். அந்த தேவாலயத்தின் சொத்தும் மானேஜ்மெண்டும் 1899-ம் வருஷத்தில் ரவால் வசம் ஒப்புவிக்கப்பட்டது. இந்த தேவாலயத்திற்கு யாத்திரைவாசிகளால் வருமானம் ஒரு லட்சம் ரூபாய்க்கு மேலாகிறது என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. கோவிலில் அபிஷேகம், அலங்காரம், பூஜை, நிவேதனம் முதலியவைகள் காலையிலும், மாலையிலும் நிரம்ப ஒழுங்காக நடந்தேறி வருகின்றன. கோவிலில் 20 வில்லை ஜவான்களும் 20 சமையற்காரர்களும், துளசியாலை, ரோஜாப் பூமாலை, தாமரை மாலை தொடுப்பதற்குப் பல சிப்பந்திகளும் பூஜை காலத்தில் புருஷசூக்தம், நாராயணோபநிஷத், விஷ்ணு ஸஹஸ்ரநாமம் முதலியவைகளைச் சொல்லுகிறவர்களும் ஸ்தலபுராணங்களை வாசிப்பவர்களும் பலர் இருந்து வருகிறார்கள். இவர்கள் அனைவரும் சாஸ்திரிகள். வேதபாராயணம் தினமும் கோவிலில் நடந்து வருகிறது. சுவாமிக்கு

தினமும் சக்கரைப் பொங்கல், பருப்பு, பூரி, பரமான்னம், கொழுப்பு பெரிய பெரிய பாத்திரங்களில் 40 பாத்திரம் அரிசிச் சாதம், அதிரசம், லட்டு, ஜிலேபி, பேடா, உருளைக் கிழங்கு முதலிய காய்கறிகள் முதலியவைகள் தயார் செய்து நிவேதனமாக வைக்கப்படுகின்றன. இவைகள் முழுவதும் மாலை 4-மணிக்குக் கோவிலின் வெளிப்பிராகாரத்திலிருக்கும் விசாலமான இடத்தில் கொண்டு வந்து வைக்கப்படுகின்றன. தவிர, பதரி நாராயணன் கோவிலுக்குள் சுவாமி சன்னதியிலும் மேற்கண்ட நிவேதனங்கள் தனித்தனியாக வைக்கப்படும். மாலை 4-மணிக்குக் கோவில் மணி அடித்தவுடன், ரவால் தம் வீட்டிலிருந்து கோவிலுக்கு வருவார். வந்தவுடன் வெள்ளிப் பாத்திரத்தில் வைக்கப்பட்டிருக்கும் உஷ்ண கங்கையினால் காலை அலம்பிக்கொண்டு கோவிலுக்குள் சென்று சுவாமிக்கு நிவேதனம் செய்வார். அரை மணி நேரம் கழிந்த பிறகு வெளிப் பிராகாரத்திற்கு வருவார். வரும்பொழுது கையில் தங்கக் கட்டுப் போட்ட வலம்புரிச் சங்கிலிருக்கும் தீர்த்தத்தை வெளியில் வைத்திருக்கும் நிவேதனத்தின்மீது ப்ரோட்சணை செய்து துளசி தளங்களை நிவேதனத்தின் மீதுப் போட்டு வெளியில் கோவில் கொண்டிருக்கும் அம்மனுக்கும் கோவிலின் இரண்டு பக்கங்களில் இருக்கும் நர நாராயண பர்வதங்களுக்கும் மந்திரங்களை உச்சரித்து நைவேத்தியம் வைப்பார். இது முடிந்தவுடனே கோவிலுக்குப் போய், சுவாமிக்கு அர்ச்சனை, தீபாராதனை, கற்பூர மங்களாத்தி முதலியவைகளைச் செய்வார். பலவிதமான ஆபரணங்களுடனும், கெம்பு, வைரம், ரத்தினங்களால் இழைக்கப்பட்ட ஹாரங்களுடனும், வனமாலை, தாமரை மாலை, ரோஜா மாலைகளுடனும் விளங்கும் ஸ்ரீ பதரி நாராயண மூர்த்திக்குக் கடைசியாக எடுக்கும் கற்பூரார்த்தியைப் பார்க்கப் பதினாயிரம் கண்கள் போதா. இது முடிந்தவுடனே, நெய்ப்பந்தத்தைக் கையிலேந்திக்கொண்டு, இது பதரி நாராயண மூர்த்தி என்றும், இவைகள் நர நாராயண மூர்த்திகள் என்றும், இது வித்தேசன், இது உத்தவன், இது கணேசர், இது நாரதர் என்றும் தனித்தனியே பெயரைச் சொல்லி, கோவிலில் நிற்கும் யாத்திரிகர்களுக்குக் குறிப்பிட்டுக் காட்டுவார். கோவில் இருட்டாயிருப்பதால், நெய்ப்பந்தத்தால் காட்டவேண்டியிருக்கிறது. அதன் பிறகு துளசி மாலை, சந்தனம் முதலிய பிரசாதங்களை விநியோகம் செய்வார். வெளிப் பிராகாரத்திலிருக்கும் ஸ்ரீ மகாலட்சுமிக்கு மற்றொரு பூசாரி கற்பூரார்த்தி முதலியவைகளைச் செய்து முடிப்பார்.

கோவில் கற்பக்கிரகத்தின் மத்தியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ பதரி நாராயண மூர்த்திக் கருகில் ஸ்ரீ மகாலட்சுமியின் விக்கிரகம் இருக்கிறதாக ஸ்ரீ பதரி நாராயணப் படங்களில் காட்டப்பட்டிருக்கிறது. உண்மையில் ஸ்ரீ மகாலட்சுமியின் விக்கிரகம் கோவிலின் வெளிப் பிராகாரத்தில் இருக்கிறது. தீர்த்தப் பிரசாதம் முடிந்தவுடன், சுவாமிகளுக்கு ஜோடிக்கப்பட்டிருக்கும் அலங்காரங்களைக் கழற்றி விட்டு, பெரிய பட்டுப் படுதாவைப் போன்ற ஓர் போர்வையால் விக்கிரகத்தைத் தலைமட்டும் மூடிவிட்டு ரவால் வெளியே வந்து விடுகிறார். மறு நாள் காலையில் மறுபடியும் அபிஷேகம், அலங்காரம் முதலியவைகள் நடந்தேறும்.

பதரி க்ஷேத்திரத்தில் கடைத்தெருவில் லட்டு, லாடு, ஜிலேபி, பேடா, அதிரசம், அப்பம், பூரி, உருளைக் கிழங்குகறி முதலியவைகள் விற்கும் கடைகளும் பால், தயிர் விற்கும் கடைகளும் அரிசி, பருப்பு, சர்க்கரை, உப்பு, கடுகு, சீரகம், வெந்தயம், மிளகாய்

விற்கும் கடைகளும் விறகுக் கடைகளும் தாமரை இலைகள் விற்கும் கடைகளும் ஜவளிக் கடைகளும் தையற்கடைகளும் காகிதம், பேனா, மை, ஸ்வான் மை முதலியவைகள் விற்கும் கடைகளும் பதரி, கேதாரம், கங்கோத்ரி, யமுனோத்ரி முதலிய க்ஷேத்திரங்களின் ஸ்தல புராண சம்பந்தமான புஸ்தகக்கடைகளும் மேற்கண்டக்ஷேத்திரங்களில் எழுந்தருளியிருக்கும் மூர்த்திகளின் படங்களும் பூதக்கண்ணாடி வைத்த மோதிரங்களும், உருவப்படம் பிடிக்கும் போட்டோ ஷாப்புகளும் இருக்கின்றன. இவைகள் எல்லாம் கடைத் தெருவிலிருக்கின்றன. கோவிலைச் சுற்றிலும் கடைத் தெருவுக்கருகிலும் பல பண்டாக்கள் மெத்தை வீடுகளைக் கட்டிக் கொண்டு வசித்து வருகிறார்கள். பண்டாக்களில் ஸ்ரீமான் நாஹரா சாஸ்திரி என்பவர் வியாகரணம், வேதாந்தம், காவ்யம் முதலியவைகளில் நிபுணர். இவருக்கு பதரியில் பெரிய மெத்தை வீடுகள் இரண்டுண்டு. பார்வைக்கு லட்சணமாயிருப்பார். வந்தவர்களை ஆதரிக்கும் குணமுள்ளவர். பரோபகாரி. லட்சாதிபதி. சம்சாரத்துடன் பதரிக் கோவிலின் பின் புறத்தில் வசித்து வருகிறார். சமஸ்கிருத பாஷையில் உபந்நியாசம் செய்யும் திறமையுள்ளவர். அவ்வூரிலிருக்கும் சிலருக்கு வேதபாடமும் காவ்ய பாடமும் போதித்து வருகிறார். இவருக்கு தேவப்பிரயாகையில் பெரிய வீடு ஒன்றிருக்கிறது. ஏகசந்தக்கிராகி. நான் பதரியில் தங்கியிருந்த $1\frac{1}{2}$ மாத காலத்தில் என்னிடத்தில் ஆங்கில எழுத்தை அப்பியாசம் செய்து பல வார்த்தைகளையும் சிறிய சிறிய வாக்கியங்களையும் இலக்கணத்தில் பெயர்ச் சொல் வினைச் சொல் முதலிய 9 சொற்களையும் கற்றுக் கொண்டு, சிறு வாக்கியங்களாக என்னிடம் ஆங்கிலத்தில் பேச ஆரம்பித்தார்.

இவரைப்போல மற்றொரு பண்டா இருக்கிறார். அவர் பெயர் கிர்ஜா சங்கர் ராம் பிரசாத் கோட்யால். இவரும் $1\frac{1}{2}$ மாதம் என்னிடம் இங்கிலீஷ் அப்பியசித்தார். இவருக்கு பதரியில் 4, 5 வீடுகள் உண்டு. பதரிக்கு வரும் ஏழைகளுக்கு இவர் தினமும் தம் வீட்டில் ரொட்டி, பூரி, கொழும்பு முதலியவைகளை சமையற்காரர்களைக் கொண்டு தயாரித்து 20, 30 சாதுக்களுக்கும் மற்றவர்களுக்கும் உதவி வருகிறார். சுவாமி வெங்கடாச்சாரியார் என்பவர் B.A., B.L. இவர் சென்னை ராஜதானியில் சர்க்காரில் பெரிய பதவியிலிருந்து வந்தார். யாது காரணத்தினாலோ அதை விட்டுவிட்டு பதரிக்கு வந்து சென்ற 3, 4 வருஷகாலமாக வசித்துவருகிறார். பண்டாக்களின் பண உதவியினாலும் செயோலி என்ற இடத்திலிருக்கும் டிப்டி கலெக்டர் ஒருவருடைய பண உதவியினாலும் பதரி க்ஷேத்திரத்திலுள்ள ஓர் குன்றின் சிகரத்தில் கட்டப்பட்டிருக்கும் கட்டிடங்களில் ஓர் கட்டிடத்தில் வசித்து வருகிறார். சமையற்காரர் ஓர் ஸ்ரீ வைஷ்ணவர் இவரிடம் இருந்துவருகிறார். அவர் ஹிந்துஸ்தானிதான் பேசுகிறார். பதரியில் ராமானுஜ கூடம் ஒன்று ஏற்பட்டிருக்கிறது. அதில் 2, 3 தட்சிண தேசத்து ஸ்ரீ வைஷ்ணவர்கள் அநேக வருஷ காலமாக இருந்துவருகிறார்கள். இவர்களுக்கு தினமும் கோவிலிலிருந்து அண்டாக்களில் பிரசாதம் முதலியவைகள் வருகின்றன. தட்சிண தேசங்களிலிருந்து வரும் ஸ்ரீ வைஷ்ணவர்களும் மற்றப் பிராம்மணர்களும் இந்த ராமானுஜ கூடத்திற்குப் போய் பிரசாதங்களைப் பெறுகிறார்கள். கோவிலுக்கு மாலைகளைக் கட்டும் ஆள்களும் கோவிலில் பெருமாளுக்குப் பூஜைகாலத்தில் சாமரம் போடும் ஆள்களும் கோவிலுக்குச் சந்தனம் அறைக்கும் ஆள்களும் இந்த ராமானுஜ கூடத்தில் தான் இருந்து வருகிறார்கள். இவர்கள் அனைவரும் உத்தர தேசத்து இராமானுஜ மதத்தைச் சேர்ந்த பிராம்மணர்களாவார்கள். இவர்களுள் ஒருவர்

மேற்சொன்ன சுவாமி வெங்கடாச்சாரியார் அவர்களிடம் தளிகை செய்யும் வேலையில் அமர்ந்திருக்கிறவர்.

பணக்காரரான பண்டாக்கள் நம் சுவாமி வெங்கடாச்சாரியாருக்கு இருப்பதற்கு ஜாகையையும் சமையற்காரர் ஒருவரையும் இருவருக்கும் சாப்பாட்டுச் செலவையும் கொடுத்துக் காப்பாற்றி வருவதற்குக் காரணங்கள் அடியில் வருமாறு:—

(1) சுவாமி வெங்கடாச்சாரியார் ஆங்கிலங் கற்ற B.A., B.L. பட்டதாரி. (2) சமஸ்கிருதத்தில் விற்பன்னர். (3) குடும்ப பந்தத்திலிருந்து விலகி ஏகவாசியாக இருப்பவர். (4) நல்ல தேஜசுள்ளவர். நடுத்தர வயதுள்ளவர். (5) வேதாந்த சாஸ்திரம் அறிந்தவர். (6) கடவுள் பக்தியுள்ளவர். (7) திரிகரண சுத்தர். (8) சர்க்காரில் பெரும்பதவியை வகித்துவந்து பின்னர் வைராக்கியத்தினால் அதை ஒருபொருட்டாக எண்ணாமல் ராஜினாமா கொடுத்தவர். (9) வைஷ்ணவக் கிரந்தங்களை சதா ஓதிக்கொண்டிருக்கும் சுபாவமுள்ளவர். நிஷ்டையில் இருப்பவர். இவைகள் எல்லாவற்றைக்காட்டிலும் வேறொரு சிறந்த காரணம் உண்டு. அதென்னவென்றால், ஸ்ரீபதரி க்ஷேத்திரத்தில் பண்டாக்கள் அனைவரும் ஒரு கட்சி. கோவிலின் தர்மகர்த்தாவும் பூசாரியுமான ராவாலும் அவர் சிப்பந்திகளும் மற்றொரு கட்சி. நம் சுவாமி பண்டா கட்சியில் சேர்ந்து ராவாலுக்கு விரோதமாக பல வேலைகளைச் செய்து வருகிறார். இதை அடுத்த அத்தியாயத்தில் விவரிப்போம்.

பதரியில் கார்வால் டிஸ்ட்ரிக்ட் போர்டு மெம்பரும் டிஸ்ட்ரிக்ட் போர்டு வைஸ் சேர்மனுமான ஸ்ரீமான் கோவிந்த பிரசாத் சர்மா என்பவர் ஒருவர் இருக்கிறார். இவர் பதரியில் போட்டோ ஷாப்பையும், படங்கள் விற்கும் தொழிலையும் பதரியிலிருக்கும் ஜனங்களுக்கு ஆங்கிலத்தில் விண்ணப்பம் முதலியவைகளை எழுதிக் கொடுக்கும் தொழிலையும் வகித்து வருகிறார். இவர் காங்கிரெஸ் பிரசார வேலையையும் செய்து வருகிறார். லீடர், பயோனியர் முதலிய பத்திரிகைகளை வரவழைப்பதுமல்லாமல், மேற்கண்ட பத்திரிகைகளுக்கு நிருபநேயராகவும் இருந்து வருகிறார்.

இவரைத் தவிர தேவஸ்தான சம்பந்தமான கேசுகளை நடத்துவதற்காக ராவலின் லீகல் அட்வைசராக (Legal Advisor) ஓர் B.A., B.L. இருந்து வருகிறார். பதரியில் போஸ்டு மாஸ்டர் ஒருவரும், தந்தி மாஸ்டர் ஒருவரும், மெடிகல் ஆபீசர் ஐவரும் இருந்து வருகிறார்கள். நர பர்வதத்தின் சாரலில் அளகநந்தா நதிக்கு அக்கரையில் விஸ்தாரமான சம நிலத்தில் மெடிகல் ஆபீசரின் ஆஸ்பத்திரியும் அதன் பக்கத்தில் அவருடைய ஜாகையும் இருக்கின்றன. ஆற்றைக் கடப்பதற்கு ஸஸ்பென்ஷன் பாலம் (Suspension Bridge) ஒன்று ஏற்பட்டிருக்கிறது. மெடிகல் ஆபீசர் நிரம்பத் திறமையுள்ளவர். பலவிதமான நோய்களைப் பரிகாரஞ் செய்து வருகிறார். நோயாளி யாத்திரிகர்களுக்குத் தகுந்த சிகிச்சைகளை ஆதரவுடனும் பட்சத்துடனும் செய்து வருகிறார். இவர் மூன்று வருடங்களுக்கு முந்தி, அதாவது 1925-ம் வருஷத்தில், ரஜா வாங்கிக் கொண்டு ராமேச்வர யாத்திரை போயிருந்த பொழுது சென்னையில் ஸ்ரீமான் டாக்டர் யூ. ராமாவ் அவர்களுடைய ஜாகையில் தங்கியிருந்ததாகவும் சென்னையில் பல பேர்களைத் தெரியுமென்றும் என்னிடம் சொன்னார். இவர் நிரம்ப தெய்வபக்தியுள்ளவர். தினமும் கோவிலுக்கு வந்து சுவாமி தரிசனம் செய்துகொண்டு போகிறார், இவரும் பிராம்மண வகுப்பைச் சேர்ந்தவர்.

ஏழாவது அத்தியாயம்.

ஸ்ரீ பதரிநாராயண க்ஷேத்திரமும் அதன் சீர்கேடான கவனிப்பு முறையும்.

மேற்கண்ட தலைப்புடன் நீண்ட விஷயங்களடங்கிய ஆயிரக்கணக்கான துண்டுப் பத்திரிகைகளை பதரியில் சென்ற 2, 3 வருஷங்களாக வசித்துவரும் ஸ்ரீமான் S. வெங்கடாச்சாரியார், B.A., B.L. என்ற சாது ஒருவர் தமிழில் அச்சிட்டு பதரி க்ஷேத்திரத்திற்கு வரும் சென்னை ராஜதானியைச் சேர்ந்த யாத்திரிகர்களுக்குத் தலைக்கு ஒரு பிரதி வீதம் வழங்கி வருகிறார்.

அத்துண்டுப் பத்திரிகையில் அடங்கிய விஷயங்களின் சரியான நகல் அடியில் வருமாறு:—

“ஸ்ரீ பதரி நாராயணம் என்பது ஒரு புராதனமான ஹிந்து தேவாலயம். அதற்கு ஆயிரக்கணக்கான யாத்திரை வாசிகள் இந்தியாவின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் பிரதி வருஷமும் செல்லுகிறார்கள். அதற்கு வருஷ வருமானம் ஒரு லட்சம் ரூபாய்க்கு மேலாகிறது. ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியாரவர்கள் ஜோதிர் மடம் என்ற ஓர் மடத்தை ஏற்படுத்தியபோது அவர் பதரிகாச்சிரமத்திற்குப் போய் இப்பொழுதிருக்கும் விக்கிரகத்தை (அந்தக் காலத்தில் பௌத்தர்களால் அளகநந்தாவில் எறியப்பட்டிருந்ததை) கண்டெடுத்துக் கோவிலில் ஸ்தாபித்தார். தற்காலத்திலிருக்கும் இந்த விக்கிரகம் பதரிகாச்சிரமத்தில் ஸ்ரீ நாரதரால் பூஜிக்கப்பட்டு வந்தது. இது ஹிந்துக்களுக்கு முக்கியமான யாத்திரை ஸ்தலங்களிலொன்று.

1899-ம் வருஷம் வரையில் இக்கோவிலின் மானேஜ்மெண்டு ஒரு தாத்தாரின் கையின் கீழாகவேயில்லை. 1899-ம் வருஷத்தில் கூமான் டிவிஷன் கமிஷனர் மேற்படி டிவிஷன் ஹைகோர்ட்டார் என்ற ஹோதாவில் இப்போதிருக்கும் ஸ்கீம் (திட்டம்) ஒன்றை ஏற்படுத்தியதன்மேல் அக்கோவிலின் மானேஜ்மெண்டு மொத்தமும் மேற்படி பதரிகாச்சிரமத்திலிருக்கும் ‘ரவால்’ கையில் ஒப்புவிக்கப்பட்டது. பிரகிருதத்திலிருக்கும் இந்த ஸ்கீம் பிரகாரம் ரவால்தான் அந்த தேவாலயத்தின் தர்மகர்த்தா. அதனுடைய சொத்தும் மானேஜ்மெண்டும் அவர் வசம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது.

சென்ற 29 வருஷத்திய அநுபோகமானது என்னவென்றால் மேற்கண்ட ஸ்கீமானது ஆசரணைக்குக் கொண்டுவர முடியாததும் அதிருப்திகரமாக இருப்பதேயாம். காரிய சம்பூர்த்தியின் வழியே ஏற்பட்டுள்ள முக்கியமான கஷ்டங்களுக்குக் காரணம் கீழ்க்கண்டுள்ள குற்றங் குறைகளே. அவை செம்மையாய் சீர்திருத்தப்படவேண்டும்.

(1) வைதிக விஷயங்களில் வழிகாட்டியாக இருப்பதே ரவாலின் முக்கியமான வேலையாயிருக்கவேண்டும். ஆனால் இப்போதிருக்கும் அதிருப்திகரமான ஸ்கீம் திட்டத்தின்கீழ் மொத்த சொத்தையும் ஒரு தர்மகர்த்தாவைப் போலவே நிர்வாகம் செய்யவேண்டியதாயிருக்கிறது. துரதிருஷ்ட வசத்தினால் அவர்மீது போதுமான மேற்பார்வை கிடையாது.

(2) இது தவிர, இப்போதைய ஸ்கீமில் சொத்து மானேஜ்மெண்டு விஷயத்தைப் பற்றி ரவாலின் ஞாபகத்துக்காக அவர் இன்னின்ன விதமாய்ச் செய்ய வேண்டுமென்பதைக் குறித்துப் போதுமான விதிகளும் நியந்தனைகளும் காணப்படவில்லை.

(3) இதனால் மானேஜ்மெண்டு விஷயத்தில் நிரம்பவும் பெரிய சீர் கேடிருக்கிறது. கோவிலுக்கு ஒரு மிகவும் கெட்ட பேர் உண்டாய்விட்டது. பதரி நாத்தில் முன்னிருந்த நம்பூத்ரி ரவால் காலத்தில் தேஹ்ரி மகாராஜா சாஹேப் அவர்களிடத்தில் பணம் கையாண்ட விஷயத்தைப் பற்றியும் பாழான மானேஜ்மெண்டைப் பற்றியும் அனேகம் பிரியாதுகள் வந்தன. அதன் மேல் அவர் அவைகளின் யதார்த்தத்தை விசாரிக்கும்படி தம்முடைய சட்டநிபுணரான கார்வால் ஜில்லா, பௌரியிலிருக்கும் ராய்பகதூர் பண்டிட் தாராதத் கெய்ரோலாவை ஏற்படுத்தினார். துரதிருஷ்ட வசத்தினால் மேற்படி ராய் பகதூர் பண்டிதரோ அல்லது தேஹ்ரி மகாராஜா சாஹேப் அவர்களோ அதன் மேல் என்ன ஏற்பட்டதோ இந்த ரிபோர்ட்டை வெளிப்படுத்தவில்லை. இப்பொழுதுங் கூட நிரம்பவும் கௌரவமானதும் நம்பத்தகுந்ததுமுள்ள இடங்களிலிருந்தும் மேற் சொன்ன கோவில் ரிப்பேர் செய்யவே இல்லையென்றும் நிரம்பவும் சுகாதாரம் கெட்டுப்போன ஸ்திதியிலிருப்பதாகவும் பிரியாதுகள் வந்து கொண்டிருக்கின்றன. யாத்திரிகர்களின் சௌகரியங்கள் கவனிக்கப்படுகிறதில்லை. யாத்திரிகர்களுக்கு ஸ்வாமி தரிசனமே கிடைக்கிறதில்லையென்ற குறை அடிக்கடி ஏற்படக்கூடியதாய் இல்லாமலில்லை.

(4) ஆகையால் அக்கோவில் மானேஜ்மெண்டை ஒரு திருப்திகரமான அடிப்படையின் மேல் அமைப்பதற்குக் கீழ்க் கண்டுள்ள கோட்பாடுகளடங்கிய புதிய ஸ்கீம் ஒன்றைத் தயாரிப்பதற்காக வேண்டிய முயற்சிகள் எடுத்துக் கொள்ள வேண்டியது அத்தியாவசியமாயிருக்கிறது.

(1) கோவிலின் மானேஜ்மெண்டையும் பூஜை வேலையையும் ஒரே மனிதனிடத்தில் ஒப்படைப்பதைவிட ரவால்களைக் கோவிலின் குருக்கள்மாராக வைக்கவேண்டும்.

(2) அந்த ரவால் ஒரு பிரம்மசாரியாயிருக்க வேண்டும். அவருடைய உத்தியோகத்தின் காலவரையை அவர் ஆயுள் பரியந்தத்தைவிட சில வருஷங்களுக்கு மட்டும் குறித்து நிர்ணயிக்கலாம்.

(3) ஸம்ஸ்கிருதத்தில் விசேஷமாய்ப் படித்தவர்களைத் தான் ரவால்களாகக் கொண்டுவர வேண்டுமென்பது அத்தியாவசியகரமானது.

(4) அந்த ரவால் மதசம்பந்தமான படிப்புகளில் பயிற்சி பெற்றிருக்க வேண்டும்.

(5) அந்தக் கோவிலின் முழு மானேஜ்மெண்டும் மேன்மை பொருந்திய தேஹ்ரி மகாராஜா சாஹேப் அவர்களைப் பிரசிடெண்டாகவும் பதரி நாத்திலிருக்கும் ரவாலை “எக்ஸ் அபிஷியோ” (Ex-Officio) அங்கத்தினராகவும் கொண்டுள்ள ஒரு கமிட்டியின் ஆதீனத்தில் விட்டு விடவேண்டும்.

(6) வருமானத்தில் மீதியிருப்பதை ஸம்ஸ்கிருதப் படிப்புக்காகவும் மத சம்பந்தமான விஷயங்களுக்காகவும் உபயோகிக்கவேண்டும்.

ஸ்ரீநகர், ஜில்லா கார்வால். } (கையொப்பம்).
S. வெங்கடாச்சாரி.

S. வெங்கடாச்சாரியார் என்பவர் B A. B.L. இவர் சென்னை ராஜதானியில் டிப்டி கலெக்டராக வேலை பார்த்து வந்தவராகச் சொல்லப்படுகிறது. குடும்பத்தில் நேர்ந்த சில சங்கடங்களை முன்னிட்டு வைராக்கியம் கொண்டு தாம் வகித்துவந்த சர்க்கார் சம்பந்தமான உன்னத பதவியை, ராஜிநாமா கொடுத்துவிட்டு அதிலிருந்து விலகிக்கொண்டு பதரி க்ஷேத்திரத்திற்கு வந்து சென்ற இண்டு மூன்று வருஷ காலமாக இந்த க்ஷேத்திரத்தில் வசித்து வருகிறார். இந்த க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ பதரி நாராயண தேவாலயத்தின் சீர்கேடான மானேஜ்மெண்டை நேரில் பார்த்தறிந்தவராகையால் அவர் இந்த மகா பரோபகாரமான காரியத்திலிறங்கி பொது நன்மைக்காக உழைத்து வருகிறதானது மெச்சத்தக்கதாயிருக்கிறது.

அவர் சொல்லியிருக்கும் குறைகள் யாவும் உண்மை என்பதை நான் பிரத்தியட்சத்திற் கண்டறிந்தேன். ரவால் அவர்களுக்கு ஸம்ஸ்கிருத வாசனையே இல்லை. லௌகிக வைதிக காரியங்கள் ஒன்றுமே அறிந்தவரல்லர். அவர் கேரளத்தைச் சேர்ந்த நம்பூத்ரி பிராம்மணர். வயது சுமார் 32 அல்லது 35-க்குள் இருக்கலாம். இப்பொழுது பிரமசரியத்தை அனுஷ்டித்து வருகிறார். மூர்த்தி விவாகம் ஆனவர் என்று சொல்லப்படுகிறது. இவர் "ரவால்" பட்டத்திற்கு வந்து மூன்று நான்கு வருஷ காலமாகிறது. ஆயுள் காலம் முழுவதும் இவர் இப்பட்டத்தை வகித்துப் பொறுப் பேற்ற கோவில் காரியங்களை நடத்திவரும்படியாக விட்டு விட்டால் கோவில் காரியங்களில் பல ஊழல்கள் ஏற்படும் என்பதில் சந்தேகமேயில்லை ஸ்ரீமான் சுவாமி வெங்கடாச்சாரியார் அவர்களின் பிரியாதுகள் உண்மை என்பதை ருசுப்படுத்துவதற்கு வேறு அத்தாட்சி வேண்டியதில்லை. நானே நேரில் கண்டறிந்திருக்கிறேன்.

ஆகையால் ஸம்ஸ்கிருதத்திலும், வேறு பல லௌகிக காரியங்களிலும் நல்ல ஞானமுள்ள பிரமச்சாரி யொருவரை ரவால் பதவிக்கு நியமித்து இப்பொழுதிருக்கும் ஸ்ரீமான் வாசுதேவ நம்பூத்ரிப் பிராம்மணரை ஜக்ஸ் அபீஷியோவாக நியமித்தால், கோவில் காரியங்களும் ஒழுங்காக நடக்கும். யாத்திரிகர்களுக்கும் சௌகரியம் ஏற்படும். பல பரோபகாரமான காரியங்களுக்குக் கோவில் வரும்படியில் மிச்சமாகும் பணத்தையும் உபயோகப்படுத்தலாம்.

கோவிலின்—பூஜைக்காரியங்கள்.

கோவிலில் காலை 8-மணி முதல் 11-மணி வரையிலும் அபிஷேகம், அலங்காரம், தூபதீப நைவேத்தியங்கள் நடந்தேறி வருகின்றன. அபிஷேக காலத்தில், நாராயணோபநிஷத், புருஷசூக்தம், ரிக்வேதம், யஜுர்வேதம் முதலியவைகள் கர்ப்பக்கிரகத்திற் கருகில் வீற்றிருக்கும் இரண்டு மூன்று பிராம்மணர்களால் பாராயணஞ் செய்யப்படுகின்றன. ரவால் அவர்களுக்கு ஓர் அட்சரமும் தெரியாது.

பணப்பையை யுதவும் யாத்திரிகர்களை ரவால் அவர்கள் கர்ப்பக்கிரகத்தினருகில் நிற்கும்படி செய்து அன்னவர்களை நோக்கி, "இதோ பாருங்கள்! இந்த விக்கிரகம் பதரி நாராயணர், இவைகள் இரண்டும் நர நாராயணர் மூர்த்திகள். இவைகள் கருடன், நாரதர், உத்தவர், வித்தேசன்" என்று சுட்டிக் காண்பிக்கிறார். அவர்களுக்கு முதலில் தீர்த்தமும், பிரசாதமும், துளசி மாலையும், சந்தனம் முதலியவைகளையும் அளிக்கிறார். அச்சமயம் மற்ற யாத்திகர்கள் வெளிப் பிராகாரத்தில் நின்று கொண்டிருக்க வேண்டும். இவர்கள் அனைவரும் திருப்திகரமாய் தரிசனம் செய்த பிறகு வெளியே நின்றிருக்கும் கும்பல் கும்பலான பக்த கோடிகளான ஏழை யாத்திரிகர்களை கோவில் ஜவான்கள் உள்ளே விடுகிறார்கள். அவர்களுக்கு இருட்டில் ஒன்றுமே தெரிகிறதில்லை. தீர்த்தமாவது, சந்தனமாவது துளசி மாலையாவது கொடுக்கப்படுகிறதில்லை.

போலி சாதுக்கள், பைராகிகள் முதலியவர்களுக்கு மரியாதையுடன் தீர்த்தப் பிரசாதம் அளிக்கப்படுகிறது. ஜடாதாரியும் உடம்பு முழுவதும் சாம்பலைப் பூசிக் கொண்டும் கௌபீனத்துடனும் ஓர் கமண்டலத்துடனும் கோவிலுக்குள் வரும் போலி சாதுக்களுக்குக் கோவிலில் சகல மரியாதையுமுண்டு.

இவ்விதப் போலி சாதுக்களில் ஒருவர் கடை கடையாய்ச் சென்று அல்வா, பூரி, லட்டு முதலியவைகளை யாசகங் கேட்டுச் சாப்பிட்டதை நான் கண்ணுறப் பார்த்தேன். மேலும், அவர் ஒரு நாள் நான் இறங்கியிருந்த

ஜாகைக்கு வந்து என்னை யாசகம் கேட்டார். நான் அவரை நோக்கி, "எத்தனை கொடுத்தால் திருப்தி?" யென்று கேட்டேன். அதற்கு அவர் ஒரு ரூபாய் கொடுக்கும்படி கேட்டார். "ஒரு ரூபாய் என்னத்திற்கு? நாலணாவுக்குப் பூரி வாங்கினால் வயிறாரச் சாப்பிடலாமே" என்று சொல்லி நாலணாவை அவர் கையில்கொடுக்க, அவர் அதைப் பெற்றுக்கொண்டு உக்காவுக்கும் கஞ்சாவுக்கும் இன்னும் நான்கு அணா கொடுக்கும்படி கேட்க, அதற்கு நான் கொடுக்கமாட்டேன் என்று மறுத்து விட்டேன். அதன் பின்னர், அவருக்கு ஏதாவது சாஸ்திரம் தெரியுமா என்று கேட்டேன். எழுத்து வாசனையே இல்லை யென்று அறிந்தேன்.

இந்தச் சாது கோவிலுக்குள் சென்ற பொழுது இவருடைய வேஷத்தைப் பார்த்து ரவால் மயங்கிப் போய் இவருக்குத் தீர்த்தம், பிரசாதம் முதலியவைகளை முதலில் கொடுத்தனுப்பினர்.

அதே சமயத்தில் மதுரை ஜில்லாவிலிருந்து வந்திருந்த ஓர் தமிழர் கோவில் பிராகாரத்தில் உட்கார்ந்துகொண்டு திருப்புகழ், தாயுமானவர் பாடல் முதலியவைகளைப் பாராயணஞ் செய்து விட்டு, சுவாமி தரிசனத்திற்காகக் கோவிலுக்குட் பிரவேசித்தார். அவரை ஜவான்கள் உள்ளே விடவில்லை. அதன் பின்னர் நிரம்பப் போராட்டத்தின் பேரில் உள்ளே வந்து கும்பலில் சுவாமியைக் கண்ணாரத் தரிசனம் செய்ததும் செய்யாததற்கு முந்தி இவரும் மற்ற ஏழைப் பரதேசிகளும் வெளியே தள்ளப்பட்டார்கள். இவருக்குத் தீர்த்தமும் இல்லை, பிரசாதமும் இல்லை.

ஐயோ! இது என்ன அநியாயம்! என்ன அக்கிரமம்! இவர்கள் பல்லாயிரம் மைலுக்கப்பாலிருக்கும் சென்னை ராஜதானியைச் சேர்ந்தவர்கள். ஹரித்துவாரத்திலிருந்து 183-மைல் தூரம் கால் நடையாக நடந்து வந்தார்கள். கோவிலில் பணக்காரர்களுக்கும் வடதேசத்து மார்வாடிகளுக்கும் மரியாதை உண்டு. மற்ற ஏழைகளுக்கு ஒன்றுமே யில்லை. இவ்வித பாரபட்சத்தை யொழித்து ஏழை, பணக்காரர்கள் என்ற விஷயத்தைக் கவனிக்காமல் சகலருக்கும் தீர்த்தப் பிரசாதம், தரிசனம் முதலியவைகளுக்கு யாதொரு தடையுமின்றி நடந்து கொள்ள வேண்டும்.

(தொடரும்.)

பாரத ஜோதி.

புத்தரது திவ்விய சரித்திரம்.

(ஸ்ரீமான் பி. ஆர். ராஜ சூடாமணி.)

(197-ம் பக்கத் தொடர்ச்சி.)

பதிப்புரிமை ஆசிரியரைச் சார்ந்தது.

நான்காவது அத்தியாயம்.

ஏழாவது நாளன்று சித்தார்த்தரது துறவு நிகழ்ந்தது. அதனால் பொன் மாளிகையில் அழுகையும் அரசனுக்குத் துயரமும் நாட்டிற்குத் துக்கமுமுண்டாயின; ஆனால், கேட்பவர்களுக்குச் சுதந்திர மனிக்கும் தர்மமும் முக்தியும் ஏற்படலாயின.

மாமரங்கள் கனிந்த கனிகளின் இனியவாசமும் அசோக மலரின் நறுமணமும் இளந் தென்றலில் உலவுங்காலத்தில், ஸ்ரீ ராமன்

பிறந்த ஐந்தாவது நாளன்று, இமயமலையில் தேவ ரிஷிகள் ஒன்று கூடும் வைசாக நாளில், சித்திரை மாதத்து முதல் பௌர்ணமியில் கழனிகளும் நகரங்களும் களித்திட முழுமதி வெண்ணிலவை "விச்ராமவன" மெங்கும் பொழிந்தான். அவ்விரவு நட்சத்திரங்களரும்பிய ஆகாயத்தினாலும் விரைகுழவு மலர்களின் சுகந்தத்தாலும் வானோங்கி எழுந்த இமாலயத்திலிருந்து நெட்டுயிர்த்துத் தவழ்ந்து வரும் மலைக் காற்றின் குளிர்ச்சியாலும் பேரழகு வாய்ந்திருந்தது. உதயகிரியிலிருந்து வானமேடையின் மீதெழுந்த பூர்ணசந்திரன் தன் வெண் கதிர்களால் ரோகிணி நதியின் சிற்றலைகளையும் குன்றுகளையும் அடிவாரங்களையும் உறங்கிக் கிடந்த உலகத்தையும் ஒளிரச் செய்தான். அவனுடைய கதிர்பட்டு வெள்ளி போல் விளங்கிய இரவு சிறிதும் அசைவின்றி மௌனமாயிருந்தது. காவலாளர்கள் தம்மில் சொல்லிக்கொள்ளும் வார்த்தைகள் கூடக் கேட்கவில்லை; எனினும் வெளிக் கோட்டை வாசலில் மட்டும் காவலாளர்கள் கூறுகின்ற காவலடையாளமான "முத்ரா!" என்ற சொல்லும் அதற்குப்பிரதியான "அங்கனு!" என்ற வார்த்தையும் ஒரு மூச்சு நேரம் அறைந்த பறையொலியும் யாவும் ஒரு முறை மட்டும் கேட்கலாயின. அத்துடன் எங்கும் மௌனங்குடிகொண்டது. அலைந்து திரியும் கரிகளின் குமுறலும் நந்தவனத்துச் சில்வண்டுகளின் "ஷாயூங்! ஷாயூங்!" என்ற கீச்சொலியுந் தவிர வெளியுலகத்தில் வேறெதுவும் கேட்கவில்லை.

வசந்த காலத்துத் திங்களின் வெண்ணிலவு இன்பமாளிகையின் பளிக்குச் சாளரத்தினூடு பள்ளியறையினுட் புகுந்து அங்குள்ள முத்துச் சிப்பிச் சுவர்களையும் நீலம் பாய்ந்த சலவைக் கற்கள் பதித்த தளங்களையும் ஒளிரச் செய்தது. தண்மதியின் மென்கிரணங்கள் அங்குப் படுத்துறங்கிய இலாவண்ணியம் மிக்க இள மட மங்கையர்களின் மலர் முகங்களைத் தழுவின. அப்பொழுது அச்சயனக்கிரகம் விண்ணுலக மங்கையர்கள் உறங்கும் தேவாலயம் போல விளங்கிற்று சித்தார்த்தருடைய இன்பமாளிகை வாசிகளான, அழகும் விசுவாசமும் மிக்க, இளந்தளிரனையார்கள் யாவரும் அங்கு படுத்திருந்தனர். தூக்க அமைதியில் மூழ்கியிருந்த ஒவ்வொரு பெண்ணின் வடிவமும் "இவளே நாரீமணி! இவளே நாரீரத்தினம்!" எனக் கண்டோர் தாம் காணும் ஒவ்வொரு வடிவத்தையும் வியந்து கூறத்தக்க அமுத எழிலாயிருந்தது. அக்கட்டழகிகளின் பொன்னிற மேனிகள் பாதி திறந்தும் பாதி மூடியுமிருக்க, அவர்கள் தூக்கத்தின் இயல்பிலே அப்பள்ளியறையில் படுத்துறங்கினர். ஒருத்தியின் பசிய நீலப் பாசி போன்ற கூந்தல் பொன்னூற் செய்த சடைபில்லைகளினாலும் சடை நாகங்களினாலும் அலங்காரமான சடையுடன் விளங்கிற்று. மற்றொருத்தியின் காரிருட் கூந்தல் மென்றாது தொழியாத நறுமலர்கள் சூடியிருந்தது. வேறொருத்தியின் கடல் கொழித்த நீல மணல் போன்ற கேசம் வலம் புரிச் சங்கு வடிவான கழுத்தின் மீது படர்ந்து நீலச்சுருள் அலைபோல வெண் சலவைக் கற்றளத்தில் நீண்டு கிடந்தது. பகலெல்லாம் காதல் பூப்ப, இன்னிசை பாடிச் சிறிதும் களைப்பு அறியாது கூடு சேர்ந்து இரவில் இறக்கைக்குள் தலை மறைத்து அமுத கீதமும் அருங்காதலும் தழைக்கும் உதயகால மட்டும் உறங்கும் புள்ளினம் போல் அங்குத் தேனினுமினிய வடிவினர்கள் ஆனந்தமான உழைப்பினால் இன்கனவுகள் கண்டு உறங்கினர். வெள்ளிச் சங்கிலிகளிற் தொங்கிய வெள்ளி விளக்குகளின் வாசனைத் தைலம் வற்றி எற்றிய குளிரொளியில் அம்மடப்பாவையர்களின் குறைவிலாக் கோலங்கள் காணலாயின. மெல்

லெனத் தவழும் மூச்சினால் பொங்கித் தாழும் மார்பிடங்களும், உறக்கத்தில் சோர்ந்து விழுந்தாவது அல்லது மடங்கியாவது கிடந்த இளம் செந்நிறக் கைகளும், சுந்தரவதனங்களும், வான் பிறை நுதல்களும், வாள் போல் வளைந்த புருவங்களும், இருளினும் கருகி அஞ்சனம் தோய்ந்த மலரிதழ்க்கண்களும், மெல்லிய குமிழம் பூவையும், நீண்ட செண்பக மலரையும் பழித்த நாசிகளும், ஒன்றையொன்று தொடாது சிறிது விரிந்த செங்கோவைப் பழ அதரங்களும், ஓர் வர்த்தகன் மாலைக் கென்று தெரிந்தெடுக்கும் நன் முத்துக்கள் போன்ற வரிசைப் பற்களும், இளந்தென்றலுக்கு அஞ்சுகின்ற இன்ப வடிவமான மென்கபோலங்களும், திரண்டுருண்ட முன்னங்கைகளும், ஏதோ தாமாடிய ஆட்டத்தைக் கண்டு, அல்லது பாடிய பாட்டைக் கேட்டு ஆனந்த பரவசரான இளவரசர் தமக்கேதோ அற்புத அநுராகப் பரிசுகள், அல்லது மாய மோதிரங்கள் வெகுமதியாகத் தமக்குத் தருவது போல கனவு கண்டு கொண்டிருந்த இளம் பெண்கொடிகளின் இன்பக்கனவுகளை கலைக்க ஆங்காங்கே கலகலத்த பொன் சதங்கைச்சிலம்புகள் புனைந்த வண்ணச் சிறு பாதங்களும், வான் மதியின் வெண் கிரணங்களோடு கலந்து பரந்து வீசிய சுகந்த தைலதீபப் பிரகாசத்திற் தெளிந்து காணலாயின. இங்கோர் பசுந்தளிர் மதங்கி இன்பமாளிகையின் தேவ தேவியரின் திருக்கண்களுக்குத் தூக்க மூட்டுவதற்காகத் தான் இசைத்த பண்ணிற்கு அமைத்த விரல்கள் கபோலத்தைத் தழுவியிருந்த வீணையின் தந்திகளில் ததாகாரமாய் நிற்க, பங்கஜ தள நேத்திரங்கள் குவிய தன் முழு அங்கத்தையும் பளிக்குத் தளத்தில் விரித்து ஆழ்ந்த நித்திரை போனாள். ரோஜாவின் இளந்தளிர் கொத்தொன்றைக் காந்த வாய்வழியே சோரவிட்டுக் கொண்டு சரிந்த கொம்பும் தலையுமான ஓர் இளமானை வேறோர் மடமாது ஒரு கையால் மார்புறத்தழுவி, மற்றொரு கையில் பாதிமென்றதோர் ரோஜாத் தளிர்க் கொத்தை எந்திய வண்ணமே தூக்கத்தில் மூழ்கியிருந்தாள். அங்கோர் பால், குண்டு மல்லிகை தொடுத்துக் கொண்டிருந்த பூவினுமினிய பூவை யரிருவரை, அங்கத்துடன் அங்கமும், அவயவத்துடன் அவயவமும் இருதயத்துடன் இருதயமுமாக, அவ்விருவரும் தொடுத்த நீண்டதோர் குண்டு மல்லிகை மாலை சேர்த்துப் புனைத்திருக்க, அவர்களில் ஒருவள் அங்குக் குவிந்திருந்த மலர்க்குவியல் மீது சாய்ந்து உறங்கினாள். அவளுடைய பூமென் மார்த்தடத்தில் மற்றொருத்தி தனது நீளிருங்களங்கம் நீக்கிய நிறைமதி வடிவான முகத்தை மெல்லெனப் பதித்து மின்னலை மின்னல் தழுவிய தென்ன இரு கரங்களால் அவளை அணைத்து, அருங் கனவுகள் கண்டு ஆனந்த இளநகை தோன்ற உறங்கினாள். வேறொருவள் தூங்குவதற்கு முன்னர் மணிமாலையொன்று செய்து முடிப்பதற்காய், பவளம், சந்திரகாந்தம், மாணிக்கம், இந்திர நீலம், வைடூரியம், கோமேதகம், புஷ்பாகம் முதலிய மணிகளைப் பொன்னூலிற் கோத்திருந்தாள்; அது அவளுடைய முன்னங்கையைச் சுற்றி எழு வண்ணவளை போலப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. அந்த மாலையின் இருதலைகளையும் சேர்த்து முடிப்பதற்காகப் பொன்னூற் பொதிந்து தேவர்களுடைய ரூபங்களும் வேதாக்ஷரங்களும் அழகுற அமைந்த மாகத நீலக் கல்லைக் கோக்காமல் நித்திரையிலும் அதைக் கையிலேந்திய வண்ணமாயிருந்தாள். இங்ஙனம் பரந்து விரிந்த இரத்தின கம்பளங்கள்மீதும், பளபளத்த வெண்கற்றளங்கள் மீதும் சயனித்து, நளிர் பொங்கர் மலரோடு உறவாடி வருகின்ற ஒளிர் மணி நீரோடைகள் இன்னிசை பாட, மெல்லிதழிமைகள் குவித்த பூவையர் யாவரும் தம் முகமலர்களை அலர்த்தி அழகு

செய்யும் மார்த்தாண்டனின் நல் வரவுக்காகக் காத்திருந்தனர்.

இதுவே சித்தார்த்தர் இளவரசருடைய அந்தரங்க ஆலயம். மௌன மேவிய இவ்வனுராக ஆலயத்தில் காதல் விநோதங்களைத் தூண்டும் அதிரூப அரசிகளான கங்கையும் கௌதமியும் பள்ளியறை வாசலிற்றொங்கிய காண்ட படத்தின் மறைவிலருகே உறங்கி யிருந்தனர்.

பள்ளி யறையின் சித்திரப் பணி குயிற்றிய சந்தன மரவாசலின் முன்னர் தொங்கிய திரைசீலை செம்மையும் பசுமையும் கலந்த சூரிய காந்தப் பட்டாலானது. அது பொற்சரிகை பூவேலைகளுடன் துலங்கிற்று. அவ்வாசலிலிருந்து மூன்றடி எடுத்து வைத்தால் ஒளிமணி மண்டபம் காணும்; அதனுள் மாணிக்கம் கட்டி வைரமிடை கட்டி ஆணிப் பொன்னாற் செய்த தூலிகா மஞ்சம் வெள்ளி நூலாலும் பொன்னூலாலும் நூற்ற மென்றுகிலினால் அலங்காரமாகி மல்லிகை மலரினும் மிக்க மென்மையாகி விளங்கிற்று. இலங்கைக் கடலில் ஆழ்ந்து இருண்ட நீர்க் குகைகளிலிருந்து சேகரித்த பெரிய முத்துச் சிப்பிகளைச் சதுரமாய் அறுத்து, ஒளி ஊடுருவிப் பாயும் பளிங்குபோலிழைத்து ஒன்றோடொன்றைப் பொருத்திச் சேர்த்த பலகைகள் அச்சயனாலயத்தின் சுவர்களாயின. சூரியகாந்தக் கற்களினாலும் சந்திரகாந்தக் கற்களினாலும் நவரத்தினங்களினாலும் நிர்மித்த பறவைகளும் தாமரை மலர்களும் நிறைந்த வெண்சலவைக் கற்களாலமைந்த குடைமேலே சப்ரகோள மாயிற்று; அந்த முத்துச் சிப்பிச் சுவர்களின் நடுவில் நாற்புறமும் சன்னல் வேலைகளுடன் அமைந்த பொற் சாளரங்கள் வழியே இளந்தென்றல் சண்பக மலரின் வாசத்தையும் கஸ்தூரி,முல்லை, மல்லிகை முதலிய மலர்களின் பரிமளத்தையும் கவர்ந்து தண்மதியின் நிலவுடன் கலந்து புகுந்து அம்மணிக்கூடத்தில் சயனித்திருந்த சாக்கிய இளவரசர் பாலும் வானாட்டு மங்கையரின் எழிலெல்லாம் திரட்டித்தனதெனக் கொண்ட மென்மட மங்கை யசோதரை பாலும் விளங்கிய இனிமையினும் சிறந்த இனிமை வாய்ந்து காதற் கோயிலின் தேவ தேவியான அவ்விருவரது அங்கத்தையும் மெல்லெனத் தழுவி மறைந்து கொண்டிருந்தது.

சித்தார்த்தரது பூவின் தன்மைத்தான அங்க ஆலிங்கனத்தால் நித்திரை போன யசோதரை துயில் கலைந்து திடீரென்றெழுந்தமர்ந்தாள். மார்பிடத்தை மறைத்திருந்த பொன்னூலாடை நழுவிக் கீழே விழுந்திருந்தது. தெவிட்டாத சௌந்தரிய நிலையமான அவ்விளவரசி தனது வான்பிறை நுதலை இரு கைகளினும் பதித்து மார்பிடங்கள் விம்மி விழக் கண்ணீராறு பெருக்கினாள்; தன் செம்பவள அதரங்களினால் சித்தார்த்தருடைய கரங்களை மும்முறை முத்தமிட்டு, "ஆ! நாதா! திருக்கண் திறவீரா"? உமது அமுத வாயால் என் துயரம் ஆற்றீரா"? என்றுரைத்துப் பின்னும் விம்மி விம்மி யழுதாள். அப்பொழுது அவர் எழுந்து, "என் ஆருயிரே! யாது நிகழ்ந்தது உனக்கு?" என்று கேட்டனர். அவள் பின்னும் அழுத வண்ணமே, "ஆ! நாதா, எங்ஙனம் உரைப்பேன்? நெஞ்சம் பதறுகின்றதே! உடல் நடுங்குகின்றதே! உள்ளம் கொதிக்கின்றதே! தங்களருளால் என் உதிரத்தே தங்குகின்ற குழந்தையின் நினைவால் உள்ளானந்தம் பொங்க, அக்குழந்தையின் இருதயமும் என் இருதயமும் சேர்ந்து ஒத்திசைக்க, இன்பமும் அன்பும் பெருகினவாதலால் அயர்ந்துறங்கலானேன். அப்பொழுது யான் கண்ட பயங்கரமான கனவினை எவ்வாறுரைப்பேன்? நடு நடுங்கிப் பதறி எழுந்து விட்டேன்; இப்பொழுதும் என் இருதயம் 'பட பட' வென்

றடிக்கின்றது. வெண்ணிறம் வாய்ந்ததோர் பெரும் இருஷபம். அது பெருங் கொம்புகளுடையது. பசுக்களுக்கும் எருதுக்களுக்கும் அரசனென விளங்குவது! அதன் நெற்றியில் ஓர் இரத்தினம் இருக்கக் கண்டேன்! அதை எதற்கு ஒப்பிடுவேன்! ஆகாயத்திலிருக்கின்ற ஓர் பெரிய நட்சத்திரம் அதன் தலையில் வந்து குடியிருந்தது என்று சொல்லட்டுமா? அல்லது பாதாள லோகத்திற்கு ஒளி வீசுகின்ற வாசுகியின் சிரோரத்தினம் என்று கூறட்டுமா? அந்த இருஷபம் இந்நகரத்துத் தெருக்கள் வழியே கம்பீர நடை நடந்து நகரவாசலை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. அதை ஒருவராலும் தடை செய்ய முடியவில்லை. அப்பொழுது இந்திரனுடைய கோயிலிலிருந்து, "ஓ! ஜனங்களே! அந்த இருஷபத்தைப் பிடித்துக் கட்டாவிட்டால் இந்நகரத்து மகிமை யாவும் இத்துடன் மறைந்துபோம்" என்றோர் அசரீரி உண்டாயிற்று எனினும், எவராலும் அதைத் தடை செய்யக்கூடவில்லை. அப்பொழுது யான் ஓலமிட்டு அழுது கொண்டு ஓடிச்சென்று அதன் கழுத்தை என் இருகைகளினாலும் கட்டிக்கொண்டு தடை செய்ய முயன்றேன்; நகர வாசற் கதவை அடைக்குமாறு வாசல்காப்போரிடம் கூவி உரைத்தேன். எனினும் அவ்விருஷபராஜன் கத்திக் கொண்டு தன் தலையை மெதுவாய் அசைத்து என் கைகளை உதறி யெறிந்து தப்பித்துக் கொண்டு, நகர வாசற் கதவுகளைக் குத்திப் பிளந்து காவற்காரர்களை உதைத்துத் தள்ளிக்கொண்டு ஓடிப்போய் விட்டது! இதன் பிறகு கண்ட இரண்டாங் கனவு என்ன அற்புதமானது! அதிசோதி வாய்ந்த நான்கு தேவர்கள் ஒளி வீசுகின்ற இமையாக் கண்களுடையவர்கள்; பேரழகு வாய்ந்தவர்கள்; சுமேருமலையில் வாசம் செய்கின்ற திக்குப் பாலகர்கள் போல விருந்தனர். அவர்கள் தத்தம் பரிவாரங்கள் பின் தொடர நமது நகரத்தை அணுகினர். அப்பொழுது நமது நகரவாசலில் பறந்து கொண்டிருந்த இந்திரனுடைய சூரியக்கொடி காற்றில் அடிபட்டு முறிந்து விழக் கண்டேன். அக் கொடியிருந்த இடத்தில் வேறோர் அழகான கொடி தோன்றியது. அதன் பட்டுத் துகிலில் ஒளி உமிழ்கின்ற செம்மணிகள் வெள்ளிக் கம்பிகளிற் கோத்துத் தைத்திருந்தன; அம்மணிகள் புதிய வார்த்தைகளாகவும் அரும்பொருள் நிறைந்த வசனங்களாகவும் அமைந்திருந்தன. அவற்றின் நற் செய்தி இவ்வுலகத்து உயிர்களுக்கெல்லாம் ஆனந்தத்தை அளித்தது. அந்த வார்த்தைகளை எல்லோரும் கற்குமாறு கீழ்த்திசையினின்று வீசிய மந்தமாருதம் மாணிக்கக் கொடியை நன்றாய் விரித்தது. அப்பொழுது பேரற்புதமான பூமழை பொழிந்தது. அத்தகைய பூக்கள் எங்குதான் பூக்கின்றனவோ? ஏனெனின் அவற்றின் நிறங்கள் நமது மலர்ச் சோலையில் பூக்கின்ற மலர்களின் நிறங்கள் போன்றனவல்ல" என்றுரைத்தாள்.

அதுகேட்ட சித்தார்த்தர் "என் அருமையான மணமலரே! இவையாவும் பார்ப்பதற்கு ஆநந்தமான தோற்றங்களன்றோ?" என்றார்.

அப்பொழுது யசோதரை மேலும் "அக் கனவுகள் முடிந்த போது வேறோர் கனவு தோற்றியது. அதுவே வெகு பயங்கரமானது. அந்த மூன்றாவது கனவு தோற்றுவதற்கு முன்னதாக ஓர் அசரீரி "காலம் அணுகி விட்டது! காலம் அணுகி விட்டது" என்று உரக்கக் கூவியது. அத்தருணம் யான் என் அருகாமையிற் படுத்துறங்கிய தங்களைத் தேடினேன். அந்தோ! தங்களைக் கண்டிலேன். இம்மஞ்சத்தில் தலை பதியாத தலையணையும், அதன் மீது தங்களுடைய வஸ்திரமும் இருக்கக் கண்டேன். என் உயிருக்கு உயிராய், என் ஆவி ஒலியாய், என் அரசனாய், எனக்கு ஓர் உலகமாயிருக்கின்ற தங்களைக் கண்டிலேன், உடனே நித்திரை கலைந்து பதறி எழுந்தேன்.

அப்பொழுது என் இடையிற் பூட்டியிருக்கும் இம்மேகலை ஓர் விஷப்பாம்பென மாறி என் இடையைச் சுற்றியிருக்கக் கண்டேன். என் பாதச் சிலம்புகள் தெறித்து விழுந்திருந்தன. கையில் அணிந்திருந்த பொன் வளைகள் கழன்று விழுந்திருந்தன. தலையிற் சூட்டியிருந்த மல்லிகை மலர் வாடி வதங்கி நாறிக் கிடந்தது; வாரி முடித்த கூந்தல் அவிழ்ந்து, விழுந்து சடைபிடித்திருந்தது; நாமிருவரும் சயனிக்கு மிந்த மஞ்சம் பூமிக்குள் மறைந்து போய் விட்டது; அதோ! சித்திரை சீலையை ஏதோவொன்று சன்னல் பின்னலாய்க் கிழித்திருந்தது; இவை யாவற்றையுங் கண்டு துக்கித்துக் கொண்டிருக்கையில், வெகு தூரத்திற்கப்பாலிருந்து அந்த வெண்ணிற இருடபாஜன் கத்துவதைக் கேட்டேன்; மணிகளினால் சித்திரிக்கப்பெற்ற மாணிக்கப் படலத்தைப் பின்னுமோர் முறை பார்த்தேன். இன்னொரு முறை "காலம் அணுகி விட்டது! காலம் அணுகி விட்டது!" என்ற அசரீரி வார்த்தைகளைக் கேட்கலானேன். அந்தோ! இப்பொழுதும் அச்சொற்கள் என் உள்ளத்தில் எதிரொலிக்கின்றனவே! ஆ! நாதா! இதன் பொருளென்ன? யான் இறந்து போவேன் என்பது தானே. அல்லது மரணத்தைப் பார்க்கிலும் கொடுமையாகத் தாங்கள் என்னை விட்டுப் பிரியப் போகின்றீர்களோ? அல்லது தங்களை என்னிடமிருந்து எதாவது பரித்துக் கொண்டு போய் விடுமோ? சொல்லுங்கள், நாதா! எனக்கு ஒன்றும் புலப்படவில்லையே!" என்று கதறி அவருடைய கழுத்தைக் கட்டிக் கொண்டு விம்மி விம்மி அழுதாள்.

அங்ஙனம் அழுத தமது மனைவியை மாலையிலணையும் கதிரவனின் அந்தி யொளியென மந்தகாசத்துடன் நோக்கி, "கண்ணே! கவலைப் படாதே! ஆறுதலடைவாய்! ஆறுதல் என்பது மாறாத அன்பின் கண் உளதெனின் திட்டமாய் ஆறுதல் அடைந்து கொள். ஏனெனின் என் அன்பின் களஞ்சியமே! நீ கண்ட கனவு வருங்காலத்தில் நிகழப் போவதைக் காட்டினுலும் தேவர்கள் தந்தமிருப்பிடங்களில் தத்தளித்துக் கொண்டிருந்தாலும், இவ்வுலகத்திற்கு க்ஷேமமேற்படும் தருணம் அடுத்திருப்பினும், உனக்கும் எனக்கும் யாது சம்பவித்தாலும் யான் யசோதரையிடம் அளவிலாத பிரேமமும், அன்பும், அநுராகமும் கொண்டிருந்தேன். அங்ஙனமே என்று மநுராகமும் அன்பு முடையவனாயிருப்பேன் என்பதையே உறுதியாய் உணர்ந்து கொள். யசோதரே! யான் கண்ட இவ்வுலகத்தின் துயரத்தைத் தீர்க்கும் பொருட்டு, சென்ற சில நாட்களாக, யான் எங்ஙனம் யோசனைக்கடலில் ஆழ்ந்து ஓர் வழி தேடுகிறேன் என்பதை அறிகிலாயோ? ஆதலால் ஏற்ற காலம் வரும் பொழுது, வருவன வந்தே தீரும். என்னுள்ளம் யான் அறியாத ஆத்துமாக்களின் துயரத்திற்காக இவ்வளவு அநுதாபப் படுமாயின், என்னைச் சாராத அன்பர்களை உன்னி யான் இவ்வளவு வருந்துவேனாகில் எல்லோரையும் அன்பினால் தழுவுகின்ற என் உள்ளம், என் வாழ்வை இனிமை யாக்குகின்ற இம்மாளிகை வாசிகள் அனைவரையும் எப்படித் தழுவும் என்பதை நீயே தீர்மானித்துக் கொள். மேலும் என் தன்பே! நீ என் ஆசை நாயகி யல்லவா? நீ எனக்குச் சொந்தமல்லவா? குணசாலியன்றோ? மிக்கப் பொறுமை யுடையவளன்றோ? எல்லோரினும் மேன்மை தங்கியவளன்றோ? அன்றியும் என் குழந்தைக்குத் தாயாகப் போகின்றாய். பெரும் பேற்றிற்காகவன்றோ நம்மிருவருயிரும் இரண்டுடற் கோருயிராயிற்று. தன் இருகுஞ்சுகள் மீது அளவிலா அன்பு ஏவ, பகலெல்லாம் வெகு தூரம் பறந்து இரைதேடிக் குஞ்சுகளைக் காணப் போவாக் கொண்டு, வெகு வேகமாய்ப்

பறந்து வருகின்ற மாடப் புறாவைப் போல யானும் இவ்வுலகத்து மனிதர்களுக்காகப் பெரிதும் அன்பு பெருக்கி அவர்களுடைய துயரத்தைத் தீர்க்கப் பெரிதும் கவலைப்படும் பொழுதெல்லாம் என் மனத்திற்குகந்த இன்னமுதாகிய உன்னையே நாடி, உயர் நலங்கள் யாவும் நிறைந்த உன்னையே விரும்பி, எனக்கு யாவுமாய் விளங்குகின்ற உன்னுறவைப் பெற வெகு ஆவலாய் வந்திருக்கிறேன். ஆதலால் என் அருமைச் செல்வமே! இனி என்ன சம்பவித்தாலும் கனவிற் தோற்றிய அம்மாணிக்கப் படலத்தையும், அதன் விரிகதிர் மணிச் சொற்களையும் முக்காரமிட்டுச் சென்ற அந்த இருடபத்தையும் குறித்து நீ யாது நினைப்பினும் யான் என்றும் உன்னை நேசித்தேன் என்பதையும் உன்னை அங்ஙனமே நேசிப்பேன் என்பதையும், இவ்வுலகத்தாருக்காகத் தேடும் ஆறுதல் உன் பொருட்டே என்பதையும் நீ உறுதியாய் நம்பிக்கொள்! எனினும் நம்மிருவரது துயரத்தினால் இவ்வுலகத்திற்கு சாந்தி யேற்படுமாயின் அதை நினைத்து நீ ஆறுதலடைவாய். இதோடு இவ்வாலிங்கனத்தை அன்பின் நன்றி யறிக்கையாக அல்லது என் வாழ்த்தாகக் கருதிக் கொள்! வலிய மிகுந்த காதலும் தளர்ந்து போகும் தன்மைத்தாதலால் இவை யாவும் அற்பமேயாம்; எனினும் என் அதரங்களை முத்தமிட்டு, இதோ! இவ்வுண்மையை என் இருதயத்திலிருந்து வருகின்ற வண்ணமே பருகிக்கொள். அதை நீ மட்டுமே அறிவாய் வேறெவரும் அறியார். யான் இவ்வுலகத்து உயிர் யாவற்றையும் ஒன்று போல அளவில்லாத அன்பினால் நேசிப்பதினாலேயே உன்மீதும் எல்லையிலா அன்பு கொண்டுளேன் என்பதை நீயே உணர்வாய். எனது அன்பே! இனி நீ உறங்குக! யான் கண்விழித்து உன் அருகாமையில் உட்கார்ந்திருக்கிறேன்" என்றார்.

அதன் பிறகு அவள் அழுதகண்ணும் கண்ணீருமாக உறங்கினாள். திரும்பவும் "காலம்! காலம்! அணுகிவிட்டது!" என்றமொழிகளைக் கேட்பவள் போன்று பெருமூச்செறிந்தாள். தன் மனைவியினருகாமையில் விழித்துக் கொண்டிருந்த சித்தார்த்தர் ஆகாய முகமாய்த் திரும்பிப் பார்த்தார்; அப்பொழுது சந்திரன் கர்கடக நட்சத்திரத்தினருகாமையிற் பிரகாசித்துக்கொண்டிருந்தான்; அவனுடைய வெண்கிரணங்கள் பரவிய ஆகாயத்திலிருந்த நட்சத்திரங்களெல்லாம் ஒன்று சேர்ந்து எழுத்துக்களின் உருவடைந்து "ராஜகுமாரா! இவ்விரவே தகுந்த தருணம்! இவ்விரண்டிலொன்றை நாடுக! ராஜாதி ராஜனாக விருந்து மண்ணுலகப் பெருமையடையப் போகின்றனையா? அல்லது முடியிழந்து குடியிழந்து இவ்வுலகத்திற்கு உதவிபுரியும் பொருட்டு சத்திய மார்க்கத்தை நாடப் போகின்றாயா?" என்று பொருள் படும் சொற்களாய் அமைந்து விளங்கின. அன்றியும் அந்நிசி மொழிந்த சொற்களோடு முன்னொரு நாள், தேவர்கள் வீணைத் தந்திகளின் மறைவிலிருந்து எச்சரித்த மொழிகளும் கேட்கலாயின. வானத்தில் ஒளிர்கின்ற மீனங்களை நோக்கிய வண்ணமாயிருந்த நம்மிறைவரை வானுலகத்தாரெல்லோரும் சூழ்ந்து கொண்டு துறவுமார்க்கத்தை அடையுமாறு தூண்டினர் போலும். அப்பொழுது அவர் இங்ஙனம் கூறுவாராயினர் "தருணம் அடுத்து விட்டது! யான் இதோ போகின்றேன்! தூக்கத்தில் ஆழ்ந்திருக்கும் என் அன்பின் வடிவமே என்னை முத்தமிட்ட உன் மெல்லிய அதரங்கள் இவ்வுலகத்தைக் காக்கும் வழியைத் தேடுமாறு இதோ என்னை ஏவுகின்றது. இதோ நம்மிருவரையும் பிரிக்கின்றது! எனக்கென்றும் ஏற்பட்ட சந்தேகம் ஆகாயத்தின் மௌன வடிவத்தில் மறையாத மின்னல் போல விளங்கு

வதை யான் காண்கிறேன். இதன் பொருட்டே யான் பிறந்தேன். எண்ணிலாத இராப் பகல்களும் இவை அடையுமாறே என்னை இங்கு அழைத்து வந்தன. யான் விரும்பினாலும் எனக்குச் சொந்தமாக விருப்பமாகிய இவ்வரச முடியைவிருப்பேன்; என் உறை நீத்த வாளின் வீச்சொளிக்காகக் காத்திருக்கும் ஏகச் சக்கிராதிபத்தியத்தையும் வெறுத்தேன்; இவ்வுலகிற் என் பெயரை செஞ்னிறக் குருதியிற் தோயத்துத் தன்மார்பிலணியும் பொருட்டும் என் போர்ச் சகடம் ஒவ்வொரு வெற்றி நிலத்திலும் இரத்தப் பெருக்கிற் புரண்டோட இடங் கொடேன். பொறுமை மிக்க மாசற்ற பாதங்களுடன் இவ்வுலகில் உலவுவதையும், பூமியின் குகைகளையே என் அமளியாக்கி, விஜனப் பிரதேசங்களை வாழுமிடங்களாக்கி இவ்வுலகத்துப் புன்மையான உயிர் வகைகளை என் துணையாக்கி வாழ்வதையே யான் மேலான தெனக் கருதுகின்றேன். கீழ்ச் சாதியார் உடுக்கும் கந்தைத் துணி கட்டுவேனே யன்றி இடாம்பீகமான அலங்கார வஸ்திரங்கள் தரிக்கமாட்டேன். ஏழைகள் விரும்பியளிக்கின்ற உணவன்றி மாமிசபட்சணங்களைத் தீண்டமாட்டேன்; இருண்ட குகைகளுங் காட்டுப் புதர்களும் தருகின்ற மறைவிடங்களில் தங்குவேனே யன்றி படாடோபமான உறைவிடங்களை விரும்ப மாட்டேன். இவ்வுலகத்தில் ஊனெடுத்த உயிர்வகைகளெல்லாம் எழுப்புகின்ற கர்ண கடூரமான அழுகையொலி என் செவிகளைத் துளைக்கின்றது; இவ்வுலகத்துப் பிணிகள் யாவற்றையும் கண்டு இரங்கிப் பரிதபிக்கின்றது; ஆதலால் யான் இங்ஙனமே செய்வேன்; முற்றத்துறப்பதாலும் மிக்க ஊக்கமான முயற்சியாலும் ஒரு மாற்று அகப்படுமெனின் இவ்வுலகப் பிணிகளனைத்தையும் அகற்றுவேன். உயர்ந்த நிலைகளிலுள்ள தேவர்களிலும் தாழ்ந்த நிலைகளிலுள்ள தேவர்களிலுங் கூட யாருக்குத் தான் இவ்வுலகத்தின் மீதிரக்க முண்டு; அதன் துயரத்தை மாற்றும் திறன் யாருக்கு உண்டு? அவர்களைக் கண்டார் யார்? அவர்கள் யாவரும் கண்ணுக்குத் தென்படுமாறு வெளிப்படாதார்? அவர்கள் தம்மை வணங்குவார்க்கு எத்தகைய உதவி செய்திருக்கின்றனர்? ஓயாமல் தொழுது வாய் நோக வாழ்த்தி, முறைவைத்து தானிய வகைகளை இறை செலுத்தித் தைலங்களூற்றித் தீபங்களேற்றி மந்திரம் பிதற்றி மலையான கோயில்கள் பல கட்டி, உயிர் பதறிக்கதறும் வாயில்லா உயிர்களைப் பலிகொடுத்து பூசாரிகளின் வயிற்றை நிறைத்து, யாக குண்டத்தில் எழுகின்ற பாழான புகையெனவே நித்தமும் வளர்ந்தெழுகின்ற அர்ச்சனைகளையும், பூசைமுறைகளையும் தற்புகழ்ச்சி வார்த்தைகளையும் கற்பிக்கின்ற துக்க துன்பங்களின்று எவரையும் காப்பாற்றாத விஷ்ணு சிவ சூரிய தேவாதிகளின் பெயரைக் கூவுமாறு மனிதன் கட்டுண்ட தென்னனம்?

என் அருமைச் சகோதரர்களில் எவரேனும் அந்த தேவர்களைக் களிப்பித்து ஜனன மரண துக்கங்களும் விஷப் பற்களுடைய காதலும், கொடுக்கக்கூடிய ஆசாபங்கங்களும், அழற் தன்மையான சுரங்களும், பல நோய்களின் வேதனைகளும், மெதுவாய்த் தளர்ந்து வரும் வாழ்க்கையும், வயோதிகமும், பயங்கரமான மரணமும் மரணத்திற்குப் பின் நிகழ்பவைகளும், ஆகிய இப்பெரும் இடர்ச்சுழியினின்று தப்பிய துண்டா? ஓயாது சுழன்று வரும் இச்சக்ரம் திரும்பவும் ஒரு முறை சுற்று வதினால் புதிய வாழ்க்கை ஏற்பட்டு விடுகின்றது. அவ்வாழ்க்கையினால் புதிதாக ஏற்படும் துயரங்களும், பிறவிகளும், பரிகாசத் தன்மையான பழைய ஆசைகளுசண்ட மாருதங்கள் நம்மைச் சுழற்றி யடிக்கின்றன. என் சகோதரிகள் எவ

ராவது அத்தேவர்களுக்குத் தானிய வகைகள் படைத்து, அவர்களைப் புகழ்ந்து பாடி, நோன்புகள் அனுஷ்டித்து ஏதேனும் பலனடைந்ததுண்டா? அத்தேவர்களுக்குப் பாலூட்டி நம் நெய்யும் இன்ன முதங்களு மூட்டி, துளசிமாலைகளும் துளசியிலைகளுமளித்துத் தமக்கு ஏற்படும் பிரசவவேதனைகளை ஒரு சிறிதேனும் குறைத்துக் கொண்டதுண்டோ? இல்லையே. சில தேவர் நல்லோராகவும் சில தேவர் கொடியோராகவும் இருத்தல் கூடும். எனினும் அவர் அனைவரும் மனிதர்களுக்கு உதவி மறுப்பதில் ஒரே தன்மையராகவே இருக்கின்றனர். இருகுணத்தாரும் உள்ளக்கனிவற்றவர்களே. அவர்கள் எல்லோரும் மனிதர்களைப் போலவே மாறுதல் என்னும் சக்கரத்தில் கட்டுண்டவர்களாய்க் காணப்படுகின்றனர்! அத்தேவர்கள் தாம் எடுத்த சரீரங்களையும் எடுக்கவேண்டிய சரீரங்களையும் அறிவார். நமது வேதங்கள் கூறுவது உண்மையே. ஒரு ஆன்மா ஒரு முறை எக்காலத்திலேனும் எங்கேயாகிலும் தொடங்கிவிட்டால், அது பின்னர் கல்லாகிப் புல்லாகிப் புழுவாகிப் பாம்பாகி, நீர் நிலைகளில் வாழும் உயிர் வகைகளாகிப் பறவையாகிப் பல மிருகங்களாகி, மனிதனாய்ப் பேயாகிக் கணமாகி, வல்லசுராய்த் தேவனாய்ச் செல்லா நின்ற இத்தாவர ஜங்கமத்துள் எல்லாப் பிறப்பும் பிறந்து பின்னும் கீழ் நிலையான கல்லாகிப் புல்லாகிப் புழுவாகி மீண்டும் உயர் நிலையைச் சார்ந்தனவாகி, இங்ஙனம் மேலுங் கீழுமாக உயர்ந்து தாழ்ந்து சுற்றிக்கொண்டேயிருக்கும். ஆதலால் நாம் இவ்வுலகத்திலுள் செய்தனைத்திற்கும் உறவினரேயாம். இத்தலைவி வாழ்க்கையில் சிக்கிக் கொண்டிருக்கும் மனிதனுக்கு ஏற்பட்டிருக்கும் சாபத்தினின்று அவனை எவனாகிலும் ஒருவன் காப்பாற்றுவானாகில், பயமென்னும் நிழல் வீசிக் கொடுஞ்செயலைக் கேளிக்கையாகக் கொண்ட அஞ்ஞான இருள் இவ்விரித்த உலகத்திற் சிறிது குறைந்து போம். ஆம்! மனிதனைக் காக்கும் திறமையுடைய ஒருவன் ஏற்படுதல் என்ன பாக்கியம்! அதற்கோருபாய மிருந்தே தீரவேண்டும்! யாவற்றையும் தகனம் செய்யும் சூரியனிடத்துள்ள ஒரு பொறியைத் தாவல்ல சக்கிமுக்கிக்கல்லை ஒருவன் தட்டி உரைத்து நெருப்பு உண்டுபண்ணுமட்டும் மனிதர்கள் குளிர் காற்றில் உடல் விறைத்து நடுங்கினர். களைபோல் செழித்திருந்த தானியத்தைப் பயிர் செய்து உண்ணும் வழியை ஒருவன் காட்டுமட்டும் மனிதர்கள் ஓநாய்களைப்போல இறைச்சியைத் தின்று தமது இறைச்சிக்கூட்டைக் காத்துவந்தனர். ஒருவன் தனது பொறுமைமிக்க கைவிரல்களால் ஒலிக்கு வடிவங்கள் அமைத்து, நாவினால் உச்சரிக்கும் முறையைக் காட்டிக் கொடுக்கு மட்டும் அவர்கள் குரங்குகளைப்போலப் பிதற்றிக் கொண்டிருந்தனர். இங்ஙனம் மனிதர்களுக்குப் பலவித சாதனங்களைக் கண்டறிந்து கொடுத்த என் சகோதரர்களுக்கு ஏற்பட்டிருந்த அருட் பிரசாதங்கள் அளவிறந்த அன்பும் தன்னலமின்மையும் இடைபடாத ஆராய்ச்சியும் தளராத முயற்சியுமேயாம். அங்ஙனமாயின் சர்வ பாக்கியங்களும் நிறைந்த மேலான பதவியிலிருக்கின்றவனும் செல்வத்திற் சிறந்தவனும் திட சரீரமும் இன்பவாழ்க்கைப் பேறுகளுமுடையானும் பிறப்புரிமையால் இராஜாதி ராஜனாயிருந்து ஆளும் பாக்கியமுடையானும் நீடித்த வாழ் நாட்களில் களைப்புறாத நவயௌவனத்தில் ஆநந்த முடையானும் காதலின் இன்னற் சுவையான லீலாவிநோதங்களில் முடிவு காணாதவனும் கிழவடிவினால் தளராதவனும் துறத்தற்கேவும் பெருந்துயர்கள் சிறிதும் நுகராதவனும் இவ்வுலகத்துத் தீமையில் கலக்கின்ற மகிமைகளிலும் அழகிலும் இன்பமடைவோனும் இப்புவியிற் சிறந்த பேரொழிலைத் தழுவும் உரிமையுடையானும் பிறருடைய துக்கத்திற்காகவன்றி வேறு வகை

யால் மனோவாதலனும் அது தேவை இது தேவை என்ற தொல்லையில்லாதவனும் ஆகிய ஒருவன் தனக்குக் கிடைத்திருப்பவை யாவற்றையும் வெறுத்து, மனிதரிடத்தும் உயிர்வகைகளிடத்தும் பேரன்பு பூண்டு உண்மையையே ஓயாது தேடி, முத்தியின் இரகசியம் தேவலோகத்தில் ஒளித்திருப்பினும், பாதாளத்திற் பதுங்கியிருப்பினும், அல்லது, எவர்க்கும் எட்டாமல், எவருடைய கண்களுக்கும் தென்படாமல் மறைந்திருப்பினும், அதை நாடி ஓயாது முயன்று வருவானாகில் திட்டமாய் முடிவிலென்றேனும், எங்கேயாவது அவனுடைய கண்களை மறைத்திருந்த திரை நீங்க உண்மை புலப்படும். முத்திமார்க்கத்தின் கதவுகள் திறக்கும். இதை யான் செய்வேன், என் இராச்சியத்தை இழப்பேன். எனக்கு அறிமுகமானவைகளும் அறிமுக மற்றவைகளுமாகிய கோடானு கோடி ஜீவராசிகளின் உள்ளத்தை நடுக்கி வாட்டுகின்ற துன்பம் துயர்களைக் கண்டு படபடக்கின்ற என் உள்ளம் தன்னைச் சூழ்வுள்ள உறவினர்களையும் உற்றாரையும் ஊராரையும் உலகோரையும் என் அருமை யசோதரையையும் நேசிப்பதினால், அவர் யாவரும் இன்ப வாழ்க்கையை அடையுமாறு இதோ யான் அர்ப்பணம் செய்கிறேன். என்னை அழைக்கும் நட்சத்திரங்களே! இதோ! யான் வருகின்றேன். துக்கம் செறிந்த ஞாலமே! உனக்காகவும் உன்னிடம் வாழும் உயிர்கட்காகவும் யான் இதோ என் யௌவனத்தைத் துறக்கின்றேன்! என் சிங்காதனத்தை இழக்கின்றேன். என் சுகானுபவங்களை விடுகின்றேன். களிப்பு மிகுந்த வாழ்நாளையும் இனிய இரவையும் என் இன்பமாளிகையையும் இதோ விட்டுச் செல்கின்றேன்! என் அமுத அரசியே! உனைத் துறந்தாலும் துறப்பேன்; உன் கமல மென் கரங்களைத் துறப்பேனோ? எனினும், அக்கரங்களையும் இதோ புறக்கணித்துத் தள்ளுகின்றேன்! உன்னை விட்டுப் பிரிவதினாலே இவ்வுலகத்தைக் காப்பாற்ற முடியும். அப்பொழுது உன்னையும் ஈடேற்றலாகும். உன்னுடைய உதரத்தில் நம்மிருவருடைய காதலின் மலராய்ப் பூத்திருக்கின்ற என் செல்வச் சிறு குழந்தையை ஆசிர்வதிக்கும்பொருட்டு நான் இங்கு தங்குவேனாகில், என் மனவுறுதி கலைந்து போகும்; இவ்வூக்கம் அழிந்து போம்; ஓ! என்னாசை நேசமே! என் செல்வக்குழந்தையே! என் அன்பார்ந்த தந்தையே! எனக்கு விசுவாசமான இந்நாட்டு ஜனங்களே! இத்தருணத்தில் ஏற்படும் இப்பெருந் துயரத்தை உயிர் வகைகள் யாவும் மேலான மார்க்கத்தைத் தழுவும் பொருட்டு மெய் வெளிப்படவேண்டுமானால், சற்று பொறுத்துக் கொள்ளுங்கள்! இதோ யான் உறுதி செய்து விட்டேன். இப்பொழுது யான் உங்களை விட்டுப் பிரிந்து போகின்றேன்; யான் தேடுவது இடையறாத முயற்சியாலும், ஆராய்ச்சியாலும் அகப்படுகின்ற மட்டும் மீண்டுமிங்கு வருவதில்லை" என்று மொழிந்து கண்ணீர் பெருக்கினார்.

யசோதரையின் பாதங்களைப் பன்முறை கண்களில் ஒற்றிக் கொண்டார்; பிரிவின் சொல்லுக் கடங்காத துயரத்தினால் உள்ளப்பற்று ஓங்கி நிற்க, நீர் ததும்பிய கண்களோடு நித்திரையிலிருந்த யசோதரையின் முகத்தைப் பார்த்தார்; கிடு கிடு என்று நடுங்கின இருதயத்தை இருகைகளாலும் அழுத்திக் கொண்டு, அச்சயன மஞ்சத்தை ஏதோ ஓர் கோயிலெனக் கருதி வெகு பக்தியுடன் மும்முறை வலம் வந்தார். "இனி ஒரு முறையும் யான் இதைப் பாற மாட்டேன். ய[illegible] இனி இதன்மேல் உறங்கேன்" என்று அழுது கொண்டு முணங்கினார்; மும்முறை அரசர் பள்ளியறையின் வாசலை அணுகினார்; மும்முறையும் திரும்பி வந்தார். ஏனெனின் அத்துணை வல்லமையுடைய அழகு வாய்ந்தவள் யசோதரை. முடி-

வில் முகத்தைத் தம் வஸ்திரத்தினால் மூடிக்கொண்டு அவளை விட்டுப் பிரிந்து பள்ளியறை வாசலிற் றொங்கியிருந்த மாணிக்கத்திரையை மெதுவாய் அகற்றி அப்புறம் சென்றார். அங்கு வட இந்தியாவின் வனப்பிற் சிறந்த மடமங்கையரின் அழகு தழைந்த வனத்தின் கண் நின்றார். பள்ளியறை வாசலின் இருபுறத்திலும் கங்கையும் கௌதமியும் படுத்திருந்தனர். இன்னும் மற்ற வனிதாமணிகள் யாவரும் தந்தம் கமல தளங்கள் கூம்ப நீள் துயிலிலாழ்ந்திருந்தனர்.

அவர்களைக் கண்ணுற்ற சித்தார்த்தர், "ஓ இனிமை வாய்ந்த நண்பர்களே! நீவிர் யாவரும் எனக்கு அன்பானவர்களன்றோ? எனினும் இத்தருணம் யான் அனைவரையும் விட்டுப் பிரியாவிடில் நம்மனைவருக்கும் ஆறுதலில்லாக் கிழப்பருவமும் வினை மரணமும் சம்பவிப்பதன்றி மற்று யாதாம்? இங்கு நீங்கள் தூங்குகின்ற தன்மை போலவே சாவும் அடைவீரே! பனி பொழியும் காலையில் மலர்கின்ற நந்தவனத்து ரோஜாமலர்கள் வாடி மடியும் தருணத்தில் அவற்றின் வனப்பும் வாசமும் எங்கோ? விரிகதிர் தீபங்களில் தைலம் வற்றும் பொழுது அவற்றின் ஜோதி எங்கோ? நன்று! நன்று! நள்ளிரவே! இம்மடவாரின் படிந்த இமைகளையும் அதரங்களையும் அழுத்துக! அழுத்துக! செவ்வனே அழுத்துக! எத்தகைய கண்ணீரும் கலக்கந் தருங்குரலும் என்னைத் தடை செய்யாது காத்திடுக! ஏனெனின், என் வாழ்வை இவர்கள் எம்மட்டும் இன்புறச் செய்தனரோ, அம்மட்டும் கசப்பான வாழ்க்கையில் இவர்களும், மற்றவர்களும் யானும் தங்கினேமன்றோ? சில இளவேனில் முதிர் வேனிற் காலங்களும், மழை, முன்பனி, பின்பனிக் காலங்களும், கூதற்காலங்களுமாய் வளர்ந்து, பின்னொருக்கால் வரப்போகும் இளவேனிலைக் கண்டாலும் காணும், இன்றேல் கோடரியின் கூரிய முனையால் வெட்டுண்டு மறிந்தாலும் மறியும் என்னும் நிலைமைத்தான மரமெனவே நாமெல்லோரும் வாழ வேண்டியவர்களன்றோ? வானவனெனவே இங்கு வாழ்கின்றேன்; எனினும் இந்நறவந்தோய்ந்த நஞ்சு வேண்டேன். இஃது எத்தகைய வாழ்வு? என் போன்ற பிறமாந்தர் கடுந்துயர்க் கடலிற் பட்டுழல, யான் மட்டும் இந்திர லோகமாளும் அச்சுவை பெறினும் வேண்டேன். ஆதலால் என்னுற்ற நண்பர்களே! இதோ! விடை பெற்றுக் கொள்கின்றேன். இவ்வாழ்வு முற்றிலும் சீரழிவதற்கு முன்னரே யான் இதைத் துறந்து முத்தியையும் மனோதீதமான ஜோதியையும் நாடித் தேடிக்கண்டறிய வேண்டுமாதலால் இதோப் போகின்றேன்!" என்று பிரிவாற்றாமையால் பல மொழிகள் புகன்றார்.

பின்னர், நித்திரையின் அழகு புனைந்த மடமங்கையரைக் கடந்து நிலவு பொழியும் வான வெளியில் நின்றார். அவ்விரவின் கண்களாகிய நட்சத்திரங்கள் அவர்மீது அளவிலாத அன்பு பொழிந்தன. அதன் மென் மூச்சாகிய தென்றல் அவரது வஸ்திரமுந்தானைகளைத் தழுவிப் படபட வென்றடித்தது. ஊக்கமும் ஆக்கமும் தொழிலும் உழைப்பும் யாவும் அருள்கின்ற பகலோன் வரவு நோக்கி மலரவேண்டுமென்றிருந்த நந்தவனமலர்கள் யாவும் தம் மெல்லகம் திறந்து நாணவிழ்த்த நிறங்கள் தோய்ந்த முகைகளில் அடைத்து வைத்திருந்த சுகந்தங்களை வீசி யெறிந்தன. இன்னதென்று வகுத்துரைக்க வொண்ணாததோர் நம்பிக்கையால் இப்பார்மடந்தையின் நெஞ்சந் துள்ளிற்றோ வென்ன, இமாசலத்தினின்று தென் குமரிமட்டுமுள்ள நாடெங்கும் ஓர் வகையானந்த புளகிதம் நிறையலாயிற்று.

அவர் அந்நிசியில் இன்பமாளிகையை விட்டு வெளியேறி நடந்து, "சன்னா! எழுந்திரு!

கண்டகனுக்குச் சேணம் மாட்டிக் கொண்டுவா" என்று கூறினர். மாளிகையின் தலைவாசலின் அருகாமையில் உறங்கிக் கொண்டிருந்த சன்னன் தன் படுக்கையிலிருந்து எழுந்த வண்ணமாய், "அரசே, இரவில் பாதை தெளிவாய்ப் புலப்படாதே. இந்த இரவிலா சவாரி பண்ணப் போகிறீர்? என்று கேட்டான்.

அதற்கு சித்தார்த்தர் "சன்னா! மெதுவாய்ப் பேசு. என் குதிரையைக் கொண்டுவா. ஏனென்றால், உண்மையைக் கண்டறிய வேண்டுமென்ற பெருந்தாகத்தினால் என் இருதயம் இந்தப் பொன்மயமான சிறைச்சாலையிலிருந்து வெளியேறப் போகின்றது. அதற்கேற்ற தருணம் இதுவேயாம்; எல்லோருடைய நன்மையையுங் கருதி, அவ்வுண்மை அகப்படு மட்டும் யான் அதைத் தேடப் போகின்றேன்" என்று தணிந்த குரலில் உரைத்தார்.

"ஐயே! சுதோதன மன்னனின் மேன்மை தங்கிய மகன் ராஜாதி ராஜனாக விருந்து தேசங்களை ஆளுவான். அத்தருணத்தை எதிர்பார்த்திருங்கள்' என்று அறிவுடைய புண்ணிய புருஷர்கள் அத்தனை நட்சத்திரங்களையும் கணக்கிட்டு ஆருடம் பார்த்துரைத்தனரே! அவை யாவும் பொய்த்துவிட்டனவா? தேவரீர் செல்வம் நிறைந்த இவ்வுலகத்தை யிழந்து பிச்சைப் பாத்திரத்தைத் திருக்கரத்திலேந்தப் போகின்றீரா? தேவலோகத்துச் சுகானுபவங்கள் நிறைந்த இன்பமாளிகையைத் துறந்து துணையற்ற கானகங்களில் தன்னந் தனிமையாகத் திரியப்போகின்றீரா? என்று சன்னன் அழுதுகொண்டு கேட்டான்.

"சன்னா! இதைக் கவனி! யான் சிங்காதனமேறி ஆள இங்கு வரவில்லை; உண்மையைக் கண்டறிந்து உலகத்திற்குக் கற்பிக்கும் பொருட்டே இங்கு வந்துளேன். சதா மாறி மறைகின்ற பல இராச்சியங்களைப் பார்க்கிலும் மேலானது நான் ஆள விரும்புகின்ற பரமராச்சியம். ஆதலால் கண்டகனைக் கொண்டுவா!"

"புண்ணியனே! எம்மிறைவராகிய நமது தந்தைக்கு இதனால் விளையும் துக்கத்தைச் சற்று நினைத்துப் பாரும்! உம்மையே தமது மேலான ஆனந்த நிலயமாகக் கொண்டிருப்பவரின் கடுந்துயரத்தைச் சற்றே சிந்தியும்! முதலில் அவர்களைத் தாங்க வொண்ணாத் துயரால் சிறுகுலைத்துப் பின்பு எங்ஙனம் அவர்களுக்கு உதவி செய்யப் போகின்றீர்?" என்றான்.

"நண்பனே! சுயநலமான காதலின்பங்களை நுகருமாறு காதலைக் கட்டித் தழுவுகின்ற அவ்வன்பு பொய்யானது. யான் என்னின்பங்களை நேசிப்பதினும் நீ மொழிந்தவர்கள் தமதின்பங்கள்பால் வைத்துள்ள நேசத்தினும் பன்மடங்கதிகமாக யாவரிடத்திலும் அன்பு பாராட்டுகின்றேன். யான் அவர்களையும் இன்னும் மற்றனைவரையும் எல்லை கடந்த அன்பின் முயற்சிக்குப் பலனுண்டெனில், அதனால் காக்க வேண்டுமென்னுங் கருத்தோடு இவ்விடம் விட்டகல்கின்றேன். ஆதலால் நீ போய்க் கண்டகனைக் கொண்டுவா."

"பிரபோ! இதோ போகின்றேன்" என்று சொல்லிவிட்டுச் சன்னன் அழுது கொண்டு குதிரை லாயம் புகுந்தான்; குதிரை சாமான்கள் வைத்திருந்த பெட்டியிலிருந்து வெள்ளிக் கடிவாளமும், நெஞ்சுவாறும், முகப்பட்டையும், பட்டுக்கடிஞாணு மெடுத்தான்; அவற்றைக் கண்டகனுக்குப் பூட்டிக் கொளுத்துக்களையும் தோல் வாறுகளையும் உறுதியாக மாட்டி அதன் முதுகின் மீது சேணம் அமைத்தான். வெண்ணிறக் கலினமாலைக் கொளு

ந்து அரண்மனை வாசலில் நின்றிருந்த சித்தார்த்தரின் அருகாமையில் நிறுத்தினான். அத்தருணம் அது தன் இளவரசனைக் கண்டதும் ஆனந்த பரவசமாகி, சிவந்த மூக்குத்துவாரங்களை விரித்துக் களிப்புடன் கனைத்தது. இவ்விஷயமாக புத்த சரித்திரங்கள் "கண்டகனின் கனைப்பையும் இரும்பு இலாடங்கள் தரித்த வலிமை வாய்ந்த குளம்புகளின் ஓசையையும் யாவரும் கேட்டனர் என்பது உண்மையே; எனினும் தேவர்கள் காணற்கரிய மெல்லிறகுகளை உறங்கிக் கொண்டிருந்தவர்களின் காதுகளில் வைத்து அவர்களைச் செவிடர்களாக்கி விட்டனர்" என்று கூறுகின்றன.

சித்தார்த்தர் தமது குதிரையின் கம்பீரமான கழுத்தை மெதுவாய் வளைத்துத் தாழ்த்தி, அதன் பளபளப்பான பக்கங்களைத் தட்டிக் கொடுத்து "கண்டகா! அமைவுறுக! அமைவுறுக! இன்று யான் போகின்ற பிரயாணம் போல இதற்கு முன் எக்காலத்திலும் எவருமே செய்ததில்லை. இப்பிரயாணம் முற்றுப் பெறுமாறு நீ என்னைக் கொண்டு செல்ல வேண்டும். இன்றோரிரவு மட்டுமே யான் குதிரைமீது ஏறப் போகின்றேன். ஏனெனின் உண்மையைக் கண்டறியும்பொருட்டு இன்னாட்டிலிருந்து தப்பி ஓடப்போகின்றேன். என்னாராய்ச்சி எங்கு முடிவடையும் என்பதை யான் அறியேன்; ஆயினும், உண்மையைக் காணுமட்டும் அது முடிவுறாதென யான் திண்ணமாயறிவேன்; ஆதலால் கண்டகா! நீ இன்றிரவு அதிபயங்கரமாகவும் வெகு தைரியமாகவுமிருக்க வேண்டும். ஆயிரம் கத்திகள் வழிமறித்திடினும் நீ அஞ்சலாகாது! உன் பாதையை எதுவும் தடை செய்யலாகாது! அரண்களும் அகழ்களும் உன் ஓட்டத்தை அடக்கலாகாது. இதைக் கவனி! யான் உன்னுடைய விலாப் பக்கங்களைத் தொட்டு, "கண்டகா, செல்!" என்றுரைத்தால், நீ வாயுவேகமும் மனோவேகமும் பின்னிடப் பறந்து செல்லவேண்டும். எனக்கு ஆப்தமான கண்டகா! உன் இறைவரைச் சுமந்து கொண்டு போக இன்று நீ அனலும் காற்றுமாகவிருக்கவேண்டும்! நீ இத்தருணம் செய்யப் போகின்ற இவ்வுதவியினால் லோகோபகாரமாக யான் செய்ய விருக்கும் நற்கருமத்தில் நீயும் பங்கு கொள்ளலாம். ஏனெனின், யான் இன்று வெளியேறுவது மனிதர்களின் பொருட்டேயாம் என்னற்ற இடமின்றி அவர்களுடன் சேர்ந்து நோவைப் பங்குகொண்டு, புகலிடம் தேட அறிவுமின்றி விழிக்கின்ற எல்லா உயிர்வகைகளுக்காகவுமாம் என்பதை நீ உணர்க. ஆதலால் இப்பொழுது நீ உன் எசமானனை வெகு வீரத்துடன் தாங்கிச் செல்வாய்" என்று மொழிந்தார்.

அதன் பின்னர், மெதுவாய் அதன்மீதேறி அமர்ந்து கடிஞானை மெல்லென இழுத்து அதன் தலையை உயர்த்தினார். அப்பொழுது அக்குதிரை கடிவாளங்கள் கிணி கிணி என்று ஒலி செய்ய, இரும்பு லாடங்கள் கற்றளங்களில் 'பட பட' வென்று விழுந்து தீப் பொறி வாரி இறைக்கப் பாய்ந்து சென்றது; ஆனால் அதன் ஓசையை எவரும் கேட்டிலர். ஏனெனின் அங்கு கூடியிருந்த தேவர்கள் அதன் பாதங்களின் கீழ் குண்டு மல்லிகை மலரைப் பறித்து அடுக்கு மெத்தையாக விரித்துக் குளம்போசை கேளாது செய்திருந்தனர். கட்புலனுக் கெட்டாத தேவருடைய கரங்கள் கடிவாள ஓசை கேளாதவாறு அதன் வாயைப் பொத்திப் பிடித்திருந்தன. மேலும் சித்தார்த்தர் முதலரண் வாசலின் கற்றளங்களை அணுகிய பொழுது வாயு தேவதைகள் அவ்வச்வத்தின் பாதங்கள்பட வேண்டிய இடங்களிலெல்லாம் மாயத் தன்மையான மெத்தைகள் விரித்துச் சத்தமின்றி மெத்தென்று பதியச் செய்தனர்.

அதன் காலடிகள் நூறு மனிதர்கள் சேர்ந்து தாம்பாள் நீக்கத் திறந்தாலும் திறவாத பருமேறிய அப்பித்தளைக் கதவங்களை அணுகின. இரு காத தூரம் கேட்கு முழக்கமுடைய சுற்றாணிகளிற் சுழலும் அக்கதவுகள் அவர் அணுகியபொழுதே சிறிதும் சத்தமின்றித் திறந்து விரிந்தன. அங்ஙனமே நடுவாணின் கதவங்களும் வெளியாணின் கதவங்களும் தமது பூதாகாரமான வாசல்களைத் திறந்து பாய்ந்து வருகின்ற கண்டகனை வெளியேற விட்டன. அந்த வாசல்களின் கீழ் வாளும், குந்தமும், கேடகமும் ஏந்திப் பெரும் பேரிசையுடன் உறங்கிக் கொண்டிருந்த காவலாளர்கள் யாவரும் அரசனால் தெரிந்தெடுக்கப் பட்ட மகாவீரர்கள். அவரனைவரும் செத்த பிணங்கள் போலப் படுத்துக் கிடந்தனர்; ஏனெனின் மாளவ தேசத்தின மயக்கம் தரும் சோலைகளில் வீசுகின்ற தென்றலைப் பார்க்கிலும் அதிக மயக்கம் தருகின்ற இளந்தென்றலை தேவர்கள் வீசினர்; அத்தென்றலை நுகர்ந்தவர்கள் யாவரும் மதியிழந்து கல்லினும் சிறந்த கல்லெனவே உறங்கினர். இங்ஙனம நம் தேவர் எத்தகைய இடையூறுமின்றி அரண்மனையை விட்டு வெளியேறினர். சுக்கிர நட்சத்திரம் கீழ்த்திசை வானவளயத்திலிருந்து பாதி வேல்தூரமாய் நின்று மினிர்ந்து கொண்டிருந்த பொழுது, உதயகாலத்துக் குளிர்காற்று இவ்வுலகெங்கும் பெருமூச்செறிந்து தவழ்ந்தபொழுது, சித்தார்த்தர் கபிலவாஸ்து ராச்சியத்தின் எல்லைநதியாகிய அநோமாவின் சிற்றலைகள் மோதுகின்ற பிரதேசத்தை அடைந்தார்; கடிஞானை மெதுவாய் இழுத்துக் குதிரையை நிறுத்தி அதன் மீதிருந்து குதித்தார்; அதன் நெற்றித் தலத்தை முத்தமிட்டுப் பின்பு சன்னனிடம் பரிபூரண கருணை நிறைந்த இனிமையுடன் இங்ஙனம் மொழிந்தார்: "சன்ன! நீ எனக்குச் செய்த இப்பேருதவி உனக்கும் மற்றெல்லா உயிர் வகைகளுக்கும் பெருநலங்களை அளிக்கட்டும். நீ எனமீது கொண்டுள்ள அன்பிற்காய் நான் என்றும் உன் மீது அளவிலாத அன்பு கொண்டுளேன் என்பதை நீ உறுதியாகக்கொள், என் குதிரையைத் திருப்ப அழைத்துக் கொண்டு போ! இதோ வாங்கிக்கொள்! என் முத்து மகுடம், ராஜரீகமான ஆடை ஆபரணங்கள், ரத்தினங்கள் இழைத்த உடைவாளும கல்லடமும் பெற்றுக் கொள்; இதோ இந்த வாளினால் என் தலை மயிரை அறுத்துத் தருகின்றேன். இவை யாவற்றையும் அரசனிடம் கொடுத்து, ஏகாந்தமான ஆராய்ச்சிகளினாலும் ஞானவொளி அடைவதற்கான இடைவிடாத உழைப்பினாலும் மகா ஞானத்தை அடைந்து ராஜாதி ராஜ சமானனாய் நான் திரும்பி வருகிற மட்டும் அவர் என்னை மறந்திருக்க வேண்டுமென்று நான் பிரார்த்திக்கிறேன் என்றுசொல்! இங்ஙனம நான் ஜயமடைவேனாகில், முக்கியமான பிரபஞ்ச சேவையினாலும், மேலான அன்பினாலும், இந்த உலகம் எனக்குச் சொந்தமாகுமென்று சொல்; ஏனெனின் மனிதனுக்கு முத்தி மனிதனாலேயே ஏற்படவேண்டுமாதலாலும், என் உலகத்தைக் காக்கும் பொருட்டு என் உலகத்தை வெறுக்கிற என்னைப் போல் இதற்குமுன் வேறொருவரும் உண்மை மார்க்கத்தைத் தேடியலையவில்லை யாதலாலும் நான் ஜயமடைவேன்" என்றார்.

(தொடரும்.)

தயவு செய்து தங்கள் சந்தாவை பாக்கியின்றி முழுதுமனுப்பிப் பத்திரிகை காலா காலத்தில் வெளியிட உதவி புரியுமாறு சந்தா நேயர்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

பத்திராதிபர்.

நம் நாட்டில் விவாக ரத்துச் சட்டம் அவசியமா?

(ஸ்ரீமதி லக்ஷ்மி அம்மாள்.)

சென்ற மாதம் இச்சென்னை நகரில் நடைபெற்ற ஸ்திரீகள் சங்கத்தில் (Conference) ஸ்திரீகள் முன்னேற்றத்திற்கும் அவர்கள் இதுகாறும் கணவன்கீழ் அடிமைகளாய் இருந்து வாழ்ந்துவரும் அடிமைத்தொழில் நீங்கிச் சுதந்திரம் பெறுவதற்கும் உரித்தான பல தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டன. அவைகளில் முக்கியமாகப் பால்ய விவாகத்தை ரத்து செய்து விவாக சம்மத வயதை உயர்த்திச் சட்டம் ஏற்படுத்திய அரைத்தனத்தாருக்கு வந்தனம் செலுத்தியதோடு, "விவாக ரத்து" (Divorce) என்ற சட்டமும் நமது இந்திய ஸ்திரீகளுக்கு இப்பொழுது இன்றியமையாததாய் இருக்கின்றது; அதையும் விரைவில் அதிகாரிகள் சட்டத்திற்குக் கொண்டுவர வேண்டுமெனப் பிரார்த்திப்பதாய் ஒரு பிரேரணையும் கொண்டுவரப்பட்டது. நமது சகோதரிகள் அநேகர் அதை அங்கீகரித்ததாயும் கூறப்பட்டது. இது சம்பந்தமாய்ச் சிலர் தாம் ஒப்பவில்லை என்பதைப் பத்திரிகை வாயிலாய் அறிவிக்க, ஸ்ரீமதி மாலதி பட்டவர்த்தன் என்னும் சகோதரி டிசம்பர் மாதம் 6-தேதி ஹிந்து பத்திரிகையில் "விவாகரத்து" என்ற சட்டம் எவ்வளவு அவசியமாய் இருக்கிறது என்பதை விஸ்தரித்து எழுதியிருக்கிறார்.

"விவாகரத்து" என்ற சட்டம் மிக்க அவசியமானதே என்றும் அதைத் தாங்கள் ஒருவித கெட்ட எண்ணத்துடனும் வேண்டுமென்று சொல்லவில்லையென்றும், அதற்காகத் தம் சகோதரிகள் தங்களிடம் சினம் கொள்ள வேண்டாமென்றும், ஸ்திரீகளுக்கு சரீர சுத்தம் எவ்வளவு முதன்மையானதோ அவ்விதமே ஆடவர்களுக்கும் அது வெகு முக்கியமானது என்றும், பெண்கள் பெற்றோரின் அறியாமையால் அன்பில்லாக் கணவர்பால் விவாகம் செய்விக்கப்பட்டுத் தப்பவழியின்றி மிகுந்த வருத்தத்திற்கும் கஷ்டத்திற்கும் ஆளாகின்றமையால் அவ்வித இடுக்கண்களிலிருந்து விடுதலை அடைய இது ஓர் முக்கிய சாதனமாகும் என்றும் கூறியுள்ளார். மேலும் இந்நாட்டில் ஸ்திரீகள் கௌரவத்துடன் நடத்தப்படுகிறார்கள் என்பது மாசுபடிந்த பழைய புராணங்களிலிருந்து வெளியாகிறதே ஒழிய அனுபவத்தில் நடை பெறுவதாய்த் தெரியவில்லை. புராணங்களைப் படித்த பண்டிதர்கள் கிளிக்குப் பேசக் கற்றுவைப்பது போல் தாங்கள் சொல்லும் சுலோகங்களுக்குத் தாத்பரியங்கூடத் தெரிந்து கொள்ளாமல் கூறிக் கொண்டிருக்கிறார்கள் என்றும் எழுதியிருக்கிறார். "எட்டு சுரைக்காய் கறிக்குதவுமா" எனவும், சீதைக்குகந்த ராமனும், ராமனுக்கு உற்ற சீதையும் இருந்த காலம் இதுவல்ல; ஆதலால் அவர்கள் சரித்திரங்களை உதாரணமாய்க் கொள்வது அசாத்தியம் என்பதும் தான் தற்காலம் பலரின் அபிப்பிராயம். எவ்விதமிருப்பினும் கொஞ்ச காலமாய் நம் சகோதரிகளின் வாழ்நாட்களின் இன்பம் அதிகரித்துக் கொண்டு தான் வருகிறது. தாராளமாய்ப் பள்ளியில் சேர்ந்து படிப்பதும், கணவனுடன் வெளியே தடையில்லாமல் சென்றுவருவதும் சாதாரணமாய் எங்கும் நடந்துவருகிறது. சாலக்கிரமத்தில் நமக்குச் சுதந்திரம் அதிகமாகிக் கொண்டிருக்க நாம் "விவாகரத்து" என்ற சட்டத்தை விரும்ப வேண்டிய அவசரமொன்றுமே இல்லை.' எந்த நாட்டிலும், எந்த மதத்திலும் ஒற்றுமையில்லாத தம்பதிகள் சிலர் இருப்பார்கள் என்பது

திண்ணம். பெண்கள் பி. ஏ. பாஸ் செய்வதாலும், நூதன சட்டங்கள் ஏற்படுவதாலும் இல்லற வாழ்க்கை மேன்மை அடைந்துவிடுமா?

உலகில் எவ்வித உறவினர்களாய் இருப்பினும், சில சமயங்களில் சண்டைசச்சரவும் பகைமையும் ஏற்படுவதுண்டு. தகப்பனும் பிள்ளையுமாயினும் இருவர் மனமும் எப்பொழுதும் ஒத்துப்போகின்றதா? தாயும் பிள்ளையுமானாலும் பல விடங்களில் தீராப் பகை கொண்டு முகதரிசனமும் இல்லாமல் இருப்பதை நாம் கண்கூடாய்க் காணலாம். அதற்காகத் தாய் 'என் மகன் இல்லை' என்றும், பிள்ளை 'என் தாய் இல்லை' என்றும் கூறமுடிமா? கணவன் மனைவிக்கு ஒருவருக்கொருவர் மனவேறுபாடு நேருங் காலத்தில் கணவன் 'என் மனைவியில்லை' யென்றும், மனைவி 'என் கணவன் யில்லை' யென்றும் சட்டத்தின் உதவியால் விடுதலை அடைய முடியுமா?

மேல் நாட்டில் ரோமன் காதலிக் (Roman Catholic) என்ற வகுப்பினர்களுக்கு "விவாகரத்து" என்ற சட்டம் கிடையாது. அவர்கள் தெய்வமான கிறிஸ்துவும் (Christ) அதை ஒப்பினதாக அவர்கள் வேதத்தில் கூறப்படவில்லை. கடவுள் சேர்த்திருக்கும் ஓர் தம்பதியை மனிதன் பிரிக்க இயலாது என்பது தான் அவர்கள் திடமான கொள்கை ("Whom God hath joined man cannot put asunder"). நாம் செய்து கொள்ளும் பிரமாணங்கள் தவறக்கூடியவை அல்லவென்று நம்பியே அக்கினியின் முன்பு விவாகம் செய்து கொள்ளுகிறோம். ஒரு போதும் சிநேகம் தவறாமல் இருப்பதற்காக ஸ்ரீராமனும் சுக்கிரீவனோடு அக்கினியை வளர்த்து அதன் முன்பு பிரமாணம் செய்து கொண்டார் என்று நாம் கேட்டிருக்கிறோம். அப்படிச் செய்த சிறந்ததோர் ஒப்பந்தத்தைத் தவறவிடுவது எங்ஙனம்?

இவ்விதமே ஆடவர்களையும் அந்த ஒப்பந்தம் பாதிக்கவில்லையா என்ற கேள்வி அவசியமாயினை கேட்கத் தகுந்ததே. அவர்கள் அதை அலட்சியம் செய்து தங்கள் மனம்போல் நடப்பதும், மனைவியைத் தள்ளி வேறு விவாகம் இஷ்டம் போல் செய்துகொள்வதும் மிகவும் விசனிக்கத் தக்கதே. (சிறிது காலமாய் அந்திய வழக்கமும் குறைந்து கொண்டுதான் வருகிறது). பெண்களைத் தள்ளி விவாகம் செய்து கொள்ளும் புருஷனுக்குப் பெண் கொடுக்க சம்மதிக்கும் பெற்றோரின் அறியாமையை அல்லவா நாம் குறை கூறவேண்டும்! இவர்கள் பெண் கொடுக்க மறுப்பாராயின் அவன் எப்படி மறு விவாகம் செய்து கொள்வது?

ஆடவர்கள் தர்மம் தவறி நடந்தால் நாமும் தவறி நடக்க வேண்டுவதுண்டோ. நம் சிநேகிதி ஒருவள் கொலைக்குற்றம் புரிந்தாள் என்றால் அதற்காக நாமும் கொலை செய்ய விரும்ப முடியுமா? புருஷர்களும் தக்க காரணமன்றி இரண்டாம் விவாகம் செய்து கொள்ளக் கூடாது என்ற சட்டம் வேண்டுமாயின் அதிகாரிகள் ஏற்படுத்தலாம்.

மனதினால் சத்தியவானைக் கணவனாய் வரித்ததற்காக அவன் மிக்க அற்ப ஆயுள் உள்ளவனென்று அறிந்தும் சாவித்திரி வேறு கணவனை மணக்க மறுத்து தர்மராஜனையும் தன் கற்பின் மகிமையால் வென்று சத்தியவானை உயிர்ப்பித்தது நம் நாட்டிற்கு எவ்வளவு பெருமை அளிப்பதாய் இருக்கின்றது!

சிலர் கணவனால் அதிகம் துன்பப்படுகிறார்கள் என்பது மிகவும் உண்மையே. அதற்கு முக்கிய காரணம் மாமி என்னும் ஓர் கொடிய நோயே. புதிதாய் விவாகம் செய்து கொண்டதன் மகனிடத்தில் சில தாய்மார்கள் எவ்வளவோ குறைகள் சொல்லுகிறார்கள்! பலவிதமாய்ப் பெண் வீட்டாரையும், மருமகளையும் அவன் முன்பு குறைகூறி மனைவிபால் புதிதாகத் தோன்றும் அன்பென்னும் மொட்டைப் புஷ்பிக்காவண்ணம் பரித்து விடுகிறார்கள். மருமகள் படிப்பிற்குத் தடையாய் இருப்பது மாமியே அல்லது கணவன் அல்ல. படிப்பினால் மிகுந்த துணிச்சல் உண்டாகுமென்றும் கணவனின் பெற்றோரையும் சகோதர சகோதரிகளையும் அலட்சியம் செய்து நடப்பாள் என்றும், வீட்டு வேலைகளைக் கவனிக்காமல் புத்தகமும் கையுமாய் இருந்து வருவாளென்றும் விவாகமானதும் படிப்பிற்குத் தடை செய்துவிடுகிறார்கள். தாய்க்கு அஞ்சி, சில பிள்ளைகள் மனைவியிடம் வெறுப்புடன் நடந்து கொள்ளுகிறார்கள். மருமகள் தன் தாய் வீட்டிலிருந்து மாமியின் மனங் களிக்க வரிசைகள் கொண்டு வரவில்லையென்று மகனுக்கு வேறு விவாகம் செய்து வைக்கப் பிரயாசைப்படுகிறார்கள். நம்மைப் போன்ற ஓர் பெண்ணின் இன்ப வாழ்க்கையைத் துன்பமாய்ச் செய்கிறோமேயென்று அவர்கள் கலங்குவதில்லை. இந்த மாமி என்னும் பட்டப்பெயர் பெற்ற இனத்தார் நம்மைப் போன்ற ஸ்திரீகளும் சகோதரிகளுமே அல்லாது வேறு இனத்தைச் சேர்ந்தவர்களா? ஆகவே இது விஷயமாய் ஆடவர்களைக் குறை கூறுவதற்கிடமில்லை.

மருமகளைக் கொண்டாடி அவள் புதிய வாழ்க்கையை இன்பமாய்ச் செய்வது தங்கள் முதற் கடமை என்று கொண்டு ஒவ்வொரு மாமியும் ஒழுகவேண்டும். மனைவி இருக்க வேறு விவாகம் செய்துகொள்ளக் கூடாதென்றும் ஒரு கால் தக்க காரணம் ஏற்பட்டால் முதல் மனைவியின் காலட்சேபத்திற்குத் தக்க சொத்து அளிக்க வேண்டும் என்றும், நாம் சட்டங்கள் கொண்டு வரவேண்டியது மிக்க அவசியமானது. மருமகளைத் தன் மகள்போல் நடத்த வேண்டுமென்றும் தாய் நினைத்தல் முக்கியம்.

சமானப் படிப்பினால் சந்தோஷ வாழ்க்கை ஏற்படுமென்பது சிலர் கொள்கை. சுதந்திர விவாகத்தினால் மேல் நாட்டு ஸ்திரீகள் நம்மைவிடச் சந்தோஷமாய் இருப்பதாய்ச் சிலர் எண்ணுகிறார்கள். அவ்வித விவாகங்களிலும் இடையூறு பல உண்டாகி அவர்களிற் பலர் விவாகரத்து செய்து கொள்ளக் கோர்ட்டுக்குப் போவதை நாம் பத்திரிகையில் தினம் வாசிக்கிறோம். இதர வியாச்சியங்களை விட இவைகளே அதிகமாய் இருக்கின்றனவாம். கல்வியும் செல்வமும் அற்ற ஜனஜாதியார் எவ்வளவு பெயர் மனமொத்த வாழ்க்கை வாழ்கின்றனர்! தெருவில் வேலை செய்யும் உப்புரவ ஜாதியாரைப் பார்க்கின் கணவன், மனைவி இருவருக்கும் இருக்கும் அன்பு நன்கு விளங்குகிறது. அவர்கள் வெகு சரசசல்லாபத்துடன் விளையாடிக் களிக்கின்றனர். சந்தோஷத்திற்கு ஒருவித அளவும் குணமும் ஏற்படுத்தமுடியாது. அது ஒவ்வொருவராலும் அவர்கள் தன்மைபோல் உண்டாக்கவும் அழிக்கவும் கூடியவை. பிரும்ம சிருஷ்டியைப் போல் அது மனித சிருஷ்டியைச் சேர்ந்தது. வீட்டிலேயே இருக்கும் ஒரு பெண்ணைப் பார்த்துத் துன்பப்படுவதாயும் வெளியில் சதா வண்டியில் சென்று வருபவளைச் சந்தோஷமாய் இருப்பதாயும் நாம் எண்ண முடியுமா? தன்னைவிடத் தன் கணவனைத் தெரிந்தவனாயும், பெரியவனாயும் எண்ணினாலொழியச் சேர்ந்து வாழ்தல் முடியாத காரியம். அரசாங்கத்தில் ஒவ்வொரு இலாகாவிற்கும் ஒவ்வொருவரைத் தலைமையாய் ஏற்படுத்தி அவர்கள் கீழ் பலர் உழைக்க தேசத்தை ஆண்டு வருவதைப் போல இல்லற அரசாட்சியிலும் கணவனைத் தலைவனாய்க் கொண்டு அவன் பொருள் தேடுவதற்கும், மனைவி அதைச் சிக்கனமாய்ச் செலவழித்துக் குடும்பத்தை நிர்வாகம் செய்வதிற்கும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்கள். இவ்வித தர்மத்தைக் கடைப்பிடித்து நடந்து வரு

வோமாயின் இல்லற வாழ்க்கையின் இன்பம் ஒருபோதும் குறைவுபடாது.

இல்லறத்திற்கு உற்ற படிப்பே பெண்களுக்கு அவசியமானது. கல்லூரியில் சேர்ந்து ஆங்கிலதேச சரித்திரத்தில் ரிச்சர்டு அரசனைப்பற்றியும், ஆலிவர் கிராம்வெல் முதலிய மற்றுமுள்ள அரசர்களின் அரசாட்சியைப்பற்றியும் படித்துப் பரீட்சைக் கொடுப்பதும் ஷேக்ஸ்பியர் மகாகவியின் நாடகங்களைப் படித்துத்தலைகீழாய் மனப்பாடம் செய்வதும் மேலான படிப்பென்றும் அது நம் பெண்களுக்கு அவசியமானவை என்றும் தோன்றவில்லை. இவ்வளவும் கற்ற புருஷர்கள் மேன்மையாய் நடக்கவில்லை என்று தானே நாம் குறை கூறுகிறோம். ஸ்திரீகளைவிட ஆடவர்கள் பலத்திலும் கஷ்டங்களைப் பொருப்பதிலும் தீர்க்கமாய் ஆலோசனை செய்து நடப்பதிலும் மேம்பட்டவர்களே. பெண்கள் எவ்வளவு தான் படித்திருப்பினும் காரணம் அற்றப் பிடிவாதங்களும் பேராசையும் அற்ப பொருமைக் குணங்களும் அவர்கள் உடன் பிறந்தவை. இதற்கு உதாரணமாய் இங்கிலாந்து தேசத்தை ஆண்டுவந்த "ராணி எலிஸபெத்" அம்மையாரின் அரசாட்சியைக் கூறலாம். இக்குணங்கள் சீதை, திரௌபதி முதலிய சிறந்த உத்தமிகளிடத்திலும் சிலவிடங்களில் வெளியாகி அதனால் அவர்கள் அடைந்த துன்பங்களையும் நாம் கேட்டிருக்கிறோம். ஆதலால் குடும்ப நிர்வாகத்தில் தலைவர்களாய்ப் புருஷர்களையும் அவர்கள் கீழ் ஸ்திரீகளையும் எல்லாமறிந்த கடவுள் அமைத்திருக்கிறார். வெகுகாலமாய் அநுசரித்து வந்த கொள்கைகளை மாற்றி நாம் வேறு கொள்கைகளை ஏற்று நடப்பது நமது க்ஷேமத்தின் விருத்திக்குத் தடையே ஆகும். நமக்கிருக்கும் சிறந்த அறிவு நம் முன்னோர்களுக்கும் இருந்திருக்குமல்லவா? அவர்கள் மூடர்கள் என்றும் நாம் ஆடவர்களைப் போல் எல்லா உரிமைகளும் பெற்றால் இன்பவாழ்க்கை அடையலாமென்று சபைகூட்டித் தீர்மானிப்பதும் பூனையை எதிர்க்க எலிகள் கூடிய சபைபோல் தோன்றுகிறது.

நமது தேசம் ஒருவிதத்திலும் அயல் நாடுகளைப் பார்த்துக் கற்றுக்கொள்ள வேண்டிய நிலைமையில் இல்லை. பண்டைகாலம் தொட்டு மேன்மையுடனேயே விளங்கிவருகிறது. கல்கத்தா ஜட்ஜாக விருந்த (Justice Woodroffe) வுட்ராப் என்னும் ஆங்கிலேயர் அவர் இந்தியாவைப்பற்றி எழுதிய ஓர் புத்தகத்தில் பிறநாட்டைப் போல் ஒரு காலத்தில் மங்கியும் ஒரு காலத்தில் சிறப்புற்றும் இல்லாமல் மேன்மையுடனேயே இந்திய நாடு விளங்குவதற்கு அவர்கள் மாறாக் கொள்கைகளும் ஆசாரமுமே காரணமாய் இருக்கவேண்டுமென்று புகழ்ந்து கூறியிருக்கிறார். "விவாகரத்து" என்ற சட்டம் ஒரு நாட்டிற்கு நன்மை பயப்பது அல்ல. நமக்கும் இது மிகக் கேடு விளைவிக்கக் கூடியதே. நவீன நாகரிகத்தின் பயனாய் இப்புதிய எண்ணங்கள் நம்மைப்பிடித்து ஆட்ட ஆரம்பித்திருக்கின்றன. கரையை மீறாத கடல் பார்ப்பதற்கு எவ்வளவு ரம்மியமாய் இருக்கிறது? அது கரைமீறுவது என்றால் நம் கதி என்னவாகும்! அதுபோல் அளவு கடந்து செல்லாத நம் சகோதரிகள் ஒவ்வொரு குடும்பத்திற்கும் விளக்குகள் போல் இருந்து வருகிறார்கள். அவர்கள் பெருமைக்கு மாசு செய்வது மிகுந்த பாபமும் அபசாரமும் ஆகும். உலகில் உள்ள செல்வங்களில் ஸ்திரீகளும் ஓர் செல்வமாகக் கருதப்படுவதால் அவர்கள் பிறர் பாதுகாப்பில் இருக்கவேண்டியவர்களே. முழுவதும் சுதந்திரம் அடைவது நன்மை தராது.

விவாக சம்மத வயதை உயர்த்தியதைப்பற்றி நம்முள் பலர் சுவர்க்கலோகத்திற்கு ஓர் கதவு திறக்கப்பட்டது போல் எண்ணிக் களிக்கின்றனர். தடுத்துக் கூறுபவர்களை இகழ்ச்சி செய்கின்றனர். பால்ய விவாகத்தினால் பல துன்பங்

களுக்கு ஆளாகிறோமென்றும் அதை நிறுத்துவதால் நன்மைகள் பல உண்டாகுமென்றும் கருதுகிறோம். இதனால் ஏற்படும் பொருட்செலவும், துன்பமும் பின்பு அனுபவிக்கத் தெரியவரும்.

தினசரிப் பத்திரிகை ஒன்றில் இங்கிலாந்து முதல் நியாயாதிபதியின் முன்பு பெண் விவாகத்திற்கு உரித்தாய் இருக்கிறாள் (coming of age) என்பதை அறிவிக்கப் பெற்றோர் கொடுத்த விருந்தைப் பற்றி ஓர் கேஸ் கொண்டுவரப்பட்டது. பெண்ணின் தாயார் ஓர் விருந்து வைத்துப் பல சீமான்களை வரவேற்க அவர்களுக்கு அளித்த விருந்திற்கும் ஆடல் பாடல்கள் விஷயமாயும் 690 பவுன் செலவாயிற்றாம். இவ்வளவு தொகையைக் கொடுக்கத் தகப்பன் மறுத்ததும் சாமான்கள் அளித்த ஹோட்டல்காரன் தனக்குச் சேரவேண்டிய தொகைக்காக இவர்களின் மேல் கோர்ட்டில் ஓர் பிராது கொடுத்தானாம். இக்கேசை விசாரித்த நியாயாதிபதி விவாகத்துக்குப் பெண் இருப்பதை வெளிப்படுத்த இவ்வளவு தொகை செலவழியுமானால் பெற்றோருக்கு இது பெருத்த கவலைக்கு இடமானதே என்று சொன்னாராம். இந்தத் தொகையைக் கொண்டு விவாகத்தையே விமரிசையாய் நடத்திவிடலாம். இவ்விதம் செலவழித்தும் சில பெண்கள் கணவர்கள் கிடைக்காமல் கன்னிகைகளாகக் காலங்கழிக்க நேருவதை நாமும் காண்கிறோம். அவ்விதமின்றி நம் நாட்டில் தாய்தந்தையர் அற்ற அநாதைச் சிறுமிகளையும் உறவினர்கள் தம் கடமையாகக் கொண்டு மணம் செய்வித்து மானமாய்க் காலங்கழிக்க ஏற்பாடு செய்துவருகிறார்கள். அவையாவும் இனிநடைபெறா. நம் தேசத்திலும் பல கன்னிகாமடங்கள் கட்டவேண்டிவரும். இதனால் பெற்றோர் பொறுப்பு அதிகப்படுமே ஒழிய குறையப் போவதில்லை. நம் வீட்டுப் பெண்கள் அயல் வீடு சென்று வாழ அயல் வீட்டுப் பெண்கள் நமது மகனை மணந்து நம் வீட்டில் வந்து வாழக் குடும்பம் நடைபெற்று வந்தது. இனிமேல் நமது பெண்களுக்கு விவாகம் ஆகும் வரையில் பிள்ளைகளும் கலியாணம் செய்து கொள்ளாமல் இருந்தால் தான் குடும்ப நிர்வாகம் சரிவர நடைபெறும். இல்லையேல் இருவீட்டுப் பெண்களுக்கும் இடையே உண்டாகும் பகைமையும் பொறாமையும் அதிகரித்துப் பல துன்பங்கள் குடும்பத்தை தாக்குவதாகும். தம்பதிகளுக்குள் அன்பு பூரணமாய் இருக்குமாயின் எந்த மதத்தினராயினும் எவ்விதக் கொள்கைகள் உடையவர்களாயினும் இன்ப வாழ்க்கை நடைபெறுவதற்கு யாது தடை?

"விவாகரத்து" என்ற சட்டத்தின் உதவியால் மனைவியும் வேண்டுமாயின் மறு விவாகம் செய்து கொள்ளலாம் என்ற உரிமை ஒன்றே நாம் அடையப் போகும் பயனாகும். ஆடவர்களை விட ஸ்திரீகள் மானத்தைப் பெரிதென்று கருதுபவர்கள். நாணமும் நிர்மலவாழ்க்கையும் நம்முடன் உடன் பிறந்தவை. ஆதலால் இருமுறை விவாகம் செய்து இல்லறத்தை நடத்துவது மிகவும் வெட்கம். இப்புதிய கிளர்ச்சியின் விஷயமாய் நம் சகோதரிகள் ஒவ்வொருவரும் முன் வந்து நன்கு ஆலோசித்துத் தீர்மானம் செய்வார்கள் என்று நம்புகிறேன். கடவுள் படைத்திருக்கும் ஒவ்வொரு வஸ்துக்களிலும் நல்லது, கெட்டது கலந்துதான் இருக்கிறது. முழுவதும் நல்லதாகவே செய்ய மானிடரான நம்மால் இயலுமோ?

சகோதர வாஞ்சை.

(ஸ்ரீமான் ரவீந்திரபாரதி.)

ஓர் ஊரில் அனந்த கிருஷ்ண ஐயங்கார் என்ற பெயருடைய கிரகஸ்தர் ஒருவர் இருந்தார். அவர் ஈசுவரபக்தியுடையவர், நல்ல ஞானவான், பொறுமையாளர், எல்லாம் பகவான் செயல் என்ற சிந்தனையுடையவர். அவர் எந்த விசேஷ சம்பவங்களுக்கும் யார் வீட்டிற்கும் போகத் தவறமாட்டார். அவ்வூரில் அவரைத் தெரியாதவர்கள் இல்லை. சுவாமி கோவிலுக்குப் போக ஒரு நாளும் தவறமாட்டார். ஊரிலுள்ள வழக்குகளைத் தீர்த்து விடுவதில் மகா சமர்த்தர். உபாயமாயிருந்த சில நஞ்சை நிலங்களின் சொற்ப வரும்படியும் வழக்குகள், பஞ்சாயத்துகள், பிரைவேட் குமாஸ்தா வியாபாரங்கள் முதலியவற்றிலிருந்து அப்போதைக்கப்போது கிடைக்கும் துட்டு துக்காணிகளையும் கொண்டு தன் குடும்பத்தின் காலட்சேபத்தை அப்படியும் இப்படியுமாய்க் கழித்து வந்தார்.

அவருடைய மனைவியின் பெயர் ருக்மணி. அவள் குணபூஷணி, தெய்வபக்தியுடையவள். எந்நேரமும் பிறர்க்குபகாரம் செய்வதில் கண்ணுங் கருத்துமாயிருப்பவள். ஏழைகளுக்கு அன்னம் தாராளமாய் இடுபவள். அவள் இரட்டைக் குழந்தைகளைப் பெற்று திடீரென்று வானுலகடைந்தாள். அதனால் கிருஷ்ண ஐயங்காருக்குண்டான வருத்தம் அப்படியிப்படியல்ல. என் செய்வார் பாபம்! இரண்டாமுறை அவருக்கு விவாகம் நடந்தேறியது. அவருடைய இரண்டாவது தாரம் நல்ல குணவதியாய் வாய்த்துவிட்டாள். அது எவ்வளவு ஆபூர்வமானது பாருங்கள். அவள் தன் மூத்தாளின் குழந்தைகளைத் தன் குழந்தைகளாகவே பாவித்து நடந்தாள். அக்குழந்தைகளைப் பற்றிய கவலை கிருஷ்ண ஐயங்காருக்குச் சிறிதும் உண்டாகாதபடி அவள் அதிக பத்திரமாய்ப் பேணிவந்தாள். கிருஷ்ண ஐயங்கார் ஒரு குழந்தைக்கு இராமன் என்றும் மற்றொரு குழந்தைக்கு லட்சுமணன் என்றும் நாமகரணம் சூட்டினார். குழந்தைகள் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தன. இரண்டாவது தாரம் தன் குழந்தைகளை அவ்வளவு அருமையாய் வளர்த்து வந்ததைப்பற்றி அவள் மேல் அதிகமான திருப்தி கிருஷ்ண ஐயங்காருக்கு. அவளையே அக்குழந்தைகள் அம்மா! என்று அழைத்தும் அம்மா என்று நினைத்தும் வந்தன. அவளும் பெற்ற தாயினும் அதிக அன்பு பாராட்டி வந்தாள். வயது வந்தபிறகுதான் தங்கள் தாய் தங்களைச் சின்னஞ் சிறு வயதிலேயே விட்டு விட்டுச் செத்துப் போய் விட்டாள் என்று அறிந்தார்கள்.

அனந்தகிருஷ்ண ஐயங்கார் தம் கஷ்டத்தோடு கஷ்டமாய்க் குழந்தைகள் இருவரையும் கல்வி பயில வைத்தார். குழந்தைகள் மகா தீட்சணியமுள்ள புத்திசாலிகள். அவர்கள் வகுப்புதோறும் பரிசுகள், வெகுமதிகள் பெற்று 'நம்முடைய அனந்த கிருஷ்ண ஐயங்கார் பிள்ளைகள்' என்று நாலு பேர் மெச்சும்படியாய்ச் செவ்வனே வாசித்து வந்தார்கள். அவர்கள் அந்த ராம லட்சுமணர் எவ்வாறு இணைபிரியாமலிருந்தார்களோ அவ்விதமே என்றும் இணைபிரியாமலே சாப்பிடும் போதாயினுஞ்சரி, விளையாடும் போதாயினுஞ்சரி, படிக்கும் போதாயினுஞ்சரி, நித்திரைபோகும்போதாயினுஞ்சரி எப்பொழுதும் ஒன்றாகவேயிருந்தார்கள்.

190387

ராமன் லட்சுமணனைவிட நல்ல சிலாக்கியமான புத்திக் கூர்மையுடையவன். அவன் சகல பரீட்சைகளிலும் முறையாகவே தேறி எம். ஏ. பரீட்சையிலும் வெற்றிபடைந்து பட்டணத்தில் மாதம் 300 ரூபாய் சம்பளத்தில் அமர்ந்தான். ஆக அவன் பாடு சிறப்பாகவே முடிந்தது. ஆனால் அவன் தம்பி லட்சுமணனோ ஏதோ காலசாமான்யத்தினால் பி.ஏ. பரீட்சையில் மூன்று முறையும் தவறிவிடவே, மகா அபாக்கியசாலியாயினன். பி. ஏ. பரீட்சையில் தோதபடியால் நமது ராஜதானியில் உயர்ந்த உத்தியோகம் கிடைப்பது துர்லபமாய் முடிந்தது. பத்திரிகைகளை தினந்தோறும் வாசிப்பது அவனுக்கு வழக்கம் ஆதலால் ஒரு நாள் பத்திரிகையொன்றில் பஞ்சாப் மாகாணத்தில் உள்ள லாகூர் என்னுமிடத்தில் மாதம் ஒன்றிற்கு 100 ரூபாய் வரக்கூடிய வேலை ஒன்று காலியாயிருப்பதை உணர்ந்து, தான் மனு எழுதிப் போட்டால் ஒருகால் தனக்கு அவ்வேலை கிடைக்கும் என்று சிந்தித்தான். அவ்வாறே யாவும் செய்தான். வேலைக்கும் உத்தரவு வந்து விட்டது. ஆனால் இது நாள்வரை பிரிவாற்றாமையை அறியாத அச்சகோதரர்கள் ஒருவரையொருவர் பிரிய நேர்ந்தபோது உண்டான வருத்தத்திற்கு அளவேயில்லை.

ராமன் "அடே அப்பா! நீ லாகூர் போகவேண்டுமென்று சொல்லுகிறாயே. இப்பொழுது நாமிருவரும் பட்டணத்திலிருக்கிறோம். எனக்கு மாதம் 300 ரூபாய் சம்பளம் வருகிறது. நீ சௌக்கியமாய் என்னோடு வசித்து எனக்குச் சந்தோஷம் விளைப்பாய். அடே ராஜா! நீ வடக்கே தெற்கே யெல்லாம் போக வேண்டாம்" என்றான்.

இவ்விதமாகவும் வேறு பலவிதமாகவும் ராமன் எவ்வளவோ சொல்லியும் லட்சுமணன் கேளாமல் லாகூர் அலுவலை ஒப்புக்கொண்டு அண்ணனிடம் விடை பெற்றுக் கொண்டு லாகூர் போய்ச்சேர்ந்தான்.

இராமன் தன் தம்பி லாகூர் போன 2 மாதங்கள் வரை பித்துப்பிடித்தவன் போல இருந்தான். "ஐயோ! நான் எவ்வளவோ சொல்லியும் என் தம்பி கேட்கவில்லையே. நான் என்ன செய்வேன்?" என்று ஏங்கினான். சகோதர வாஞ்சை மேலீட்டினால் இராமன் தன் தம்பியை லாகூரை விட்டுவிட்டுப் பட்டணத்திற்கே வந்துவிடும்படி எவ்வளவோ காகிதங்கள் எழுதினான்.

இராமனுக்கு லட்சுமணன் மேல் எவ்வளவு பிரியம் உண்டோ அதைவிட லட்சுமணனுக்கு அண்ணன்மேல் உண்டு. என்றாலும் தான் பி. ஏ. பரீட்சையில் மும்முறை தவறி விட்டபடியால் ஒருவர் கண்ணிலும் விழியாமல் தேசாந்திரியாய்ச் சில வருஷங்கள் வரை திரியவேண்டும் என்ற வைராக்கியம் அவனுக்கேற்பட்டபடியால் தெற்கே வர மறுத்துவிட்டான்.

"லாகூர் தூரப்பிரதேச மாச்சே. என்ன அநியாயம். பிள்ளையாண்டானைப் படிக்க வைத்ததே பிசகு. ஐயோ! இப்படித் தெரிந்தால் நான் அவனைப் படிக்கவைத்தே யிருக்கமாட்டேனே" என்று முணு முணுத்து வந்தார் கிருஷ்ண ஐயங்கார். இராமன் மாதா மாதம் தன் தகப்பனாருக்கும் மாற்றாந் தாய்க்கும் செலவிற்காக 50 ரூபாய் மணியார்டர் செய்து வந்தான். அவர்கள் இருவரையும் பட்டணத்தில் தன்னுடன் வந்து வசிக்கும்படியாக எவ்வளவோ வேண்டியும் அவர்கள் "அப்பப்பா! பட்டணத்தில் யார் வந்து வசிப்பார்கள்! மூச்சுவிட இடம் கிடையாது. அந்த ஊரில் நாங்கள் வந்து வசிக்கவேமாட்டோம். என்ன கருமம். கோபாலகிருஷ்ணா! இராமச்சந்திரா! ஒருவன் பட்டணம். அவனுடைய தேவையில்லை. மற்றொருவன் லாகூர். நாங்கள் என்ன பண்ணு

வோம். மாதம் 50 ரூபாய் இராமன் அனுப்புகிறான். என்ன செய்ய? நம் ஊரில் 25 ரூபாய் அலுவல் கிடைத்தாலும் போதும். என்ன அப்பா! பட்டணம், பட்டணம் என்று பையன் சாகிறான். இங்குவந்தால் அவருக்கு நேரம் போகவில்லையாம். துரைமசனாய்ப் போய் விட்டார். அவர் லாகூருக்கே போய்விட்டார். ஒருவர் ஆயிரமைல் தூரம் என்கிறார். இன்னொருவர் இரண்டாயிரமைல் தூரம் என்கிறார். நாம் எதைக் கண்டோம்?" என்று வருந்திக் காலங்கழித்து வந்தார்கள். திடீரென்று கிருஷ்ண ஐயங்கார் தவறிப்போய் விட்டார், அவர் வானுலகடைந்த செய்தி லாகூருக்கு எட்டுவதற்கே ஒரு வாரம் ஆய்விட்டது. இராமனே வந்து தகப்பனாருக்குச் சகல விதமான கைங்கரியங்களும் செய்து விட்டுப் போனான். லட்சுமணன் வருவதற்கும் பத்து நாளாய் விட்டது. பிறகு பந்துக்கள் யாவரும் சேர்ந்து சகோதரர்களிடத்தில் "நீங்கள் பட்டணத்திலும் லாகூரிலும் இருந்தால் காரியங்கள் எப்படி நடைபெறும்? இராமன் பட்டணத்திலிருப்பது சரிதான். ஆனால் லட்சுமணன் லாகூரிலிருப்பது சரியல்ல. ரூபாய் 500 கொட்டி எண்ணினாலும் இனி அவன் லாகூருக்குப் போவது உசிதமல்ல. இவ்விடத்தில் அல்லது பட்டணத்தில் ஏதாவது அலுவல் பார்த்துக் கொண்டு கூடிய சுகம் என்றிருக்க வேண்டியது தான் கிரமம்" என்றார்கள். லட்சுமணன் இனி லாகூருக்குப் போவது உசிதமல்ல என்று இராமனும் வற்புறுத்திச் சொன்னான்.

"என்ன ஊர் என்கிறேன். மாதம் ரூபாய் 100 வருகிறது. பி. ஏ. பரீட்சையில் தவறி விட்ட அவமானத்தோடு இவ்விடங்களில் வசிப்பதை விட லாகூரில் அலுவல் பார்த்து வருவது மேன்மை" என்று லட்சுமணன் எண்ணிக் கொண்டு "சரி, சரி. அப்படியே செய்கிறது" என்று தனக்குப் புத்திமதி கூறினவரிடம் வார்த்தைகளைச் சுருக்கி விட்டான்.

லட்சுமணன் ஒருவருமறியாமலே தன் மனைவிமக்களை அழைத்துக் கொண்டு லாகூர் போய்ச் சேர்ந்தான். இராமன் மனைவி குழந்தைகளோடு பட்டணம் போகும்போது பந்துக்களை நோக்கி "லட்சுமணன் திருநெல்வேலி போய்த் திரும்பியதும் அவனைத் தடுத்து லாகூர் போக வொட்டாமற் செய்வது உங்கள் பொறுப்பு" என்று சொல்லி விட்டுப் பட்டணம் போய்ச் சேர்ந்தான். அவனிடம் "அண்ணா! திருநெல்வேலி போய் வருகிறேன்" என்று விடை பெற்றுக் கொண்டு, மனைவிமக்களையும் அழைத்துக் கொண்டு லட்சுமணன் லாகூருக்கே போய் விட்டான். இவ்வுண்மை இராமனுக்குத் தெரியாது.

ஒவ்வொரு நாளும் சென்னைப்பட்டணத்து எழும்பூர் ஸ்டேஷனில் இராமன் வந்து தம்பி வருகிறானா வருகிறானா என்று பார்த்தான். முடிவில் லாகூரிலிருந்து கடிதம் வரவே உண்மை தெரிந்து இராமன் மிகவும் வருந்தினான். "என்ன மூடனா! நாம் போகவேண்டாமென்று எவ்வளவோ சொல்லியும் கேளாமல், பந்துக்கள் தடுத்தும் நிற்காமல் லாகூரே போய்ச் சேர்ந்து விட்டானே. அடபாபமே" என்று புலம்பினான் இராமன்.

இவ்வாறு சில வருஷங்கள் கழிந்தன. பிறகு ஒரு நாள் இராமன் ஒரு தந்தியைக் கையில் வைத்துக் கொண்டு "ஐயோ, லட்சுமணா, அருமை லட்சுமணா! என் தலைமேல் இடியை இடித்து விட்டாயே. உன் மனைவி மக்கள் லாகூரிலிருந்து எப்படித் தத்தளித்துக் கலங்குகிறார்களோ. அடே அப்பா!" என்று புலம்பினான். அந்த வேளையில் அவன் மாற்றாந்தாயார் ஓடோடியும் வந்து 'லட்சுமணனுக்கு என்னடா செய்கிறது?' என்று அதிக ஆத்திர

மாய்க் கேட்டாள். "லட்சுமணன் அபாயமான ஸ்திதியில் சிக்காயிருக்கிறான்" என்று தந்தி என்று சொன்னது தான் தாமதம். இராமன் அப்படியே மூர்ச்சையாய்க் கீழே விழுந்து விட்டான். ஒரு பெரிய அழுகைக் குரலால் அவ்வீடு நிரம்பியது.

பிறகு இராமன் "சரி, நீங்கள் இங்கிருங்கள். இனி வருத்தப்பட்டாவதென்ன? என் தம்பியைப் போய்ப் பார்க்கிறேன். கொஞ்சம் நம்பிக்கையிருந்தாலும் இராப்பகலாய் விழித்துத் தக்க மருந்து கொடுத்து பகவானுடைய கிருபையினால் சொஸ்தமாக்கி விடுகிறேன். உயிர் இருந்தால் போதும்" என்று புலம்பிக் கொண்டு அவசரம் அவசரமாய் ஸ்டேஷனை நோக்கி ஓடினான். அவனுடைய மாற்றாந்தாய் "ஐயோ! செல்வக் குழந்தை லட்சுமணனுக்கு என்ன தீங்கு வந்து விட்டதோ? பகவானே! உனக்குக் கருணையில்லையா? அவன் அனாதை. அவன் மனைவி மிகவும் நல்லவளாச்சே. அவள் பாக்கியம் இப்படியா வந்து சேரவேண்டும்? ஐயோ! எனக்குத் தாங்க முடியவில்லையே" என்று ஒரு புறம் புலம்பிப் பரிதபிக்க, இராமனுடைய மனைவி சீதாலட்சுமி ஒரு புறம் "ஐயோ! குழந்தைகள் என்ன பாடு படுகிறதோ? தெய்வமே! திக்கற்றவர்க்குத் துணை நீதான். அம்மாளு என்ன பாடு படுகிறாளோ தெரியவில்லையே" என்று ஏங்கிக் கண்ணீர் வடித்து நின்றாள்.

இராமன் லாகூர் போய்ச் சேர்ந்தான். அவனைப் பார்க்கவேண்டுமென்ற பேரவாவினால் தான் லட்சுமணனுடைய உயிர் போகாமல் நின்றிருந்தது. இராமனைக் கண்டதும் லட்சுமணன் "அண்ணன் வந்து விட்டான். குழந்தைகள் யாவும் அவன் அடைக்கலம்" என்று கூறினான். அப்படியே உயிர் போய்விட்டது. இராமன் அடைந்த வருத்தம் அந்த ஊரின் சுற்றுப் பிரதேசத்து ஜனங்களின் மனங்களையும் உருக்கி அவர்கள் கண்கள் நீர் கொட்டும்படி செய்து விட்டது. ஐயோ, பாபம்! சகலவிதமான சடங்குகளும் லாகூரிலேயே நடைபெறச் செய்து விட்டு மிகுந்த மனவருத்தத்துடன் பித்தன்போல இரண்டொரு நாள் அலைந்தான் இராமன். பிறகு அம்மாளுவையும் குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு பட்டணம் வந்து சேர்ந்தான். ஐயோ! பட்டணத்தில் இராமன் வீடு அன்று பட்டபாடு யார்தான் எடுத்துரைக்க வல்லார்? அந்தோ! பாபம். அநியாயம்! அநியாயம்! அவ்விதமான கொடுமைகள் பல இவ்வுலகில் நடந்தேறியே வருகின்றன. சீதாலட்சுமி அம்மாளுவிற்குத் தேறுதல் சொல்லப் போவாள். தேறுதல் கூறப் போகிறவளுக்கே கண்ணீர் ஆறாய்ப் பெருகிவிடும். இராமன் ஒரு மாதம் வரை நன்றாய்ச் சாப்பிடுவது மில்லை, உடுத்திக் கொள்வது மில்லை, வருகிறவர் போகிறவர்களிடம் பேசுவதுமில்லை. பெரும் பித்தனாய் மாறி விட்டான். பிறகு மெள்ள மெள்ளச் சுயசித்தத்தை அடைந்தான். பிறகு அவன் அம்மாளுவிற்குத் தேறுதல் கூறி அவள் குழந்தைகளை மிகவும் அருமையாய் ஆதரித்து வர ஆரம்பித்தான். அவன் மனைவி சீதாலட்சுமியும் அம்மாளுவின் குழந்தைகள் மேல் அத்தியந்த அன்பு பாராட்ட ஆரம்பித்து விட்டாள். அம்மாளுவைத் தன் சொந்த சகோதரியாகவே அவள் பாவித்தாள். இராமன் அம்மாளுவின் குழந்தைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பினான். தன் குழந்தைகள் விஷயமாய் அவன் எடுத்துக்கொண்ட கவலையிலும் பத்துமடங்கு அதிக சிரத்தையும் கவலையும் அவனுக்குத் தானாகவே ஏற்பட்டு விட்டன. பள்ளிக்கூடத்தில் தன் குழந்தைகளை உபாத்தியாயர் அடித்தாலும் பொறுத்துக் கொள்வான். லட்சுமணன் பிள்ளைகளை உபாத்தியாயர் அடித்து

விட்டால் பொறுக்கமாட்டான் இராமன். ஒரு நாள் லட்சுமணன் குழந்தைகளைக் கண்டித்து விட்டதற்காக இராமன் அப்பள்ளிக்கூடத்துத் தலைமை உபாத்தியாயரோடு சண்டை போட ஆரம்பித்து விட்டான். அவ்வளவு வாஞ்சை இராமனுக்கு அக்குழந்தைகள் மேல். அக்குழந்தைகளுக்கும் இராமன்மேல் அவ்வளவு வாஞ்சை ஏற்பட்டு விட்டது. அக்குழந்தைகள் எப்பொழுதும் இராமன் பக்கத்திலேயே உட்கார்ந்து சாப்பிடும். நித்திரை செய்வதும் இராமன் தூங்கிவந்த அறையில் தான். எப்பொழுதும் இராமனுடனேயே இருந்து பழகி விட்டார்கள். இராமன் எப்பொழுதாவது அயலிடங்களுக்குச் செல்ல நேரிடுங்காலங்களில் அக்குழந்தைகள் அடைந்த மனவருத்தத்திற்களவில்லை. அதே பிரகாரம் அக்குழந்தைகள் மேல் சீதாலட்சுமியும் பிரியம் பாராட்டிவந்தாள். லட்சுமணனுடைய மூத்த பிள்ளைக்கு வயது ஏழு ஆயிற்று. அவன் தன் தகப்பன் உருவத்தை முற்றிலும் மறக்கவில்லை என்றாலும் அவன்கூட இராமனை "அப்பா! அப்பா!" என்று கூப்பிட ஆரம்பித்து விட்டான். அவன் பெயர் திருவேங்கடம். அவன் தம்பியின் பெயர் வேதாந்தம். அவன் தங்கையின் பெயர் ஜானகி. அந்த மூன்று குழந்தைகளும் இராமனையும் சீதாலட்சுமியையும் "அப்பா! அம்மா!" என்றே அழைத்து வந்தார்கள். முதல் முதல் அது அம்மாளுவிற்குச் சுபாவமாய்த் தோன்றியது. அவர்கள் ஒருவர்மேல் ஒருவருக்குள்ள பிரியத்தினால் அவ்வாறு கூப்பிடுகிறார்கள் என்று எண்ணினாள். ஆனால் தான் கூப்பிட்டால் 'என்ன' என்று கேட்பதற்குச் சற்று யோசித்து நிற்பதும், அதே சமயத்தில் சீதாலட்சுமி கூப்பிட்டால், தன் குழந்தைகள் ஓடோடியும் போவதைக் கவனித்தபோது, நம் அம்மாளுவிற்கு வருத்தம் உதிக்க ஆரம்பித்தது. முதலில் சீதாலட்சுமி தன் குழந்தைகளை அதிகமாய்க் கவனித்து வந்ததையும், தன்னை நேசித்து வந்ததையும் பற்றித் திருப்தியும் சந்தோஷமும் அடைந்து, தன் தலைத தன்னை விட்டிறந்து ஒதுக்கிக்கொண்டு வந்து விடும்படி பன்முறை கேட்டும் மறந்து விட்ட அம்மாளு இப்பொழுது சீதாலட்சுமியின் மேலும் இராமன் மேலும் துவேஷம்பாராட்ட ஆரம்பித்து விட்டாள். சீதாலட்சுமியும், அம்மாளுவும் சொந்த சகோதரிகள் போலவே நடந்து வந்ததைப்பற்றி மிகவும் அதிகமான திருப்தியடைந்து வந்த இராமன் இப்பொழுது அவர்களுக்குள் எங்கே மனஸ்தாபம் வந்து விடுமோ என்றெண்ணிப் பயப்படும் காலமும் வந்து விட்டது. அதை முதல் முதல் மனத்திற்குள் அடக்கியே வைத்திருந்தான். சீதாலட்சுமியும் அவனிடம் அதைப்பற்றி ஒன்றுமே சொல்லவில்லை. பிறகு ஒரு நாள் சதிபதிகளுக்குள் பின்வருமாறு சம்பாஷணை நடந்தது:

சீதா.:—என்ன! நாம் அம்மாளுவின் குழந்தைகள் மேல் அதிகப் பிரியம் பாராட்டுவது அவளுக்குப் பிடிக்கவில்லை. நம் குழந்தைகளைக்கூட நாம் கவனிக்காமல் அவள் குழந்தைகள்மேல் தான் பிரியம் செலுத்தி வந்தோம். அப்படி யிருந்தும் அம்மாளுக்கு மனதில் ஏதோ துவேஷம் உண்டாயிருக்கிறது.

இராமன்:—அது வேறொன்றுமல்ல, அவள் குழந்தைகள் அவளுக்கு மிகவும் அதிகமாய்க் கீழ்ப்படிந்து நடந்து வந்தன. ஆனால் இப்பொழுது நம்மேலிருக்கப்பட்ட அதிக விசுவாசத்தினாலும் பிரியத்தினாலும் இயற்கையாகவே அவள் சொல்லை புறக்கணிக்கின்றன. பாபம்! என்செய்வாள்?

சீதா.:—ஓகோ! தெரிந்தேன். நீங்கள் சொல்லுவது வாஸ்தவம். இப்பொழுது நான் கூப்பிட்டால் ஓடி வருகிறது குழந்தை. அவள்

கூப்பிட்டால் வரமாட்டேன் என்று சாதித்து விடுகிறது நாம் என்ன செய்யலாம்?

இராமன்:—நீ அவ்வுண்மையை என்னிடம் ஏன் இது நாளும் சொல்லவில்லை?

சீதா.:—நீங்கள் அறிந்தால் வருத்தப்படுவீர்கள் என்று தான்.

இராமன்:—வருத்தம் என்ன வருத்தம்?

சீதா.:—அத்தோடு அம்மாளு இப்பொழுது என்னிடம் வலிய வலிய சண்டைக்கு வழக்குத் தொடுக்கிறாள். நான் ஒன்றும் பதில் பேசவதேயில்லை.

இராமன்:—பாபம்! அவ்வளவும் நான் சொன்ன காரணத்தினால் தான். அதனால் வந்த மனஸ்தாபம் தான் இது. நாளை நான் அக்குழந்தைகளிடம் தங்கள் தாயாரை நன்கு மதிக்கும்படி புத்திமதி சொல்லுகிறேன். நீயும் சொல்லு.

சீதாலட்சுமியும் இராமனும் என்ன உபாயங்கள் செய்தும் பயன்படவில்லை. என்னென்னவிதமான புத்திமதிகளையும் நீதிகளையும் புகட்டினபோதிலும் குழந்தைகள் ஒரே சாதனையாய் "அம்மா நீ, அப்பா நீ தான்" என்று சாதிக்க ஆரம்பித்து விட்டார்கள். முதலில் இராமன் தன் தம்பியின் மனைவி அதைக் கேட்டால் வருத்தம் அடைவாள் என்றெண்ணி வருந்தினான். பிறகு அவன் குழந்தைகளுக்கு நம் மேல் அவ்வளவு பிரியம் என்று சொல்லி அக்குழந்தைகளுக்கு மூன்று முத்தம் கொடுத்து விட்டு வெளியே போய்விட்டான்.

சீதாலட்சுமி, அம்மாளு என்ற இருவர்களுடைய மனங்களிலும் எழுந்த புகைச்சல் பலத்து விட ஆரம்பித்துவிட்டது. பொழுது விடிய வேண்டியது தான். ஒன்று தெற்கே நோக்கினால் ஒன்று வடக்கு நோக்க ஆரம்பித்து விட்டது. அப்படிக் கீர் பூர் என்று மனஸ்தாபம் மூள ஆரம்பித்து விட்டது. அம்மாளு மனம் புண்ணாய் உலைய ஆரம்பித்து விட்டது. சீதாலட்சுமியின் மனம் மிகவும் நோவெடுக்கலாயிற்று. என்ன செய்வான் இராமன்! 'இருதலைக் கொள்ளி எறும்பு போல' அவன் திகைப்புற்று வருந்தினான்.

"ஐயோ! பத்து மாதம் சுமந்து பெற்ற வயிறு பற்றி யெரிகிறதே. நான் எவ்வளவோ கூப்பிட்டும் வரமாட்டேன் என்கிற பயல் அவள் கூப்பிட்டால் குதித்தோடி விடுகிறானே. பெற்றவளுக்குப் பிள்ளைகள் இல்லாமல் ஆக்குகிறார்களே பாபிகள். என் கண் முன்பாகவே என் குழந்தைகள்—என் செல்வக் குழந்தைகள்—நான் அருமையாய் வளர்த்த குழந்தைகள்—என்னை அவமதிக்கும்படி செய்துவிட்டார்களே. நான் ஒருகாலும் இனி இங்கிருக்கக் கூடாது. நான் என்னூர் போய்ச் சேரவேண்டியது தான். இல்லாமற் போனால் என் குழந்தைகளே எனக்குச் சத்துருக்கள் ஆகும் காலமும் வந்து விடும். ஏன்? இவ்வளவிற்குக் கொண்டு வந்தவர்கள் அவ்வளவு செய்யமாட்டார்களா, மகாபாபிகள்?" என்று சீதாலட்சுமி காது கேட்கும்படி புலம்ப ஆரம்பித்துவிட்டாள் அம்மாளு. அந்த வசைமொழிகளைக் கேட்டுத் தூண்டிற் புழுவெனத் துடித்தாள் சீதாலட்சுமி.

"ஐயோ! நான் செய்த நன்மைகளின் பலன் இதுவோ? ஐயோ! ஈச்வரா! நான் யாரிடம் சொல்லப் போகிறேன்? அவள் என்னைக் காது கேட்கும்படி வைய ஆரம்பித்து விட்டாளே. என்னை வைதாலும் வையட்டும். என் பர்த்தாவை அவள் ஏசுவது சற்றேனும் பொருந்துமா? ஐயோ! தெய்வமே! இவ்வுலகத்தில் நியாயம் என்பதே அற்றுப் போய் விட்டதா? நன்மை வேண்டியமட்டும் செய்து வசைமொழிகளை வாரிக்கட்டுகிறதா! இது காலசாமான்யத்தினால் வந்த தோஷம் தான்.

அம்மாளு இப்படி வைகிறாள் என்று என் கணவரிடம் நான் சொன்னேனென்றால் அம்மாளுவின் மேல் கோள் சொல்லுகிற தொழிலை நான் ஆரம்பித்து விட்டேன் என்று அவர் எண்ணுவார். ஈச்வரா! உனக்கும் எனக்கும் மட்டும் தெரிந்திருந்தால் போதும். என் செய்வேன் ஏழை?" என்று புலம்பிக் கண்ணீர் பெருக்கி நிற்பாள் உத்தமியான சீதாலட்சுமி.

இவ்வாறு சில மாதங்கள் கழிந்தன. சீதாலட்சுமியைக் கண்டால் அம்மாளு பேசுவதேயில்லை. விம்மலும், பொருமலும், நெட்டுயிர்ப்பும், பெருமூச்சும், அழுகையும், சிணுங்கலும், கோபமும், தாபமும் அவ்வீட்டை நிறைக்க ஆரம்பித்து விட்டன. சமாதானம் என்ற பண்பே அடியோடு அவ்வீட்டினின்றும் பறித்தெறியப்பட்டது.

சீதா.:—ஏன் அம்மாளு! என் மேல் உனக்கு இவ்வளவு கோபம்?

அம்மாளு:—"என்ன கோபம்?" என்று கூறி மூர்க்கமாய் ஒரு பார்வை பார்த்தாள்.

சீதா.:—என்ன கோபம் சொல்லேன்.

அம்மாளு:—ஆம், ஆம் சொல்ல வேண்டியது தானே. மூன்று வேளையும் உன் வீட்டில் நாய் போலத் தின்றால் இது மாத்திரமா? எல்லாம் சொல்ல வேண்டியது தான். நானும் என் பிள்ளைகளும் உன் வீட்டிற்கு அடிமையாய் விட்டோம் அல்லவா? என்னென்ன வேலைகள் எல்லாமோ நடைபெறுகின்றன. நடக்கட்டும், நடக்கட்டும்.

சீதா.:—என்னவெல்லாமோ சொல்லுகிறாயே.

அம்மாளு:—ஆம், ஆம், உன் ஆம்படையான் தைரியம் இருக்கலல்வா? நீ நன்றாய் பேசு, பேசு, பேசு, தெரிந்தமட்டும் பேசு. என் குழந்தைகளை எனக்கு ஆகவொட்டாமற் செய்தாய்விட்டது. இனி இதைவிட வேறு எனக்கென்ன வேண்டும்? உங்கள் முகங்களில் விழிக்கலாமா? உனக்கென்ன கோடி. மகாராஜி. கொடி கட்டி ஆளுகிறாய். இவ்வளவும் யார் செய்து வருகிற வேலை என்பதும் எனக்குத் தெரியும்.

சீதா.:—ஐயோ! பாபம். அப்படி ஒன்றுமில்லை. நீ வீணில் என் மீதும் என் பர்த்தா மீதும் பழி சுமத்த வேண்டாம். நாங்கள் அக்குழந்தைகள் உன்மேல் பிரியம் பாராட்டப்படாது என்ற எண்ணம் உடையவர்களல்லர். நீயே அப்படி நினைத்துக் கொள்ளுகிறாய். அதைத் தவிர வேறொரு விசேஷமும் அல்ல. உன்னைவிட அக்குழந்தைகள் மீது எங்களுக்கு என்ன பாத்தியதை வந்துவிட்டது? எல்லாம் அன்பு தான்."

அம்மாளு:—அவ்வளவு அன்பு என்ன வந்து விட்டதோ இக்குழந்தைகள் மேல். அகம்பாவத்தைத் தவிர வேறு காரணம் யாதொன்றுமில்லை.

"அம்மாளு! நீ என்ன எப்பொழுதும் கோபமாய் இருக்கிறாயாமே" என்று இராமன் ஒரு நாள் கேட்டான்.

அம்மாளு:—(அதற்குள் பொறுக்கக் கூடாத ஆத்திரத்தோடு) "தந்தை வீட்டில் போயிருந்து காலங்கழிக்கப் போனவளை மதித்து என் வீட்டிற்கு நான் வரவேண்டும் என்று சொல்லி இங்கே என்னையும் என் குழந்தைகளையும் கூட்டிக் கொண்டு வந்து என்னை வெறுக்கும்படியாய் என் குழந்தைகளின் அன்புள்ள மனத்தைக் கலைத்து வாழப் போகிறீர் நீர். என் பொல்லாத காலம் என்னை இங்கே கொண்டுவந்து தள்ளி விட்டது........

இராமன்:—பொறு, பொறு. நான் பொல்லாதவன்தான். சீதாலட்சுமியும் பொல்லாதவள் தான். உன் பிள்ளைகளை உன்னை வெறுக்கும்படியாகச் செய்தவனும் நான்தான். உன் மனத்தில் ஆறாப் பெருந்துயரம் விளைவித்த மகாபாபியும் நான். அதனால் என்ன பிரயோஜனம் எனக்கு என்று எண்ணினாயா? ஐயோ! பாபம்! உன் குழந்தைகளை என் குழந்தைகள் போலப் பாவித்து வந்ததும் தோஷமா? இதைவிட வேறு அநியாயம் வேறு என்ன வேண்டும். குழந்தைகள் ஆனபடியால் அவர்கள் உன்னை மதிப்பதில்லை. குழந்தைகளின் சுபாவமோ, யார் தங்கள்மேல் அதிகப் பிரியம் பாராட்டுகிறார்களோ அவர்கள் மேல் பிரியம் பாராட்டுவது. 'குழந்தையும் தெய்வமும் கொண்டாடு மிடத்திலே' என்பது பழமொழி.

அம்மாளு:—எனக்கு அது எல்லாம் தெரியாது. என் குழந்தைகளை எனக்கு ஆகவொட்டாமற் செய்து விட்டீர்கள். இனி நான் என் கிராமத்திற்குப் போய் விட வேண்டும்.

இராமன்:—ஐயோ! அப்படிச் செய்ய வேண்டாம். குழந்தைகளின் படிப்பு முழுவதும் கெட்டுப் போய் விடும்.

அம்மாளு:—அவர்கள் எப்படியும் போகிறார்கள். நாசமாய்ப் போகிறார்கள், உமக்கென்ன கவலை அதைப்பற்றி?

சீதாலட்சுமி:—அப்படியா சொல்லுவார்கள், அண்ணா தம்பி பிள்ளைகளைக் கவனிக்க மாட்டாரா?

அம்மாளு:—எதற்கு இந்த ஜாலமெல்லாம்?

இராமன்:—ஐயோ, தெய்வமே! நன்மை செய்யப் போய் தீமையாய் முடிந்ததே.

சீதாலட்சுமி:—அம்மாளு! உன் கோபத்தினால் அவர் எவ்வளவு வருத்தம் அடைகிறார் பார்.

அம்மாளு:—என் வருத்தத்தை நான் யாரிடம் சொல்லுவேன்?

இராமன்:—இப்பொழுது அம்மாளு என்ன சொல்லுகிறாள்?

சீதாலட்சுமி:—அவளுக்கு வேலை என்ன என்கிறேன். சும்மா தெரியாத்தனமாக ஏதாவது சொல்லுவாள். இருந்தாலும் அவள் என் சகோதரியல்லவா? ஏன் அம்மாளு!

அம்மாளு:—போதும் போதும், உங்கள் உறவு. இத்தோடு நான் ஒதுங்கினால் தான் என் பாடு க்ஷேமம். இனி நான் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது எனக்குத் தெரியும்.

இராமனும் சீதாலட்சுமியும் சேர்ந்து அம்மாளுவை எவ்வளவோ சமாதானப்படுத்த முயன்றும் அம்மாளு எரிச்சலும் கோபமும் தாபமும் காட்டி முணங்கிக் கொண்டிருந்தாள். அதைப் பொறுக்கக் கூடாது இராமன் உடனே அவள் தகப்பனாரை வரும்படி செய்தி சொல்லியனுப்பினான். அவர் வந்ததும் நடந்த விபரங்கள் முழுவதையும் அவரிடம் இராமன் சொன்னான். அதைக் கேட்டு அவர் மிகவும் வருந்தி இராமனையும் சீதாலட்சுமியையும் சமாதானப்படுத்தி விட்டு ஸ்நானஞ் செய்ய நதிக்குச் சென்றிருந்த அம்மாளுவிற்காக எதிர் பார்த்துக் கொண்டிருந்தார். பிறகு தந்தைக்கும் மகளுக்கும் பின் வருமாறு சம்பாஷணை நடந்தது.

தந்தை:—என் அம்மாளு! நித்தம் மனஸ்தாபமாமே. எல்லா விஷயங்களையும் ஒருவாறு தெரிந்து கொண்டேன். குழந்தைகள் மேல் அவர்கள் பிரியமாயிருந்தாலென்ன? அந்தமட்டிலும் உனக்கு நல்லது தானே.

அம்மாளு:—அப்பா! நான் இனி ஒரு க்ஷணமும் இவ்விடத்திலிருக்க மாட்டேன். எனக்கு மனம் முற்றிலும் வெறுத்து விட்டது.

தந்தை:—அதன் காரணம் என்ன அம்மா? எனக்குத் தெரியலாமா?

அம்மாளு:—என் குழந்தைகளை எனக்கு விரோதிகளாக்குவதற்கு முயன்று, அம்முயற்சியில் முக்கால் வாசி வரை ஜயம் பெற்று விட்ட மாபாபிகள் கண்களில் நான் விழிக்கலாமா?

தந்தை 'எல்லாம் பகவான் செயல்' என்று கூறிப் பெருமூச் செறிந்தார்.

சீதாலட்சுமி அதைக் கேட்டுக் கண்ணீர் வடிக்க ஆரம்பித்து விட்டாள். அம்மாளுவும் அழ ஆரம்பித்து விட்டாள். இராமன் வருத்தமடைந்தான். குழந்தைகள் யாவரும் அழ ஆரம்பித்து விட்டார்கள். 'ஐயோ! எவ்வளவு ஒற்றுமையாய் இருந்த குடும்பம் இவ்வளவு ஒற்றுமைக் கேட்டை அடைந்துவிட்டது!

முடிவில் அம்மாளு மிகுந்த மன உறுதியோடு கிராமத்திற்குத் தன் குழந்தைகளோடு போகவேண்டும், இல்லாவிட்டால் தான் எங்கேயாவது போய் விடுவதாக சாதித்து விட்டபடியால் அவள் தந்தை அதிக விசாரத்துடன் அவளையும் குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு தன் கிராமம் போய்ச் சேர்ந்தார். இராமனும் சீதாலட்சுமியும் அம்மாளுவின் கொடுமையைப் பார்க்கிலும் அவள் குழந்தைகளின் பிரிவாற்றாமையை நினைத்து நெஞ்சம் புழுங்கி வருந்தினார்கள். குழந்தைகள் அவர்களை விட்டுப் போகமாட்டேனென்று சாதிக்க அவர்கள் அக்குழந்தைகளை அனுப்பச் சிறிதும் சக்தியின்றி மௌனமாய் மரம் போல நின்றார்கள். என்ன செய்வார்கள் பாபம்!

குழந்தைகளும் தாயும் கிராமம் போய்ச் சேர்ந்தனர். பிரிவாற்றாமை என்னும் கொடிய நோய் அம்மாளுவின் குழந்தைகளைப் பிடிக்க ஆரம்பித்து விட்டது. அவள் குழந்தைகள் இராமனையும் சீதாலட்சுமியையும் தேட ஆரம்பித்து விட்டன. அதே போல இராமனும் அவர்களைக் காணாமல் இருக்கமுடியவில்லை. நாளுக்கு நாள் தன் குழந்தைகள் மெலிவுறுவதைக் கண்டு பயந்தவளாய் "ஐயோ! என் பிள்ளைகளுக்கு வியாதி வரும்படியாய்ச் செய்து விட்டார்கள் பாபிகள். ஐயோ! எனக்குக் குடியிருக்க வகையில்லையா? தெய்வமே, இப்படியாகவாவேண்டும்? இதுவோ நின் சோதனை?" என்று புலம்பினாள் அம்மாளு.

திடீரென்று அம்மாளுவின் தகப்பனார் காலமாய்விட்டார். அந்தச் செய்தியை அவள் இராமன் முதலானவர்களுக்குச் சொல்லி யனுப்பவேயில்லை. இராமன் அச்செய்தியை அறிந்ததும் மிகவும் விசனமுற்று வருந்தினான். சீதாலட்சுமியும் அம்மாளுவையும் அவள் குழந்தைகளையும் காணாமல் தத்தளித்துக் கலங்கினாள். சீதாலட்சுமி என்றால் அவள்தான் என்று அக்கம்பக்கத்தார் யாவரும் பேச ஆரம்பித்து விட்டார்கள். அவ்வளவு துயரம் அவளுக்கு அம்மாளு நீங்கிப்போனதைக் குறித்து. முடிவில் அம்மாளுவின் குழந்தைகள் வியாதியாய்ப் படுத்திருந்தார்கள். என்னென்ன மருந்துகள் கொடுத்தாலும் குணத்திற்கு வரவேயில்லை. அம்மாளு எவ்வளவோ கவனம் எடுத்துப் பார்த்தும் குணப்படவேயில்லை. அவர்கள் இராம நாமம் ஜபிக்க ஆரம்பித்து விட்டார்கள்.

திடீரென்று ஒரு நாள் ஒரு வண்டி அம்மாளுவின் வாசல் முன் நின்றது. இராமனும் சீதாலட்சுமியும் வீட்டினுள் புகுந்ததும், வியாதியாய் படுத்தப் படுக்கையிற் கிடந்த பிள்ளைகள் மூவரும் மகாபலசாலிகள் போல ஒரு நிமிஷத்தில் குதித்தெழுந்து இராமனையும் சீதாலட்சுமியையும் போய்க் கட்டி அழ ஆரம்பித்து விட்டார்கள். இராமன், சீதாலட்சுமி என்ற இருவர் கண்களும் மடமட வென்று மடைமுடையாய் நீரைப் பெருக்கிக் கலங்கின.

"ஆகா! நான் பாபியானேன். அநியாயமாய் உங்களை வஞ்சித்தேன். நீங்கள் மகா

புண்ணியசாலிகள். உங்களை அநியாயமாய்த் துவேஷித்தேன். அபசாரப்பட்டேன். என் பிழைகளைப் பொறுக்கவேண்டும். என் குழந்தைகள் உங்கள் குழந்தைகளே. நான் செய்து வந்த கொடுமைகள் அனைத்தையும் சகித்து வந்த உங்கள் பொறுமையே பொறுமை" என்று கூவிக் கண்ணீர் வடித்தாள் அம்மாளு.

சீதா:—ஐயோ! எங்கள் பேரன்பினால் உன் குழந்தைகளை உனக்கடங்காச் செய்து உன் மனத்தில் கிலேசத்தை மூட்டிவிட்டோம். அநியாயமாய் நாங்கள் காட்டிய அன்பு உனக்கும் உன்னுடைய குழந்தைகளுக்கும் எவ்வளவு தீங்குகளை விளைவித்து விட்டது!

இராமன்:—எல்லாம் பகவான் செயல். எனக்கு அம்மாளுமேல் ஒரு வருத்தம் உண்டு. இவ்வளவு தூரம் நன்மை செய்து வருகிறவர்கள் குழந்தைகள் மனதைக் கலைக்க முயலுவார்களா என்று அவள் ஒரு நிமிஷ நேரமாவது ஊன்றிச் சிந்தித்திருந்தால்...

அம்மாளு:—ஐயோ! நீங்கள் சொல்வது வாஸ்தவம். என்றாலும் என் மனதில் உண்டான வருத்தத்தின் காரணம் என் குழந்தைகள் உங்கள் மேல் உள்ள பேரன்பினால் என்னை அவமதித்து நடக்க ஆரம்பித்ததுவேயாம்.

இராம.
சீதா. } "குழந்தைகள் தானே!

முடிவில் அவர்களுக்குள் சமாதானம் நேர்ந்தது. பழையபடி இராமன் அவளையும் அவள் குழந்தைகளையும் தன்னகத்திற் கழைத்துச் சென்றான்.

பிரிவாற்றாமையினால் மெலிந்து வாடிக் களைத்த உடம்புகள் தேறின. அன்பு மேன்மேலும் பெருகியது. ஆனால் குழந்தைகள் தங்கள் தாயாரை முன்போலல்லாமல் அதிக விசுவாசத்துடன் நேசிக்க ஆரம்பித்தன. இராமன் குழந்தைகள் சரிவரக் கவனிக்கப்படாமல் முழுச் சோம்பேறிகள் ஆய்விட்டனர்.

திடீரென்று இராமன் செத்துப் போய்விட்டான். திருவேங்கடமும், வேதாந்தமும் உழைத்து இராமனுடைய குடும்பத்தையும் தங்கள் குடும்பத்தையும் காப்பாற்றிவந்தனர்.

(சீதாலட்சுமி ஒரு நாள்) "அம்மாளு! பழைய மனஸ்தாபம் உனக்கு ஞாபகம் இருக்கிறதா?" என்றாள்.

அம்மாளு:—ஏன் அம்மா, அதை எனக்கு ஞாபக மூட்டுகிறாய்? அதை நினைத்தால் கூட எனக்கு விமோசனம் ஏழு ஏழு ஜன்மத்திலுமில்லை............

சீதா:—எல்லாம் பகவான் செயல்.

EVERY HOUSE
SHOULD STOCK A BOTTLE OF
AMRUTANJAN
THE BEST PAIN BALM
Price As. 10 a bottle.

உடல் முழுவதும் ரத்தம் பரவுவது ஏன்?

(ஸ்ரீமான் வி. நடராஜன், B.A., L.T.)

ஒரு ரத்தத்துளியை மைக்ராஸ்கோப் (சிறியதைப் பெரியதாகக் காட்டும்) கண்ணாடிக் குழாயில் பரீட்சை செய்து பார்ப்போம். அதில் லட்சக்கணக்கான சிகப்பு அணுக்களும் சில வெள்ளை அணுக்களும் உள. சிகப்பு அணுக்கள் உருண்டையாகவும் வெள்ளை அணுக்கள் தட்டையாகவும் காணப்படும். சுத்த ரத்தத்தில் ஏராளமான சிகப்பு அணுக்கள் உண்டு. ஒரு ஆற்றிலிருந்து பல மைல்கள் விஸ்தீர்ணம் உள்ள வயல்களுக்கு நீர்ப்பாசனம் செய்வது போல ரத்தக் குழாய்கள் உடலுக்கு ரத்தப் பாசனம் செய்கிறது. நமது தேக அணுக்கள் புஷ்டியாக வளர்ந்து அதன் அலுவல்களைச் செய்யப் பிராணவாயு அவசியம். இந்த சிகப்பு அணுக்கள் பிராணவாயு உள்ளவை. பிராணவாயு இல்லாவிடில் தேகத்தில் உள்ள அணுக்கள் இறந்து போம். ஒரு விளக்கு எரியக்காற்று தாராளமாக வந்து கொண்டிருக்க வேண்டுமல்லவா? அவ்வாறே சுத்த ரத்தம் உடல்முழுதும் பரவி பிராணவாயு தாராளமாக கிடைத்துக் கொண்டேயிருந்தால்தான் தேகம் சுகமாக இருக்கும். தேகத்தில் பிராணவாயு கிடைத்தவுடன், அணுக்கள் வேலை செய்தால் ஏற்பட்ட அசுத்தத்தை அசுத்தக் குழாய்கள் எடுத்துச்செல்லும். வெள்ளை அணுக்கள் தேகத்தைச் சுத்தம் செய்யும் தோட்டிகள் என வேண்டும். தேகத்தில் ஏற்படும் அசுத்தம் பலவகைப்படும். கரி (carbon) முக்கியமான அசுத்தம். இது காற்றாக (கரிவாயு) நாம் மூச்சு விடும்போது வெளியே வந்துவிடும். சில சமயம் அசுத்தத்தை வெள்ளை அணுக்கள் சூழ்ந்து கொண்டு தேகத்தினுள் செல்ல விடாமல வெளியே தள்ளிவிடும்.

இருதயத்தில் வந்து சேரும் அசுத்த ரத்தம் மூச்சுப் பைக்கு அனுப்பப்படுகிறது. இங்கு இந்த அசுத்த ரத்தம் தன்னிடமுள்ள அசுத்தத்தைத் தள்ளி விட்டு நாம் சுவாசிக்கும் வாயுவில் உள்ள பிராணவாயுவை எடுத்துக் கொண்டு சுத்தம் அடைந்து மறுபடியும் இருதயம் வந்து சேரும். உடனே இருதய மசில் நெறித்து இந்த சுத்தரத்தத்தைப் பெரிய குழாயில் தள்ளிவிட மறுபடியும் உடல் முழுதும் சுத்த ரத்தம் பரவும். இவ்வாறு அசுத்தரத்தம் சுத்தமடைந்து இருதயத்திலிருந்து ரத்தக் குழாய்கள் வழியாக தேகம் முழுவதும் ஓட அசுத்த ரத்தம் தேகத்தில் நாலா புறங்களிலிருந்தும் சேர்ந்து மறுபடியும் இருதயத்தில் ஓரிடம் விழுந்து சுவாசப் பையில் சுத்த மடைந்து வரும். ஒரு க்ஷணமும் நிற்காமல் இருதயம் சதா காலமும் வேலை செய்து கொண்டேயிருககிறது.

நாம் ஏன் சுவாசிக்க வேண்டும்? மூக்கு வழியாக உள்ளே இழுக்கும் வாயு காற்றுக் குழாய் மூலமாக சுவாசப் பைகளைப் (Lungs) போய் சேரும். காற்றுக்குழாயின் ஓரத்தில் திராட்சப் பழக் கொத்து போல இரண்டு பைகள் உண்டு. இருதயத்தின் இருபுறங்களிலும் இவைகள் அமைந்திருக்கும். விலா வெலும்புகள் அமைந்த மார்புக்கூட்டில் இருதயமும் சுவாசப்பைகளும் வெகு ஜாக்கிரதையாக இருக்கின்றன. சுவாசப்பைகள் பல மடிப்புகள் பெற்றிருப்பதனால் விஸ்தீர்ணம் அதிகமாக இருக்கும். சிறிய இடத்தினுள் அதிக விஸ்தீர்ணமுள்ள பையை அமைப்பதற்காக இவ்விதம் மடிப்புகளாக இருக்கிறது. இருதயத்திலிருந்து வரும் அசுத்த ரத்த அணுக்

கள் காற்றுப் பையில் பரவி ஒவ்வொரு அணுவும் தன்னிடம் உள்ள அசுத்தத்தைத் தள்ளி, பிராணவாயுவை உட்கொண்டு சுத்த சிகப்பு ரத்த அணுவாகும். சுத்தமான ரத்தம் இருதயம் போய்ச்சேர, அசுத்தமானது நாம் வெளிவிடும் மூச்சுக்காற்றில் வந்து விடும். இந்த மூச்சுக் காற்றில் முக்கியமாகக் கரிவாயு இருக்கிறது.

காற்றுக் குழாயின மேற்பாகம் தொண்டையில் இருக்கிறது. தொண்டையில் காற்றுக் குழாயும் உணவுக்குழாயும் உண்டு. உணவுக் குழாய் சாதாரணமாக மூடியிருக்கும். இதைப் பற்றி பின்னால் சொல்வோம். காற்றுக் குழாய் மூலமாக நாம் சப்தம் உண்டாக்குகிறோம். இந்த சப்தம் உண்டாக்கும் பெட்டியை குரல் வளை (voice box) என்போம். இதில் குரல் தந்தி சதைகள் V போல இருக்கின்றன. சாதாரணமாக மூச்சுவிடும்போது இந்தத் தந்திகள் விசாலமாக இருக்கும். நாம் சப்தம் உண்டாக்கும்போது இந்தத் தந்திகள் நெருங்கி இருக்கும். ஒரு சிறிய மூங்கில் குழாயில் ஒரு பக்கம் ரப்பர் நூலைக்கட்டி ஊதினால் சப்தம் உண்டாகிற தல்லவா? அம்மாதிரியே காற்றுக்குழாயின் நடுவே இருக்கும் இத்தந்திகள் காற்று ஓடிவரும்போது அடிப்பதால் சப்தம் ஏற்படும். நமது இஷ்டம்போல மூளையிலிருந்து நாம்புகள் உத்தரவு கொண்டு வந்தவுடன் இந்தத் தந்திகள் சுருங்கும் அல்லது விசாலமான இடைவெளி கொடுத்துக் காற்றை வெளி விடும். அதனால் உரத்துச் சத்தம் செய்வதும் மெதுவாகச சத்தம் செய்வதும் முடியும். குரல் வளையின் அதிசயம் எவ்வளவு மேன்மையாக இருக்கிறது பாருங்கள்!

காற்றுக் குழாயிலும் காற்றுப் பையிலும் கோழை அதிகம் ஏற்பட்டால் இருமல், க்ஷயம் முதலிய வியாதிகள் ஏற்படும். கோழை மூடிக் கொள்வதால் சுவாசப் பையின் துவாரங்கள் அடைபட்டு, அசுத்த ரத்தம் ஆவலாகத் தேடி வரும் பிராணவாயுவைப் பெற்றுக் கொள்வது கஷ்டமாகும். தேகத்திற்கு வேண்டிய சுத்த ரத்தம் கிடைக்காமல் போகவே தேகத்திற்கு உபாதி உண்டாகிறது. ஆதலால் நெஞ்சில் கோழைக் கட்டு ஏற்படாமல் கவனித்துக் கொள்ள வேண்டும். சுத்தக்காற்று அதிகமாக சுவாசிக்க தினமும் விஸ்தாரமான மைதானத்தில் உலவி வரவேண்டும். ஜன்னல் கதவுகளைச் சாற்றிக் கொண்டு நித்திரை செய்யக் கூடாது. எவ்வளவுக் கெவ்வளவு சுத்தமான வாயுவை சுவாசிக்கிறோமோ அவ்வளவுக் கவ்வளவு தேக சுகம் நன்றாக இருக்கும்.

இனி நாம் உட்கொள்ளும் உணவு எவ்விதம் நமக்கு உபயோகப்படுகிறது எனக் கவனிப் போம். உண்பதனால் தேகத்திற்கு பலம் கிடைக்கும். சுகசரீரம் உள்ளவன் ஆசையுடன் சாப்பிடுவான். இந்த ஆசை உண்டாவதனால் தான் நாம் சாப்பிட விரும்புகிறோம். இது இயற்கையில் ஏற்பட்ட ஒரு தந்திரம். உண்ண வேண்டும் என்ற ஆசையிருந்தால் தான் உண்ணும் உணவு உனக்கு ருசியாக இருக்கும். இல்லாவிடில் உணவைக் கண்டவுடன் வெறுப்பு ஏற்படும். உணவு கண்ட மாத்திரத்தில் வெறுப்பு ஏற்பட்டால் உன் தேகம் சுகம் இல்லை என உடனே தெரிந்து கொள்ளவேண்டும். தேக அணுக்கள் அவை தன் அலுவல்களைச் சரிவரச் செய்திருந்தால் காலா காலத்தில் உணவு உட்கொள்ளவேண்டு மென்ற ஆசை இயற்கையாகவே ஏற்படும்.

நாம் உட்கொள்ளும் உணவு அதே உருவத்தில் நமது தேகத்தில் உபயோகப்படுவதில்லை, தேகமுழுதும் பரவுவதற்குப் பால்போல மாற்றப்படவேண்டும். நாம் உண்ணும் உணவை இவ்விதம் பால் போன்ற திரவமாக்கி தேகத்

தின் சகல பாகங்களுக்கும் அனுப்பும்படியான நிலைமையில் செய்வது தான் ஜீரணம் எனப்படும். சிறு குழந்தை பால் குடிக்கிறது. அதற்கு அதிக ஜீரண வேலை இல்லை. ஆதலின் பால் இயற்கை ஆகாரம். ஆனால் குழந்தை வளர வளரப் பால் ஆகாரம் போதாது. வேறு உணவு அவசியம். சோறு, கறி, பதார்த்தங்கள் இவைகளை வாயில் போட்டுக் கடைவாய்ப் பற்களால் (இயந்திரப் பற்கள்) மென்று உமிழ் நீருடன் கலந்து மாவாக்கி விழுங்குகிறோம். உண்பது ஆசையுடன் இருந்தால் தான் இந்த உமிழ் நீர் இயற்கையாக உண்டாகும். ஒரு தின்பண்டத்தை ஆசையுடன் பார்த்தாலும் நினைத்தாலும் நம் வாயில் உமிழ் நீர் சுரக்கிறது. பற்களால் மெல்லும்போது நாக்கு அவ்வுணவை அங்குமிங்கும் நகர்த்திக் கொடுத்து நன்றாக அரைபடும்படி செய்கிறது. வாயில் உண்டாகும் உமிழ் நீர் வெறும் ஜலம் அல்ல. அவலை நன்றாக மென்றால் அதில் தித்திப்பு உண்டாகிறது அல்லவா? அவல், சோறு, ரொட்டி இவைகளில் இருக்கும் மாவுப் பொருளில் உள்ள சர்க்கரையை உமிழ் நீர் வெளிப்படுத்துகிறது. இந்த வேலை உமிழ் நீரினால் தான் செய்ய முடியும். மென்று தின்னாமல் அப்படியே விழுங்கி விட்டால் சோற்றில் உள்ள சர்க்கரையை வெளிப்படுத்த வயிற்றில் அதிக நேரம் செல்லும். மாறுபாடு அடையாமல் நெடு நேரம் சோறு வயிற்றில் இருப்பதால் புளித்துப் போம். இதனால் புளித்த ஏப்பம் உண்டாகிறது. இட்லிக்காக அரைத்தமாவு எவ்வாறு புளித்துப் போய் பொங்குமோ (ferment) அவ்விதமே வயிற்றில் ஏற்படும். மாவு பொங்கத்தொடங்கும். ஏராளமான காற்றுக் கொப்பளங்கள் உண்டாகும். அவ்விதமே மென்று தின்னாத உணவை வயிற்றுள் அனுப்பினால் காற்றுக் கொப்பளங்கள் உணவின்மேல் ஏற்படும். இதுவே வயிற்றில் மப்புத்தட்டியிருக்கிறது என்பது. இதனால் வயிற்றின் மற்ற வேலை கெட்டுப் போம். தேகசுகம் குறைந்து போகும். ஆதலால் உணவை உமிழ் நீருடன் கலந்து நன்றாக மென்று மாவாகச் செய்து விழுங்க வேண்டும்.

இவ்விதம் விழுங்கும் போது தவறிப் போய் இந்த உணவு காற்றுக் குழாயினுள் செல்லாமல் உணவுக் குழாயினுள் செல்லும்படி இயற்கையாகவே அமைந்திருக்கிறது. முன் பக்கம் உள்ள காற்றுக் குழாய் (குரல்வளை) திறந்தே இருக்கும். பின்னால் உள்ள உணவுக்குழாய் மூடியிருக்கும். உணவை நீ இஷ்டப்பட்டு விழுங்கினால் தான் உட் செல்லும். இல்லையேல் அப்படியே அடித்தொண்டையில் நிற்கும். இதை நாமே பரீட்சை செய்து பார்க்கலாம். உணவை விழுங்கவேண்டும் என்றவுடன் உணவுக் குழாய் மசில்கள் விலகிக் காற்றுக்குழாயை மேலும் கீழும் மூடிவிட்டு உணவை அதன் வழியே உள்ளே தள்ளும். உணவுக் குழாய் என்பது வளையம் வளையமான மசில்கள் சேர்ந்தது. வரிசையாக ஒன்றன்பின் ஒன்றாக இந்த மசில் வளையங்கள் பொருந்துச் சுருங்குவதால் உணவு கொஞ்சங் கொஞ்சமாக உள்ளே தள்ளப்பட்டுச் செல்லும். அவசரமாகச் சாப்பிட்டால் சில சமயம் காற்றுக் குழாய் மூடிக்கொள்ளுமுன் உணவு தள்ளப்படும். அப்போது ஒரு அணுக்கு காற்றுக் குழாயால் நுழைய முயற்சி செய்யும். உடனே இருமலும் தும்பலும் ஏற்பட்டு அந்த உணவுத் துணுக்கை "உன்னுடைய வழியாகிய உணவுக்குழாய்க்குச் செல்லாமல் காற்றுக் குழாய்க்கு ஏன் வந்தாய்?" என்பதுபோல, வெளியே பிடித்துத் தள்ளிவிடும். இது தான் புரையேறிற்று என்று சொல்வது. இயற்கையாக இவ்வித ஆபத்து ஏற்படாமல் இருக்கத் தும்பல், இருமல் ஏற்படுகின்றன. இந்த எச்சரிக்கையும் மீறிக்கொண்டு சிறு அணுக்கு காற்றுக்

குழாயில் சென்றுவிட்டால் பெரிய ஆபத்தாக முடியும். இவ்விதம் தும்மல் ஏற்பட்டவுடன் மூக்குவழியாகச் சில சமயம் ஒரு சோற்றுப் பருக்கை விழுவதைப் பார்த்திருக்கலாம். ஆதலால் உணவை விழுங்கும்போது சிரிப்பதோ, பேசுவதோ செய்யக்கூடாது. ஏனெனில் காற்றுக் குழாய் மூடியிருப்பதைத் தடுத்து அதைத் திறக்க முயற்சி செய்வதால் புரை ஏறும்.

உணவுக் குழாய் வழியாக வந்த உணவு வயிற்றில் போய்ச் சேரும். வயிறு ஒரு பந்து போன்றது. காற்று அடைத்து உப்ப வைக்கும் ரப்பர்பந்துபோல அதிக உணவு தள்ளுவதால் வயிற்றுப் பையும் உப்பி இருக்கும் எனலாம். வயிற்றுப் பையின் உட்பாகத்தில் உள்ள சிறு துவாரங்களிலிருந்து உணவு வந்தவுடன் புளிப்பான ஒருவித ஜலம் ஊறிக் கொட்டும். நார்த்தம்பழத்தோலின்மேல் அமுக்கினால் ஒருவித காரமான ஜலம் பீரிட்டுத் தெரிப்பதுபோல இந்த வயிற்றுப் பைத்தோலிலிருந்தும் இந்த புளித்த ஜலம் உண்டாகும். இந்தப் புளி ஜலத்தில் மாவான உணவு மறுபடியும் பக்குவமடையும். பக்குவமானவுடன் வயிற்றுப் பையின் அடியில் உள்ள குடலில் போய்ச் சேரும். மடிப்பு மடிப்பாக உள்ள இந்தக் குடல் சுமார் இருபது அடிநீளம் இருக்கும். ஆனால் மடிப்பு மடிப்பாகச் சுருண்டு இருக்கிறது. பக்கத்தில் உள்ள பித்தப்பையில் (liver) இருந்து வரும் பித்தநீர் இந்த உணவில் வந்து கலக்கும். இவ்வளவு மாறுபாடு அடைந்து பால்போல் ஆன உணவு திரவத்திலிருந்து குடலில் உள்ள நூல் போன்ற தூய்கள் சத்துப் பொருள்களை உறுஞ்சிக்கொள்ளும். இருதயத்தின் சமீபம் உள்ள பெரிய அசுத்த ரத்தப் பையில் இந்த சத்து உணவைச் சேர்க்கும். வஸ்திரத்தின் ஓரத்து நூல்கள் ஜலத்தில் பட்டவுடன் ஜலத்தை உறுஞ்சுவதுபோலக் குடலில் உள்ள தூய்களும் உறிஞ்சிக் கொள்ளும். நமது உணவில் கடினமான பொருள்கள் ஆகிய உமி, விதை, நார் முதலியன வயிற்றில் செல்லும்போது விரைந்து செல்வதால் நீர் சுரக்க உதவி செய்கிறது. கடினமான இவைகளும் உடலுக்குத் தேவையில்லாத அசத்துப் பொருள்களும் பெருங் குடல் வழியாக வெளிவந்து விடும்.

எந்த வேலையிலும் சத்துப் பொருள்களை எடுத்துக்கொண்டு அசத்தப் பொருள்களை எறிந்து விடுவதுண்டு. வளர்ந்து விருத்தியாகும் பொருள்கள் எல்லாம் வளர்ந்து புதிய உருப்புகள் உண்டாக உண்டாகப் பழய கருவிகளையும் மஷ்டுக்களையும் தள்ளிவிடுவது இயற்கை. வீடு கட்டும்போதும், தச்சன் மர சாமான் செய்யும்போதும், அடுப்பில் விறகு எறிந்தபிறகும் கழித்த பொருள்கள் ஏற்படுகின்றன அல்லவா. அதுபோல வளரும் நமது தேகத்தின் கழிவுப் பொருள்களை வெளியே தள்ளவேண்டும். அசுத்தக் காற்றை மூக்கு வழியாக வெளியே விட்டுவிடுகிறோம். ரத்தத்தில் உள்ள அசுத்த ஜலத்தை மூத்திரப்பை தேக்கிக்கொண்டு அது நிரம்பியவுடன் மூத்திரம் பேயும் அவஸ்தை உண்டாக்குகிறது. உணவில் உள்ள அசுத்தமும் கழிவுப் பொருள்களும் மலமாக வெளியே வந்து விடுகின்றன. ரத்தம் பரவும்போது ஆங்காங்கு ஏற்படும் அசுத்தத்தை நீருடன் கலந்து இழுத்துக் கொள்ளும் சிறு குழாய்கள் நமது தோலின் மேல் உள்ள சிறு துவாரங்கள் வழியாக அந்த அசுத்த ஜலத்தை வியர்வையாக வெளியே தள்ளும். இந்த அசுத்த ஜலம் தாராளமாக வெளியே வருவதற்கனுகூலமாக இந்தத் துவாரங்கள் அடைத்துக் கொள்ளாமல் நாம் தினமும் உடலைத் தேய்த்துக் குளிக்கவேண்டும்.

பஞ்ச இந்திரியங்கள் எனப்படும் உணர்ச்சிக் கருவிகளைப்பற்றி சற்று விவரமாகத் தெரிந்து

கொள்வோம். மூளைக்குச் சமாசாரம் கொண்டு போகும் கருவிகள் எல்லாம் உணர்ச்சிக் கருவிகள் என வேண்டும். நமது தேகத்தில் ஒரு வஸ்து உராய்ந்து கொண்டிருக்கிறது. உஷ்ணக் காற்று அடிக்கிறது. ஜலம் குளிர்ச்சியாய் இருக்கிறது. முள் குத்தியதால் வலி ஏற்பட்டது. பசி தாக உணர்ச்சி இவைகளை எல்லாம் மூளைக்கு அந்தந்த nerves தெரிவிக்கும். ஆயினும் முக்கியமான உணர்ச்சிக் கருவிகள் கண், காது, மூக்கு, நாக்கு என்று சொல்வது வழக்கம். இவைகளில் முக்கியமான கண், காது இரண்டையும் சற்று விஸ்தரித்துச் சொல்லுவோம்.

கண் மிகவும் நுட்பமான ஒரு உறுப்பு. கிணற்றுப் பிடிசுவர் போல் எலும்புக்குழாய் சுற்றிலும் இருக்க அப்பள்ளத்தின் நடுவே கண் அமைந்திருக்கிறது. முகத்திற்கு அழகு கொடுக்கும் கறுத்த புருவ மயிர்கள், இமைகளும் அவற்றின் மயிர் ஓரங்களும் கண்ணினுள் தூசிவிழாமலும், மிகுந்த வெளிச்சம் உட்செல்லாமலும் பாதுகாக்கின்றன. ஒரு வஸ்துவின் உருவத்தை எவ்விதம் போட்டோ படம் எடுக்கிறோமோ அதுபோல வெளியில் உள்ள வஸ்துக்களின் உருவங்களைக் கண் தனக்குள் படம் எடுத்து வைக்கிறது. உருண்டையான பந்துபோன்ற கண் கோளம் (eyeball) ஒரு இருட்டறை. அதுள்ளே வஸ்துக்களின் பிம்பங்கள் விழுவதற்கான இடத்திற்கு retina எனப் பெயர். கண் கோளத்தில் நாம் பார்க்கும் முன்பாகத்தில் ஐரிஸ் என்ற ஒரு திரை உண்டு. இதில் உள்ள ஒரு துவாரத்தைத்தான் கருமணி அல்லது பாப்பா என்கிறோம். இந்தத் திரை அநேகமாய் எல்லோருக்கும் கறுப்பாக இருக்கும். ஆனால் சிலருக்கு நீல நிறமாகவும் சாம்பல் நிறமாகவும் இருக்கும். இந்தத்திரைக்கும் மேலே வெள்ளைவிழி பாந்து இருக்கிறது. இது கண்ணாடிபோல் ஒளிக்கிரணங்களை உள்ளே விடும் சக்தி உள்ளது. இது உறுதியான ஒரு தோல் மூடி எனலாம். இதன்மேல் ஈரம் கசிவதனால் தூசி, மண் முதலியவைகளைக் கண் ஓரத்தில் ஒதுக்கமுடியும்.

ஐரிஸ் திரைக்குள் கண்ணாடிபில்லை போன்ற இயற்கை லென்ஸ் இருக்கிறது. இதுதான் கண்ணின் மிகவும் அருமையான பாகம். இயற்கையாக ஏற்பட்ட இக்கண்ணாடி லென்ஸ். நாம் உபயோகிக்கும் மைக்ராஸ்கோப், டெலஸ்கோப் முதலியவைகளில் உபயோகிக்கும் லென்ஸ் போன்றது. ஒளிக் கிரணங்கள் இதன் வழியாகப் புகுவதால் வஸ்துவின் பிம்பம் ரெடினவில் விழுகிறது. ஒரு போடோ காமிராவில் கறுப்புத்திரைக்குள் வஸ்துவின் பிம்பத்தைக் கவனித்துப் பார். ரெடினவில் வஸ்துவின் பிம்பம் விழுந்தவுடன், ரெடினவில் உள்ள அநேக சிறு நரம்புகள் (optic nerves) பிம்பம் விழுந்திருக்கிறதென்ற சமாசாரத்தை மூளைக்கு அறிவிக்கிறது. மூளை அது என்ன பொருள் எனப் பகுத்தறிந்து அதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளும். ஆகவே கண் வஸ்துவைக் காட்டுகிறதே யன்றி அவ்வஸ்து என்ன என்றும் அதன் குணகுணங்கள் என்ன வென்றும் பகுத்தறியும் புத்தி மூளைக்கே உரித்தாகும்.

கண்ணில் உள்ள இயற்கையான கண்ணாடி பில்லைகள் சிலருக்குச் சரியாக இல்லாதபடியால் அவர்கள் செயற்கைக் கண்ணாடி பில்லைகளைப் போட்டுக் கொள்ளுகிறார்கள். தூரத்தில் உள்ள பொருள்களையும் சமீபத்தில் உள்ள பொருள்களையும் நாம் அடிக்கடி பார்க்கிறோம். அதற்கேற்றவாறு கண்ணில் உள்ள lens அடிக்கடி தட்டையாகவும் உப்பிக் கொண்டும் மாறுதல் செய்துகொள்ளும். இவ்வித மாறுதல் செய்து கொள்வது சிலர் கண் லென்சுக்கு முடியாமலிருக்கும். தூரத்துப் பொருள்களைப் பார்க்க முடியும், சமீபப் பொருள்களைப் பார்க்க இயலாது. அவர்களுக்குத் தூரத்துப் பார்வை (long sight) உண்டு. அநேகமாய் நாற்பது வயதுக்குமேல் பலருக்கு இவ்விதம் தூரப் பார்வை மாத்திரம் இருக்கும். இவர்கள் வெள்ளெழுத்துக் கண்ணாடிகள் போட்டுக் கொள்வார்கள். சிலருக்குக் கிட்டத்துப்பார்வை (short sight) உண்டு, தூரத்துப் பார்வை இராது. சாதாரணமாக இக்காலத்தில் அநேக சிறுவர்களுக்கு இவ்விதமான கிட்டத்துப் பார்வை மாத்திரம் இருப்பதனால் கஷ்டப்படுகிறார்கள். இவர்களும் கண்ணாடி அணிந்து கொள்ளவேண்டும். சாதாரணக் கண் பார்வை உள்ளவர்கள் short sight கண்ணாடிகளைப் போட்டுக் கொண்டால் தூரத்தில் உள்ள வஸ்துக்கள் மிகவும் சிறியதாக இருப்பது விளங்கும். Short sight உள்ளவர்கள் கண்ணாடி இல்லாமல் வாசிக்கும்போது புத்தகத்தைக் கண்களின் சமீபத்தில் வைத்துக்கொண்டு வாசித்தாலன்றி அவர்களால் வாசிக்க முடியாது.

கண்ணை மிகவும் சுத்தமாக வைத்துக் கொள்ளவேண்டும். பஞ்ச இந்திரியங்களில் கண் மிகவும் பிரதானமானது. ஆகவே அதை வெகு ஜாக்கிரதையாகப் பேணி உபயோகிக்க வேண்டும். கண்பார்வை குறைந்து விட்டாலும் ஒருவனுடைய உலகவாழ்க்கை சந்தோஷமற்றுப் போம். கண்ணைக் காப்பாற்ற முக்கியமாகச் சில விஷயங்களைச் கவனிக்கவேண்டும். ஈரத்துணியால் கண்குழியை தினமும் சுத்தம் செய்யவேண்டும். ஒரே பொருளை உற்றுநோக்கி நெடுநேரம் கண்களை சிரமப்படுத்தக்கூடாது. கூசும்படியான வெளிச்சத்தையும் கொடிக்கு கொடி வெளிச்சத்தையும் இருட்டையும் ஒரு போதும் பார்க்கக் கூடாது. சிறு எழுத்துக்களை வாசிப்பதும் புகை விளக்கில் வாசிப்பதும் கண்களுக்குத் திருஷ்டிக் குறை உண்டாக்கும்.

சப்தத்தை அறிவிக்கும் கருவி காது. இக் கருவி எவ்விதம் அமைந்துள்ளது என்பதை அறியுமுன் சப்தம் எவ்விதம் பரவுகிறது எனத் தெரிந்து கொள்ளவேண்டும். குரல் வளையிலிருந்து சப்தம் எவ்விதம் உண்டாகிறது என முன்னரே சொல்லப்பட்டது. ஓரிடத்தில் உண்டாகும் சத்தம் (அல்லது காற்று) வாயுவில் அலைகளை உண்டாக்குகிறது. ஒருகுளத்து ஜலத்தின்மேல் ஒரு கல்லை எறிந்தால் அலைகள் நாற்புறமும் பரவுகின்றன. அதுபோல் வாயுசமுத்திரத்திலும் சப்த அலைகள் பரவுகின்றன. இவை மோதும் போது வழியிலுள்ள பதார்த்தங்கள் மீது தாக்கும், நம் உடலிலும் தாக்கும். ஆனால் நுண்ணிய இந்த அலைகளை நமது உடல் உணர்ந்துகொள்ளாது. காதில் உள்ள அபூர்வமான அமைப்பினால் இந்த அலைகள் காதினுள் மோதும்போது நாம் சப்தத்தை உணருகிறோம்.

வெளியே ஒரு புனல் போன்ற மடல் மாத்திரம் காதின் வெளிப்புற பாகம். இதனுள் வளைந்து வளைந்து குழாய் போல் செல்கிறது. காற்று அலைகள் ஒன்று சேர்ந்து இக்குழாய் வழியே உள்ளே செல்லும்.

உள்ளே இக்குழாயின் ஓரத்தில் வாழைத் துளிர் போன்ற மெல்லிய ஜவ்வுத்தோல் இருக்கிறது. இது தான் காதின் மேளம் (ear-drum.) உள்ளே வந்த காற்று அலைகள் இந்த மேளத்தில் மோதியவுடன் மேளத்தில் அதிர்ச்சி ஏற்படும். மேளத்தினுள்ளிருக்கும் குழிகளில் இம்மேள அதிர்ச்சிகள் ஒருங்கு சேர்க்கப்படும். இக்குழிகளிலுள்ள நரம்புகள் இவ்விதம் ஏற்படும் உணர்ச்சியை மூளைக்குத் தெரிவிக்கும். உடனே மூளை இன்னின்ன சப்தம் என்ப் பகுத்தறிந்து அதற்கு ஏற்றவாறு செய்கைகள் செய்ய ஏற்பாடுகள் நடத்தும். கண் வழியாக மூளைக்குச் சமாசாரம் எட்டியது போலக் காது வழியாகவும் மூளைக்கு நரம்புகள் சமாசாரம் கொண்டு சேர்க்கும்.

காதை ஜாக்கிரதையாகப் பாதுகாத்து வர வேண்டும். இயற்கையாகவே கல் போன்ற எலும்புக்குழாயினுள் நுட்பமான இந்த மேளம் இருக்கிறது. உரத்த சப்தம் ஓரோர் சமயம் காது மேளத்தைக் கிழித்து விடும். இது காரணம்பற்றியே உரத்த சப்தம் உண்டாகும்போது நாம் காதுகளை மூடிக் கொள்ளுகிறோம். காதுக்குள் எறும்பு, தூசி நுழைந்துவிட்டால் உப்பு ஜலத்தை ஊற்றி வெளிப்படுத்தலாம். குச்சியைப் போட்டுக் குடைவது தீமையாக முடியும்.

ஆசாம் தேசத்து வீரமணி—ஜயமதி.

(ஸ்ரீமான் எஸ். ஆர். வெங்கடராமணன், பி.ஏ., பி.எல்.)

இந்திய நாட்டின் வடகிழக்குப் பாரிசத்திலுள்ள ஆசாம் நாட்டை உதயாதித்தியன் என்னும் மன்னன் இன்றைக்குச் சுமார் முன்னூறு வருஷங்களுக்கு முன் ஆண்டுவந்தான். அக்காலத்தில், அரண்மனையிலேயே ராஜ வம்சத்தைச் சேர்ந்த சிலர் உதயாதித்தியன் மீது பகைமை பாராட்டி அவ்வரசனை 1673-ம் வருஷம் கொன்று விட்டனர். அதன்பிறகு அந்நாட்டில் பெருங் குழப்பம் ஏற்பட்டு, கொடுங்கோலாட்சியே சுயேச்சையாய் வளர்ந்து வந்தது. உதயாதித்தியனுக்குப்பின் சிம்மாதனம் ஏறிய பேடிகளாகிய அரசர்கள் யாவரும் தமது அமைச்சர்கள் கையில் சிக்கிப் பம்பரம்போல் ஆடவும் அரசாட்சி என்பதொழிந்து மந்திரிகளின் ஆட்சியும் அதன் சுவபாவ லட்சணங்களான பல கொடுமைகளும் நாட்டில் அதிகரிக்கலாயின. அவ்வமைச்சர்கள் தமது இஷ்டம்போல் தமக்கனுகூலமான அரசர்களைச் சிம்மாதனத்தின்மீது இருத்தவும் வேண்டாதவர்களைத் தலை கவிழச் சிம்மாதனத்திலிருந்து உருட்டவும் அத்துணையளவு கேள்வி கேட்பாடின்றித் தம் மனம்போல் செய்துவந்தனர்.

லோரா ராஜா என்பவன் மேற் கூறிய அரசர்கள் வகுப்பில் சேர்ந்தவனுவான். அவன் மிக்கக் கோழை மனதும் பயமும் கொண்டவனெனினும் அதிகுரூர புத்தியுடையவன். அவன் சிம்மாதன மேறியதும், அவனது மந்திரிகளெல்லாம் அவனை ராஜவம்சத்திலுள்ள ஒவ்வொருவரையும் கொன்றுவிட்டால் தான் ராஜ்யம் அவனுக்கு நிலைக்கும் என்று சொல்லி, ராஜவம்சத்தாரைக் கொன்றுவிடும்படி தூண்டினார்கள். இக்கொடூரமான யோசனையைக் கேட்ட அக்கொடூர அரசனே மிகவும் ஆச்சரியமடைந்தானெனினும், தன் பதவியை ஸ்திரப்படுத்திக் கொள்ள ஆசைகொண்டவனாய், அவர்களைக் கொல்வதைப் பார்க்கிலும் வேறு வகையில் அவர்களை ஒழிக்க யோசனை கேட்க, அவனது அமைச்சர்களும் பண்டிதர்களும் அதற்கும் சமயோசிதம் போல பதிலுரைத்தனர். அவர்கள் சொன்னதாவது, ஆசாம் தேசத்தில் ஒரு ஐதிகம் இருந்து வருவதாகவும், அதன்படி அங்கஹீனமுடைய எவனும் அரசனாயிருக்க முடியாதென்றும் சொல்ல, அரசனும் அதுவே சரியான வழியென்றுணர்ந்து ராஜவம்சத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் அங்கஹீனம் உண்டாகும்படி அவன் எடுத்துக்கொண்ட சிரத்தையும் ஆத்திரமும் சொல்லமுடியாது.

இந்த ராஜவம்சத்தின் கிளைவம்சங்களில் பிரசித்தி பெற்ற வம்சம் துங்க பங்கி என்பது. அந்த ராஜவம்சத்தாருக்கும் சிம்மாதனம் ஏற உரிமை யுண்டு. மேற்கூறிய துங்க பங்கி வம்சத்தலைவனான கதாபாணி என்பவன் மிகவும் புத்தக்க அரசர்க்குரிய குணங்களெல்லாம் பொருந்தி விளங்கியதால் அவனிடத்து ராஜ்யத்துக் குடிகளுக்கு அன்பும் விசுவாசமும் லோரா ராஜாவிடத்துத் தீராப் பொறாமையும் பகையும் இருந்து வந்தது ஆச்சரியமன்று.

கதாபாணியின் தர்மபத்தினியின் பெயர் ஜயமதி என்பார்கள். லோரா ராஜா தன் கணவனிடத்தும் தன்னிருமக்களிடத்தும் பாராட்டிவரும் தீராப் பகையை யறிந்து கொண்ட அப்பெண்மணி தன் கணவனுடையவும் மக்களினுடையவும் க்ஷேமத்தைக் கருதி, லோரா ராஜாவின் கவனத்திற்கு இலக்காகாமல், தனது குடும்ப வாழ்வைச் சாதாரண மனிதர்களைப் போல் நடத்தி வந்தாள். அவளிடத்து உயர் குடிமக்களிடம் காணும் பெண்களுக் குரிய குணங்கள் யாவும் சிறந்து விளங்கின. பொறுமை, தயாள சிந்தை, கருணை, அன்பு இவைகள் அவளிடத்துக் குடிகொண்டிருந்தன.

லோரா ராஜா கதாபாணியின் பொருட்டுச் செய்து வந்த சூழ்ச்சிகளை யெல்லாம் முதன் முதல் அறிந்தவள் ஜயமதியே யாவாள். அதற்காக அவள் தன் கணவனை லோரா ராஜாவின் சூழ்ச்சிகளில் சிக்காமலிருக்கவேண்டி, அந்நாட்டை விட்டு வெளியேறிக் கொஞ்ச நாள் அஞ்ஞாதவாசம் செய்து வரும்படிக்கு வேண்டினாள். ஜயமதி "இக்கொடுங்கோலரசனின் ஆட்சியை ஜனங்கள் அதிக நாள் பொறுக்க மாட்டார்கள். ஏற்கெனவே அவனுடைய துஷ்கிருத்தியங்களெல்லாம் ஜனங்களுக்கு அவன் மேல் அதிருப்தியை யுண்டாக்கிவிட்டன" என்றாள். ஆனால் கதாபாணியோவெனில் கொடியனான லோரா ராஜாவின் நாட்டில் தன் மனைவி மக்களைத் தனியே விட்டுத் தான் மாத்திரம் வெளியேறச் சம்மதிக்கவில்லை. என்றாலும் கடைசியாக ஜயமதி கதாபாணியை நம்பிக்கை ஊட்டினாள் கதாபாணி அயல் நாட்டிற்குப் போய் விட்டதை யறிந்து, தன்னையும் தன் குழந்தைகளையும் ஒன்றுஞ் செய்ய மாட்டான் என்றும் அப்படி அவன் ஒரு சமயம் ஏதாவது செய்தால், ஏற்கெனவே ஜனங்களின் விரோதத்தைச் சம்பாதித்திருக்கும் அவனை ஜனங்கள் பழிவாங்கி விடுவார்கள் என்றும், ஆகவே, கதாபாணி அயல் நாடேகுவதால் யாதொரு தீங்கும் விளையாது என்றும் சொல்ல, அதற்கு கதாபாணியும் சம்மதித்து அவளை விட்டு அயல் நாடேகினான்.

ஆனால் லோரா ராஜாவின் சாரணர்கள் கதாபாணியைக் கொல்ல சதா சூழ்ச்சி செய்து கொண்டே யிருந்தனர். அவர்கள் கதாபாணியைக் காணாமல், ஜயமதியை மாத்திரம் கண்டு திகைப்படைந்தார்கள். கதாபாணி இருப்பிடத்தை அவர்கள் அறியக் கூடவில்லை. பிறகு அரசனிடம் இச்செய்தியை அறிவிக்க, உடனே அரசன் ஜயமதியை ராவணன் சீதையைச் சிறையாக்கியது போல் சிறையாக்கி, தன் அவைக்களத்திற்குக் கொண்டுவரும்படி உத்திரவு செய்தான்.

ஜயமதி அவைக்களத்தை யடைந்ததும் அரசன் அப்பெண்மணியை நோக்கிக் கதாபாணியிருக்கு மிடத்தைக் கேட்க அம்மங்கை மறுக்கவும் அரசன் ஜயமதியின் பேரில் கடுங்கோபங் கொண்டு மிரட்டியும் திட்டியும் தொந்திரவு செய்தான். கதாபாணிக்குக் கலியாணம் ஆவதின் முன்பு லோரா ராஜாவானவன் அதிக லட்சணமும் கல்வி கேள்விகளில் சரஸ்வதிக் கொப்பானவளுமான ஜயமதியை மணம் புரிய இச்சைகொண்டு முடியாமற்போன ஏமாற்றத்தினால் அவன் கோபம் அதிகரித்தது. காமாதுரனான லோரா ராஜாவின் நடத்தையையும் கெட்ட எண்ணத்தையும் ஜயமதி நன்கறிந்திருந்தாளாதலால் அச்சமயத்திலேயே அவள் அவனை மணக்க மறுத்தனள். அதற்கப்புறமும் அவன் அதிக

மான காம வியவகாரங்களுக்கு இடங்கொடுத்துப் பாபத்தை வடவாமுகாக்கினிபோல் வளர்த்துக்கொண்டே வந்தான். அத்தகைய மனப்பான்மை யுடைய கொடியனுக்கு ஜயமதி தன் கணவன் கதாபாணி யிருப்பிடத்தைச் சொல்ல மறுத்து விட்டாள். கடைசியாக வெகு தைரியத்துடன் "ஒரு எளிய திக்கற்ற ஸ்திரீயை இவ்விதம் அவமரியாதை செய்யும் ஒரு பாதகனுக்கு நான் என் அருமை நாயகரின் இருப்பிடத்தைத் தெரிவிக்கமாட்டேன்" என்றனள் ஜயமதி.

இதைக் கேட்ட அரசனுக்கு உண்டான கோபத்திற்கு எல்லையில்லை. ஆகவே அவன் தனது ஆட்களை நோக்கி ஜயமதியை சித்திரவதை செய்யும்படிக்கு ஆக்ஞாபித்தான். அவ்விதமே ஜயமதியை அக்கிங்கரர்கள் தினம் தினம் இரண்டு திரண்ட மூங்கில்களுக்கு நடுவில் வைத்து நெருக்கியும் பெரிய கூர்மையான ஊசிகளால் அவளைக் குத்தியும் தொந்தரவு செய்தனர். இக்கொடுமையான தண்டனைகளை கேட்கவும் நமுடல் நடுங்குகிறது. ஆனால் ஜயமதியின் திட சித்தத்தை அக்கிங்கரர்களும் லோரா ராஜாவும் அறிந்தார்களில்லை. தன்னைச் சித்திரவதை செய்யும் கொலைபாதகர்களுக்குத் தன் கணவனைப் பற்றி ஒரு வார்த்தையும் சொன்னாளில்லை. ஆகவே, வைராக்கியமுள்ளவர்களைப் போல், தனக்கு நிரந்தரமான சாந்தத்தைக் கொடுக்கும் சாவு எப்போது வரப்போகிறது என்று சதா எல்லாம் வல்ல இறைவனை வழிபட்டுக்கொண்டு எதிர்பார்த்திருந்தாள்.

இவ்வாறு ஜயமதி படும் கஷ்டங்கள் நாடெங்கும் பரவ, நாகமலையிலிருந்த கதாபாணியும் இதைப்பற்றிக் கேள்வியுற்று, மனம் பதைத்து, உடனே தன் பிரிய நாயகியை ரட்சிக்க எண்ணங்கொண்டு, மிலேச்சர்களைப்போல மாறுவேஷம்பூண்டு அதிக சிரமப்பட்டு, லோரா ராஜாவின் ராஜதானியை யடைந்து, தன் மனைவியிருக்குமிடத்தை யறிந்து, அவளுடன் சம்பாஷிக்கவேண்டிய சௌகரியங்களையும் தேடிக்கொண்டான். ஜயமதிமுன் கதாபாணி நின்ற போதும் ஒரு மிலேச்சனைப் போலவே மாறுவேஷம் தரித்திருந்தான். ஜயமதியைக் கண்டதும் மிகவும் மனமிரங்கினவனாய் "நீ யேன் இம்மாதிரி கஷ்டப்படவேண்டும்? உன் புருஷனிருக்குமிடத்தைப்பற்றி லோரா ராஜாவுக்குத் தெரிவிக்க ஏன் தயங்குகிறாய்? தெரிவித்தால் உன் துன்பம் ஒரு நொடியில் தொலையுமே" என்று சொல்ல, ஜயமதி மாறுவேஷம் தரித்திருந்த தன் கணவனைத் தெரிந்துகொண்டு மௌனம் சாதித்தனள். இதை அங்கிருந்த காவலாளர்கள் அறிந்துகொள்ள முடியவில்லை. கடைசியாக, "என் வாழ்வோ முடிந்தது. என்னை இச்சிறையிலிருந்து விட்டாலும் சரி, விடாவிட்டாலும் சரி, நான் இன்னும் அதிக நாள் ஜீவித்திருக்க முடியாது. நான் இப்பொழுதே யமனுலகு செல்லத் தயாராகவிருக்கிறேன். இதை யறிந்து என் புருஷன் லோரா ராஜாவைப் பழிக்குப் பழி வாங்குவார். இது நிச்சயம்" என்றாள் ஜயமதி.

இது நடந்த பதினாறு தினங்களில் ஜயமதியும் இப் பூதவுடலை விட்டுப் புகழுடம்பு பெற்றாள். "பெண் பாபம் பொல்லாது" என்பது போல் ஜயமதியை வருத்திய பாபம் லோரா ராஜாவைத் தொடர்ந்தது. லோரா ராஜா தன் அமைச்சர்களின் சூழ்ச்சிகளை யெல்லாம் வெகு சாமர்த்தியத்துடன் சமாளித்து வந்தானெனினும், முன்னமேயே பிரஜைகளின் விரோதத்தைச் சம்பாதித்துக் கொண்ட அக்கொடியன், ஜயமதியை இவ்விதமாகக் கொன்ற கொடூர நடத்தையால் தன் பிரஜைகளின் விரோதத்தை முன்னிலும் அதிகமாகச் சம்பாதித்துக்கொண்டான். நாடு முழுதும் ஒரே குரலாக அவனைப் பழிக்குப் பழிவாங்கி அவன் ரத்தத்தைக் குடிக்கவேண்டுமென்ற கோஷமே பொங்கியது. பிற்பாடு கதாபாணி தன் மனைவியை விட்டு, அரசர்களின் சாரணர்களை ஏமாற்றி வெளியேறி, கௌகத்தி என்ற நகரை யடைந்து தனது நண்பர்களுடனும் ஆலோசித்துக் கடைசியாக, லோரா ராஜாவின் பேரில் படையெடுத்துச் சென்று பழிக்குப் பழி வாங்க, ஒரு சைனியத்தைத் திரட்டிச் சென்றான். இதையறிந்த பிரஜைகளும் கதாபாணிக்கு உதவி புரிந்து அக்கொடியனை லோரா ராஜாவைக் கொன்று கதாபணியை அரசனாக ஏற்றுக்கொண்டார்கள். கதாதர்சிங் என்ற கதாபாணி அதன் பிறகு மறு கலியாணம் செய்து கொள்ளவேயில்லை. தனது ஜனங்களின் க்ஷேமத்தை நாடி செங்கோல் செலுத்திவந்தான். பிற்பாடு மொகலாயர் வசமிருந்த கௌகத்தி நகரையும் கைப்பற்றி அவர்களுடைய கப்பற்படையையும் தோற்கடித்தான். அதுமுதற் கொண்டு ஆசாமில் ஒரு மகம்மதியரும் காலெடுத்து வைக்கவில்லை.

1696-ம் வருஷம் கதாதர் சிங் (கதாபாணி) இறக்கவே, அவனுடைய குமாரனான ருத்திரசிம்மன் சிம்மாதனமேறித் தனது தாயாரான பதிவ்ருதா சிரோன்மணி ஜயமதியின் ஞாபகார்த்தமாக ஜயமதி எந்த விடத்தில் சித்திரவதை செய்யப்பட்டு இறந்தாளோ அதே விடத்தில் ஒரு பெரிய குளத்தை வெட்டி அதற்கு ஜயசாகர் என்ற பேரையும் சூட்டினான்.

ஜயமதி நம் நாட்டு வீரமணிகளுள் ஒருத்தியாவாள் என்பதை யாவரும் மறுக்க முடியாது. இவளது பதிவ்ருதாமகிமையையும், திடச் சித்தத்தையும் கண்டு ஆச்சர்யப்படும் ஆசாம் தேசத்துப் பெண்களெல்லாம், இவளது ஞாபகமார்த்தமாக திருவிழாக் கொண்டாடுகிறார்கள். சமீபத்தில் ஆசாமில் நடந்த ஒரு பெரிய கூட்டத்தில் கூட, அந்நாட்டுப் பள்ளிப் பிள்ளைகளும் பெண்களும் இக்கதையை நாடகமாக நடித்தார்கள் என்பதையும் பத்திரிகைகள்மூலமாய்ப் படித்தோம். இதனால் ஜயமதியை ஆசாம் தேசத்தில் ஒரு தெய்வத்துக்கு சமானமாக ஜனங்கள் வழிபட்டு வருகிறார்கள் என்பது இதனால் நன்கு விளங்குகிறது.

சுபம்.

விகடசீலன்.

(ஒரு ஹாஸ்ய நாடகம்.)

(ஸ்ரீமான் M. C. கிருஷ்ணசாமி.)

பதிப்புரிமை ஆசிரியருடையது.

நாடக பாத்திரங்கள்.

விக்ரமபாகு—விக்ரமபுரியின் அரசன்.
வீரசேனன்—விக்ரமபாகுவின் குமாரன்.
பூகி—விக்ரமபாகுவின் பிரதம மந்திரி.
இராஜேந்திரன்—அலகாபுரி அரசன். விக்ரமபாகுவின் மைத்துனன்.
சுகுணன்—மதிபூகியின் குமாரன்.
விகடசீலன்—சுகுணன் தோழன். அரண்மனை விதூஷகன்.
கிருத்ரமப்பிரபு—விக்ரமபுரியிலுள்ள ஒரு பிரபு.
கோமளவல்லி—கிருத்ரமப்பிரபுவின் மனைவி.
மோகனா—இராஜேந்திரன் மனைவி.
திம்மன்—ஒரு வேலைக்காரன்.
டாக்டர், புரோகிதர், முதலியர்கள்.

நாடகம் நடக்குமிடம் விக்ரமபுரி.

முதல் அங்கம். முதல் காட்சி
இடம்: அரண்மனையில் ஓர் அறை.
காலம்: காலை.

(விகடசீலன் ஏதோ யோசித்த வண்ணம் வருகிறான்.)

விக:—யாரோ வருகிறாப் போல் இருக்கிறது. நாம் சற்று மறைந்து கொள்வோம். (ஓர் திரையில் மறைந்து கொள்ளுகிறான்.)

(சுகுணன் ஆழ்ந்த சிந்தனையுடன் வருகிறான்.)

சுகு.:—தகப்பனார் சொன்னபடி எப்படியாவது ராஜ குடும்பத்திற்கு இச்சமயம் உதவி புரியவேண்டும்.

விக.:—(மறைவிடமிருந்து)..டும்.

சு.:—யார் அது! யாரோ பேசுகிறாப் போல் இருக்கிறதே! (சுற்றிப் பார்த்து) ஒருவரும் இல்லையே. எல்லாம் என் மனக் கவலையாகத்தான் இருக்கவேண்டும்.

விக.:—(மறைவிடமிருந்து)...டும்.

சு.:—இப்பொழுது நன்றாகக் காதில் பட்டது. இது யார் என்று பார்ப்போம்.

விக.:—(மறைவிடமிருந்து) நான் தான். பார்க்க வேண்டாம்.

சு.:—இது என்ன; விகடசீலன் குரல் போல் இருக்கிறதே! சற்று பார்ப்போம். (ஒவ்வொரு இடமாக சுற்றிப் பார்க்கிறான்) எங்கும் காணோமே!

விக.:—(மறைவிடமிருந்து) இங்கே இருக்கிறேன்.

சு.:—எங்கே?

விக.:—(மறைவிடமிருந்து) இங்கே.

சு.:—எங்கே என்றால்?

விக.:—(மறைவிடமிருந்து) இங்கே என்றால்.

சு.:—அத்திரை மறைவிலிருந்து தான் குரல் கேட்கிறது. (போய் திரையைத் தள்ளுகிறான். விகடசீலன் சிரித்துக்கொண்டு வெளியில் வருகிறான்.) என்னடா, இவ்வளவு நேரம் இங்காயிருந்தாய்?

(விகடசீலன் மௌனமாய் ஏதோ யோசிக்கின்றான்.)

சு.:—என்னடா யோசனை?

விக.:—ஜோசியம் பார்க்கிறேன். கணக்கு சரியாக வரவில்லை. நூறில் ஓர் எண் சொல்லு.

சு.:—எதற்கு? தொண்ணூறு.

விக.:—ஆகா! வந்தது.

சு.:—என்ன?

விக.:—இப்பொழுது நான் சாப்பிட்ட பழத்தின் கணக்கு

சு.:—இதெல்லாம் யார் கேட்டது?

விக.:—பதறுகிற காரியம் சிதறும். நான் சொல்வதைக் கேள்.

சு.:—என்ன? சொல்லு.

விக.:—சொல்லவா?

சு.:—சொல்லித் தொலையேன்.

விக.:—அவ்வளவு அலட்சியமானால் சொல்ல மாட்டேன்.

சு.:—வேண்டாம் போ.

விக.:—போகவா! எங்கே? (போகப் பார்க்கிறான்.)

சு.:—சீ, போகாதே இரு. நான் உன்னிடம் ஒரு முக்கியமான சமாசாரம் சொல்ல வேண்டும்.

விக.:—நான் கூட உன்னிடம் ஒரு சமாசாரம் சொல்ல வேண்டும். அதைக் கேழ்க நீ மிகவும் விரும்புவாய். அதைச் சொல்லட்டுமா?

சு.:—ஆனால் சொல்லு.

விக.:—ஆனால் கேள்.

சு.:—கேழ்கிறேன்.

விக.:—சொல்லுகிறேன்.

சு.:—தயவுசெய்து சீக்கிரம் சொல்லு.

விக :—சற்று பொறு; யோசிக்க வேண்டாமா?

சு :—என்ன யோசிப்பது? இவ்வளவு நேரம் யோசித்தது போதாதா?

விக.:—போதுமாயிருந்தால் நான் இவ்வளவு நேரம் தாமதிப்பேனு?

சு.:—நீ பிறகு யோசித்து மெதுவாகச் சொல். இப்பொழுது நான் சொல்வதைக் கேள்.

விக.:—யோசித்தாயிற்று.

சு.:—ஆனுல் சொல்லு.

விக.:—ஒன்று யோசித்தாயிற்று.

சு.:—என்ன ஒன்று?

விக.:—ஒரு சீப்பில் எத்தனை பழம் என்று.

சு.:—ஆனுல் மொத்தம் எவ்வளவு சீப்பு?

விக.:—எட்டு.

சு.:—ஒன்றுக்கே இவ்வளவு நேரமானுல் எட்டுக்கு எவ்வளவு நேரமாகும்?

விக :—அவ்வளவையும் சாப்பிட எவ்வளவு நேரமாகும்?

சு.:—பதினைந்து நிமிஷம் பிடிக்கும்.

விக.:—பதினைந்து நிமிஷமாக நான் இங்கே இருக்கிறேன்.

சு.:—அந்த சமாச்சாரம்......

விக :—நான் சொல்வதை எல்லாம் கூட்டு.

சு.:—சரி.

விக.:—ஒரு 13, 10, 11, 8, 12, 11..., ...

சு.:—சரி மொத்தம் தொண்ணூறு.

விக :—நான் திரை மறைவில் கூடையிலிருந்த பழத்தில் பதினைந்து நிமிஷத்தில் தொண்ணூறு சாப்பிட்டேன்.

சு.:—எப்படியடா அவ்வளவையும் விழுங்கினுய்? வயிற்றுக்கு ஆகுமா?

விக.:—என் வயிற்றுக்குக் கொழுப்பேறி சற்று ஆட ஆரம்பித்தது. ஆகையால் வலித்தது. உடனே எனக்குக் கோபம் வந்தது. அதற்காக அது ஒன்றும் செய்யாமல் இருக்கும்படி அதன் மேல் கொஞ்சம் பாரம் போட்டேன். இப்பொழுது ஒன்றுமே இல்லை.

சு.:—அது அரசருக்காக வைத்த பழமோ என்னமோ? அதை எல்லாம் தின்று விட்டாயே!

விக.:—அரசருக்காகப் பழத்தைத் திரையில் மறைத்து வைப்பானேன்? அது மாட்சிமை தங்கிய நமது முக்கிய காரியதரிசியால் சொந்தத்திற்காக வைக்கப்பட்டு இருக்க வேண்டும். எதற்கும் ஒரு சீப்பு வைத்திருக்கிறேன். பிறகு பார்த்துக் கொள்வோம்.

சு.:—உன் சமாச்சாரம் முடிந்ததே. நான் உன்னிடம் என் விஷயங்களைச் சொல்லலாமா?

விக.:—சரி, சீக்கிரம் சுருக்கமாகச் சொல்லு.

சு.:—கிருத்ரமப் பிரபு இருக்கிறுனே...

விக :—அது யார் அவன்?

சு.:—அவனடா, யேலை வீதியில் அதிர் வெடி கிரு—

விக.:—அவனு! பட்டப் பெயர் சொன்னுல் தான் எனக்குத் தெரியும். பெரியோர்களை எப்பொழுதும் பட்டப் பெயருடன் சொல்லு.

சு.:—அவன் நமது வீரசேனனுக்கு ஏதோ கெடுதி செய்ய சூழ்ச்சி செய்து கொண்டு வருகிறுனும். ஆகையால் எனது தகப்பனுர் அவன் செய்கைகளை உளவு அறிந்து வரும்படி கூறினுர். அதைப்பற்றியே என் உன்னுடன் ஆலோசனை செய்ய உன்னை நாடி வந்தேன். நாம் இப்பொழுது என்ன செய்யலாம்?

விக.:—என்ன செய்வது. அவனை உடனே வெட்டி விடுவது.

சு. :—ஆத்திரப்பட்டு எக்காரியத்தையும் செய்யக் கூடாது. அந்த சிம்மநாதனும் சம்பந்தப்பட்டிருப்பது போல் தோன்றுகிறது. இந்த விஷயத்தில் ஒருவரையும் நம்பலாகாது: ஆகையால் நான் ஒரு சேவகன் வேடம் பூண்டு அவன் வீட்டிலேயே அமர்ந்து நமது வேலையை முடித்துக் கொள்ள வேண்டும்.

விக. :—(உரக்கச் சிரித்துக் கொண்டு) நீயா சேவகன் வேடம் பூண்டு அவனிடம் போகப் போகிறாய்? நீ போனால் கட்டாயம் அவன் உன்னை எப்படியும் கண்டு பிடித்து விடுவான். மேலும் உனக்கு சேவகனைப் போல் நடிக்கத் தெரியாது. என்னை அனுப்பு. நான் ஒரே நிமிஷத்தில் காரியத்தை முடித்துக்கொண்டு வந்து விடுகிறேன்.

சு. :—சரி அப்படியே செய். மிகவும் உஷாராக இருக்கவேண்டும். அவன் சந்தேகப்பட்டாலும் வந்துவிடும் மோசம்.

விக. :—என்ன வேஷம் போடலாம்?

சு. :—(யோசித்து) ஆ! அவனுக்கு சாயபுவைக் கண்டால் கொஞ்சம் பிரியம் அதிகம். அவர்களை முழுவதும் நம்பி விடுகிறான். நீ ஒரு கிழ சாயபு வேடம் பூண்டு அவன் வீட்டில் வேலைக்கமரவேண்டும். என் வீட்டிற்கு வரவேண்டாம். இரவு எட்டு மணிக்கு தினந்தோறும் இவ்விடத்திலேயே சந்திப்போம். அப்பொழுது நடக்கும் விஷயங்களை என்னிடம் சொல்லு.

விக. :—அச்சா.

சு. :—என்ன இதற்குள்ளாகவே சாயபுவாய் மாறி விட்டாய். தாமதிக்காதே. உடனே வேடம் போட்டுக் கொள். உனக்கு செலவுக்கு வேண்டிய பணத்தைக் கேள். தருகிறேன். எவ்வளவு வேண்டும்?

விக. :—அமாரா குஷி மகராஜ்.

சு. :—அரசகுமாரன் உயிர் உன் கையில் இருக்கிறது. நீ தான் காப்பாற்றினால் காப்பாற்றலாம்.

விக. :—ஆண்டவர் நல்ல புள்ளேங்களே காப்பாத்துவார்.

சு. :—சரி போகலாம் வா.

விக. :—ஒரு சீப்புப் பழம் இருக்கிறதே.

சு. :—அது அங்கேயே இருக்கட்டும்.

விக :—சே! அதை நான் விட்டு விடுவேனா? (பழத்தை எடுத்துக் கொண்டு, சாப்பிட்டுக் கொண்டே சுகுணனுடன் போகிறான்.)

முதல் அங்கம். இரண்டாம் காட்சி.
இடம்—கிருத்ரமப் பிரபுவின் வீடு.
காலம்: காலை.

(விகடசீலன் சாயபு வேஷத்துடன் வருகிறான்.)

திம்மன் :—ஏ சாயபு! ஏ சாயபு! ஏ யார்வே அது நேரே உள்ளே போரது?

விக. :—அப்பேன், கோவிச்சுக்காதே, இங்கே என்னமோ சாமி இருக்குதன்னுங்களே.

திம். :—சாமியுமில்லே, கீமியுமில்லே. ஏ வெளியேபோவே.

விக. :—இல்லேயப்பேன், சாமி யில்லே. என்னமோ சொன்னுங்களே, ஹரே அல்லா! அது திங்கள் பிரபுவோ, செவ்வாய் பிரபுவோ மறந்து பூட்டான்.

திம். :—இங்கே சனியுமில்லே, கினியுமில்லே. வெளியே போவென்றால்.

விக. :—இல்லே அப்பேன், இப்போ ஞாபகம் வந்தான். அது நட்சத்திரப் பிரபு.

திம். :—ஏ கைதே! உனக்கு சொன்னாத் தெரிலே.

விக. :—அரே, யார் கைதே! நீயா, நானா? அதிகம் பேசினால், டாப்பேத்து விடுவேன், கபர்தார். அது நட்சத்திரப்பிரபு இல்லே. அது கிருத்திகை பிரபு.

திம். :—நாம்போ யார் தெரியுமா?

விக. :—நம்பின்கி யார் தெரியுமா?

திம். :—தெரியும், என்ன செய்வே?

விக. :—தெரியாது! கல்தா கொடுப்பேன்.

திம். :—(தனக்குள்) இது என்னடா பெருத்த கஷ்டமா யிருக்கிறது (வெளிப்படையாய்) ஏ சாயபு, இப்படிவந்து சொல்லு. இப்போ எஜமான் வருவாங்கோ, கோவிச்சுக் கொண்டா?

விக. :—அச்சா, தும் கோன் சைதான்?

திம். :—நமக்குத் துலுக்குத் தெரியாது.

விக. :—அப்படின்னா, நீங்க ரொம்ப நல்லவங் கொன்னு அர்த்தம்.

(இருவரும் போய் ஒரு புறமாக நிற்கிறார்கள்.)

திம். :—இப்போ சொல்லேய்யா, எங்கே வந்தாயின்னு.

விக. :—இப்போ நம்பள்கி ஞாபகம் வந்தான். கிர்-கிர்-கிருத்ரமப் பிரபு வீடு இதுதானா?

திம். :—ஆம் போ.

விக. :—அப்படியானால், நம்ப பேரு காஜின்னு போல்ராங்கோ.

திம். :—போல்ராங்கோன்னா?

விக. :—அப்படின்னா, ஐயோ! மறந்து போச்சே—சொல்றது, நம்ப பேரு காஜி.

திம். :—சரி.

விக. :—நம்ப ஊர் மூர். நம்பள்கி பசங்கோ புள்ளே யாருமில்லே, நம்போ ஏக் ஆத்மி.

திம். :—அது என்ன சாயபு, என்னமோ சொன்னாயே.

விக. :—அரே, கேள் ஐயா, நமக்கு வேலேவேணும். யாரோ வேலே இக்குதுன்னு சொன்னாங்கோ, கேக்கலான்னு இங்கு வந்தேன், தெரிஞ்சுதா?

திம். :—இப்போ எஜமான் வருவாரு, அவரண்டே சொல்லு. அதுவரைக்கும் இங்கேயே யிரு.

விக. :—இஸ்மில்லா!

(விகடன் தன் தடியை ஒரு புறமாக வைத்துக் கொண்டு, உட்கார்ந்தே தூங்குகிறான். கிருத்ரமப் பிரபு தடபுடலாய் மேலே பார்த்த வண்ணம் வந்து, விகடனைத் தடுக்கிக் கீழே விழுகிறான்.)

விக. :—அரே கைதே! சைதான்கி பச்சா! இது எந்த கைதே? (கிருத்ரமனைத் தடியால் அடிக்கப் போகிறான்.)

திம. :—சாயபு! எஜமான்டா, எஜமான்.

கி.பி. :—திம்மா! இங்கே என்னடா?

திம். :—சாமி! ஒரு சாயபு நம்பகிட்ட வேலைக்கி வந்திருக்கிறான்.

கி.பி. :—என்னை தூக்குடா.

திம். :—ஏ சாயபு! இப்படி வந்து ஒரு கைகுடு. (விகடசீலனும் திம்மனுமாக தூக்கி உட்கார வைக்கிறார்கள்.)

திம்.
விக. } அப்பாடா.

விக. :—எஜமான்! அச்சா! கோவிச்சுக்காதேங்கோ. நாம்போ மூன்று நாளா தூங்காதே, ராவெல்லாம் நடந்து வந்தான். கொஞ்சம் தூங்கிபூட்டான்.

கி.பி :—ஏ சாயபு! உன்மேல் தப்பில்லே. நான் கொஞ்சம் மனக்கவலையால் கீழே பார்க்காமல் வந்தேன், பரவாயில்லே. என்னால் எழுந்திருக்கத்தான் முடியவில்லை. நீ எங்கே வந்தாய்?

விக. :—மகாராஜ்! சலாம்; நம்பள்கி நௌகரி வேணும்.

கி.பி. :—நீ என்ன வேலை செய்வாய்? கிழவனுயிருக்கிருயே!

விக. :—அரே! என்ன சாமி அப்படி நினைச்சே, நானு சின்ன வயதுலே பட்டாளத்திலே இருந்தான். அப்பாலே கோமாஜு கிட்ட குமாஸ்தா வேலை பார்த்துனினி இருந்தான். அவரு செத்துபோனுன், பிறகு நாங்கோ வேலை செய்யலே, ஊர்லே இருந்தாங்கோ மகராஜ்!

கி.பி. :—திம்மா! நீ வெளியே போயிரு. யாரையும் உள்ளே விடாதே.

திம். :—அப்படியே சாமி. (வெளியே போகிருன்)

கி.பி. :—சாயபு!

விக. :—க்யா சாகேப்?

கி.பி. :—நீ நம்மிடம் வேலை செய். சம்பளம் ஜாஸ்தி போட்டுத் தருகிறேன். ஆனல் நான் சொல்லுகிறபடி நீ செய்ய வேண்டும், தெரிந்ததா?

விக. :—அச்சா மகாராஜ்!

கி.பி. :—எஜமானி அம்மாவுக்கு உடம்பு சரியாக இல்லை. ஒரு நல்ல வைத்தியனை அழைத்துவா வேண்டும். நான் போகிறேன். நீ அம்மா பக்கத்திலேயே இருக்கவேண்டும் ஜாக்கிரதை.

விக. :—அச்சா!

கி.பி. :—(தனக்குள்) யாராவது புதுவைத்தியனைக் கூப்பிடவேண்டும். பழைய வைத்தியன் வந்தால்.........ஒருவேளை நாம் செய்யவிருக்கும் காரியம் அவனுக்குத் தெரிந்து விட்டால்......(வெளிப்படையாய்) சாயபு! உனக்கு யாராவது வைத்தியன் தெரியுமா?

விக. :—நம்பள்கி ஒரு வைத்தியன் தெரியுருன். அவன் ரொம்ப கெட்டிக்காரன். ஆனல் கோபக்காரன். அவன் நம்பள்கி சிறு போதினிருந்து தெரியும்.

கி.பி. :—அவர் பெயர் என்ன?

விக. :—அரே அரே! மறந்து பூட்சே. என்னமோ என்னெபேரு.

கி.பி. :—நல்லண்ணனு?

விக. :—நை மகாராஜ்! அது விளக்குக்கு போடா என்னே.

கி.பி. :—அது என்னது? (யோசிக்கிருன்) சிந்தாமணியா? மணியனு?

விக. :—அல்லே மகாராஜ்! தெருவிலே கூட வண்டியில் கொண்டாந்து போட்ரானே, அந்த தேல் மகராஜ்!

கி.பி. :—அதுவா, கெரோசிணுயில்!

விக. :—அச்சா மகாராஜ்! அது தான் கிருஷ்ணுல்.

கி.பி. :—ஓ! கிருஷ்ணனு?

விக. :—ஆம்போ.

கி.பி. :—அது யார் சாயபு?

விக. :—அவர் பட்டாளத்து வைத்தியரு.

கி.பி. :—அப்படி யானல் அவருக்கு அடிபட்டா கட்டத் தெரியும். மற்றது ஏதாவது தெரியுமா?

விக. :—அல்லே மகாராஜ்! அவருக்குத் தெரியாதது ஒண்ணுமே இல்லை. பேசத் தெரியாதவங்க இருக்காங்களே, அவங்களுக்குக் கூட மருந்து கொடுக்கத் தெரியும்.

கி.பி. :—சரி, ஆனல் இப்பொழுதே போய் அழைத்துக் கொண்டுவா.

விக. :—அச்சா! (போகிருன்.)

கி.பி. :—சாயபு! (திருப்பி வருகிருன்.)

விக. :—க்யா மகாராஜ்?

கி.பி. :—அம்மாவைப் படுக்கையுடன் தூக்கிக் கொண்டு வந்து இப்படி விட்டுவிட்டு போ.

விக. :—அதெப்படி மகாராஜ், நம்பளாலே முடியும்?

கி.பி. :—திம்மனும் பிடித்துக் கொள்வான். நானும் ஒரு பக்கம் பிடித்துக் கொள்கிறேன் அடே யாரடா, திம்மா!

விக. :—எஜமானனுக்கு அவ்வளவு தொந்தரவு வேண்டாம். திம்மனும் நாம்பளும் போதும். (திம்மன் வருகிருன்.)

கி.பி. :—திம்மா! இப்படிக் கூடவா (மூவரும் போகிருர்கள்.)

(பிறகு கிருத்ரமப் பிரபுவும் திம்மனும் ஒரு கட்டிலைத் தூக்கிக்கொண்டு வருகிருர்கள். விகடசீலன் அதைத் தூக்குவது போல் பாசாங்கு செய்கிருன்).

கி.பி. :—அப்பாடா (ஒரு நாற்காலியில் உட்காருகிருர்.) சாயுபு! நீ சிக்கிரம் போய் வைத்தியனை அழைத்துவா. திம்மா! வாசலிலேயே இரு. எங்கும் போகாதே

(இருவரும் போகிருர்கள்.)

(கிருத்ரமப் பிரபு கட்டிலில் படுத்திருக்கும் கோமளவல்லிக்கு விசுறுகிருர்.)

கி.பி. :—இந்த சமயத்தில் இவள் ஜுரத்துடன் படுத்துக் கொண்டாள். நான் இவளைக் கவனிப்பதா அல்லது நமது காரியத்தைத் தொடங்குவதா வென்று தெரியவில்லை. இவளோ எப்பொழுதும் அருகிலேயே இருக்க வேண்டு மென்கிருள். இங்கேயே இருந்தால், நான் பிரவேசித்த காரியம் எப்படி முடியும்? என்ன செய்கிறதென்று தெரியவில்லை. சிம்மாதனே அன்றைக்குச் சென்றவன் இன்னும் வரவில்லை. அவன் என்னமோ சுலபமாகக் காரியத்தைச் சொல்லி விட்டான். முடித்தால் பெரிய தனவந்தனுய் விடுவேன். ஆனல் கஷ்டம், மிகுந்த கஷ்டம். தெரியாமல் முன் பின் யோசிக்காமல், கஷ்டத்தில் அகப்பட்டுக் கொண்டு விட்டேன். உம், இனி என்ன செய்வது? ஏன்...இந்த சாயபுவைக் கொண்டு காரியத்தை முடித்து விட்டால்......ஆம், அவன் ஒரு முரட்டு ஆசாமியாகக் காண்கிறது. அவனுல் தான் காரியத்தை முடித்துக் கொள்ள வேண்டும். அவன் கையில் ரூபாய் எதினுல்,......

(விகடசீலன் ஓர் கிழவைத்தியன் வேஷம் பூண்ட சுகுணனை அழைத்து வருகிருன்.)

விக. : மகாராஜ்! கிருஷ்ணுல் அழைத்து வந்திருக்கிருன்.

கி.பி. :—வைத்தியரே! வாருங்கள், இப்படி உட்காருங்கள்.

(சுகுணன் கட்டிலிற்குப் பக்கத்தில் உட்காருகிருன். கிருத்ரமப் பிரபுவும் அருகில் உட்காருகிருர். விகடசீலன் தூரநிற்கிருன்.)

சுகு. :—இந்த அம்மாளுக்கா உடம்பு சரியாகவில்லை?

கி.பி. :—ஆமாம், தினம் ஜுரம் வருகிறது. பலஹீனம், ஒன்றும் சாப்பிடுகிறதில்லை.

விக. :—க்யா மகாராஜ்! அத்தே எல்லாம் நீங்கள் சொல்லக் கூடாது. அவரே போல்ணு (கிருத்ரமரும், டாக்டரும் நகைக்கிருர்கள்.)

கி.பி. :—முதலில் நாம் சொல்லுவதைச் சொல்ல வேண்டும். பிறகு அவர் அபிப்பிராயத்தை அவர் சொல்லுவார்.

சுகு. :—(நாடி முதலியவைகளைப் பார்க்கிருன்.) இது கூட்டு தேகம். அத்துடன் பலஹீனம். அதனுல் தான் பேசுவதற்கும் அசைவதற்

கும் கஷ்டமாகிறது. இதற்குத் தகுந்த ஔஷதத்தை நான் சொல்லுகிறேன். இந்த அம்மாளுக்கு அம்பர் சேர்ந்த குல்கந்தை நித்தியம் ஓர் ரூபாய் இடை ஏழு அல்லது எட்டுத் தரம் கொடுக்கவேண்டும். வீட்டுக்குப் போய் மருந்து அனுப்புகிறேன். அதைக் கொடுக்கவும். நான் இப்பொழுது மாத்திரை தருகிறேன். அதை உடனே தண்ணீரில் குழைத்து சாப்பிடட்டும். நான் நாளை ஒரு லேகியம் கொண்டு வருகிறேன். நாளை இந்த அம்மாவால் நடக்கமுடியும். போய் வரட்டுமா?

கி.பி. :—ஆகாரம்?

சுகு. :—பழம் கொடுங்கள். பத்தியமில்லை. பால் நாளைக்குக் கொடுக்கலாம்.

(விகடசீலன் துணியால் முகத்தை எல்லாம் மூடிக்கொண்டு, தரையில் படுத்துக்கொள்ளுகிறான்.)

கி.பி. :—சாயபு! திடீரென்று ஏன் படுத்துக் கொண்டாய்? உனக்கு என்ன உடம்பு?

விக. :—மகராஜ்! அம்மாளுக்கு என்ன உடம்போ அதுவேதான் நம்பளுக்கு. அதேமருந்து கொடுக்கச் சொல்லுங்கோ அந்த கிருஷ்ணல்கிட்ட.

சுகு. :—பிரபுவே! அவன் எப்பொழுதும் தமாஷ்காரன். பட்டாளத்திலும் அப்படியே செய்வான். கனாத் பழகும்போதும் அவ்விதமே செய்வான். யுத்தத்திலும் இப்படியே. இவன் சுபாவம் சிறுபிராயமுதல் அறிவேன். ஏனோ இப்படிக் கிழவனாய் விட்டான். அவனுக்கு 55-வயது தான் ஆச்சுது. எனக்கு 45-வயதாகிறது. ஹாஜ்! எழுந்திரு.

(விகடசீலன் எழுந்திருக்கிறான்.)

சுகு. :—பிரபுவே! நான் போய்வருகிறேன். (கிருத்ரமப் பிரபு ரூபாய் கொடுக்கப்போகிறான்.)

சுகு. :—பிரபுவே! எனக்கு இப்பொழுது ரூபாய் வேண்டாம். அம்மாளுக்கு உடம்பு குணமடைந்த பிறகு எல்லாம் மொத்தமாக வாங்கிக் கொள்ளுகிறேன்.

கி.பி. :—சரி நல்லது. இராத்திரிக்குள் ஒரு தரம் வாருங்களேன்.

சுகு. :—எனக்கு இன்னும் அனேக வியாதியஸ்தர்களைப் பார்க்க வேண்டும். ஒழியுமோ, ஒழியாதோ. அத்துடன் நான் இனிவர வேண்டிய அவசியமும் காணேம். ஆனாலும் எதற்கும் இரவு 10-மணிக்குள் வருகிறேன். இந்த அம்மாளை அந்த அறையில் படுக்க வையுங்கள். இங்கு வேண்டாம். நான் போகிறேன்.

(போகிறான்.)

கி.பி.:—ஏ சாயபு! அடே திம்மா! இந்தக் கட்டிலைத் தூக்கி அந்த அறையில் வையுங்கள்.

(எல்லோருமாகக் கட்டிலைத் தூக்கிக்கொண்டு உள்ளே போகிறார்கள்.)

(காட்சி முடிகிறது.)

முதல் அங்கம், மூன்றும் காட்சி.

காலம்—பகல்.

இடம்—கிருத்ரமப் பிரபுவின் வீடு.

(விகடசீலன் வருகிறான்).

விக. :—அவர்கள் வருகிற நேரமாய் விட்டது மணியும் 12 அடிக்கப் போகிறது. அதோ 1, 2, 3, 4, 5......12. அதோ அவர்கள் வரும் கால் சப்தமும் கேட்கிறது. நான் இவர்கள் வந்து என்ன பேசுகிறார்கள் என்று திரையில் மறைந்து கேட்கவேண்டும். (போய் மறைந்து கொள்கிறான்.)

(கிருத்ரமனும், சிம்மநாதனும் பேசிக்கொண்டு வருகிறார்கள். இருவரும் நாற்காலியில் உட்காரப் போகிறார்கள். முதலில் சிம்மநாதன் உட்காருகிறான். அது தெரியாமல் அவன் மடிமீது, கிருத்ரமன் உட்காருகிறான்.)

சிம். :—ஐயோ! இதென்ன?

(கிருத்ரமன் எழுந்திருக்க முடியாமல் கஷ்டப்படுகிறான்)

கிரு. :—ஏ சாயபு! திம்மா! சீக்கிரம் வாருங்கள். (கொஞ்சம் பொறுத்து) என்ன அவர்கள் தூங்குகிறார்கள் போலிருக்கிறது. ஐயோ! நீங்கள் எழுந்திருக்கப் பிரயத்தினப் படுங்கள். நானும் எழுந்திருக்கப் பிரயத்தினப்படுகிறேன். அதனால் இருவரும் எழுந்திருக்கலாம்.

(சிம்மநாதன் பலமாகக் கிருத்ரமனைத் தள்ளிக் கொண்டு எழுந்திருக்கிறான். அதனால் கிருத்ரமன் கீழே விழுகிறான். உடனே சிம்மநாதன் தூக்கி உட்காரச் செய்கிறான்.)

சிம். :—என்ன ஐயா! உங்களுடைய தேகம் உங்கள் ஸ்வாதீனத்தில் இல்லை போலிருக்கிறதே!

கி.பி. :—இல்லை அப்பா! எனக்கு நடுவில் டைபாய்ட் பீவர் (Typhoid Fever) வந்தது. அதற்கு முன் ஒரு குச்சிபோலிருந்தேன். அதற்குப் பிறகு இப்படி அசத்தனாய் விட்டேன். இப்பொழுது ஒரு வைத்தியர் வந்திருக்கிறார். அவரிடம் மருந்து வாங்கிச் சாப்பிடலாமென்று இருக்கிறேன். ஆனால் முதலில் என் மனைவிக்கு உடம்பு குணமாகட்டுமென்று இருக்கிறேன்.

சிம். :—சரி! பிறகு நம் சமாச்சாரமென்னவாயிற்று?

கி.பி.:—இப்பொழுது ஒரு புதிய வேலைக்காரன் வந்திருக்கிறான். அவன் சாயபு. மகா கெட்டிக்காரன். அவன் பட்டாளத்திலிருந்தவன். காரிய சித்தியில் அவன் தகுந்த ஏற்பாடுகள் செய்வான். கொஞ்சம் ரூபாய் கையில் போட்டால், எல்லாம் சரியாய் விடுகிறது. இதற்கு நீ என்ன சொல்லுகிறாய்?

சிம். :—எல்லாரையும் எப்பொழுதும் நம்பக் கூடாது. அவன் யாரோ? அவனுக்கு ஒரு வேளை வீரசேனனைச் சேர்ந்தவர்கள் தெரிந்து இருந்தால், நம் காரியம் கைகூடாமல் போவதல்லாமல் கெடுதலாக முடியும். பதில் அவனிடம் போய் முன் யோசனையில்லாமல் ஒன்றையும் சொல்லிவிடாதே.

கி.பி. :—அவன் இங்கிருப்பவனல்ல. அவன் வேர் ஊர். அவன் பட்டாளத்தில் போர் வீரனாயிருந்தவன். அவனுக்கு இவ்வூரில் யாரும் தெரியாது.

சிம். :—இது நிஜந்தானா?

கி.பி. :—அவன் பட்டாளத்திலிருந்ததாக நேற்று வந்த வைத்தியர் சொன்னார்.

சிம். :—சரி, சமாச்சாரத்தை முழுவதும் ஒரே சமயத்தில் அவனிடம் சொல்லிவிடாதே. கொஞ்சம் கொஞ்சமாய் விடு. நாம் அடையப் போகும் நன்மையைச் சொல்லாதே. வேறு ஏதாவது காரணம் சொல்லு. தெரிந்ததா? ஜாக்கிரதை. அவனுக்கு வயது எவ்வளவு இருக்கும்? கிழவனல்லவே!

கி.பி. :—வயது 55 தானாம். ஆனால் பார்ப்பதற்குக் கிழவன் மாதிரியிருக்கிறான். ஆனால் மிக்க பலசாலியாக இருக்கிறான்.

சிம். :—ஆனால் அவனைக் கூப்பிடு பார்க்கலாம்.

கி.பி. :—அந்த சமாசாரம் மிகவும் ரகசியம் என்று அவனிடம் சொல்ல வேண்டும். நாம் இருவரும் சொன்னால் அவனுக்கு சந்தேகமேற்படும். நீர் அதோ தெரிகிறதே அந்த திரைக்குள் மறைந்து கொள்ளும். நான்

அவனுடன் பேசுவதைக் கவனியும். அவனை அனுப்பிய பிறகு நீர் வாரும்.

(சிம்மநாதன் எழுந்திருக்கிறான்.)

இ.பி. :—ஜாக்கிரதை!

(திரைக்குள் மறைந்திருந்த விகடசீலன் ஒருவருக்கும் தெரியாமல் வெளியே போகிறான். சிம்மநாதன் திரைக்குள் மறைந்து கொள்ளப் போகிறான். அப்பொழுது ஏதோ தடுக்கிக் கீழே விழுகிறான்.)

சிம். :—அப்பா!

இ.பி. :—என்ன அது?

(விகடசீலன் வருகிறான்.)

விக. :—க்யா? மகராஜ்!

இ.பி. :—என்ன வந்தே சாயபு!

விக. :—என்னமோ யாரோ கீயே உயிந்தாப் போலே ஓசை கேட்டது. அது என்ன பாக்கலாமின்னு வந்தான்.

இ.பி. :—இங்கு ஒன்றுமில்லை.

விக. :—சரி ஆனால் போறேன்.

இ.பி. :—இரு, உன்னிடம் ஒரு சமாச்சாரம் சொல்ல வேண்டும்.

விக :—இன்னேரத்தில் என்ன சமாச்சாரம்?

இ.பி. :—அது ரொம்ப ரகசியம்.

விக. :—அப்படியானால் போலோ மகராஜ்!

இ.பி. :—என்னை ஒருவன் கத்தரிக் காய்க்குக் கால் முளைத்தாப்போலிருப்பதாகக் கூறினான்.

விக. :—அது என்ன? கத்தரிக் காய்ன்னா?

இ.பி :—அது ஒரு காய். அதைச் சாப்பிடறது. அது வட்டமாயிருக்கும்.

விக. :—அதுவா பெரிசா மேலே சாம்பல் பூசினாப்போலிருக்குதே!

இ.பி. :—சீ! அது அல்ல. கத்தரிக்காய் ரொம்ப சின்னது.

விக. :—அப்படியானால் அவன் சொன்னது ரொம்ப தப்பு.

இ.பி. :—என்ன தப்பு?

விக. :—அவ்வளவு சின்னதை உங்களுக்குச் சரியாகச் சொன்னானே. அது இருக்கட்டும். நாம்ப சொன்ன காயின் பேரென்ன? அரேரே அது மறந்து பூட்டானே!

இ.பி. :—அது பூசனிக்காய்.

விக. :—உங்களே பூசனிக்காய்க்கு கால் முளைத்தாப்போலே இருக்குதுன்னு சொல்லணும். அவன் உங்களே அவ்வளவு கொறச்சலா சொன்னது தப்புதான்.

இ.பி. :—(தனிமொழி) இவன் எப்படியாவது அதைத் தப்பிதமென்று நினைத்துக் கொள்ளட்டும்.

(வெளிப்படை) அதற்காக அவனை சிட்சிக்க வேண்டாமா?

விக :—ஆமாங்கோ, கட்டாயம் சிச்சிக்கணும். அவன் யாருன்னு சொன்னா அவன் மண்டையை பேத்துட்டேரன், இப்பவேண்டுமானாலும் அவனைக்கொன்று விட்டு வந்துட்டான்.

இ.பி. :—அவசரப் படவேண்டாம். மெதுவாக யோசித்துச் செய்ய வேண்டும். அந்த மனிதனைக் கொல்வது கஷ்டம்.

விக :—என்ன? நம்பகிட்ட கூட முடியாதா! நம்பள்கி யுத்தத்தில் எத்தனை பேரே கொன்னான்.

இ.பி. :—இது யுத்தமில்லையே. அத்துடன் அந்த மனிதனைப் பார்ப்பது மிகவும் கஷ்டம். அவன் வீட்டில் எவ்வளவோ காவல் இருக்கிறது. அதை எல்லாம் தாண்டிக் கொண்டு எப்படி அவனைக் கொல்லப் போகிறாய்?

விக. :—இதெல்லாம் நம்பள்கி என்னத்துக்கு? நம்ப கிட்ட ஒரு பேச்சு சொன்னா, அவன் படே ராஜாவாயிருந்தாலும் ஒரு குத்து உசர் போய்விடும்.

இ. பி. :—அவன் நீ சொன்ன பிரகாரம் ஒரு ராஜாதான். ஆனால் அவன் உனக்கு அகப்படமாட்டானே!

விக. :—அரே தத். இம்மாத்தம் தானா? அப்படியானா அவன் பேடிப்பையன். இப்போ நீங்க சொல்லிடுங்கோ. ஒரு நொடியில் எப்படியாவது அவன் வூட்டுக்கு போய் கொன்னு பூட்ரான்.

இ. பி. :—எப்படியடா போவாய்?

விக. :—இது தெரியாதா—சுவரேறிக் குதிப்பேன்.

இ. பி :—அவன் பேர் வீரசேனன்.

(விகடசீலன் வெளியே ஓடிப் போகிறான்.)

இ. பி. :—ஏ சாயபு! ஏ சாயபு!

(விகடசீலன் திரும்பிவருகிறான்.)

விக. :—க்யா மகராஜ்! என்ன கூப்பிட்டீங்கோ?

இ. பி :—எங்கே போகிறாய்?

விக. :—கத்தி கொண்டார.

இ. பி. :—அவன் இருக்குமிடம் தெரியவேண்டாமா?

விக. :—ஆம்போ.

இ. பி. :—அவன் அரண்மனையிலிருக்கிறான்.

விக :—இதோ அங்கு போய் கொன்னூட்டு, தலை கொண்டாரான்.

(திரும்பி ஓடப்பார்க்கிறான்.)

இ. பி. :—ஓடாதே. நான் சொல்வதை முழுவதும் கேள். அப்புறம் போகலாம்.

விக. :—அச்சா மகராஜ்!

இ. பி. :—அவன் இவ்வூர் அரசகுமாரன். ஆகையினால் முதலில் அரண்மனையில் சுற்றித்திரி. பிறகு அரசகுமாரனை அறிந்து கொள். அதன் பிறகு எப்படியாவது அவனை இராவிலேயே கொன்று விடு. அகப்பட்டுக் கொள்ளாதே. ஜாக்கிரதை, பிறகு எங்களுக்கும் கஷ்டம். முடியுமானால்போ, முடியாவிட்டால் சொல்லிவிடு.

விக. :—அரே! நம்பளால் முடியாதா அந்த பைத்தியத்தைக் கொல்ல.

இ. பி. :—உனக்கு நாளையிலிருந்து 5 நாள் ரஜா. அதற்குள் கொன்று விடு. ஆனால் ஏதாவது முக்கிய விஷயம் இருந்தால் வந்து சொல்லு.

விக. :—அச்சா.

இ. பி. :—சரி போகலாம், பத்திரம்.

(விகடன் சலாம் செய்துபோகிறான். சிம்மநாதன் திரையிலிருந்து வெளியே வருகிறான்.)

இ. பி. :—என்ன? எல்லாவற்றையும் கேட்டாயா? அவனைப் பற்றி உன் அபிப்பிராயமென்ன?

சிம். :—கேட்டேன். அவன் என்ன ஒருதரம் நம்பள்கி என்கிறான். மற்றொரு தரம் நீங்கள் என்கிறான். ஒவ்வொருதரம் ஒவ்வொருமாதிரி பேசுகிறானே!

இ. பி. :—ஆமாம்! அவ்வப்பொழுது திருத்திக் கொள்ளுகிறான். சில சமயம் மறந்து நம்பள்கி, நம்பள்கி என்கிறான்.

சிம். :—சரி, நான் நாளை மத்தியானம் வருகிறேன். அவன் ஏதாவது சமாச்சாரம் சொன்னால் சொல். உன் மனைவி உடம்பையும் ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்.

சிம். :—ஆகா! அப்படியே!

சிம். :—நாம் போவோம்.

(போகிறார்கள்.)

காட்சி முடிகிறது.

முதல் அங்கம். நான்காம் காட்சி.

இடம்—அரண்மனையின் சபாமண்டபம்.

காலம்: காலை

(விக்ரமபாகு, மதியூகி, சுகுணன், வீரசேனன், விகடசீலன் (சாயபு வேஷத்தில்) முதலியோர் வீற்றிருக்கின்றனர்.)

மதியூகி :—அரசே! வீரசேனனுக்குக் கெடுதி விளைவிக்க அவனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டியதைப் பொறாத சிலர் முயற்சிப்பதாகத் தோன்றுகிறது.

விக்ரமபாகு :—அதைத்தான் முன்பே கூறியுள்ளாயே.

மதி. :—ஆம் அரசே! அவனைக் காக்கச் செய்ய வேண்டிய ஏற்பாடுகளுக்கு தம்முடைய அனுமதி வேண்டும்.

விக். :—அதற்கென்ன?

மதி. :—அவன் இனித்தனியாக வெளிச்செல்லலாகாது. ஆகாரத்தைப் பரிசோதித்து உண்ணவேண்டும். இராக்காலங்களில் அரண்மனையை விட்டு நகரக் கூடாது.

விக். :—அவனுக்கு மெய் காப்பாளராக யாரை நியமிக்கப் போகிறாய்?

மதி. :—என் மகன் சுகுணன் இருக்கிறான். அதோ இருக்கும் சாயபுவையும் கூடவைத்துக்கொள்ள அனுமதி கேட்கிறேன்.

விக்.:—சாயபுவா? நீ அவனை அறிவாயோ?

மதி. :—இல்லை! ஆனால் சுகுணனுக்கு அவனிடம் நம்பிக்கை யுண்டு.

விக். :—ஆயின் சரி! சாயபுவை இவ்விடம் அழை.

மதி. :—(விகடசீலனை நோக்கி) ஏ சாயபு! இங்குவா! அரசர் அழைக்கிறார்.

(விகடசீலன் முன்பு மந்திரியிடம் சென்று பிறகு அரசரிடம் சென்று சலாம் செய்கிறான்.)

விக். :—உன் பெயரென்ன?

விக. :—காஜி, மகாராஜ்!

விக். :—(மந்திரியிடம்) கிழவன் போலிருக்கிறானே! (விகடசீலனை நோக்கி) சண்டை போடத் தெரியுமா?

விக. :—நம்பள் 15 வருஷம் பட்டாளத்திலிருந்தான்.

விக். :—சரி (சிறிது யோசித்து, மதியூகியை நோக்கி) இவன் யோக்கியதையைப் பற்றிச் சுகுணனை நம்பலாமல்லவா?

மதி. :—அதற்கென்ன அரசே! சுகுணன் தன் உயிரைப்போலன்றோ வீரசேனனை மதிக்கிறான்! அதிலும் இம்முக்கிய வேலைக்கு—

விக். :—ஆம்! ஆம்! சுகுணன் கூறுவதே போதும். புதியவனோ என நினைத்தேன்.

மதி. :—சுகுணனை அழைக்கவா? தாங்கள் அவனைக் கேட்கலாம்.

விக். :—அவசியமில்லை மந்திரி. (விகடனை நோக்கி) நீ இளவரசனை எந்நேரமும் ஒரு தீங்கும் அணுகாதபடி காக்கவேண்டும்.

விக. :—அச்சா மகாராஜ்!

விக். :—எல்லாமறிந்தாயா?

விக. :—(வீரசேனனை நோக்கி) இங்க இருக்காங்களே, இவங்களே நம்ப ராஜான்னு தெரியும் (யாவரும் நகைக்கிறார்கள்). (மதியூகியை நோக்கி) அவங்க மந்திரி. (சுகுணனை நோக்கி) அவங்......

விக். :—அது அல்லடா! நான் கூறியதை யறிந்தனையா? உன்னுடைய வேலையைப் பற்றியடா.

விக. :—தெரிஞ்சிகினே மகாராஜ்!

விக். :—மந்திரி! இவனுக்கு இங்குள்ளோர் யாவரையும் காண்பிப்பாய். வீரசேனா! இங்குவா.

(மந்திரியும் சாயபுவும் அரசனை விட்டு விலகிச் செல்ல, வீரசேனன் சிம்மாதனத்தை அணுகுகிறான்.)

விக் :—வீரசேனா! நீ இனி சுகுணனாவது அந்த சாயபுவாவது இல்லாமல் தனியாய் வெளிச் செல்லக் கூடாது. மற்றும், நிசிவேளையில் எக்காரணம் கொண்டும் அரண்மனையை விட்டு ஒரு அடிகூட எடுத்துவைக்கக் கூடாது.

வீர. :—அப்படியே அரசே! ஆயின்......

விக். :—(சிறிது புருவத்தை நெறித்து) ஆயின் என்ன?

வீர. :—என்னை என் அரசே குழந்தையைப் போல் நடத்துகிறீர்? எனக்கு ஆயுதங்களைக் கையாளத் தெரியாதா? என்னை எதிர்ப்பவனை அடக்க முடியாதா? இவ்வாறாக, எதற்கு அரண்மனையில் பயந்து ஒளிந்து கொள்ள வேண்டும்?

விக். :—வீரசேனா! நீ ஒன்றும் அறியாய். உனக்கு தைரியம் உண்டென்று அறிவேன். ஆயினும் சூதாக உன்னைக் கஷ்டத்துக்குட்படுத்த சதியாலோசனைகள் நடை பெறுவதனால் தனியே வெளிச்செல்வது தைரியமன்று, முட்டாள் தனம்...சுகுணா!

சுகு. :—அரசே!

(விக்ரமபாகுவை அணுகுகிறான்.)

விக். :—நான் முன்பே கூறி யிருக்கிறேன். இவனைக் காப்பது உன் கடமை. தனியாக வெளிச்செல்லாதேயடா என்றால், எனக்குப் பயமா என்கிறான். அவனை விட்டுப் பிரியாமல் பத்திரமாய்ப் பார்த்துக் கொள்.

(மந்திரி விகடசீலனுக்கு யாவரையும் சுட்டிக் காட்டி விட்டுத் திரும்புகிறான்.)

விக. :—மதியூகி! யாவரையும் அறிந்தனனா? இவர்கள் மூவருக்கும் கூறவேண்டியதைக் கூறு. (சபையோரை நோக்கி) இனி சபை கலையலாம்.

(மதியூகி, வீரசேனன், சுகுணன், விகடன் தவிர மற்றையோர் மறைகின்றனர்.)

மதி. :—சுகுணா! நீ சொன்னபடி அந்த சாயபுவை வேலைக்கமர்த்திக் கொண்டேன். நீ யாரையோ கிருத்ரமப் பிரபு வீட்டிற்கு அனுப்பினதாக கூறினாயே. அவன் ஏதாவது சமாச்சாரம் சொன்னானா?

சுகு. :—சொன்னான்.

மதி. :—என்ன சொன்னான்? அதை ஒன்றும் கூறவில்லையே!

சுகு.:—அவனையே சொல்லச் சொல்லுகிறேன். நீர் கேளும்.

மதி. :—சீக்கிரம் அழைத்துவா.

சுகு. :—அழைத்துக் கொண்டுவர வேண்டியதில்லை. அவன் இங்கேயே இருக்கிறான்.

மதி. :—அவன் யார், நீதானா?

சுகு. :—இல்லை.

மதி. :—ஆனால் இந்த சாயபுவா? இவனை எங்கு பிடித்தாய்?

சுகு. :—ஆம்! இவனை அரண்மனையில் தான் பிடித்தேன்.

மதி. :—இவன் யார்? (விகடனை உற்றுநோக்கி) எங்கோ பார்த்த மாதிரி இருக்கிறதே!

விக. :—நம்ப ஊர் மூர். நம்ப பேரு காஜின்னு சொல்றான். இந்த ஊருக்குப் புதிது.

மதி. :—(யோசித்து) நீயா, விகடசீலா! என்னைக்கூட ஏமாற்றிவிட்டாயே.

விக. :—நம்பளுக்கு அவன் தெரியாது.

மதி. :—போதும், இனி சாயபுவும் வேண்டாம், ஒருவரும் வேண்டாம். அவன் வீட்டில் நடந்த சமாச்சாரத்தைச் சொல்.

விக. :—என்ன சமாச்சாரம்?

மதி. :—அதுதான், அந்தக் கிருத்ரமப் பிரபு வீட்டில்—

விக. :—அரே! அது யார்வே, நம்பள்கி தெரிய மாட்டான். அப்பாலே நாம்ப ராஜாகிட்ட சொல்வான், கபர்தார்.

மதி. :—என்னடா இது, எப்பொழுதுமா விளையாட்டு? சுகுணா! அவனை நீ சொல்லச்சொல்.

சுகு. :—விகடசிலா! இன்னும் விளையாடாதே, சமாச்சாரத்தைச் சொல். பிறகு நல்ல சமயம் கிடைக்காது. இப்பொழுதே மெதுவாகச்சொல்.

விக.:—நீ யார்வே? உனக்குப் பைத்தியம் பிடிச்சாச்சா? நம்பளே என்ன சொல்லச் சொல்றே? இப்படி எல்லாம் பண்ணா ராஜாகிட்ட சொல்வான். தெரிஞ்சு போச்சா?

சுகு. :—சொல்லடா என்றால் என்னமோ ராமாயணம் பேசுகிறாயே.

விக. :—உங்கள்கி இப்படி பண்ணா சரிபடாது ராஜாகிட்ட சொல்ரான். (போகிறான்.)

சுகு. :—ஏ பைத்தியம்! இப்படிவா.

(அவனைப் பிடிக்கிறான். விகடன் திமிறப் பார்க்கிறான். உடனே தாடியை பிடிக்கப் போகிறான்.)

விக. :—அரே! அரே! அல்லாரே! அதே உடு ஐயா, நான் சொல்ரேன். (விட்டுவிடுகிறான்.)

சுகு. :—சொல்.

விக. :—என்ன ஐயா சொல்லணும்?

சுகு. :—அதிர் வெடி சமாச்சாரம்.

விக. :—எனக்கு அதிர்வெடி சமாச்சாரம் தெரியாது. ஆனால் துப்பாக்கி குண்டு சமாச்சாரம் சொல்லட்டுமா?

சுகு.:—அதுவல்ல. கிருத்ரமன் வீட்டு விஷயம்.

விக. :—அதுவா, என்ன சுருக்கமாகவா, விஸ்தாரமாகவா சொல்லணும்?

சுகு. :—எப்படியாவது சொல்லித்தொலையேன்.

விக. :—அப்படியானால் சொல்லமாட்டேன் போ.

சுகு. :—என்னடா இது? சுருக்கமாகச் சொல்லு. அதிக நேரமாயிற்று.

விக. :—சரி, நான் போனேனா? பிறகு இங்கு திரும்பிவந்து விட்டேன்.

சுகு. :—விவரமாக சொல்லு.

விக. :—அதை அப்பொழுதே சொல்லி இருக்கக் கூடாதா? சுருக்கமாக ஒரு தரம், விஸ்தாரமாக ஒருதரமா? சரி, அப்படி உட்காரலாம். (எல்லோரும் உட்காருகிறார்கள்.)

விக. .—எல்லாரும் நான் கூறுவதைக்கவனியுங்கள்! நான் இங்கு உலாவிக்கொண்டிருந்தேன். அப்பொழுது யாரோ வருகிற காலடிச் சத்தம் கேட்டது. அப்பொழுது நான் திரைக்குப் பின்னால் போய் மறைந்து கொண்டேன். அந்த விடத்தில் கூடையில் பழம் வைத்திருக்க.........

சுகு. :—இதை எல்லாம் யார் கேட்டது?

விக. :—விஸ்தாரமாகச் சொல்லச் சொன்னாயே.

சுகு. :—அவன் வீட்டில், கிருத்ரமப் பிரபுவும் சிப்பநாதனும் பேசிக்கொண்டிருந்ததை மாத்திரம் கேட்டேன்.

விக. :—அதுவா! அப்படிக் கேட்பதுதானே. இதற்கு சுருக்கமென்ன, விஸ்தாரமென்ன? அங்குபோனேன். திம்மன் போகவேண்டாமென்றான். அவன் என்னைத் தாத்தினான், நான் சண்டை போட்டேன்.

சுகு. :—உன்னை இதெல்லாம் யார் கேட்டது? எப்பொழுதும் கோணங்கித்தனமா? நீ சொல்ல வேண்டாம், நான் சொல்லுகிறேன் போ. (விகடன் அப்பால்போய் உட்காருகிறான்.)

சுகு. :—நம் இராஜகுமாரனை எப்படியாவது இன்னும் ஐந்து நாளில் கொன்று விட வேண்டுமாம். அதற்காக அந்த இரண்டு சனியன்களும் நமது விகடனை ஏற்பாடு செய்து அவனை இங்கு வேலைக்கு அமரும்படியாக அனுப்பியிருக்கிறார்கள்.

மதி. :—அப்படியானால் எனக்கு ஒரு யுக்தி தோன்றுகிறது.

வீர. :—அது என்ன?

மதி. :—இந்தப் பைத்தியம்—

விக. :—ஏ! யார்லே பைத்தியம்?

மதி. :—இந்தப் பிரபு விகடசீலர்—

விக. :—அப்படிச் சொல்லுங்கள்.

மதி. :—அந்தக் கிருத்ரமனிடம் சென்று, அரச குமாரனைக் கொல்ல வழி கண்டுபிடித்திருப்பதாகவும், அவர்கள் இருவரும் வந்தால் அரசகுமாரன் படுக்கை அறைக்கு அழைத்துப் போவதாயும், அவ்விடத்தில் அரச குமாரனும், சுகுணனும் மாத்திரம் இருப்பார்கள் என்றும், அப்பொழுது காரியத்தைச் சுலபமாக முடித்து விடலாமென்றும் சொல்லி, அவர்களை நாளை இரவு அழைத்துக் கொண்டு வரட்டும். அப்பொழுது நாம் பத்து சேவகர்களை வைத்துக் கொண்டு அந்த இரண்டு முண்டங்களையும் பிடித்து விடலாம். இதுதான் சுலபம்.

விக. :—அரே! பதினாலுபேர் என்னத்துக்கு மகாராஜ்?

மதி. :—பதினாலுபேர் யார்?

விக. :—நாம் நாலுபேர், சேவகர் பத்துப்பேர்.

மதி. :—ஆனால் அவ்வளவு பேர் வேண்டாமா?

விக. :—ஒத்தனை பிடிக்க, நாலுபேர் போதாதா?

மதி. :—ஒருவன் யார்?

விக :—அந்த தொப்பையாலே ஒன்றும் முடியாது. அந்த ஒரே ஆசாமியைப் பிடிக்க வேண்டும்.

வீர. :—அவன் சொல்லுகிறபடி செய்வது தான் நல்லது. ஆட்களிடம் சொன்னால், அவர்கள் இந்த விஷயத்தை வெளிப்படுத்தினாலும் படுத்துவார்கள்.

மதி. :—ஆட்களிடம் இதைப் பற்றிச் சொல்லப் போகிறோமா? வா என்றால் வருகிறார்கள். ஆனாலும் ஆட்கள் வேண்டாம்.

சுகு. :—விகடசீலா! எல்லாம் தெரிந்து கொண்டாயா?

விக. :—அரே! நம்பள்கி தெரியாத சமாச்சாரம் உண்டா?

வீர. :—வெகு நேரமாயிற்று, போகலாமா?

சுகு. :—ஆகா போகலாம்.

மதி. :—அப்படியே போவோம். சுகுணா! ஜாக்கிரதை. விகடசீலா! வீரசேனன் அருகிலேயே இரு.

விக. :—அதெல்லாம் உமக்கேன்? அந்த அதிர்வெடி இதை எல்லாம் யோசித்தது. நான் தைரியம் சொல்லி வந்திருக்கிறேன்.

மதி. :—நான் போய் வருகிறேன்.

விக. :—திவ்வியமாய்ப் போகலாம்.

சுகு. :—அரசகுமாரா! நாம் நமது இடத்திற்கு போகலாமா?

வீர. :—சரி, போகலாம்.

(எல்லோரும் போகிறார்கள்.)

காட்சிமுடிகிறது

முதல் அங்கம். ஐந்தாம் காட்சி.

இடம்—அரண்மனையில் ஓர் அறை.

காலம்—நள்ளிரவு.

(ஒரு கட்டிலின் மேல் மதியூகி முகத்தை மூடிக்கொண்டு படுத்திருக்கிறான். விகடசீலன் சாயபு வேஷத்துடன் கையில் கத்தி

யுடன் உள்ள சிருத்ரமனையும் சிம்மநாதனையும் அழைத்துக் கொண்டு வருகிறான்.)

விக. :—ஸ், மெதுவாய், அப்பாலே கெட்டு விடும், கபர்தார். (மெதுவாக, சிருத்ரமனைத் தள்ளி விடுகிறான். அவன் தொப் பென்று கீழே விழுகிறான். கையிலிருந்த கத்தி அவனைக் கீறி விடுகிறது.)

சிபி. :—ஐயோ! அப்பா! செத்தேன்! செத்தேன்! ஏ சாயபு! சிம்மநாதா! என்னைத் தூக்கிக் கொண்டு போய் விடுங்கள், இல்லா விட்டால் செத்தேன். (அவர்கள் அவனைத் தூக்கிக் கொண்டு போகப் பார்க்கிறார்கள். அதற்குள் எதிர்ப்புறமாக சுகுணன் ஓடி வருகிறான். மதியூகி எழுந்திருக்கிறான். உடனே சிம்மநாதன் ஓடிப்போய் விடுகிறான்.)

மதி. :—ஏ சாயபு! என்ன ஓசை, அரசகுமாரன் தூங்கும்பொழுது? என்ன இருட்டாயிருக்கிறது. விளக்கை ஏற்றுகிறது தானே!

சுகு. :—யாரோ திருடர்கள் போலிருக்கிறது. அவர்கள் ஒருவருக்கொருவர் சண்டை இட்டுக் கொண்டிருக்க வேண்டும். அவர்களைப் பிடி. எல்லோரும் ஜாக்கிரதை. (இதற்குள் சில ஆட்கள் ஓடி வருகிறார்கள். எல்லோரும் விகடசீலனையும் சிருத்ரமனையும் பிடித்துக் கட்டுகிறார்கள்.)

விக. :—அரே! நம்ளே யார்லே பிடிக்கிறது?

சுகு. :—நீங்கள் எல்லோரும் திருடர்களா என்ன? ராஜாவின் ஆளைப்பிடித்துக் கட்டுகிறீர்களே!

மதி. :—அந்த சாயபுவை ஏன் கட்டுகிறீர்கள்? விட்டுவிடுங்கள்.

சுகு. :—திருடனில் ஒருவன் ஓடி விட்டிருப்பான். அவனைப் பிடிப்பதற்குப் பதிலாக இவனைக் கட்டுகிறீர்களே. இதுதானா நீங்கள் வாயில் காப்பது? நன்றாயிருக்கிறது!

மதி. :—நீ யார்? ஏன் இப்படிக் கூச்சல் போட்டாய்?

சி. பி. :—ஐயா! கொஞ்சம் என் காயத்தை ஆற்றுங்கள். பிறகு எல்லா சமாச்சாரத்தையும் சொல்லுகிறேன்.

மதி :—(உடனே ஏதோ மருந்தைக் கொண்டு வரச் சொல்லி காயத்திற்குப் போடுகிறான்.)

மதி. :—இப்பொழுதாவது சொல்.

விக :—நாப்பள் சொல்றதைக் கேள். இது வைத்தியம். இப்படி வந்தாரு, தடுக்கி விழுந்து விட்டார் போலிருக்கிறது.

மதி. :—அப்படியானால் மற்றொருவன் யார்?

விக. :—அவன் பக்கா திருடன். அவன் வந்ததிற்கும் இது வந்ததிற்கும் சரியாக இருக்கவே, அவன் இதை அரண்மனை ஆசாமின்னு நினைத்து ஓடி விட்டான்......

சி. பி. :—இல்லை. இல்லை நான் நிஜத்தைச் சொல்லுகிறேன். என்னை மன்னிக்க வேண்டும். இது எல்லாம் இந்த சாயபு வேலை.........

விக :—சே! இது பைத்தியமின்னு சொன்னது நிஜமாய்விட்டது.

சி. பி. :—முழுவதும் கேளுங்கள் சற்று தயவு செய்து. என்னை இங்கு வரச்சொல்லி, பிறகு கீழே பிடித்துத்தள்ளி விட்டான்.

விக :—மகாராஜ்! இதிலே தெரிலே, அது பைத்தியமனு. அந்தத் திருடன் ஒருவேளை பிடித்துத் தள்ளி இருப்பான். இது முழுப்பைத்தியம். அல்லது அந்தத் திருடனே இங்கு இட்டாந்திருக்கணும்.

சி. பி. :—இல்லை, ஐயா! நானே அவனை அழைத்து வந்தேன். அவன் திருடன் அல்ல. நான் சிருத்ரமப் பிரபு, அவன் சிம்மநாதன்.

சுகு., மதி. :—அவன் சிம்மநாதனா?

சி. பி. :—ஐயா! இதுலே தெரிஞ்ச கூடாதா? யாராவது வெத்லைப்பாபூண்ணு பேர்வைச்சுகி வாங்களா?

மதி. :—ஏய்! பேசாமலிரு. அவர் எல்லாம் சொல்லி முடிக்கட்டும்.

சி. பி. :—நானும் சிம்மநாதனும் இந்த சாயபு மூலமாக வீரசிம்மனைக் கொல்ல நினைத்து வந்தோம். அப்பொழுது என்னை இவன் பிடித்துத் தள்ளி விட்டான்.

சுகு :—சரி, எல்லாவற்றையும் பிறகு விசாரிப்போம். டேய்! இவனை ஜாக்கிரதையாகக் காவலில் வையுங்கள். பத்திரம்.

சேவகர்கள் :—அப்படியே! உத்தரவு.

விக :—(சிருத்ரமன் காதில்) நான் பிறகு உன்னைத் தப்ப வைக்கிறேன். இப்போ சும்மா இருக்கணும், ஒன்றும் சொல்லவேண்டாம்.

மதி. :—(சேவகர்களைப் பார்த்து) நீங்கள் இந்த சாயபுவையும் காவலில் வையுங்கள். அவனும் இவர்களுக்கு உடந்தையாக இருக்கிறான் போலிருக்கிறது.

விக. :—அரே அல்லா! நாம்ப கூடவா?

(வேலைக்காரர்கள் அவனையும் தூக்கிக் கொண்டு போகிறார்கள்.)

சுகு. :—நம்முடைய முக்கிய ஆசாமி தப்பித்துக்கொண்டு ஓடி விட்டான். விகடன் கொஞ்சம் அவசரப்பட்டு விட்டான். இல்லாவிட்டால் அவனையும் பிடித்துவிட்டு இருக்கலாம்.

மதி. :—அவன் எங்கு செல்வான்? திரும்பியும் தன் இருப்பிடம் வந்து சேருவான். ஆ! அவனை அடுத்த மாதத்தில் நடக்கும் வீரர்களுடைய யுத்தத்தில் சேரச் சொல்ல வேண்டும். எப்படியும் அவன் சேருவான். சுகுணா! நீ தான் அவனை அதில் ஜயித்து வெளி விட்டுத் துரத்திவிட வேண்டும். அல்லது நம் இராஜகுமாரனுக்காக அவனைக் கொன்று வது விடவேண்டும்.

சுகு. :—உங்கள் யோசனை நல்ல யுக்திதான். ஆனால் அவனைக் கண்டுபிடித்துச் சொல்வது யார்?

மதி. :—ஏன்? நமக்கு சாயபு இருக்கும் பொழுது என்ன யோசனை? அவனையே அனுப்பிவித்தால், அவனுக்கு சிம்மநாதன் இருக்கும் இடம் அநேகமாகத் தெரிந்து இருக்கும். அவனிடம் விகடசீலன் போய், ஜயிலில் சிருத்ரமனை அடைத்து விட்டார்கள் என்றும், பழிக்குப் பழிவாங்க வீரர்கள் பந்தயத்தில் சேருவதுதான் நல்லது என்றும், அதில் வீரசேனனும் சேருவானென்றும், அதில் அவனைக் கொன்று விடலாமென்றும் சொல்ல வேண்டும்.

சுகு. :—நான் இப்பொழுதே சென்று விகடசீலனை விடுவிக்கச் சொல்லி இந்த சமாச்சாரத்தையும் சொல்லி அனுப்பி விடுகிறேன். இந்தக் காரியம் முடிந்த பிறகு அவன் சாயபு வேஷத்தைக் கலைத்து விட்டு பழையபடி விகடசீலனாக நம் அரண்மனைக்கு வந்து சேரச் சொல்லுகிறேன்.

மதி. :—சரி, அப்படியே செய்.

சுகு. :—ஆனால் போகிறேன்.

(இருவரும் போகிறார்கள்)

(காட்சி முடிகிறது.)

முதல் அங்கம். ஆறும் காட்சி.

இடம்—அரண்மனை சபாமண்டபம்.

காலம்—காலை.

(விக்ரமபாகு, மதியூகி, சுகுணன், வீரசேனன் முதலியவர்கள் வீற்றிருக்கிறார்கள்.)

விக்ரமபாகு:—மந்திரி! இராஜேந்திரன் வந்தால் தக்க ஏற்பாடு செய்து இருக்கிறதா?

மதி. :—எல்லாம் சித்தமாய் இருக்கிறது.

(விகடசீலன் பாடிக்கொண்டே வருகிறான்.)

விக. :—சாதி இரண்டொழிய வேறில்லை

சாற்றுங்கால் மேதினியில்

இட்டார் பெரியோர் இடாதார்

இழிகுலத்தோர் பட்டாணி ஒரு படி.

(எல்லோரும் நகைக்கிறார்கள்.)

விக். :—இது என்ன பாட்டு? சுத்த ஆபாசமாயிருக்கிறதே! அதன் பொருளை மாற்றி இருக்கிறாயே. அதனால் பாட்டு கெட்டுப் போய் விடாதா?

விக. :—மகாராஜா சொல்லும் விதம் பொருள் கெட்டுப் போகவேண்டுமென்று நான் பாட்டை மாற்றவில்லை. பொருள் சரியாகத் தெரியவேண்டுமென்றே மாற்றினேன். அது மகாராஜாவுக்குத் தெரியாவிட்டால் என் குற்றமல்ல.

விக். :—பாட்டைக் கெடுத்ததும் அல்லாமல் பொருளை விளக்குகிறேன் என்கிறாயே!

விக. :—மகாராஜா சற்று செவி கொடுத்தால் என் பாட்டின் பொருளை எடுத்துரைக்கிறேன். அதற்கு மேல், நான் வித்வானா அல்லவா என்று மகாராஜாவே தெரிந்து கொள்ளலாம்.

விக். :—ஆனால் சொல் பார்ப்போம்.

விக. :—'சாதி இரண்டொழிய வேறில்லை' இதன் அர்த்தம் நீங்களே அறிவீர்கள் அரசே! 'சாற்றுங்கால்'—உதைக்கும் பொழுது.

விக் :—பேஷ்!

விக :—கேளுங்கள் அரசே எல்லாவற்றையும். 'சாற்றுங்கால்'—அடிக்கும் பொழுது, எப்பொழுது என்பீர்களோ, மேதினியில்—தை மாதம் நடக்கப் போகும் வீரர் பந்தயத்தில், 'இட்டார்'—அடிப்பவர், பெரியோர்—பெரியோர்கள், இடாதார்—அடிக்காதவர்கள், இழிகுலத்தோர்—கீழ் சாதியினர். இதை நான் விளக்கிச் சொல்லியதற்காக பட்டாணி ஒரு படி—நல்ல வறுத்த பட்டாணி ஒரு படி அரசர் கொடுக்க வேண்டும்.

சுகு. :—மகாராஜா! விகடசீலனுக்குப் பட்டாணி ஒரு படி கொடுப்பதை விடத் தடியால் ஒரு அடி கொடுப்பது தகுதியாயிருக்கும்.

விக. :—தவாவர்களுக்கு என்ன உத்தமமென்று தோன்றுகிறதோ அதையே அவரவர்களுக்கு கொடுத்தால் போதும். எனக்குப் பட்டாணியின் பேரில் இஷ்டம். என் நண்பர் சுகுணனோ தனக்கு இஷ்டமானதைச் சொல்லி விட்டார். அதை அவர் வீரர் பந்தயதினத்தில், தடியால் இல்லாமல், ஈட்டியால் என்னிடம் பெற்றுக் கொள்வார். ஆனால் பட்டாணி மாத்திரம் எனக்கு இப்பொழுது வேண்டும்.

சுகு. :—நீ அன்று முதலில் இவ்வூரில் இருப்பது நிச்சயமா? 'புலிக்குப் பயந்தவன் என் மேல் படுத்துக் கொள்' என்று சொன்னவனுக்கு மூத்தவனாயிற்றே நீ. வீரர் பந்தயத்திற்கு ஒரு வாரம் முந்தி, உன்னைக் கட்டிப்போட்டு விடமாட்டேனா?

மதி. :—அரசே! தை பிறக்கப் போகிறதே, இன்னும் நாள் குறிக்கவில்லையே!

விக். :—விகடா! ஜோசியரிடம் போய் ஒரு நல்ல நாள் பார்த்துக் கொண்டுவா, சீக்கிரம்.

விக. :—நானே பார்த்து விட்டேன் மகாராஜ்.

விக். :—என்றைக்கு?

விக. :—தை மாதம், இருபத்திரண்டாந்தேதி, சனிக்கிழமை, பரணி நட்சத்திரம் கூடிய சூரிய கிரகணம். அன்று நல்ல நாள் என்று ஒரு குறிகூடப் போட்டிருக்கிறது.

விக். :—சபாஷ்! சனிக்கிழமையா பார்க்கிறது. வெகு நல்ல நாள். எல்லாம் நன்றாகச் சேர்ந்திருக்கிறது.

விக. :—சனிக்கிழமை ஒரு காரியம் ஆரம்பித்தால் அது ஸ்திரமாக நடக்கும் என்று புஸ்தகத்திலிருக்கிறது.

விக். :—பரணி மிகவும் சிரேஷ்டமா?

விக. :—'பரணியில் பிறந்தவன் தரணி ஆள்வான்' என்று இருக்கிறது. அத்துடன் பரணி பந்தயத்திற்கு நல்லது என்று பிரகஸ்பதி சொல்லி இருக்கிறார்.

சுகு. :—உன்னிடம் சொன்னாரா?

விக. :—என்னுடைய பெரியோர்களிடம் அப்படிச் சொன்னாராம்.

விக். :—சூரியக் கிரகணம் நல்லதோ?

விக. :—சூரியன் அன்றைக்கு சரியாகத் தெரியமாட்டான். ஆகையால், வீரர்களுக்கு யுத்தம் செய்வதற்கு வெய்யில் கஷ்டமில்லாமல் நிழலாயிருக்கும்.

விக். :—நல்ல புத்தி.

சுகு. :—பஞ்சாங்கத்தில் அது நல்ல நாள் என்று போட்டிருந்ததோ?

விக. :—ஆகா! நல்ல நாள் என்று தெரிவதற்காக மற்றைய தினங்களிலில்லாமல் அன்றைக்கு மாத்திரம் ஒரு பெரிய கருப்புப் புள்ளி போட்டிருக்கிறது.

விக் :—(சிரித்து) இனி உன்னைத் தான் அரண்மனை ஜோசியனாக வைத்துக்கொள்ள வேண்டும்.

விக. :—சந்தோஷம் அரசே!

விக் :—சுகுணா! நீ போய் நாள் குறித்துக் கொண்டுவா.

சுகு. :—சித்தம் (போகிறான்.)

மதி. :—அரசே! பந்தயத்தில் சேரவிரும்பிய வீரர்களின் பெயரை எழுதிக் கொண்டுவரும்படி சொன்னீர்களே. இதோ கொண்டு வந்திருக்கிறேன்.

விக். :—கொடு பார்க்கலாம் (மதியூகி கொடுக்கிறான்.) யார் பெயர்? சிம்மநாதனா! அவன் எங்கோ சொல்லாமல் ஓடிவிட்டானே. இப்பொழுது எங்கு வந்தான்?

மதி. :—அவன் இருப்பிடம் தெரியாது. ஆனால் அவன் கைப்பட எழுதிய கடிதம் வந்தது. தான் வீரர் பந்தயத்தில் சேருவதாக எழுதி இருக்கிறான்.

விக். :—எங்கு இருந்து வந்தது?

மதி. :—யாரோ ஒரு சேவகன் கொடுத்ததாக என் வேலையாள் சொன்னான்.

விக். :—சரி, உன் குமாரன் சுகுணன் கூடவா சேரப்போகிறான்?

மதி. :—ஆம். (சுகுணன் வருகிறான்.)

சுகு. :—இதோ கொண்டுவந்திருக்கிறேன். (ஒரு சீட்டை அரசனிடம் கொடுக்கிறான்.)

விக். :—தைமாதம், வெள்ளிக் கிழமை, 14-ம் தேதி, பூராட நட்சத்திரத்துடன்கூடிய சுபதினத்தில்........மதியூகி! இன்னும் அதிக நாள் இல்லை. சீக்கிரம் எல்லா ஏற்பாடும் செய்.

விக. :—அரசே! ஒரு விண்ணப்பம்.

விக். :—என்ன?

விக. :—நான் கூட வீரர் யுத்தத்தில் சேர உத்தரவு கொடுக்கவேண்டும்.

விக். :—உனக்கென்ன? யுத்தம் செய்யத் தெரியுமோ?

விக. :—யுத்தமா செய்ய வேண்டும்?

விக். :—பின் என்னவென்று நினைத்தாய்?

விக. :—சாப்பாடு, தீப்பாடு பந்தயம் இருக்குமென்று நினைத்தேன். நான் சேரமாட்டேன்.

விக். :—உன்னை யார் சேரச்சொல்லியது? வெகு தைரியசாலி. இனி சபை கலையலாம்.

விக. :—கொஞ்சம் தூங்கவேண்டும். நான் தூங்கி எழுந்த பிறகு சபை கலையலாம்.

விக். :—உன்னை யார் கேட்டது?

விக. :—உங்களிடம் யார் சொன்னது?

விக். :—சரி, இனிக் கலையலாம்.

விக. :—இனி நான் தூங்கலாம்.

(விகடன் தவிர எல்லோரும் போகிறார்கள்.)

விக. :—ஐயோ! பயமாயிருக்கிறதே! இங்கு ஒருவருமில்லையே. நாமும் போகலாம். கொஞ்சம் பசிக்கிறது. (போகிறான்.)

(காட்சி முடிகிறது.)

முதல் அங்கம். ஏழாம் காட்சி.

இடம்—அரண்மனையில் ஓர் அறை.

காலம்—சாயங்காலம்.

(விகடசீலன் வருகிறான்.)

விக. :—சபாஷ்! பலே கெட்டிக்காரன் நான், நம்ப பக்கம் தான் இன்று ஜயம். நான் இருக்கும் வரையில் எதிரி ஜயிப்பானா? நான் சிம்மாதனுடைய குதிரையைக் கல்லால் அடிக்காமலிருந்தால், அவன் ஒரே குத்தில் வீரசேனனைக் கொன்றிருப்பான். நான் அடிக்கவே அவன் குதிரை மிரண்டு வேறு பக்கம் ஓடிற்று. அவன் குதிரை அடிபடாமலிருந்தால், அவனை ஜயித்திருக்கமுடியாது. சிம்மாதன் குதிரை அவன் கைக்கு அடங்காமல் போகவேதான் வீரசேனன் அவனை சுலபத்தில் கீழே தள்ளினான். அவன் கீழே விழுந்த விதம் தான் ரொம்ப வேடிக்கை. அவனுடைய கால் குதிரையின் ஜேணத்தில் அகப்பட்டுக் கொண்டு இருக்கும்பொழுது நான் எறிந்த மற்றொரு கல் அக்குதிரையை ஓடச் செய்தது. அப்பொழுது அவனையும் அப்படியே இழுத்துக்கொண்டு போனது தான் வேடிக்கை. பலேபேஷ்! நான் தான் சிறந்த யுத்த வீரன். எனக்கு யுத்தம் செய்யும் முறை இவ்வளவு தெரிந்திருந்தும் அரசர் அன்று என்னை யுத்தம் செய்யத் தெரியுமாவென்று கேட்டார்! எனக்கா தெரியாது. நான் அநேகருக்குக் கற்றுக் கொடுப்பேன். இனி அரசரிடம் என்னைச் சேனாதிபதியாக்கச் சொல்லப் போகிறேன். இப்பொழுது அரசகுமாரனே சேனாதிபதி. இனி நான் தான் என்பது நிச்சயம். எனக்கு இருக்கும் தைரியம் இங்கே ஒருவருக்குமே இல்லை. வீரசேனனுக்குத் தான் என்ன தெரியும்? என்னுடைய தைரியம் வருமா. இந்த சுகுணப் பயல் வீரசேனனுடன் சண்டை செய்யும்படி சேர்ந்த பொழுது, பயந்துபோய், "நான் வீரசேனனுடன் சண்டை செய்யமாட்டேன். நான் தோற்று விட்டதாக வைத்துக் கொள்ளுங்கள்" என்று சொன்னான். அவன் ஒரு சுத்த பயங்காளி. சிம்மாதனுக்கு நான் கல் எறிந்தது தெரிந்து விட்டது போலிருக்கிறது. இனி நான் அவன் கண்முன் தென்படக் கூடாது. அப்படித் தென்பட்டால் என்னைக் கட்டாயம் கொன்று விடுவான். அதற்கு சந்தேகமேயில்லை. அதோ யாரோ காலடி சப்தம் கேட்கிறதே. நான் செத்தேன். அவன் வந்தால் என்னைக் கட்டாயம்கொன்று விடுவான். நான் இப்பொழுதே மறைந்து கொண்டால் தான் பிழைத்தேன். ஈசா! என்னைக் காப்பாற்றும்.

(கீழே போட்டிருந்த ஜமக்காளத்தின் கீழ் மறைந்து கொள்ளுகிறான். சுகுணன் வருகிறான்.)

சுகு. :—(தனிமொழி.) நாம் ஒரு வேடிக்கை செய்யலாம். (வெளிப்படையாக) எங்கே அந்த விகடன்? அவனைக் கொன்று விட்டு மறு வேலைபார்க்கிறேன். என் தலைபோகிறதாயிருந்தாலும், அவனைக் கொன்று விட்டுத் தான் என் உயிரை விடுவேன். அவனைக் கொல்லா விட்டால் என் பெயர் சிம்மாதனல்ல

அவன் இங்கு தான் போனான் என்று சொன்னார்கள். இங்கு எங்கேயாவது மறைந்திருக்க வேண்டும். ஆகையினால் இங்கு நன்றாய்த் தேடவேண்டும்.

விக. :—(மறைவிடமிருந்து) ஐயா! அவன் இங்கு இல்லை, சபாமண்டபத்திலிருக்கிறான்.

சுகு. :—அதோ அவன் குரல். வெளியில் தானிருக்க வேண்டும். அங்கு போய்ப்பார்க்கலாம். (வெளியே போகிறாப் போல் அபினயத்து ஒரு ஆசனத்தில் உட்காருகிறான்.)

விக. :—(வெளியே வந்து) அப்பா! ஒழிந்தது சனி. இப்பொழுதே ஓடிப் பிழைக்க வேண்டும். இல்லாவிட்டால்—என் ஒரு யோசனை தோன்றுகிறது. நான் எப்பொழுதும் அரசகுமாரனுடனிருக்க வேண்டும். அப்பொழுது அவன் கிட்ட நெருங்கான். (போகப் பார்க்கிறான்.)

சுகு. :—அதோ இருக்கிறான்.

விக. :—(தனிமொழி) ஐயோ! செத்தேன். திரும்பிப்பார்த்து (வெளிப்படையாக) இவனா! சிம்மாதா! போய் விடு. இல்லாவிட்டால் கொன்றுவிடுவேன்.

சுகு. :—(சிரித்து) நீயா ஒரு சூரன். நீ சொல்லியதெல்லாம் கேட்டேன். அவனிடம் என்னடா அவ்வளவு பயம்?

விக. :—சுகுணா! எனக்கு நீ வந்திருப்பது தெரியும். நான் வேடிக்கைக்காக அப்படிச் செய்தேனே தவிர நிஜமாக அவனிடம் எனக்குக் கொஞ்சமும் பயமில்லை. சீ! அந்த அற்பப் பயலுக்கா நான் பயப்படுவேன்? அவனைப் போல் லட்சம்பேர் வந்தாலும், அவர்கள் எல்லோரையும் யமன் வீட்டுக்கனுப்புவேன். என்னை யாரென்று நினைத்தாய்?

சுகு. :—உன்னை பயங் கொள்ளியென நினைத்தேன். இப்பொழுது தெரிந்தது நீ சூரன் என்று. வா! அரசர் கூப்பிடுகிறார், போவோம். இதே மாதத்தில் நமது அரசகுமாரருக்குக் கலியாணம் நடக்கப் போகிறது.

விக. :—பலே! சபாஷ்! ஐந்து நாள் கொஞ்சம் வயிறு நிறையச் சாப்பாடகப்படும்.

சுகு. :—கொஞ்சம் வயிறு ரொம்பவா? என் திருப்தியாகத் தின்கிறது தானே?

விக. :—கொஞ்சம் திருப்தியாகத்தான்!

சுகு. :—கொஞ்சம் திருப்தியாகத்தானா! வா, போவோம்.

(போகிறார்கள்.)

காட்சிமுடிகிறது.

முதல் அங்கம். எட்டாம் காட்சி.

இடம்—அரண்மனை நந்தவனம்.

காலம்—மாலை.

(வீரசேனன் ஒரு கல்லின்மேல் உட்கார்ந்திருக்கிறான் அப்பொழுது ஒரு புறமாக மோகனா பாடிக் கொண்டே வருகிறாள்.)

வீரசேனன் :—என்ன இனிமையான குரல்! என்ன அழகு! என்ன நடை! ஆகா! பெண் என்றால் இவள் தான் பெண். இவளை அடைய நான் செய்த பாக்கியமே பாக்கியம். அவள் என்னமோ பேசுகிறாப் போலிருக்கிறதே!

மோகனா :—இங்குதான் அவர் போனதாகச் சொன்னார்களே! எங்கும் காணோமே. சற்று தேடுவோம். (தேடுகிறாள்.)

வீர. :—நம்மைத்தான் தேடுகிறாள். நாம் சற்று மறைந்து கொள்வோம.

மோ. :—எனக்கு வெட்கமாயிருக்கிறது. அவர் இருக்குமிடம் போனால், அவர் என்னை என்னவென்று நினைத்துக் கொள்வாரோ. அதோ! அங்குமிருப் போலிருக்கிறது. நான் எப்படி அவர்முன் போவது. நாம்

இங்கு சற்று நேரம் பாடுவோம். அவர் எதையோ வாசிக்கிறார் போலிருக்கிறது. நாம் பாடுவோம். (பாடுகிறாள்.)

வீர. :—ஆகா! என்ன இனிமையான குரல்! (மோகனா பாடிக்கொண்டே வீரசேனன் இருக்குமிடம் வருகிறாள். வீரசேனன் புஸ்தகத்தை மூடிவிட்டு அவளை நோக்குகிறான். உடனே அவள் வெட்கி, பாடுவதை நிறுத்திவிட்டுத் தலையை குனிந்து கொண்டு போகப் பார்க்கிறாள்.)

வீர. :—மோகனா! என்னைக் கண்டால் பயமாயிருக்கிறதா என்ன? இவ்விடமிருக்க பயமாயிருக்கிறதா? அப்படியானால்போ, நான் தடுக்கவில்லை. (மோகனா அங்கேயே நிற்கிறாள்.) என்ன பாடுவதை நிறுத்திவிட்டாய். நான் உன் பாட்டைக் கேழ்கக் கூடாதா? நான் கேழ்கக் கூடாதென்றால் பாடவேண்டாம்.

மோக. :—(பூமியைப் பார்த்தவண்ணம்) நீங்கள் கேட்டுத் திருப்தி அடைந்தால் தான் எனக்கு சந்தோஷம். நீங்கள் கேட்காமல், வேறு யார் கேட்க நான் பாடுவது.

வீர. :—அப்படியானால், நீ பாதியில் பாடி நிறுத்தியதை முழுவதும் பாடு. (மௌனமாய் நிற்கிறாள்.) சரி, உனக்குப் பாட இஷ்டமில்லை போலிருக்கிறது.

மோக. :—நல்ல ஆயுதம். (பாடுகிறாள்.)

வீர. :—இப்படி உட்கார். (நிற்கிறாள்.)

வீர. :—என்ன உட்காரக் கூடாதா?

(கையை பிடித்து இழுத்துட்காரச் செய்கிறான்.)

வீர.:—இன்னொரு பாட்டுப் பாடு, நான் கேட்க வேண்டும்.

மோக. :—இப்பொழுதே நேரமாய் விட்டது. என்னைத் தேடுவார்கள். நான் போக வேண்டும்.

வீர. :—இதற்குள்ளாகவா போகவேண்டும்? நீ இங்கு வந்து இரண்டொரு நிமிடம் கூட ஆகவில்லையே!

(விகடன் வந்து இவர்களைப் பார்த்து மறைந்து கொள்ளுகிறான்.)

மோக. :—நான் வந்து வெகு நேரமாக உலாவிக் கொண்டிருந்தேன்.

வீர. :—சரி, அப்படியானால் போ!

(மோகனா போகிறாள்.)

விக :—(வெளியேவந்து) அரசகுமாரா! அரசகுமாரா! இதென்ன பேசவில்லை. அரசகுமாரா! வீரசேனா!

வீர :—நீ எங்கு வந்தாய்?

விக. :—நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்? எதைப் பார்த்துக் கொண்டிருந்தாய்?

வீர. :—நானா...............

விக. :—என்ன? நீதான்.

வீர. :—இங்கு ஒரு மான் குட்டி வந்தது அதைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அது திடீரென்று மறைந்து விட்டது.

விக. :—அது என்ன மான்? ஆண்மானா, பெண்மானா?

வீர. :—விளையாடாதே, நான் ஆணையும், பெண்ணையும் பார்த்தேனா. ஒரு மான்குட்டி வந்தது. அதைச் சொன்னால், அது ஆணா, பெண்ணா என்கிறாயே!

விக. :—இதற்கெல்லாம் கோபம் வேண்டாம்.

வீர. :—எங்கு வந்தாய்?

விக. :—நான் ஒன்று கேட்கிறேன். மன்னிக்க வேண்டும்.

வீர. :—என்ன?

விக. :—அது இரண்டு கால் பெண் மானா?

வீர. :—என்ன உளருகிறாய்? நான் சொல்வதைக் கேள்.

விக.:—தாங்கள் சொல்வதைக் கூடக் கேட்காமலிருப்பேனா! அந்த மான் வெகு அழகானது போலிருக்கிறது.

வீர. :—விகடசீலா! நான் சொல்வது என்னவென்றால், அந்த மானைப் பிடிக்கவேண்டுமென்று இருந்தேன், ஆனால் அது ஓடிப் போய் விட்டது. அதற்காக வருத்தப்பட்டுக் கொண்டிருந்தேன்.

விக. :—ஓடியா போய் விட்டது? அப்படியானால் பொல்லாத மான். அரசகுமாரர் கூப்பிட்டால், ஓடியா போய்விடுகிறது! நான் நமது அரசரிடம் சொல்லி அந்த மானைப் பிடித்துத் தருகிறேன். நீர் வருந்தப் படவேண்டாம். எப்படியானாலும் நாளைக்கு அது உம்முடையதாய் விடுகிறது. பிறகு உமக்கு வருத்த மெதற்கு? எப்பொழுதும் அத்துடன் கொஞ்சி விளையாடலாம்.

வீர. :—விளையாடாதே! அது இனி அகப்படாது. எங்கு ஓடிவிட்டதோ, யாருக்கு தெரியும்.

விக. :—இராஜகுமாரா! அது உம்மிடம் என்ன சொல்லிற்று? நாளைக்கு நீ என்னை அடைவாய் என்றதா?

வீர. :—என்ன? அதிகமாக விளையாடுகிறாய். பிறகு அரசரிடம் சொல்லி உன்னை அரண்மனையிலிருந்து துரத்திவிடுவேன்.

விக. :—சரி, அப்படியே செய்யும். அவர் யார் பக்கம் தீர்ப்புச் சொல்லுகிறார் என்று பார்ப்போம். நீங்கள் நிஜமான மானைப் பார்த்ததாகச் சொல்லுங்கள். நான் நிஜமான இரண்டு கால் பெண் மானைப் பார்த்ததாக சொல்லுகிறேன்.

வீர. விகடசீலா! உனக்கென்ன பைத்தியமா? அதைப்பற்றி ஒருவரிடமும் சொல்லாதே, ஜாக்கிரதை.

விக. :—சொல்லாமலிருந்தால் எனக்கென்ன தருகிறீர்?

வீர :—உனக்கு என்ன வேண்டுமோ அது தருகிறேன்.

விக. :—சரி, வேண்டியதைப் பிறகு கேட்டுக் கொள்ளுகிறேன். உங்களை அரசர் அழைத்து வரச்சொன்னார்.

வீர. :—என்னையா? எதற்காக?

விக. :—அதெல்லாம் எனக்குத் தெரியாது.

வீர. :—சரி, ஆனால் போகலாம்.

(போகிறார்கள்.)

காட்சிமுடிகிறது.

முதல் அங்கம். ஒன்பதாம் காட்சி.

இடம்—அரண்மனைக் கலியாண மண்டபம்.

காலம்—காலை.

(விக்ரமபாகு, மதியூகி, சுகுணன், விகடசீலன், ராஜேந்திரன் முதலியவர்கள் ஒருபக்கம் இருக்கிறார்கள். நடுவில் வீரசேனனும் மோகனாவும் உட்கார்ந்திருக்கிறார்கள். அவர்கள் அருகில், ஒரு புரோகிதரும பிராமணர்களும் உட்கார்ந்திருக்கிறார்கள். புரோகிதர் மந்திரத்தை சொல்லுகிறார்.)

விக. :—தத்தியோதனம் தயாசிந்தோ
புளியோதரை பொகு சொகுசு
சக்கரைப்பொங்கல் தேகபுஷ்டி
மங்களம், ஜயமங்களம்.

ஏ! மேளம் அடி, நேரமாய்விட்டது.

புரோ. :—ஐயா! கொஞ்சநேரம் பேசாமலிரும்.

விக்.:—விகடா! நீ பேசாமலிருக்கமாட்டாயா?

விக.:—இல்லை அரசே! எனக்கு ரொம்பப் பசி. அதற்காக சீக்கிரம் மங்களமும் சொல்லி விட்டேன். மேளமும் அடிக்கச் சொன்னேன். இனி சாப்பாடுதான் பாக்கி.

விக்.:—நீ வேண்டுமானால் போய் சாப்பிடு. புரோகிதரே! ஆகட்டும்.

விக.:—அப்படிச் சொல்லுங்கள்.

(புரோகிதர் மந்திரம் சொல்லுகிறார். பிறகு மாங்கல்யத்தை வீரசேனன் கையில் கொடுக்க, அதை அவன் மோகனை கழுத்தில் கட்டுகிறான், மேளம் அடிக்கிறார்கள்.)

விக.:—அரசகுமாரா! மான்குட்டி பார்ந்தாயா? உன் அருகிலேயே வந்து விட்டது.

வீர.:—சிரிக்கிறான். (பிறகு எல்லோரையும் வணங்குகிறான், எல்லோரும் வாழ்த்துகிறார்கள்.)

விக.:—நீ மான் குட்டியோடு எப்பொழுதும் கொஞ்சி விளையாடிக்கொண்டிரு.

விக்.:—உன் மான் குட்டியையும், உன்னையும் அடித்து வெளியில் துரத்தாமல், போடா வெளியே.

விக.:—மகாராஜா! கோபித்துக் கொள்ளக் கூடாது. அந்த மானை விட்டு இனி நமது அரசகுமாரன் அரைக்ஷணமும் பிரிந்திருக்க மாட்டார். அது அவர் கைக்கு வருமுன்னமேயே அதனுடன் நந்தவனத்தில் விளையாடினார். இனிக் கேட்பானேன். அதை வெளியே துரத்தச்சொன்னீர்களே; அதை இனி துரத்துவீர்களா? அதுதான் நமது மோகனை.

(மோகனையும், வீரசேனனும் தலையைக் குனிந்து கொள்ளுகிறார்கள். விக்ரமபாகு சிரிக்கிறான்.)

விக்.:—க்ஷேமமாய்விட்டது. இனி எல்லோரும் சாப்பாட்டுக்குப் போகலாம்.

விக.:—சபாஷ்! எல்லோரும் சீக்கிரம் வாருங்கள். இல்லையேல் மிஞ்சிவிடும்.

விக்.:— இராஜேந்திரரே! வாரும்.

(எல்லோரும் போகிறார்கள்.)

காட்சி முடிகிறது.

முதல் அங்கம், பத்தாம் காட்சி.

காலம்—காலை.

இடம்—அரண்மனை.

(விகடசிலன் படுத்துக்கொண்டு உருளுகிறான்)

விக.:—அடேயப்பா! இனிமுடியாது. நான் சாக வேண்டியதுதான். இனி மூன்று நாள் சாப்பிடாமலிருந்தால்தான் பிழைத்தேன். என்னால் எழுந்திருக்கவும் முடியவில்லையே. பிள்ளையாருக்கு வயிறுவெடித்தாப்போல் வெடித்துத்தான் போகும்.

(சுகுணன் வருகிறான்.)

சுகு.:—பிள்ளையாருக்கு எப்பொழுது வயிறு வெடித்தது?

விக.:—முதலில் என்னை உட்காரவை. பிறகு சொல்லுகிறேன்.

(சுகுணன் தூக்கி உட்காரவைக்கிறான்.)

சுகு.:—உம், இப்பொழுது சொல்.

விக.:—சொல்லுகிறேன் கேள்! ஒருநாள் பிள்ளையார் திவசத்திற்குச் சாப்பிட்டார். அவர் ரொம்ப ஐஸ்வரியாக சாப்பிட்டுவிட்டதால் நகரமுடியவில்லை. இரவு எட்டு மணிக்கு மெதுவாகப் புறப்பட்டார். அப்பொழுது அவர் தொப்பை வெடித்து உண்டதெல்லாம் கீழே சிந்திவிட்டது. உடனே அவர் கீழே சிந்தியதை எல்லாம் எடுத்து வயிற்றுக்குள் வைத்து மூன்போல்மூடி அங்கு ஓடிக் கொண்டிருந்த ஒரு பாம்பை எடுத்துத் திரும்பவும் கீழே விழாமல் இருக்கும்படி கட்டிவிட்டார். அப்பொழுது சந்திரன் இதை எல்லாம் பார்த்து சிரித்தான். உடனே அவருக்குக் கோபம் வந்தது. அவர் 'நீ நாசமாய்ப் போக' என்று சபித்து விட்டார். உடனே உலகெங்கும் இருட்டிவிட்டது. தேவர்கள் எல்லோரும் விஷ்ணு,

பிரம்மா, ருத்திரன் கூட வந்து பிள்ளையாரை வேண்டிக்கொண்டனர். பிறகு அவருக்குக் கருணை வந்தது. 'நீ கொஞ்சம் கொஞ்சமாக வளரவேண்டும். ஒருநாள் உன் பூர்ண ரூபத்துடன் இருக்க வேண்டும். பிறகு கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து ஒருநாள் தெரியாமல் போக வேண்டும். இம்மாதிரி 15 தினங்களுக்கு ஒருதரம் மாறவேண்டும்' என்றார். அதனால் தான் அமாவாசை பௌர்ணமி உண்டானது.

சுகு.:—(சிரித்து) இனி, நீ பழைய புராணம், இதிஹாஸம் முதலியவைகளைக் கிழித்துப் புதிதாக எழுது.

(புரோகிதர்கள் வருகிறார்கள்.)

புரோ.:—என்ன இன்னும் இளவரசர் வரவில்லை. அனுஷ்டானம் முதலியவைகள் ஆயிற்று?

சுகு.:—எல்லாம் ஆச்சது. இதோ வந்து விட்டார்.

விக.:—என்ன புரோகிதர்களே! நீங்கள் நல்ல அதிர்ஷ்டசாலிகள். நீங்கள் பணமாக முடிச்சுக்கட்டிக் கொண்டீர்கள். நான் சாப்பாடாகக் கட்டிக்கொண்டேன்.

புரோ.:— உமக்கென்ன ஓய்! அரண்மனை எல்லாம் உம்முடையதே.

(விக்ரமபாகு, மதியூகி, ராஜேந்திரன் முதலியவர்கள் வந்து ஓர் ஆசனத்தில் அமர்கின்றனர். வீரசேனன் சிம்மாதனத்தில் உட்காருகிறான். மோகனை பக்கத்தில் உட்காருகிறாள்.)

விக்.:—இனி ஆரம்பிக்கலாம்.

(புரோகிதர்கள் சாஸ்த்ரோக்தமாக விக்ரமபாகுவின் கையால் இளவரசருக்கு முடி சூட்டுவிக்கிறார்கள்.)

(பிறகு எல்லோரும் மங்களம் பாடுகிறார்கள்)

காட்சி முடிகிறது.

சுபம்.

காவிரிப்பூம்பட்டினக் கன்னிகை.

(திரு. கா. சிவசங்கர முதலியார்,
விரிவுரையாளர்,
சென்னை புலால் மறுத்தல் சங்கம்.)

கடற்கரை யோரத்திலே தாழை வேலி சூழ்ந்த காவிரிப் பூம்பட்டினத்திலே செல்வப் பொருள் நிரம்பிய ஓர் வணிகன் கற்பிற் சிறந்த தன் இல்லத்துணைவியுடன் பல ...லற மியற்றிய பயனாய் ஒரு நகை மதிக்கொடி... பெற்று சீருஞ் சிறப்புமாய் வளர்த்துவந்தான். இவ்வணிகற்குத் தங்கை மகன் ஒருவன் மதுரை... கலியாணஞ் செய்து கொண்டு மனைவியுடன் ...ழ்ந்து கொண்டிருந்தான். இந்த மருமகனுக்குத் தான் அருந்தவத்தாற் பெற்ற மயில் போல் சாயலுடைய கன்னையை இரண்டாவது மனைவியாய் மணஞ் செய்துக் கொடுக்கப் போகிறேனென்று தனக்கொத்த சுற்றத்தார்களுக்கெல்லாந் தெரிவித்திருந்தான். அத்தகைய வணிகர் கோமான் தன் மகளுக்குக் கடிமணஞ் செய்து காண்பதன் முன்னே வைசூரியால் உயிர்துறந்தான். கற்புக்கரசியாகிய அவன் மனைவியும் அவனோடு இறந்தாள். சுற்றத்தார் கூடி இவ்விருவர்க்கும் ஈமக்கடன் முடித்து

மதுரையிலுள்ள மருகற்கு அடியிற் காணும் நிருபம் எழுதினார்கள்.

ஐயா!

தங்கள் அரிய மாமனார் இறந்தார். அவர் மனைவியாரும் ஆருயிர் துறந்தார். அவருக்கு அளவில்லாத செல்வப் பொருள் உண்டு. நெடுங் காலம் பிள்ளைப் பேறின்றி அவர் தவஞ் செய்து ஒரு பெண்ணைப் பெற்றார். அப்பெண்ணை தங்களுக்கே கலியாணஞ் செய்து கொடுக்க வேண்டுமென்று எங்களிடஞ் சொல்லிக் கொண்டு இருந்தார். அத்தகைய கன்னிகையைத் தாங்கள் வந்து மணந்து போகும்படி தெரிவிக்கிறோம்.

இங்ஙனம்,
காவிரிப் பூம்பட்டின வாசிகள்.

மதுரை மாப்பிள்ளை வணிகர் இந்த நிருபத்தை வாங்கிப் படித்துத் தரை மேல் விழுந்து புரண்டனர். பெருமூச் செறிந்தனர் கண்ணீர் ஆறாய் ஓட அழுதனர். அம்மவோ என்றாற்றினர். கிளைஞரும் நண்பரும் தேற்ற ஒருவாறு தேறி மாமன் நகராகிய காவிரிப்பூம்பட்டினம் போகத் துணிந்தனர்.

மதுரையில் உள்ள சுற்றத்தாரிடம் சொல்லிக் கொண்டு வழியிற் காணும் நண்பர்களிடம் சேர்ந்து கூறிக் காவிரிப்பூம்பட்டினம் சார்ந்து தன் மாமன் வீட்டில் சிலகாலந் தங்கியிருந்தார்.

பின்னர் மாமன் சேர்த்துவைத்த பொருள்களையெல்லாம் எடுத்துக் கொண்டு வாள் போலும் நீண்டு மையுண்ட கண்களையுடைய தன் மாமன் செல்வ மகளையும் உடனழைத்துக் கொண்டு மதுரையிற் போய்க் கலியாணஞ் செய்து கொள்வதாய் அங்குள்ளார் பால் கூறி, செலவு பெற்றுக் கொண்டு வழிவிடவந்தாரை நிறுத்திவிட்டுச் சில சுற்றத்தாரை முன்னே செல்லும்படி அனுப்பிவிட்டுத் தானும் மாமன் மகளும் பணியாளருமாகப் பாதிவழிக்கு மேல் வந்து திருப்புறம்பயம் என்கிற ஊரையடைந்தார்கள். சூரியன் மேற்கடல் குளிக்கும் போது தாங்களுங் குளத்திற் குளித்து ஒரு வன்னி மரத்தின் கீழே சமையல் செய்து உணவருந்தி மேருவில்லையுடைய சிவ பெருமான் கோயிற் படியின் மேற்றலைவைத்துத் தூங்கினார்கள். அப்போது விடங்கொண்ட நாகம் ஒன்று வணிகனைத் தீண்ட விஷந்தலைக்கேறி அவன் இறந்தான். அங்கிருந்த பணியாளர் சூழ்ந்து என் செய்வதென்று ஏங்கினார்கள். சேடிகள் மார்பிலறைந்து கொண்டு அழுதார்கள்.

ஆண்சிங்கத்தைப் போன்ற வணிகனைத் தீண்டாது ஒதுங்கிநின்று காவிரிப்பூம்பட்டினக் கன்னிகை தாமரை பூத்த கொடியைப் போலும் தளர்ந்து மயில் போலும் வீழ்ந்து மயங்கினள். சேடியர் தேற்ற ஒருவாறு தெளிந்து எழுந்தனள். கண்களில் நீர் ஊற்றென ஓடக் குழல்சோரக் கைகளைத் தரையில் மோதியழுதாள், தேம்பினள்.

என்னாயகனேயோ என்னிருகண் மணியேயோ
என்னை யீன்றான்
தன்னாவி யன்னதனி மருகாவோ முருகாவோ
தாரார் முல்லை
மன்னாவோ வணிகர்குல மணியேயோ விடவாவின்
வாய்ப்பட்டாயோ
உன்னை கிழலான வென்னைவிடுத் தெவ்வணம்
ஒளிப்ப தேயோ
பொன்னாட்டின் மடவாரைப் புணர்வதற்கோ நம்மனகா
புரத்து வேந்தன்
நன்னாட்டின் மடவாரை மணப்பதற்கோ அனைக்கடித்த
நாகர் வேந்தன்
தன்னாட்டின் மடவாரைத் தழுவுறவோ என்னாவித்
தலைவா வென்னை
இந்நாட்டி லிருத்தியெவ விஞ்சித்துப் போயினவா
ரெ[illegible]னே யென்னே.

"என்[illegible]னே! என்னிருகண்மணியே! என் தந்[illegible]ன் உயிர் போன்ற மருமகனே! முரு[illegible]யொத்த அழகனே! முல்லைமாலை யணிந்த மன்னனே! வணிகர்குல மணியே, விடப்பாம்

அக்குடும்பத்தாரின் நிலைமையைக் கூறவும் வேண்டுமோ?

பெண்களும் ஒற்றுமையும்.

ஒரு குடும்பத்தில் ஒழுங்கும் ஒற்றுமையும் இன்பமும் நிலவுவது அக்குடும்பத்துப் பெண் மணியாலன்றோ? பல குடும்பங்கள் சேர்ந்தே ஓர் ஊராயும் பல ஊர்கள் சேர்ந்தே ஓர் நாடாயும் இருப்பதனுல் நாட்டிலே ஒற்றுமையை வளர்ப்பதற்கும் பெண்களே முன்வால் வேண்டும். பல குடும்பங்களின் தனிவாழ்க்கையே நாட்டின் பொது வாழ்க்கையாகும். ஒரு கூட்டத்தாரே ஒற்றுமையுடன் வாழும்பொழுது எத்தகைய இன்பத்துடனும் வலிமையுடனும் வாழ்கின்றனர்! அப்படியாயின் ஒரு நாட்டாரே ஒற்றுமையாக வாழ்வாராயின் அதன் சிறப்பைக் கூறவும் வேண்டுமோ?

தற்காலம் பல நாடுகளிலும் பெண்பாலார் தமது முன்னேற்றத்தின் பொருட்டுப் பெரிதும் பாடுபடுகின்றனர். அவர்கள் குதிரைவேகம் காற்றுவேகம் மனோவேகம் போன்று மிகுந்த விரைவில் மாறிக்கொண்டே போகின்றனர். ஆனால் தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் முன்னேற்றமோ ஆமை நகர்வதற் கொப்பாயிருக்கின்றது. இவ்வாறிருப்பின் எவ்வாறு நன்னிலையடைவது? ஆனால் முன்னவர்களைப் போல் முழுவதும் மாறவேண்டு மென்பது எமது கருத்தல்ல. எமக்குத் தகுந்த முறையில் மாறவேண்டும் என்பதே எமது விருப்பமாகும். இவர்களின் முன்னேற்றம் எவ்வளவு தூரம் சென்றிருக்கின்றது என்பதை அறிவதற்கு இவர்களில் ஆயிரவரில் எத்தனைபேர் தமது நிலைமையை உணர்ந்திருக்கிறார்கள் என்று அறிதலே போதுமானது. ஒருவர் உயர் நிலையடைவதும் தம்மாலேயே, தாழ்மையடைவதும் தம்மாலேயே. தம்மைச் சீர்திருத்துவதற்குத் தாமே [illegible] நிலைமையை [illegible]வதே சீர்திருத்தவு[illegible]வதற்கு முதற்படியாகும். தமது நிலைமையை உணர்வதற்குக் கல்வியறிவு வேண்டும். கல்வியறிவினாலும் உலகிய லறிவினாலுமே தன்னுணர்வும் தன்னம்பிக்கையும் உண்டாகும். ஆதலால் பெண்கள் கல்வியைப் பரப்புவதற்குப் பெண்பாலார் ஒற்றுமையுடன் பாடுபடல் வேண்டும். பத்திரிகை எழுத்துக்களாலும், மேடைப் பேச்சுக்களாலும் தீர்மான நிறைவேற்றங்களாலும் மாத்திரம் முன்னேற்றமடைய மாட்டோம். அவற்றை விடாமுயற்சியுடன் ஒற்றுமையாகச் செயலில் கொணர்வதனாற்றான் முன்னேற்றமடைவோம். நாம் ஒற்றுமையாக இருப்போமாயின் நமக்கு வேண்டியவற்றிற் கெல்லாம் பிறரை எதிர்பார்த்து வீண்காலம் போக்காது நாமே செய்யத்தக்க வல்லமை பெறுவோம். இனி ஒற்றுமைக்கு இன்றியமையாத வழிகள் சிலவற்றைக் கூறி இக்கட்டுரையை முடிப்பாம்.

நாம் ஒற்றுமையாக வாழ்வதிலிருந்து தான் நன்னிலை யடைவோம். ஆதலால் ஒற்றுமையைப் பரப்பத்தக்க வழிகளிலெல்லாம் பாடுபட வேண்டும். பிறர் வருந்தத் தக்கதாக நடத்தலாகாது. பிறர்க்குத் துன்பம் விளைத்தலாகாது. பிறரைப் பழிப்பதாலோ அன்றிப் பிறரது கொள்கைகளை எதிர்ப்பதாலோதான் நாம் முன்னேற்றம் அடைகின்றோம் என்னும் எண்ணம் அடியோடு நீக்கப்படல் வேண்டும. யாண்டும் நடுவு நிலைமையுடனும் சகோதர உணர்வுடனும் நின்று கடனாற்றவேண்டும். வேற்றுமை உணர்வைக் களைதல் வேண்டும். பரந்த நோக்கத்துடன் வாழவேண்டும். எல்லோரும் இன்பமடைய வேண்டும என்னும் உயர்ந்த நோக்குடன் வாழ்வேண்டும். இப்பொழுது நாமெல்லோரும் ஒற்றுமையாக வாழ்ந்து நமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதே நாம் தாய் நாட்டிற்குச் செய்ய வேண்டிய ஒப்புயர்வற்ற முதற் கடமையாகும்.

"ஒன்று பட்டா லுண்டு வாழ்வு"
"ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வு".—
பாரதியார்.

'சிந்தாமணி' எனுஞ் செல்வக்குழவிமீது பாடியது.

(வல்லிபுரம் கமலேச்வரியம்மாள்.)

உலகம் போற்று முயர்நிலை யெய்தி
யலைகடல் வரைப்பி னறமண மனைஇய
வின்றமி ழாயுந் தன்னல னிழந்தனள்;
இன்மொழி யாளரு மின்னுணு விழைந்தே
தாய்மொழி முனிந்து பிறமொழி தழுவினர்;
பழந்தமிழ் மகளிர் பற்பல துறையி
லுழைத்தன ரென்பது முண்மை தாமே;
அவர்தாம்;
பொற்புறு கற்பும் புவியேய் பொறையும்
அருணிறை யுளனு மிருள்கடி யறிவும்
பன்னூ லாய்ந்து பழகிய வுணர்வும்
போர்முனை யதனிற் புறங்கொடா வீரமு
மிற்பட தொழுக்கமு மினைய நன் மாண்பும்
பெற்றன ராகி வாழ்ந்தன ரென்ப;
பிற்றை நாளெம் மறிவெனுஞ் சுடரைப்
பற்றிய விருளாம் புத்தா சாரம்
ருந்தி யொழித்திடு நந்தா விளக்கென,
நங்கை யரெலா நல்கிருந் தெனவே,
வடமொழி தென்மொழி வழிமுறை யறிந்து
தமிழுல குய்யத் தகுமுறை தெரிக்கு
மன்னிய பாலம்மை யருள்சாந் தளித்த
"சிந்தா மணி"யெனுஞ் செல்வக் குழவியை
யாரூண் டெய்திய வரும்பெறன் மணியை
மடித்தலத் திருத்தி மழலை கேட்டும்
பால்வாய்க் குழவியின் பண்பது கண்டு
முச்சி மோந்து முடல்வளன் பேணியும்
நச்சிப் போற்றுவம் நாமே
பச்சைக் குழவி பல்லாண் டெய்தவே.

அரசினர் தமிழ்ப்பாடசாலை,
…ம்பலை.

1895-ம் வருஷ ஸ்தாபிக்கப்பட்டது.

பழமையான கருர் ரத்ன வியாபாரிகள்.

நாம் வைரங்கள் முதலியன விற்கும் போதே "காரண்டீ" செய்கிறோம். இஷ்டமிரா விடில் சரக்குகளை மாற்றிக்கொள்ளவாவது திருப்பி பணம் பெற்றுக்கொள்ளவாவது செய்யலாம்.

எங்களுடைய உத்திரவாதமே உங்களுக்கு ஒரு பொருப்பாகும். நீங்கள் நம்மிடம் தபால் மூலமாகவும் வியாபாரம் செய்யலாம்.

நம்முடைய வெள்ளிதினுசுகள் சுத்தவெள்ளியினால் கையினால் செய்யப்பட்டவை. அவைகள் கனமாகவும், கண்ணியமாகவும் நூதன தினுசுகளாகவுமிருக்கும்.

இந்த வியாபாரத்தில் எங்களுக்கு 35 வருஷங்களுக்கு மேல் நல்ல அனுபவமுண்டு. ஆதலால் நம்முடைய அனுபவத்தால் நீங்கள் லாபமடைய இதுவே நல்லதருணம்.

வ-ராஜ்மல் லல்லுபாய் அண்டு கோ

வைர, ரத்ன, வெள்ளி தங்க வியாபாரிகள்.

813, எஸ்பிளநேட், மதராஸ்.

ஓ!

வைரங்களா?

தி. பி. மேதா அண்டு சன்ஸ்,

453, தங்கசாலை வீதி, மதராஸ்.

1927—28 மதருஸ் அகில இந்திய பொருட் காட்சியில் அநேகமெடல்களும்,
நற்சாக்ஷிப்பத்திரமும் பரிசுபெற்ற

எஸ். வி. சாரி அண்டு ஸன்ஸ்

கம்பெனியாருல் தயாரிக்கப்படும்.

குணத்திற்சிறந்த பரிமளமிருந்த

சந்தனாதி தைலம்

கபால உஷ்ணம் கோடைதாபம்
தணிக்ககூடிய

அரைக்கீரை விதை தைலம்

வாஸனைபாக்கு
வாஸனை சுண்ணும்பு
தாம்பூல கொப்பரைசீவல்
கலவை சந்தணம்
அரகஜா, அம்பர்
புனுகு, ஜவ்வாது

அத்தர் தினுசுகள்
அத்தர் பில்லைகள்
சந்தணபில்லைகள்
நன்மணை ஊதுவத்திகள்
காஜிப்பூர் பன்னீர்
தசாங்கம்

சிக்ஸாபொடி
சுகந்த சந்தனப்பவுடர்
கேஸரிபவுடர்
குல்குந்து
கஸ்தூரிமாத்திரை
பல காய்கரி ஊர்காய்கள்

பற்பொடிகள் இவைகளை உபயோகித்து ஆனந்தம் அடையுங்கள்.

கேட்லாக் இனும். ஏஜண்டுகள் தேவை. எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும்.

S. V. CHARI & SONS,

Manufacturing Perfumers, No. 71, Pycrofts Road, Triplicane, Madras.